Paramartha Raksha.

ஸ்ரீ

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிய

பரமார்த்தரக்ஷா.

உவே. திருப்பாப்புலியூர் சடகோபாசாரியர், திருவரங்கம் திருமலைதாதாசாரியர்
முதலானாருடைய எல்லா வாதங்களுக்கும் ப்ரமாண புஷ்கலமான விடையளிப்பு.
(முதல் பரிச்சேதம்)

— அம்ருதலஹரியின் வெளியீடு —

ஸ்ரீரங்கம். மெ. ஸுந்தரராஜாசார்யரால்

லோகோபகாரார்த்தமாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளைக்
கொண்டே நிரூபிக்கப்படும் விஷயங்களை அரிய பெரிய
சாஸ்த்ரார்த்தங்களென்று தெளிந்து அகமகிழும்
அறிஞர்களுக்கு அமுதினுமாற்ற வினிய நூல்
இதுவேயென்று நிர்மத்ஸரர்களால்
நிலையிடப்பட்டது.

1946

இதன் விலை 1—8—0

திருவயிந்திரபுரத்து ஸ்வாமிகளுக்கு விசேஷித்து விஜ்ஞாபனம்.

(மன்னார்குடி. பண்டித ஸ்ரீநிவாஸாசாரியர்)

ஒரு க்ரந்தத்தையோ பத்ரிகையையோ எடுத்து வாசிப்பவர்கள் ரஸிகர்களாகவும் விவேகிகளாகவுமிருந்தால் இதில் ஸாரமாக விளக்கப்பட்ட சாஸ்த்ரார்த்தம் என்னவென்று முக்கியமாக விஷயங்களில் கண்வைப்பர்களேயல்லாது மற்று எதிலும் கண்வையார்கள். விஷயங்களை நன்கு ஆராய்ச்சி செய்து நிரூபிக்கத் திறமையற்றவர்கள் நிந்தைகளைப் பொழிந்தே க்ருதக்ருத்யர்களாக வேண்டியது தவிர வேறு மார்க்கமில்லாமையால் திருப்பாபுலியூர் சடகோபாசாரிய ப்ரப்ருதிகள் அர்த்தமில்லாத வசவுகளை எவ்வளவு வாரியிறைத்தாலும் 'இது இவர்களுக்கு ஏற்ற காரியந்தான்' என்றும் 'இவர்களால் இது தவிர வேறு என்ன செய்ய முடியும்?' என்றும் ப்ராமாணிகர்கள் பகர்வர்களே யல்லது இந்த வசவுகளால் ஸ்வமத ஸ்தாபனமாய்விட்டதென்று ஒரு யோக்யரும் நினைக்கமாட்டார்.

இந்த பரமார்த்த ரக்ஷையில் எந்த வரியை யெடுத்து வாசித்தாலும் அழகிய ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளின் பரிமளம் கமழுமே யல்லது வீண் வம்புதும்பு விஷயம் ஒன்றுகூட இராது. இதில் நிரூபிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயமும் ப்ரமாண புஞ்ஜங்களினாலும் யுக்தி ஜாலங்களினாலும் நிகரற்ற சோபை பெற்று விளங்குமது. "ஐயோ! நம்முடைய கொள்கைகள் இப்படி சரமாரியாகக் கண்டிக்கப்பட்டு ஒழிந்து போயினவே" என்கிற திருவயிற்றெரிச்சலினால் சில நிந்தைக் காகிதங்களை யச்சிட்டுப் பரவவிடுவதனால் என்னாகும்? நிந்திப்பதில் நிகரற்ற நைபுண்யம் எங்களுக்கே அஸாதாரணமென்று இவர்கள் காட்டிக்கொள்ளுகிறார்கள். இதில் யார்க்கு என்ன ஆக்ஷேபமுளது? விஷய விசாரத்தில் வந்தால் ஒவ்வொன்றிலும் இவர்களுடைய அஜ்ஞான அந்யதாஜ்ஞானங்கள் விளங்குகின்றனவேயன்றி வேறில்லையே. ஒன்றிரண்டு விஷயங்களையே இங்கு யாமெடுத்துக் காட்டுவோம். "அருடரு மடியர்பால் மெய்யைவைத்து" என்கிற தேசிகப் பிரபந்த வாக்கியத்தைப்பற்றி விசாரம் ஆராய்ச்சி நூலில் எந்த விதமாக விளைந்ததென்பதை யாவருமறிவர். ஸ்ரீராம தேசிகர் எழுதின பொருள் தவறு என்பது அங்கு விஷயம். அதற்கு பதிலுரைக்க வேண்டுமானால் "அது தவறன்று; அப்படித்தான் பொருள் சொல்லத்தகும்" என்று நிரூபித்தாகவேண்டும். அதற்கோ வழியில்லை. இவர்களும் திரண்டு அது தவறுதான் என்று ஸ்தாபிக்கிறார்கள். இது என்ன வாதமென்று விவேகிகள் விமர்சிப்பது. இவ்விஷயத்திலேயே "அருள்தருமென்றிருந்தால்தான் தெருள்தருமென்கிற அடுத்த ப்ராஸம் பொருந்தும்" என்று இவர்கள் எழுதினார்கள். அந்தோ! தெருள்தருமென்கிற வாக்கியமே தேசிகன் திருவாக்கில் வந்திருக்கவில்லையே யென்று காட்டினபிறகு அச்சுப் பிழையாக விழுந்துவிட்டதென்றெழுதுகிறார்கள். ஒரேவிதமான அச்சுப்பிழை சடகோபாசார்யருடையவும் சேட்லூரையங்காருடையவும் பதிப்பில் விழுந்துவிட்டது என்றால் . . . . அப்படியே யென்று கொள்வோம். இதனால் 'தெருள்தரும்' என்பது அங்கு இல்லையென்று தானே முடிந்தது. அப்போதே இவர்களுடைய வாதமும்பிசகென்று முடிந்துவிடவில்லையா?

கபித்தாஸூர விஷயத்தில் "உபய ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களும் கபித்தாஸூரனென்று எழுதியிருக்கிறார்கள், அது பிசகு" என்று இவ்விதமாகவே இவர்கள் ப்ரஸங்கித்திருக்க வேண்டும். இன்ன விஷயம் இன்னார் எழுதியிருப்ப

(இதன் தொடர்ச்சி ரேப்பர் 3-வது பக்கத்தில் காண்க)

ஸ்ரீரஸ்து.

முன்னுரை - ப்ராமாணிகர்களுக்கொரு விண்ணப்பம்.

[மெ. ஸுந்தரராஜாசார்யர்]

ஸ்ரீ உவே. திருப்பாப்புலியூர் சடகோபாசாரியர் ஸ்வாமி வெளியிட்டிருக்கும் நிராக்ருதியநுபந்த மென்னும் புத்தகத்தில் அடியேனுடைய பெயரை இரண்டிடங்களில் குறிப்பிட்டு எழுதியுள்ள விஷயங்களுக்கு ப்ராமாணிகர்களை நோக்கி அடியேன் பதில் தெரிவிக்க விரும்புகிறேன். ஆரம்பத்தில், "ஸ்ரீ மெ. ஸுந்தரராஜாசாரியர் பெயரால் வெளிவந்த வோர் பத்ரிகையில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனைப் பலவாறு தூஷித்திருந்த படியால்" என்றெழுதியுள்ளார். மேல் 5-வது பக்கத்தில் "ஸுந்தர ராஜாசாரியரை ஸதஸ்ஸுக்கு வரும்படி நாம் கூப்பிட்டது காரணமாக அவர் தன் பெயரை இனி உபயோகிக்க ஸம்மதப்படாததே ...." என்றெழுதியுள்ளார். இவ்விரண்டு வாக்கியங்களைப் பற்றியும் அடியேனுடைய விஞ்ஞாபனம் கேண்மின்.

(1) அடியேன் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனைப் பலவாறு தூஷித்திருந்ததாக ஸ்ரீசடகோபாசாரியர் ஸ்வாமி யெழுதுவது உண்மைக்கு மாறானது. தேசிக ப்ரபந்த வுரையாராய்ச்சி தோன்றியது எதற்காக? அது அவசியமா? அன்றா? என்பதை இரண்டு ஸம்பிரதாயத்திலும் சேராத நடுநிலைமையாளர்கள்தாம் கூறவேண்டும். இதர ஸம்ப்ரதாயஸ்தர்களான ஆசார்யர்களைப்பற்றி ப்ரஸ்தாவலேசமும் செய்யாமல் ஸ்வாசார்ய ப்ரசம்ஸைகளை எவ்வளவு செய்து கொண்டாலும் அது அழகியதேயாகும். அப்படிக்கின்றி அப்ரஸக்தமாக இதர ஆசார்யர்களை தூஷித்து ஒரு சரித்திரம் எழுதப்பட்டால் "யதாசக்தி நிக்ருஹ்ணீயாத் தேவதா குருநிந்தகாந்" என்கிற கட்டளையின்படி அதற்கு மறுப்பெழுத ப்ராப்தமேயன்றோ? ஸ்ரீமான் திண்டுக்கல் வக்கீல் ராமஸ்வாமி ஐயங்காரென்பவர் எழுதி வெளியிட்ட சரித்திரப் பகுதியின் மீது ஆராய்ச்சி வெளிவந்திருக்கிறது. அவர் ஜகதாசார்யர்களும் அஸ்மதாசார்யர்களுமான பூருவர்களை மிகவும் கேவலமாக தூஷித்திருக்கிறாரென்பதை நாம் நன்றாக எடுத்துக்காட்டியே அவற்றுக்குத் தினவடங்கத் தெரிவிக்கவேண்டிய பதில்களை விரிவுக்கு அஞ்சாமல் தெரிவித்திருக்கிறோம். நாம் அப்ரஸக்தமாகவோ அநாவச்யகமாகவோ ஒரு அக்ஷரமும் எழுதியிருக்கவில்லை. திண்டுக்கல் வக்கீலய்யங்கார் எழுதியதில் பூர்வாசார்ய தூஷணைகள் உண்டா இல்லையா என்பது மத்யஸ்தர்களால் முதலில் விமர்சிக்கத் தகுந்தது. இல்லாதவற்றை இருப்பதாக நாம் பொய்யாகத் தெரிவித்து எழுதியிருந்தோமாகில் அதைப்பற்றி எவ்வளவும் விசாரம் நடத்தலாம். இரண்டொரு வருஷமாக இவ்விஷயத்தில் வியாஸங்களும் க்ரந்தங்களும் எழுதுகின்றவர்கள் நாம் பொய்யெழுதினதாக ப்ரஸ்தாவமும் செய்யாமையால் நாம் தெரிவித்திருக்கிறபடி அஸஹ்ய தூஷணைகள் தேசிக ப்ரபந்த வுரைப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றனவென்பது ஸத்யமேயென்று தேறிற்று. அப்படி தூஷணைகளையெழுதிய அந்த ஐயங்கார் வக்கீலாகவுமிருப்பதால் பதில் விஷயங்கள் வந்தபோது தாமே பதில் வாதம் செய்திருக்கவேண்டும். ஆசார்யர்களை நான் தூஷிக்கவில்லையேயன்றோ, எழுதியிருக்கிற பதில்கள் ஸங்கதமாக இல்லையே யென்றோ அவர் மறுப்பெழுதி யிருக்கவேண்டும். அவரோ அநுதபித்துவாளாவிருக்கிறார். அவர் எழுதியவை பிசகு என்று நாம் நிரூபித்ததுபோலவே திருவல்லிக்கேணி அட்வகேட் ஸ்ரீ உவே. ஸி. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமியும் சில அம்சங்

களை யெடுத்துக்கொண்டு தகுந்த ப்ரமாணங்களைக் காட்டி நிரூபித்துச் சிறந்ததோர் வியாஸமெழுதினர். அதுவும் லஹரியிலேயே வெளிவந்திருக்கின்றது. அதைக்கண்ட ராமஸ்வாமி ஐயங்கார் தம்முடைய மிகுந்த அநுதாபத்தை அப்போதே அந்த நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமியிடம் காட்டிக்கொண்டாரென்றும் கேள்விப்படுகிறோம். அது உண்மையோ அன்றோ நமக்கு அதில் விசாரமில்லை. பதில் எழுதக் கடமைப்பட்டவரான அவர் உதாஸீநராய் விலகிக் கொண்டாரென்பது உண்மை. இதில் ஸந்தேஹமில்லையே. யாருடைய உக்திகளுக்கு நாம் பதில் சொன்னேமோ அவர் பாங்காக எழுந்தருளியிருக்க, அவர் தலையிடாத விஷயத்தில் மற்றையோர் தலையிடுவது தகுதியோ? சடகோபாசாரியரும் ஒரு வக்கீலென்று ப்ரஸித்திபெற்றவர். நியாயத்தை ஆராய்ந்து நோக்க இவர் அசக்தரல்லரே.

இனி இவர்கள் ஒன்று சொல்லக்கூடும்; ராமஸ்வாமி ஐயங்காருக்கு ஏகதேசமாக ஸம்பந்தப்பட்ட விஷயமன்றிக்கே பொதுவான ஸம்ப்ரதாய விஷயமாயிருப்பதால் அவர் உதாஸீநராய் நின்றாலும் மற்றையோர்கள் பதிலெழுதப் புறப்படுவதில் அநீதி யொன்றுமில்லை-என்று. இதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். பதிலெழுதுகிறவர்கள் ப்ராமாணிகர்களாக இருந்தால் "ராமஸ்வாமி ஐயங்கார் அப்ரஸக்தமாக ஆசார்ய தூஷணைகளை வரைந்திருப்பது பிசகுதான்" என்பதை முந்துற எழுதவேண்டும். இதுவரையில் அப்படி ஒருவராவது எழுதினரோ? இல்லை. இவர்களெல்லோருடையவும் அபிப்ராயம் என்னவென்றால், ராமஸ்வாமி ஐயங்கார் எழுதியுள்ள தூஷணைகள் யுக்தந்தான், அவசியந்தான் என்பதேயாகும். அப்படியெண்ணுகிறவர்களுக்கு நாம் எழுதியவையும் எழுதுகின்றவையும் எழுதப்போகின்றவையுமெல்லாம் மிகயுக்தங்களே மிக அவசியங்களே யென்பது ப்ராமாணிகர்களால் கொள்ளத்தக்கது. அவர்தாம் மறைவில் காட்டிக்கொள்ளுகிற அநுதாபத்தை ப்ரகாசமாகக் காட்டிக்கொண்டால் நாமும் நம்முடைய லேகனங்களுக்கு அநுதாபம் காட்டிக்கொள்ளத் தடையேயிராது. அவருடைய தூஷணைகள் அப்படியே சிலாலிகிதம்போல் விளங்கவேணுமென்றும் அதைப்பற்றி மற்றையோர் எதுவும் எழுதலாகாதென்றும் இவர்கள் நினைப்பது மிகத்தவறு.

நம்முடைய ஆராய்ச்சியில் பலவகையான தூஷணங்களிருப்பதாக ஸ்ரீ சடகோபாசாரியர் ஸ்வாமி யெழுதுகிறார். இது உண்மையே. தேசிகன் "சததூஷணீ" என்றே ஒரு க்ரந்தத்திற்குப் பெயரிட்டார். அதை மிக உத்தம க்ரந்தமென்று கொள்ளுகிறோம். தூஷணைகள் நிரம்பிய புத்தகத்தைப் பரமஸாத்விகரான ஸ்வாமி எப்படியருளிச் செய்தாரென்று வினவினால் தூஷிக்கவேண்டிய விஷயங்களையே தூஷித்திருப்பதால் பிசகில்லையென்கிறோம். ஆகவே ப்ராப்த விஷயத்தில் தூஷணை அவச்யமே அநவத்யமே யென்று தேறிற்று. இல்லையேல் சததூஷணியென்கிற பெயரையே இவர்கள் தூஷிக்கவேண்டி வரும். நம் ஆராய்ச்சி நூலில்காணும் தூஷணைகள் வ்யக்தியைப் பற்றியவையல்ல; விஷயங்களைப்பற்றியவை. அவ்வளவு விஷயங்களும் ராமஸ்வாமி ஐயங்காருடைய வியாஸத்தை நோக்கி அவச்யமோ அன்றோ, இதை நிர்ணயிக்க வேண்டுவது மத்தியஸ்தர்களின் பொறுப்பு. விஷயங்களை அபேத்யமாக எழுதினாலும் வசவுதவிர வேறில்லை யென்று சொல்லுவது வாதிப்பிரதிவாதிகளுக்கு எங்கும் ஸஹஜமே. உலகமெல்லாம் புகழும் ஸ்ரீ பாஷ்யத்தில் விஷயவிசாரம் தவிர நிந்தா லேசமுமில்லை யென்று

கொண்டாடுகிறோம். பிறர், அதில் வசவு தவிர வேறில்லை யென்கிறார்கள். அதற்கு என்னகாரணமென்றால், “ ததிதம் ஔபநிஷத பரமபுருஷ வரணீயதா ஹேது குணவிசேஷ விரஹிணாம் அநாதிபாபவாஸநா தூஷிதாசேஷ சேமுஷீகாணாம் அநதிகத பதவாக்யஸ்வரூப ததர்த்தயாதாத்ம்ய ப்ரத்யக்ஷாதி........ ஸமீசீநந்யாயமார்க்காணாம் விகல்பாஸஹ விவித குதர்க்க கல்க கல்பிதமிதி அநாதரணீயம் ” என்றிப்படிப்பட்ட சில ஸ்ரீஸூக்திகளும் ஸ்ரீபாஷ்யத்தில் ஏறியிருப்பதால் இதைக்கொண்டே பிறர் ஸ்ரீபாஷ்யத்தில் வசவுதானுள்ளது என்றெழுதியுள்ளார்கள். வஸ்துத: மேலெடுத்துக்காட்டிய ஸ்ரீஸூக்திகளில் நிந்தை இல்லையென்று சொல்ல முடியாது. அவர்ஜநீயமான நிந்தனை காணப்பட்டால் அது விஷயாதீநமாதலால் யோக்யர்கள் விஷயங்களுக்கு பதில் விஷயங்களைப் பொறிக்கவேணுமேயொழிய க்ராம்ய வார்த்தைகளை ஏடு ஏடாக நிரப்புவது அழகன்று.

இத்தனைக்கும் மூலமாக ராமஸ்வாமி ஐயங்கார் எழுதினதில் வெறும் நிந்தை மாத்திரம் உள்ளதேயல்லது ஒரு விஷய நிரூபணமும் கிடையாது. சிறந்த வித்வான்களே விடை கூறவேண்டிய விஷயங்களையே நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். அவை தூஷணங்களேயென்று பிறர் கொண்டால் கொள்ளட்டுமே. அதில்விஷயமேயில்லை யென்றால் மஹா விவேகிகளென்று தம்மை மதித்திருக்கின்ற இத்தனை பேர்கள் திரண்டுருண்டெழுந்து எழுதுவானேன்? விஷயங்களில் இவர்கள் அவகாஹித்து பதில் எழுத அசக்தர்கள் என்பதே தேறி நிற்கிறது. சக்தர்களேயென்னில், ஒரு சிறு விஷயம் விஜ்ஞாபித்து நிற்கிறேன்; இந்த சடகோபாசார்யருடைய உக்திகளுக்கு பதிலாக வந்துள்ள பரமார்த்த ரக்ஷையிலுள்ள மற்ற விஷயங்கள் கிடக்கட்டும். அதில் நான்காவது விஷயமொன்றுக்கு இந்த ஸ்வாமி அவசியம் பதில் சொல்லக்கடமைப்பட்டவர். அது உயிரான விஷயமாயுமிருக்கிறது. “இவ்விஷயத்தில் என்றைக்கு இவர் பதில் சொல்லிவிட்டாலும் அன்றைக்கே இவரிடம் நாம் சிஷ்யவ்ருத்தி செய்யத் தடையில்லை” என்றும் (பக்கம் 8 ல்) ஸ்ரீ அண்ணங்கராசார்யர் ஸ்வாமி சபதம் செய்திருக்கிறார். ஸ்தாலீபுலாகந்யாயமாக அந்தவொரு விஷயத்தில் இவர் தம்முடைய சக்தியையும் ப்ராமாணிகத்வத்தையும் காட்டிவிடலாமே. அதைப்பற்றி இவர் க்ருபையோடு எழுதி யநுக்ரஹிக்கும் வ்யாஸத்தை நாமே லஹரியில் வெளியிட ஸஜ்ஜராயிருக்கிறோம். இந்த ஒரு விஷயம் தீர்ந்தபின்பு மற்ற விஷயங்களிற் செல்லலாம்.

(2) இனி இரண்டாவது வார்த்தைக்கு பதில் விஜ்ஞாபிக்கிறேன். எம்மை இவர்கள் ஸதஸ்ஸுக்கு வரும்படி கூப்பிட்டது காரணமாக நாம் நமது பெயரை இனி உபயோகிக்கக் கூடாதென்று கொண்டதாக இவர் எழுதுவது மிகவும் தவறு. இவர்கள் ருஜுவான முறையில் நம்மை ஸதஸ்ஸுக்கு அழைக்கவில்லை. இரண்டு வகுப்பிலும் சேராத ப்ராமாணிக மத்யஸ்தர்களைக் குறிப்பிட்டாலல்லவோ உண்மையான ஸதஸ்ஸாகும். தங்கள் க்ருஹத்திலே தாங்கள் நால்வர் ஐவர் சேர்ந்து கை தட்டி விடுவதற்கென்றே ஒரு கூட்டம் கூட்ட நினைத்ததும் பிசகு; அதற்கு நம்மை யழைத்ததும் பிசகு. அதற்கு நாம் தெரிவித்திருந்த பதிலை மறைத்தது மிகவும் பிசகு. மேலும், ஸதஸ்ஸு விஷயசர்ச்சைக்காக இருந்தால் அழகியதே. விஷயசர்ச்சைக்காக அன்று என்பதை இவரே இப்போது ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளார்; “உரையாராய்ச்சியின் கர்த்தாவை நிஷ்கர்ஷிக்க வேண்டுமென்பதற்காக நம்மை ஸதஸ்ஸுக்குக் கூப்பிட்டதாக” (பக்கம் 5ல் 22, 23, 24 வரிகளில்) வ்யக்த

மாக எழுதியுள்ளார். ஹேது எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள். உலகில் வெளிவருகின்ற நூல்களுக்கெல்லாம் கர்த்தாவை நிஷ்கர்ஷிக்க ஒரு ஸதஸ்ஸு கூட்டவேணும் போலும். 10—5—45லும் நான் நற்பொருள் விளக்கமென்கிற நூலை வெளியிட்டு ஆராய்ச்சியிலுள்ள விஷயமொன்று கூட அப்ராமாணிகமன்று என்பதை நிலைநாட்டியிருக்கிறேன்.

விவேகிகளும் சக்தர்களுமாக இருந்தால் விஷயங்களுக்கு மாத்திரம் பதில் சொல்லி நிர்பார்கள். அது இவர்களிடமில்லையே யென்று மிக வருந்துகிறேன். இவர் தமது புத்தகத்தில் "பீடாகரமமித்ராணும் யத்ஸ்யாத் கர்த்தவ்யமேவ தத்" என்கிற இந்த்ரஜித் வாக்யத்தை அஸக்ருத் எடுத்தாளுகிறார். இவரும் இவரைச் சேர்ந்த முன்னோர்களும் திருவயிந்திரபுரத்தில் இந்தச்லோகத்தின் படியே பல அனுஷ்டானங்கள் செய்துவருவது நாளைக்கும் அபரோக்ஷம். ஒன்று கேண்மின், அங்குத் தென்மறை வல்லவர்களுக்கும் வடமறை வல்லவர்களுக்கும் நெடுநாளாகவே மஹத்தான ஸ்பர்த்தையுண்டென்பது ஜகத்ப்ரஸித்தம். மார்கழியில் பெரிய திருவத்யயந உத்ஸவத்தில்வேத பாராயணத்திற்கும் திருவாய் மொழி ஸேவைக்கும் தனித்தனியே கால பேத வ்யவஸ்தை ஏற்பட்டிருக்கிறது. இது அவ்வூரில் மாத்திரமன்று; எந்த திவ்ய தேசத்திலும் உபய பாராயணங்களுக்கும் கால பேதவ்யவஸ்தையுள்ளது. வேத பாராயணத்தின் காலம் பகல். திருவாய்மொழி ஸேவையின் காலம் இரவு. இது எங்கும் இப்படியே. திருவயிந்திரபுரத்தில் பகலிற் செய்யும் வேத பாராயணத்தில் ஒரு ப்ரச்நம்மாத்திரம் நிறுத்திவைத்து அதை இரவில் திருவாய்மொழி ஸேவையின் காலத்தில் அந்த ஸேவை செவிப்படாத வண்ணம் கோஷிப்பது ஒரு ஸம்ப்ரதாயமாக நிகழ்கின்றது. இப்போது இந்த வேத கோஷம் எதற்காக? என்று ப்ராமாணிகர்கள் கேட்டால் "பீடாகரமமித்ராணும் யத்ஸ்யாத் கர்த்தவ்யமேவ தத்" என்று மஹாவைதிகர்கள் விடையிறுப்பது வழக்கம். உண்மையில் இந்த விடை தவிர வேறொன்றும் சொல்லவும் முடியாது, சொல்வதுமில்லை. இந்த அநுபவம் இவர்க்கு ஆஜாநஸித்தமாதலால்தான் அடிக்கடி இந்தச்லோகத்தை இவர் கையாளுகிறார். இந்திரஜித்தின் மதப்படியான ப்ரவ்ருத்தி இவர்கட்கே அஸாதாரணமாக இருக்கட்டும். வக்கீல் ராமஸ்வாமி ஐயங்காருடைய ப்ரவ்ருத்திக்கு இந்தச்லோகத்தை யெடுத்துக் காட்டினால் மிகவும் பொருத்தமாயிருக்கும். தேசிக சரித்திரமெழுதப் புகுந்தவர் இதர ஆசார்யர்களை தூஷித்ததற்கு இது தவிர வேறு தாற்பரியமில்லையன்றோ.

அது கிடக்க; இவர் அஸ்மதாதிகளை தேசிக தூஷகர்களென்று வசை கூறி வருவது சிறிதும் பொருந்தாது. உலகில் ஒரு பொருளைக் களவாடின வொருவன் தன்னிடத்தே உண்மையாகவுள்ள தஸ்கரத்வத்தைப் பிறர்மேல் ஏறிட்டுப் பேசுவது வழக்கம். அந்த முறையையே இவர்களும் கைப்பற்றி வருகிறார்கள். அந்தணர்களிலேயே ஒரு வகுப்பினர் வேதத்தைத் தங்களுக்கே செல்வமாகக் கொண்டு அந்த வேதத்திலேயே காலம் கழிப்பவர்களாக உலகமெங்கும் காணப்படுகிறார்கள். ஆனாலும் அவர்களை வேதத்ரோஹிகளென்றே கூசாமல் கூறவேண்டுமென்று ஸங்கல்ப ஸூர்யோதயாதிகளில் அருளிச் செய்யக் காண்கிறோம். * பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி * என்றதற்கு அவர்களே ப்ரதம லக்ஷ்யபூதர்களென்று இந்த சடகோபாசார்யரும் திண்ணமாகச் சொல்பவரே. அதுபோல இவர்களும் தேசிக ஸ்ரீஸூக்திகளைத் தங்களுக்கே அஸாதாரண ஸம்பத்தென்று கொண்டு அவற்றிலேயே போதுபோக்கி வந்தாலும் தேசிகத்ரோஹிகளில் இவர்களே தலைவர்களென்பது இந்த பரமார்த்தரக்ஷையில் பரக்க நிரூபிக்கப்பட்டுளது. இதற்கு நிந்தா பரிஹாஸாதிகள் ஏதுமின்றி ருஜுவான விடைகளை வெளியிடுவதே ப்ராமாணிகர்கட்கு உற்றது.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய

பரமார்த்த ரக்ஷா.

लोकाचार्यो रम्यजामातृयोगी त्रय्यन्तार्यश्चेत्यमी देशिकेन्द्राः ।
चित्ते नित्यं मामके प्रोल्लसन्तो लोकक्षेमं कुर्वतां निर्व्यपायम् ॥

श्रीमान्वेङ्कटनाथार्यो विशिष्य करुणां मयि । विस्तृणानो विपक्षोक्तिकण्टकोद्धारकारकः ॥

நம்முடைய ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணத்திற்கு உத்தரமென்று வெளிவந்திருக்கின்ற நிராக்ருத்யநுபந்தமெனும் புத்தகம் விமர்சிக்கப் படுகின்றது. இங்கு முகவுரையாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் முடிவுரையிலே சொல்லுவோம். திருப்பாப்புலியூர் சடகோபாசார்யரென்னுமிந்த க்ரந்த கர்த்தா (130 பக்கங்களில்) பத்தெட்டு விஷயங்களைப் பற்றி யெழுதியுள்ளவற்றின் பொருத்த மின்மையை ஒன்று விடாமல் ஸஹ்ருய ஹ்ருதயங்கமமாக நிரூபிக்கிறோம்.

1. கபித்தாஸுர தத்வம்.

ஓயாத விவாதத்திலிருந்து வரும் ஸம்ப்ரதாய விஷயங்களின் சர்ச்சைக்கு முன்னே, ப்ராஸங்கிகமாக இவர் விசாரித்திருக்கிற வொரு சிறு விஷயத்தை யெடுத்துக்கொண்டு அதில் இவருடைய க்ரஹணம் எப்படிப் பட்டதென்பதை மத்யஸ்தர்கள் எளிதாகத் தெரிந்து கொள்ளுமாறு விளக்குகிறோம். நம்முடைய நூல்களில் கபித்தாஸுரபஞ்ஜநம் என்கிறப்ரயோகமுள்ளது. கண்ணபிரானுடைய திவ்ய சேஷ்டிதங்களில் வத்ஸாசுரனைக் கொண்டு கபித்தாசுரனை முடித்த சேஷ்டிதமொன்றுண்டு. * ஸ துர்தமாநாஸுரஸத்வபேதாந் நேதா ஸமாஹூய ந்ருசம்ஸசேதா:, ப்ரஸ்தாபயாமாஸ பரைரத்ருஷ்யம் நந்தாஸ்பதம் நாத விஹாரகுப்தம். * என்று ஸ்வாமி யாதவாப்யுதயத்தில் பணித்தபடி கம்ஸனுலேவப்பட்ட பல அசுரர்களில் ஒரு அசுரன் கன்றுயும் மற்றோரசுரன் விளாவாயும் நிற்க, இதனையறிந்த கண்ணபிரான் முள்ளைக் கொண்டே முள்ளைக் களையுங்கணக்கிலே இருவரையுஞ் சேர முடித்திட்டானென்பது வரலாறு. இதைக் கொண்டு நாம் கபித்தாசுர பஞ்ஜனமென்று எழுதினோம். இதற்கு இவர் (பக். 15ல்) ஸ்ரீபாகவதத்திலேயாவது அதையநுஸரித்த பெரியாழ்வார் திருமொழியிலாவது கபித்தாசுர ப்ரஸ்தாவமே கிடையாதென்றும், வத்ஸாசுரனைத் தூக்கிக் கபித்த வ்ருக்ஷத்தின் நுனியை நோக்கிக் கண்ணன் எறிந்ததின்மேல்

அம்மரத்திலிருந்து விளாம்பழங்களுடன் வத்ஸாசுரனுடைய ப்ரேத சரீரம் கீழே விழுந்ததென்பதே காணப் படுகிறதென்றும், கபித்தாசுரனென்று புதிதாகவோர் அசுரனை நாமாகக் கல்பனை செய்து விட்டோமென்றும் சில பரிஹாஸ நிந்தைகளுடன் எழுதியுள்ளார்.

இதற்கு ஸமாதானம். எந்த விஷயமும் நாம் ப்ரமாண பலமின்றிக்கே நிர்மூலமாக அணுவளவும் எழுத மாட்டோமென்பது ப்ராமாணிக பரிஷத் ப்ரஸித்தம். அது இந்நூலில் க்ரமேண ஒவ்வொரு விஷயத்திலும் அவிசால்யமாக நிரூபிக்கப் படப்போகிறது. எதையும் இவர் ஆராய்ந்து உள்ளபடி க்ரஹிப்பவரல்லரென்பதும் மேலெழுந்த வாரியாக மாத்திரம் பார்த்து வீணான ஆடம்பரங்களுடன் பரிஹாஸநிந்தனைகளாலே நூலைப் பெருக்குபவரென்பதும் இவ்விஷயத்திலே அனைவராலும் அநாயாஸமாக அறியக் கூடியது. கபித்தாஸுரனென்னுமிவ்விஷயத்தில் புராண வரலாற்றின் மருமத்தை மேலே வெளியிடுவோம். முதலில் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை நிரூபிக்கிறோம். திவ்ய ப்ரபந்தங்களில் விளங்கா யெறிந்த கதை வருமிடங்களில் பெரும்பாலும் "அஸுரனாய் நின்ற விளா" என்றே வாசகமுள்ளது. பெரியவாச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் எழுதினதாயிருந்தால் அவர்கள் ப்ரமப்ரமாதமே வடிவெடுத்தவர்களாதலால் அவர்களுடைய வாக்கு நமக்கு அப்ரமாணமென்றே இவர் சொல்லவருவர். ஆதலால் அவ்வாசார்யர்களின் திருவாக்குக்களை விட்டு இவர் ஸர்வஜ்ஞராக மதித்திருக்கும் மஹாசார்யர்களின் திவ்ய ஸ்ரீ ஸூக்திகளையே ப்ரமாணமாகக் காட்டுகிறோம். திருப்பாவையில் "கன்று குணிலா வெறிந்தாய்" என்றவிடத்துப்பரகாலஸ்வாமியின் வியாக்கியானம் (35, 40 வருஷங்களுக்குமுன்பு தமிழிலும் தெலுங்கிலும் அச்சிடப் பட்டுள்ள தில்)—

"கன்றான அசுரனையே எறிகருவியாக்கி விளாவாய் நின்ற வசுரனை யெறிந்து" என்றுள்ளது.

இந்த வியாக்கியானத்தோடு கூடவே ரங்கநாத மஹாதேசிகனுடைய விபுல வியாக்கியானமுமுள்ளது. அதிலும்— "வத்ஸாசுரனை எறிதடியாகக் கொண்டு அவனிலும் அதிவஞ்சகனாய் வ்ருக்ஷரூபியாயிருந்த அசுரன் மேலே கேவல லீலாமாத்ரமாய் க்ஷேபணம் பண்ணியருளி" என்றுள்ளது. இவர்கள் இப்படி யெழுதினது எதைக் கண்டென்னில், உதாஹரித்த திருப்பாவைப் பாசுரத்தின் வியாக்கியானங்களிலும் இயற்பா வியாக்கியானத்திலும் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானத்திலும் பூருவாசாரியர்கள் அருளிச் செய்திருப்பதைக் கொண்டே. அவர்கள் தாம் எது கொண்டு அருளிச் செய்தார்களென்னில், இக் கதையை அநுஸந்திக்கின்ற பூதத்தாழ்வார் "குழக்கன்று தீவிளவின் காய்க் கெறிந்த தீமை திருமாலே" என்றார். இங்குத் தீவிளவென்கையாலே அசுராவேசம் பெற்ற விளா என்பது பெறப்பட்டது.

ஸ்ரீபாகவதத்தில் அசுரன் விளாவாய் நின்றதாக இல்லையேயென்கிற கேள்விக்கு இனி விடை காண்மின். சகட பஞ்ஜநத்தைக் கூறியுள்ள விடத்திலும் யமளார்ஜுனபங்கத்தைக் கூறியுள்ளவிடத்திலும் அசுரப்ரஸ்தாவமே கிடையாதென்பது வ்யக்தம். ஆயினும் "தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரருடல் வேறா" என்று நம்

மாழ்வாரும், "பொய்ம்மாயமருதான வசுரரைப் பொன்றுவித்து" என்றும் பெரியாழ்வாரும் ஸுஸ்பஷ்டமாக வருளிச் செய்துள்ளார்கள். கண்ணபிரான் உலாவுமிடங்களில் எழும் பூண்டெல்லாம் அசுரப் பூண்டுகளே யென்பது அவர்களது திருவுள்ளம். குபேரனுடைய புத்ரர்களான நளகூபரனும் மணிக்ரீவனும் நாரதருடைய சாபத்தினால் யமளார்ஜுநங்களாகத் தோன்றினரென்று இவ்வளவே புராணவரலாறு. அவற்றில் அசுராவேசமுமிருந்ததாக ஆழ்வார்களினருளிச் செயல். இந்த ரீதியிலேயே விளாவிலும் அசுராவேசமிருந்ததென்று அவர்களருளிச் செய்ய, அதைத் தழுவி ஆசார்யர்கள் அநவத்யமாக வியாக்கியானம் செய்தருளினார்கள் இந்த சடகோபாசாரியர் தாமே மஹாப்ராஜ்ஞர்களாக மெச்சுகிற ஸ்வகோஷ்டீ நிஷ்ட ஆசாரியர்களும் அதி ஸ்பஷ்டமாகவும் அதி ப்ரஸித்தமாகவும் எழுதியிருப்பதையே காணுமலோ அநாதரித்தோ இங்குப் பரிஹாஸ நிந்தைகளைப் பொழிகிறார். ஸம்ப்ரதாயாநுபந்திகளான மற்ற விஷயங்களிலும் இந்த சடகோபாசார்யர் எழுதுமவை நியமேந இப்படிப் பட்டவைகளே. ஒரு ஆக்ரஹம் கொள்ள வேண்டாத ஸாமாந்ய விஷயத்திலேயே இவர் இப்பாடு படுகிறுரென்றால் தலைப்பொறையாக ஆக்ரஹப் பட்டுத் தீர வேண்டிய மற்ற விஷயங்களில் எப்பாடு படுவரென்பது இயம்பாமலே விளங்கும்.

இவர் இந்த ப்ரகரணத்தில் நம்மை ஏசுவதோடு நில்லாமல் ஸர்வஜ்ஞரான பிள்ளைலோகாசார்யரையும் ஏசுகிறுர். ஸ்ரீவசநபூஷணத்தில் 'சிந்தயந்திக்கு' என்றொரு ஸ்ரீஸூக்தியுள்ளது. சிந்தயந்தீ என்று ஒரு கோபியை உலகாசிரியர் ஸ்ருஷ்டித்து விட்டாராம்; அது போல் கபித்தாசுரனையும் ஸ்ருஷ்டிக்க ஏற்கும் என்று ஏசுகிறுர். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் "கா சிதாவஸதஸ்யாந்த:" இத்யாதியில் ஒரு கோபி யென்று உள்ளதேயல்லது அவளுடைய பெயர் கூறப் படவில்லை. அவளுடைய அழகிய கதையை எடுத்தாள வேண்டியிருந்தது ஆசாரியர்களுக்கு; ஒரு கோபி யென்றால் சுவை பொருந்தாது. அந்த ச்லோகத்தில் சிந்தயந்தீ என்கிற பதம் உயிராக வருகிற படியால் அதை குண நாமமாக இட்டு வ்யபதேசிக்கலாமென்று ஆசாரியர்களின் திருவுள்ளத்தில் பட்டது. இந்த வ்யபதேசம் பிள்ளைலோகாசார்யர் முதன்முதலாகப் பண்ணினதன்று. பட்டருடைய திருவாக்கிலேயே இஃதுள்ளதென்பது வியாக்கியானங்களில் ஈடுபட்டவர்கட்கு விளங்கும். ஆகவே இங்கு இவர் அடியேனை தூஷித்திருப்பதும் பூருவர்களை தூஷித்திருப்பதும் மூல ப்ரமாணங்களை சிறிதுமாராயாமையாலென்பது மத்யஸ்தர்களுக்கு மூதலிக்கப் பட்டதாயிற்று.

2. அருள் தருமடியர் பால் பாட வுண்மை.

தேசிக ப்ரபந்தங்களுலொன்றான மும்மணிக் கோவையின் முதலடியில் "அருள் தருமடியர் பால்" என்றிருக்கத் தக்க பாடம் "அருள் தருமடியர் பால்" என்று பதிப்பிக்கப் பட்டதும் உரை செய்யப் பட்டதும் பிசகு; இது அநந்விதம்– என்பது ஆராய்ச்சி நூலின் அசைக்க வொண்ணுத ஸித்தாந்தம். இதற்கு சடகோபாசாரியர் பதிலெழுதினார்— அருள் தருமென்பதுதான் சுத்த பாடம்; அது பக்கத்திலுள்ள அடியரிலே அந்வயிப்பதன்று: பாட்டின் முடிவில் (பன்னிரண்டாமடியில்) திருவே யென்கிற எழுவாயில் அந்வயிப்பது என்று. இது பொருந்

தாதென்று நாம் பரித்ராணத்தில் நிரூபித்திருந்தோம். அதன் மேல் இப்போது பதில் வந்திருப்பதென்னவென்றால்; இதைப் பற்றித் தாம் தமிழ்ப் பண்டிதர் பலரையும் கேட்டாராம்; அவர்கள் 'நீரெழுதியது மிகவும் நன்றே' என்றார்களாம். இது விற்பூட்டு—பூட்டு வில் என்றார்களாம். ப்ரௌட ப்ரயோகங்களில் தான் இது வருமாம். இதனை நாமறியாமல் எழுதினேமாம்.—

இனி இதற்கு பதில். "எழுவாயிறுதி நிலை மொழி தம்முட், பொருளோக் குடையது பூட்டு வில்லாகும்" என்ற நன்னூற் சூத்திரம் நன்கறிவோம். இப்படிப் பட்ட அந்வய க்ரமம் திவ்ய ப்ரபந்தங்களிலுமுண்டு; திருவாய்மொழியில் "என்று கொல்...சூடுவதே" என்பது முதலியன காண்க.

வடமொழியிலு மிங்ஙனே யுண்டு;— ஸ்தோத்ர ரத்நத்தில் "**कदा पुनः...मूर्धानम-लङ्करिष्यति**" என்றது முதலியன காண்க. இந்த ரீதியானது ப்ரக்ருத விவாத ஸ்தலத்தில் பொருந்த வழியில்லையே. ஏனெனில், திரு என்னும் எழுவாயில் அந்வயிக்கக் கூடிய வினைமுற்று (க்ரியாபதம்) வேறு இல்லாதிருந்தால் பாட்டினடியிலுள்ள '**அருள் தரும்**' என்பதை அங்கே கொண்டு கூட்டலாம். இங்கு அப்படியில்லையே. பாட்டின் கடையடி, "நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே" என்பதன்றோ. 'உன்னுடைய பிராட்டி உன்னோடு சேர்ந்து நிற்கின்றாள்' என்று நிராகாங்க்ஷமாக அந்வயித்து முடிந்திருக்கிறது. அங்கு அருள் தருமென்றவிது அந்வயிக்க ப்ரஸக்தி லேசமுமில்லையே. பூட்டு வில்லும் வில் பூட்டும் உலகில் இருக்குமளவால் என்னாகும். பிரக்ருதத்தில் அஃது இணங்குவதற்கு வழியிருக்க வேண்டாவோ? * ஸ்வக்ரியாஸாதனவ்யக்ரேர் நாமைங்யத்வ்யபேக்ஷிதும் *. என்றாற்போலே ஒரு க்ரியா பதத்தோடு அந்வயித்து முடிந்த கர்த்தாவில் அருள் தருமென்ற விதனையும் கொண்டு கூட்டுகிறேமென்றால் தமிழர்கள் சிரிக்காமல் வேறு என்ன செய்வார்கள்? விவாஹம் நடந்தேறினவொரு பெண்ணுக்கு வேறொரு வரனையும் கொண்டு கூட்டப் பாரிப்பதொக்குமிது. இனி இவர் வேறொரு வழியைப் பற்றலாம்; கடையடியிலுள்ள "நின்னுடன் சேர்ந்து நிற்கும்" என்பதனை வினை முற்றாகக் கொள்ளாமல் அடைமொழியாக (விசேஷணமாக)க் கொள்ளுகிறோம்; அப்போது 'அருள் தரும்' என்பது அங்கு அந்வயிக்கக் குறையில்லையன்றோ; உன்னோடு சேர்ந்திருக்கின்ற பிராட்டியானவள் அருள் தருவாள் என்னப் பொருந்துமேயென்று இவர் சொல்லலாம். இங்கு நாம் **अभ्युपगम्य वाद**ம் செய்வது கேளீர்; ஆராய்ச்சி நூலில் இந்த விஷயம் எதற்காக எடுக்கப் பட்டுளதென்பதை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்; தேசிக பிரபந்த வுரைகாரரான ஸ்ரீராம தேசிகாசார்யர் அஸம்பத்தமான முறையில் உரையெழுதியுள்ளார் என்றதை ஸ்தாபிப்பதற்காகவே யென்பது மறந்திராது. அந்த ஸ்தாபனமே நம் சடகோபாசார்யராலும் செய்யப் பட்டு முடிந்ததாகத் தேறுகிறது. அந்த உரைகாரர் "**நின்னுடன் சேர்ந்து நிற்கும்**— உன்னோடு சேர்ந்து நிற்பாள்" என்று முற்றாகவே முடித்திருக்கிறாரதலால் அவ்வுரையைக் கண்டனஞ் செய்தாலன்றிச் சடகோபாசார்யருடைய அந்வயம் பொருந்த ப்ரஸக்தியில்லையன்றோ. '**भाक्षितेपि लशुने न शान्तो व्याधिः**' என்று தானே முடிகிறது. ஆகக் கூடி எல்லாருமாய்ச் சேர்ந்து ஸ்ரீ ராமதேசிகர் எழுதினது அஸம்பத்தமே யென்று முடித்ததா

கிறது. 'அருள் தரும்' என்பதை 'அடியர் பால்' என்ற அடுத்தவிடத்திலேயே அந்வயித்து உரைசெய்த ஸ்ரீராம தேசிகரைக் கண்டிக்கும் விஷயத்தில் ஆராய்ச்சி நூல்போலவே சடகோபாசார்யருடைய நூலும் திக்ஷை பெற்றிருப்பது தானே புலனாயிற்று. 'அருள் தரும்' என்பதை அடியர்பால் அந்வயிப்பது மிகப்பொருந்துமென்று நிரூபிக்க வேண்டுவது இவருக்கு அவசியமாயிருக்க, அதில் தலையிடகில்லாது எழுதியுள்ளதெல்லாம் அந்த ஸ்ரீராமதேசிகர்க்கே தூஷணமாகவோ கண்டனமாகவோ முடிகிறதென்பதைக் கூட அறிய இல்லாதவராக வுள்ளாரிவர்: பூட்டு வில்லையும் வில் பூட்டையும் அந்தச் சீராமர் அறியாது அஸம்பத்தமாக வுரைசெய்தாரென்பதுதானே இவரால் முடிவு செய்யப் பட்டதாகிறது. இதனை வ்யக்தமாகவே யெழுதி முடிப்பதன்றே ப்ராமாணிக க்ருத்யம். சீராமருடைய அபிப்ராயப்படி பூட்டுவிற் பொருள்கோள் இங்குப் பொருந்தாதென்றும், இந்த சடகோபாசார்யருடைய அபிப்ராயப்படி அருள்தருமென்பது அடியர்பால் அந்வயிக்கப் பொருந்தாதென்றும் தேறிநின்றபடியால் ஆராய்ச்சிநூலில் அருள்தருமென்பது பற்றியுள்ள நிரூபணமே வெற்றிபெற்று நிலைநின்றதாயிற்று. இவ் விஷயத்தில் பிரதிவாதம் செய்யவேண்டிய பொறுப்பு சீராமரொருவரையே சார்ந்தது. அவர் ஆராய்ச்சிநூல் அசைக்கவும் முடியாததென்று தேறித் தெளிந்து வாளாகிடக்க, இவர் இதில் தலையிட்டது மிகத் தவறு என்பதும் இங்கு ஸித்தமாகிறது. அன்றியும் ஆர்ஜவத்தோடு பதிலுரைக்க உண்மையில் இவர்களிடம் எதிலும் விஷயமில்லாமையால் ஒருவர் ஓய்ந்து மற்றொருவர் எழுதப் புறப்படுவது இவர்கட்கு ஒரு உபாயமாகவுள்ளது. எத்தனை பேர்கள் எழுந்து எழுதினாலும் ஆராய்ச்சி நூலின் ப்ராமாணிகத்வமொன்றே யன்றோ நிலைபெற்று நிற்கின்றது. "அருடரும் என்றிருந்தால்தான் * தெருடரும் என்கிற இரண்டாமடியுடன் ப்ராஸம் இசைந்து நிற்கும்" என்றிவர் எழுதியிருப்பதும் மருள். 'தெருடரும்' என்று இரண்டாமடி யில்லையே. இனி அதையும் இவர் திருத்த வருவர் போலும். கிணறு வெட்டப் புகப் பூதம் புறப்பட்ட கதையாகவன்றோ விருக்கிறது. ஒவ்வொரு விசாரத்திலும் புதிதுபுதிதாக ஒவ்வொரு அபத்தபாடத்தை ஸ்வதந்திரமாகப் புகுத்துவதும் அதை ஸ்தாபிக்கப் பாடுபடுவதும் பங்கமடைவதுமே இவர்க்குப் பணியாய்விட்டதே. தெருடரும் என்று தேசிகன் திருவாக்கில் இரண்டாமடி அவதரித்துளதாவென்று கண்ணுடையார் காணலாமே. இனி இதற்கிவர் பதிலெழுதும்போது ஏதோ கைதவறுதலாக விழுந்திட்டதென்பரோ, அப்படித்தான் பாடமிருக்க வேணுமென்பரோ? எதுவும் வெளிவருமே, பார்ப்போம். தமிழில் ப்ராஸத்திற்கு [எதுகைக்கு] எவ்வளவு நயம் தேவையென்பதை இந்தப் பாசுரங்கொண்டே இவர் அறியலாமே.

பிழை திருத்தக் குறிப்பு— இதில் முதல் பக்கத்தில் ஆரம்பத்திலுள்ள ஸம்ஸ்க்ருத ச்லோகத்தில் कुर्वतो என்பது कुर्वते என்று திருத்தி வாசிக்கத் தக்கது.

3. அடியவர்பால் பாடத்தின் தகுதியின்மை.

ப்ரக்ருதமான பாசுரத்தில் 'அடியர் பால்' என்பதே இலக்கணத்திற்கு இணங்கிய பாடம். 'அடியவர் பால்' என்று சடகோபாசாரியர் காட்டின பாடம்

அஸம்பத்தமே. இப்போது இதற்கு எழுதியுள்ள ஸமாதானம் ஒவ்வாது. "இவ் விருத்தத்தில் கூவிளங்கனி கருவிளங்கனிச் சீர்கள் மட்டில் இலக்கணப்படி பொருந்தாதே தவிர மற்ற சீர் எதுவும் நிஷித்தமல்ல" என்று இவர் தமிழர்களிடம் கேட்டு எழுதியிருக்கிறார். இதில் சிறிது சிக்ஷிக்கப்பெறவேணுமிவர். கனிச் சீர் என்பது இங்கு விஷயமன்று. மூவசைச் சீர் பயிலா என்பதே இங்குக் குறிக்கொள்ளத்தக்கது. ஆகவே கனிச்சீர் காய்ச்சீர் என்றவிரண்டும் இந்த விருத்தத்தில் பயிலாவென்று முடிந்தது. [தேமாங்காய் புளிமாங்காய் கூவிளங்காய் கருவிளங்காய், தேமாங்கனி புளிமாங்கனி கூவிளங்கனி கருவிளங்கனி என்னும் வாய்பாடமைந்த எண்வகைச் சீர்களும் இந்த விருத்தத்தில் அமையமாட்டா வென்றுணர்க.] சீராமரும் இந்த மருமத்தை யுணராமலே சீர் பிரித்துப் பதிப்பித்துள்ளார். **நாயகநின், யானதென** என்று பிரித்துள்ள சீர்கள் வேறுவகையாகப் பிரிக்கத் தக்கவையென்பது இங்கு ப்ரஸங்காத் தெரிவிக்கப்பட்டதென்க. நிலைமண்டிலவாசிரியப்பாவான இப்பாட்டில் ஈரசைச் சீர் தவிர மூவசைச் சீர் பயிலாவென்று திண்ணமாகக் கொள்க. இனி, 'அடியர் பால்' என்கிறவரையில் ஒருசீராதலால் இது அல்பஜ்ஞர்களுடைய எண்ணப்படி புளிமாங்காய்ச்சீராகத் தோன்றினும் இலக்கணமுணர்ந்த பேராசிரியர்களின் கொள்கைப்படி கருவிளச் சீரேயாகும். அதாவது ஈரசைச் சீரேயாமென்றபடி. சடகோபாசாரியர் கூறுகிறபடி 'அடியவர்பால்' என்று பாடங் கொண்டால் அல்பஜ்ஞர்களுடைய கொள்கைப்படிக்கும் பேராசிரியர்களது கொள்கைப்படிக்கும் மூவசைச்சீரேயாகும். ஈரசைச் சீராவதற்கு அடியோடு வழியில்லை. இப்படி நாம் எழுதியதைச் சடகோபாசார்யர் ஒரு தமிழ் வித்வானிடம் காட்டி அவரைச் சரணமடைந்தால் அவர் இவர் கண்ணைத் துடைக்க ஒரு வழி சொல்லுவர்; அதாவது, 'அடியவர்பால்' என்னுமளவும் ஒருசீராகக் கொள்ளாமல் 'அடியவர்' என்கிற வரைக்குமே ஒரு சீராகக் கொள்வோம்; அப்போது ஈரசைச் சீரேயாகும். பால் என்பதை மேற்சீரோடு சேர்த்துவிடுவோம் என்பதாக. இதுவும் தவறேயாகும். 'பான்மெய்யை' என்கிற வரைக்கும் அடுத்த சீராகக் கொள்ள வேண்டிற்றாகும். அது (தேமாங்காய்) மூவசைச்சீராகவே முடிவதால் முற்கூறிய தோஷமேயாம். இதைப் பரிஹரிக்கத் தொகுத்தல் விகாரங் கொண்டு யகரமெய்யை யெடுத்தெறிந்து விடுகிறோமென்னவேணும். இனைய பலவுமியம்பவேணும். இதெல்லாம் அஸம்பத்தமென்றுணர்ந்தே சீராமர் 'அடியர் பால்' என்ற பாடத்தையே கைக்கொண்டார். இச் சடகோபாசார்யர் ஒன்றுமோதாமல் தப்புப் பதிப்பைக் கண்டு தப்பான பாடத்தை க்ரஹித்துத் தப்பாக எழுதி விட்டு அந்தத் தப்பை ஸமர்த்திக்க எவ்வளவு பாடு பட்டாலும் யாரைச் சரணம் பற்றினாலும் தப்பு தப்பே.

ஸ்ரீ தேசிக க்ரந்த மாலைப் பதிப்பில் விழுந்திருக்கிற பாடங்களை யெடுத்துக் காட்டி ஸம்வாதம் பெற இவர் பாரிப்பது சிறிதும் பயன் படாது. அதில் முகபீடிகையிலுள்ள வாக்யங்களை யெடுத்துக் காட்டியிருக்கின்றவிவர் அங்கேயே அடுத்தபடியுள்ள வாக்யங்களையும் கண் திறந்து காண வேணும்; "இன்னமும் திருத்த வேண்டிய பிழைகள் பல பலவிருக்கும்" என்று முடித்திருக்கிறது. அங்ஙனம் சோதிக்க வேண்டிய பிழைகளில் சேர்ந்த

வற்றை யெடுத்துக் காட்டுவதனுல் பல னொன்றும் கைபுகாது. விவேகிகள் விவேசன கௌசலத்தைக் காட்டியன்றோ விஷயவுண்மையை விளக்க வேண்டும். விஷய சோதநம் பண்ணுங்கால் பிழை யென்று தேறிவிட்டால் யார் அச்சிட்டதானலென்ன? ந்யாஸ விம்சதி வியாக்கியானத்தில் பிழைகள் விழுந்திருப்பதாக இவரே (பக். 21ல்) காட்டியுள்ளாரன்றோ. அந்தப் பட்டியிலேயே சேரவேண்டிய பிழைகளைப் பற்றிக் கொண்டு மன்ருடுவது படிப்பாளரின் பணியன்று.

இங்கு மற்றென்றும் எழுதியுள்ளார்; —"அடியர் என்பதை விட அடியவர் என்கிற பதம் திருமங்கையாழ்வாரால் ஸ்ரீ தேவநாதன் விஷயத்தில் உபாத்தமாயிருப்பதால் சிஷ்ட பரிக்ரஹமென்கிற உத்கர்ஷமிதற்குண்டு" என்று. இதுவும் தவறு. "அடியவர்க்கு மெய்யன்" என்பது ஸ்ரீ தேவநாதனுக்குக் கலியன் சாத்தின திருநாமமே. அத்திருநாமத்தை ஸ்வாமி தேசிகன் அடுத்த இரண்டாவது பாட்டில் எடுத்துக் கையாளுகிருர். இப்பாட்டில் அடியவர்க்கு என்பதுமில்லை, மெய்யன் என்பதுமில்லை. ஆகவே இங்கு சிஷ்ட பரிக்ரஹ மென்கிற வார்த்தை யெல்லாம் அவிவேசித ரமணீயம். ஆக இவ்வளவாலும் "ஒன்றையும் ஒழுங்காக அப்யஸிக்காமலும் ருஜுவாகப் பாராமலும் தப்புந் தவறுமாக எதையேனுமெழுதி ஏடுகளைப் பூரிப்பவரிவர்" என்று (பக். 9ல்) தாமே உதாஹரித்த பரித்ராணேக்தி ஸுஷ்டு ப்ரதிஷ்டாபிதமென்றதாயிற்று.

4. ஸ்ரீ சதாவதாநம் ஸ்வாமியின் பாண்டித்ய ப்ரகர்ஷம்,

கீர்த்திசேஷரான சதாவதானம் ஸ்ரீநிவாஸாசார்யரென்பவர் மஹா வித்வான் என்றும் சாகுந்தலம் முதலிய சிலநாடகங்களுக்கு வ்யாக்யானமியற்றினவரென்றும் இந்த சடகோபாசாரியர் தமக்குச் சிறிய தந்தையாரும் ஆசாரியருமானவர் என்றும் அவர் ந்யாய பரிசுத்தி யென்கிற தேசிக திவ்ய க்ரந்தத்திற்கு வெகு ஆச்சரியமான பூமிகையெழுதினவரென்றும் அநாவச்யகமாக அவருடைய கௌரவத்தை நாம் குறைத்துப் பழித்து எழுதிவிட்டோமென்றும் ஆதியில் சிறிதும் அந்தத்தில் மிக விரிவாகவும் எழுதியுள்ளார். இதற்கு பதில் கேண்மின். அந்த ஸ்வாமி மஹா பண்டிதராக இருக்கலாம். அதனுலென்ன அல்ப பண்டிதர்கள் தவறுதலாக ஏதேனுமெழுதியிருந்தால் அதைப் பற்றி விசாரம் வருமோ? மிகப் பெரிய பண்டிதரான அவர் பல தவறுகள் நீடூழி விளங்கப் பேர்க்கவும் பேராதபடியாக எழுதி யச்சிட்டு உலகம் பரவ வைத்திருப்பதால் தகுந்த ப்ரஸக்தியின் மீது அவற்றை நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அவற்றில் ஒன்றுக்காவது இவர் பதில் எழுதியிருக்கிருரோ? அது கிடையாது. அவருடைய பங்க்திகள் எவ்வளவு கம்பீரமாகவும் எவ்வளவு ஆச்சரியமாகவும் இருக்கின்றன பாருங்களென்று மிகவும் அநாவச்யகமாகப் பல பக்கங்கள் நிறைய எடுத்தெழுதுகிருர். ந்யாய ஸித்தாஞ்ஜந பூமிகையில் ஸ்ரீமத் தண்ட்ரி. பட்டப்பா தாதாசார்யர் ஸ்வாமி அமைத்திருக்கிற கங்கா ப்ரவாஹ ஸஹோதரங்களான பங்க்தி ரசனைகள் உண்மையில் ஒவ்வொரு மஹா வித்வானும் உள் குழைந்து அதிசயிக்கத் தக்கவை. அவற்றைப் பார்த்த கண்ணுக்கு இதுவொரு வாக்யமாவென்று விடத்தக்க பங்க்திகளை யெழுதியுள்ள சதாவதாநம் ஸ்வாமியை இவர் எவ்வளவும் புகழட்டுமே. அவரோடு இவர்க்கு தேஹ ஸம்பந்

தமும் ஆத்மஸம்பந்தமுமிருப்பதால் அவர் பால் இவர் வஹிக்கும் பக்தி ப்ரகர்ஷத்தை யாரே தடுப்பார்? அவருடைய தவறுக ளையெடுத்துக் காட்டினுல் அதற்கு மிக்க பொறுமையுடன் பதிலுரைக்கவேண்டிய பொறுப்பு இவரிடமுள்ளதன்றே. அத் தவறுகளை மறுபடியும் எடுத்துக் காட்டு கிறேன். என்றைக்கு இவர் பதில் சொல் லிவிட்டாலும் அன்றைக்கே இவரிடம் நாம் சிஷ்ய வ்ருத்தி செய்யத் தடையில்லை. அந்த சதாவதாநம் ஸ்வாமி யெழுதிய ந்யாய பரிசுத்தி பூமிகையில் 4-வது பக்கத் தில்—

“ श्रीभगवद्यामुनाचार्याणामाचार्यैः श्रीमन्नाथमुनिचरणाश्रयाणां श्रीपुण्डरीकाक्षाणां शिष्यैश्च श्रीराममिश्र गुरुभिर्विरचितं विवरणं षडर्थसंक्षेपश्चेति ग्रन्थद्वयम् ”

என்கிற பங்க்தி யுள்ளது. இதனுல் ஷட ர்த்த ஸம்க்ஷேபம் என்கிற க்ரந்தம் மணக் கால் நம்பியருளிச் செய்ததென்று இவர் குறிப்பிடுகிருர். இது மிகத்தவறு. மஹத் தான ப்ரமம். ஷடர்த்த ஸம்க்ஷேபமென் கிற க்ரந்தம் இப்போது லுப்தமாயினும் அதிலுள்ள சில பங்க்திகளை ஸ்வாமி தேசி கன் அநேக க்ரந்தங்களில் உதாஹரித்த ருளியுள்ளார். ந்யாய ஸித்தாஞ்ஜனம் கத்ய பாஷ்யம் ஸ்தோத்ர பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் ஆகிய இவற்றில் ஸ்வாமி பணித்துள்ள ஸ்ரீ ஸூக்திகளை நாம் விரிவுக்கு அஞ்சாமல் விஸ்தரேண எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஸோமா சியாண்டானருளிச் செய்த க்ரந்தம் ஷட ர்த்த ஸம்க்ஷேபமென்று தேசிகன் ஸுவ் யக்தமாக வெழுதியுள்ளார். அந்த ஸோ மாசியாண்டான் உடையவருடைய சிஷ்ய கோடியிற் சேர்ந்தவர். அவருக்கும் ராம மிச்ர குருவென்று திருநாமமுண்டு. அதைக் கொண்டு இந்த சதாவதாநர் மிகவும் ப்ர மித்து அஸங்கதமாக எழுதி விட்டார். ஸ்ரீ தேசிக க்ரந்தங்களை இவர் ஸேவித்தவ ரல்லர், ஏதோ காவ்ய நாடகங்களில் போது போக்கினவர் என்று நாம் எழுதி னுல் அது இவர்க்கு அஸஹ்யமாகவே யிருக்கலாம். அவர் ஈஷத்தும் ப்ரமிக்க வில்லையென்றும், தேசிக ஸ்ரீ ஸூக்திக ளுக்கு மிகப் பொருத்தமாகவே தான் எழுதியுள்ளாரென்றும் நிரூபிப்பதன்றே ப்ராமாணிக க்ருத்யம். அந்த வழியிலே யே இவர் செல்லவில்லையே. ‘எங்களா சார்யர் மஹா வித்வானுச்சே, அவரையா குறை கூறுவது’ என்று உறுமி வாய் வந்தபடி தூஷிக்கிருரேயல்லது எது விஷ யமோ அதில் சிறிதேனும் கை வைக்கிரு ராவென்று பாருங்கள்.

இஃதொன்றேடு போகவில்லை; இன் னமும் கேண்மின். அதே பூமிகையில், ‘வாதிகேஸரிநாமா லோகாசார்யாவரஜ:’ என்று எழுதியுள்ளார். வாதிகேஸரியெ ன்பவர் பிள்ளைலோகாகாசார்யருடைய திருத்தம்பியாரென்கிருர். இதுவும் மஹா ப்ரமம். வாதிகேஸரி யென்பவர் பன்னீ ராயிரப்படி, தத்வ தீபம், தீபப்ரகாசம், திருவிருத்தம் ஸ்வாபதேச வுரை முதலிய வை யருளிச் செய்த அழகிய மணவாளச் சீயரென்பது உலக ப்ரஸித்தம். அவர் உத்தமாச்ரமி. பிள்ளை லோகாசார்யரு டைய திருத்தம்பியார் அழகிய மணவா ளப் பெருமாள் நாயனுர் என்பவர். இவர் தாம் ஆசார்ய ஹ்ருதயம் முதலியன அரு ளிச் செய்தவர். இவர் உத்தமாச்ரமியல் லர், நைஷ்டிக ப்ரஹ்மசாரி, வாதிகே ஸரியென்கிற விருது அவருடையதன்று. இவ்விஷயமும் வ்யக்தி ப்ரமமாகவே எழு தப் பட்டுள்ளது. இதற்குமிவர் பதில் கூறினவரன்று. இதெல்லாம் ப்ரமமாகத்

தானிருக்கட்டுமே; இதனுலென்ன? இது பெரிய சாஸ்த்ரார்த்தமா என்ன? என்று இவர் கூறலாம். அது பிசகு. இந்தத் தவறுகளை நாம் எந்த ப்ரமேயத்தின் கீழ் நிரூபித்திருக்கிறேமென்று பார்க்க வேணும். பாதுகா ஸஹஸ்ரம் திருவவதரிப்பதற்கு இவர் கூறும் காரணம் கல்பிதம், வ்யக்தி ப்ரம நிபந்தனம்— என்று ப்ரக்ராந்தமான நிரூபணத்திற்குச் சார்பாக இந்த ப்ரமங்களெல்லாம் மூதலீக்கப் பட்டன. ஆகவே இவை அப்ரஸக்த விஷயமல்ல. அத்யந்தம் ப்ரஸக்தமே; அது தன்னில் அந்த சதாவதானரின் வ்யாமோஹம் பல படியாகப் பரவி யுள்ளது என்ருயிற்று நாம் நிரூபித்திருப்பது. இதற்கெல்லாம் இவர் விவேகிகளுக்கு த்ருப்திகரமாக பதில் எழுதியாக வேண்டுமே. ஏழேழ் பிறவி தவம் புரிந்தாலும் அவரை அப்ராந்தராகவும் ப்ராமாணிகராகவும் காக்க இவராலாகுமா? ஆகுமானுல் எவ்வளவும் இவர் அட்டஹாஸம் செய்யலாம். அதற்கு வழியில்லாத போது தூஷ்ணீமிருப்பதன்ருே அழகு.

இவை கிடக்க. அந்த சதாவதானரைப் பற்றிப் பரித்ராணத்தில் நாம் ஒரு பொய்க் கதையைக் கட்டி யெழுதி யிருப்பதாக இவர் (பக். 3ல்) எழுதுகின்ருர். * திருமலை மால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே * என்கிற வாக்கியத்தில் ஒரு மாணுக்கன் சதாவதானரிடம் ஸந்தேஹம் விஜ்ஞாபித்ததாகவும் அதற்கு அவர் சீறு பாறென்றதாகவும் எழுதி யிருப்பது பொய்க் கதையன்று; அடியவர்க்குமெய்யன் திருமுன்பே நடந்த மெய்க் கதை. கேள்வி கேட்ட அந்த மாணுக்கன் இன்னமும் ஜீவித்துளன். இவர் எழுதுகிற படி அது பொய்க் கதையேயாகுக. குவலயாநந்தத்தில் ஒரு ச்லோகம் நினைப்பூட்டுகிறேன்; "चन्द्रज्योत्स्ना विशद-पुलिने" இத்யாதி. "एको वक्ति प्रथमनिहतं कैटभं कंसमन्यः सत्त्वं तत्त्वं कथय भगवन् को हत-स्तत्र पूर्वम्" என்று அங்கு முடிகிறது. இரண்டு ஸித்த யுவாக்களுக்குப் பெரிய விவாதப் போர் நிகழ்ந்ததாம். அவர்களுள் ஒருவன் பகவான் கைடபனை முன்னம் கொன்றதாகக் கூறுகிருனும்; மற்றொருவன் கம்ஸனை முன்னம் கொன்றதாகக் கூறுகிருனும். விவாத நிர்ணயம் ஏற்படவில்லையாம். உண்மையை நீயே விளக்க வேணும் என்று ஒரு மஹானைக் கேட்கிருராம் ஒருவர். இவ்வண்ணமாக ச்லோகம் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு விவாதம் நிகழ்ந்ததாகச் சொல்லுவதெல்லாம் சுத்த கல்பனை. ஆனுலும் இது நிஷ்ப்பலமான கல்பனையன்று. இதற்குப் பரம ப்ரயோஜநம் இன்னதென்பதை அலங்கார ரஸிகர்கள் அறிவர்கள். இந்த ரீதியிலன்ருே பார்க்கவேணும். நாம் கட்டுக் கதையாகவே கட்டினுலும் அதன் பரம தாற்பரியத்தை க்ரஹிக்க இவர்க்கு சக்தியில்லையா? * திருமலை மால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே * என்ற விடத்தில் விவேகிகள் விமர்சித்துக் கேள்வி கேட்டால் சீறு பாறென்று எரிந்து விழுவது தவிர வேருென்றும் ஸமாதானம் வாய் திறக்க முடியாதென்று ஸ்தாபிப்பதன்ருே அந்த ஸம்வாதத்திற்கு பரம தாத்பர்யம். இங்கு இந்த சடகோபாசார்யர் செய்ய வேண்டிய காரியம் என்னவெனில்; வேருெரு கட்டுக் கதையைத் தாம் கட்டி வாதி மறுபடியும் வாய் திறக்க வொண்ணுதபடி உரிய ஸமாதானத்தை வெளியிடுதலேயாம். கட்டுக் கதை கட்டுவதென்பது ஆலங்காரிகர்களுக்கு க்ஷுண்ணமான ராஜ பாட்டை. வேதாந்திகள் வையாகரணர் முதலான

இதர சாஸ்த்ரஜ்ஞர்களுக்கும் இவ் வழி உடன்பாடே. ப்ரஹ்ம ஸூத்ர காரர்—"उत्क्रमिष्यत एवंभावादित्यौडुलोमिः, प्रतिज्ञासिद्धेर्लिङ्गमाश्मरथ्यः, अवस्थितेरिति काशकृत्स्नः" இத்யாதி ஸூத்ரங்களில் சில மஹரிஷிகளின் பெயரைக் குறித்திருப்பதும், பாணினி "लोपः शाकल्यस्य" இத்யாதி ஸூத்ரங்களில் சில மஹர்ஷிகளைக் குறித்திருப்பதும் இன்னதற்காக வென்பதை ஒரு மேதாவி விவரித்தெழுதி யுள்ளார். அதைச் சில பரம வைதிகர்கள் இசையாதொழியினும் விவேகிகள் பலருடைய ஸித்தாந்தம் அதுவேயாக வுள்ளது. பெயர்களில் நோக்கு வேண்டா; விஷயங்களில் மாத்திரமே நோக்கு வேண்டும். அந்த ரீதியில் இந்த சடகோபாசார்யர் பெயர்களில் சிறிதும் கண் செலுத்தாதே விஷயங்களில் மாத்திரம் நோக்கு வைத்து விடையிறுக்கவேண்டும். அது இவர்க்கு ஒரு விஷயத்தில்கூட ஸாத்யமன்று. இந்தத் * திருமலை மால் திருமணியாய் விஷயத்தில் ஏதாவது இவர் வாய் திறந்தாரோ; திறக்கத்தானாகுமோ? திருமலைமால் திருமணி தேசிகனாக வந்த தேயன்றித் தேசிகன் திருமணியாக வரவில்லையே யென்று கேள்வியிலுள்ளது. இதற்கு என்ன பதில்? ஏதோ தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்கிற ரீதியில் கூட ஒரு சமாதானம் சொல்லவே முடியாதென்று நாம் நினைத்திருக்க வில்லை. அப்படியேன்? மிகச் சிறந்த சமாதானமே அழகாகச் சொல்லமுடியும் என்றும் இவர் நினைக்கலாம். ஆனால் எதையும் இவர் எழுதவில்லை. பதில் சொல்லியாகவேண்டிய கேள்வியேயல்லது அசட்டுக் கேள்வியென்று கழிக்கக்கூடியதன்றே அது. "घण्टा हरेस्समजनिष्ट यदात्मना" என்று ஸ்வாமி ஸாதித்திருக்கிறாரேயல்லது "ய: கண்டாத்மநா ஸமஜநி" என்று ஸாதித்திருக்க வில்லையே. * திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் * என்பதற்கும் 'ய: கண்டாத்மநா ஸமஜநி' என்பதற்கும் சிறிதேனும் வாசியுண்டோ? ஆகவே இங்கு சங்கை தோன்றினால் ஏதோவொரு சமாதானத்தை ஆர்ஜவத்துடன் சொல்லித் தீரவேண்டுமே. **திருமலைமால் திருமணி**—ஸ்ரீவேங்கடேச கண்டையானது, **ஆய் சிறக்க**—(ஆய் என்றும் தாய் என்றும் பர்யாய மாகையாலே) சிறந்ததாயாக ஆகப் பெற்று வந்தோன். என்றிப்படி ஏதோவொரு வழிபிடித்து அட்டஹாஸம் செய்யலாமே. அதைப்பற்றி ஒன்றுமே வாய் திறவாமல் 'என் ஆசார்யரை தூஷிக்கிறார், என் பித்ருவ்யரை நிந்திக்கிறார்' என்று முறையிட்டால் இதற்கு அர்த்தமுண்டோ?

மேலும் அந்த சதாவதாநர்க்கு ஸம்ப்ரதாயார்த்தங்களில் இருளும் மருளும் ஒரு புற மிருக்கட்டும். ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலுங் கூட மிகவும் கேவலமான ஞானமே அவருக்குள்ளதென்று தெரிய வருகிறது. அவர் ஏதோ சில நாடகங்களுக்கு வியாக்கியான மெழுதியிருப்பதாக இவர் குறிப்பிடுகிறார்; அஃதொன்றும் நமக்குத் தெரியவரவில்லை. ந்யாய பரிசுத்திக்கு பூமிகையென்று எதுவும் தலைகீழாக அவர் எழுதிய வியாஸமொன்றுதான் நாமறிய வெளிவந்துளது. அதிலிருந்து பல பங்க்திகளை "சட்டியிலுள்ளது தானே அகப்பையில் வரும்" என்கிற பழமொழியை நினைப்பூட்டி நிற்குமிந்தச் சடகோபாசாரியர் தம்து அநுபந்தத்தில் உதாஹரிக்கிறார். இதில் 121வது பக்கத்தில் "प्रणष्टसर्वस्वाः—ப்ரணஷ்ட ஸர்வஸ்வா:" என்றொரு பதம் காணப்படுகிறது. வியாகரணத்தில் உத்க்ரந்தங்கள் வாசியாமற் போனாலும் ஸித்தாந்த

கௌமுதீமாத்ரமாவது வாசித்திருந்தாலும் இந்த அபசப்த ப்ரயோகம் பண்ண நேர்ந்திராது. ஒருகால் இந்த அபசப்தம் இவருடைய கைச்சரக்காக விழுந்திருக்குமோ என்று நினைத்தோம். பிறகு அவருடைய பூமிகையையே எடுத்துப் பார்த்ததில் அதில் (பக். 34ல் வரி 3ல்) இந்த அபசப்தம் இப்படியே காணப்பட்டது. அச்சுப்பிழையென்று சொல்லி மீளவு மொண்ணுதபடி அதில் இவ்வபசப்தம் அடிக்கடி காண்கிறது. (31வது பக்கம் 2வது வரியும் காண்க.) எத்தனை யிடங்களில் காணப்பட்டாலும் அச்சுப்பிழைதான் என்னவுங் கூடும். 33 வருஷங்களுக்கு முன்பு நாகராக்ஷரத்தில் நேர்ந்த அந்த அச்சுப்பிழையே இப்போதும் இவருடைய க்ரந்தாக்ஷரப்பதிப்பிலும் நேர்ந்துவிட்டது போலும். உண்மையில் அச்சுப்பிழையன்று, ஹல்லுப் பிழையே. “नशेः षान्तस्य” என்கிற சிறு ஸூத்ரங்கூட அறியாதவரென்று கல்வெட்டுப் பெற்றிருக்கின்ற அவரை மஹா வித்வானென்று புகழ இவரே அதிகாரி. (அந்த சதாவதானருடைய அஸம்பத்தங்களை இன்னமும் வேண்டிய மட்டும் காட்டுவோம்; குறையில்லை. காட்டியவளவுக்கு இவர் பதிலெழுதியாகட்டும்.) இந்த சடகோபாசார்யருக்கு அவர் ஸங்நிஹித ஜ்ஞாதி; ஆயினும் இவர் ‘ज्ञातिश्चेदनलेन किम् ?’ என்றபடி ஜ்ஞாதித்வம் பாராட்டியிகழாமல் புகழ்கின்றுரே யென்று இதனைப் பெரிய குணமாகவே கொள்வோம். இப்படி ஸம்ப்ரதாயார்த்தங்களிலும் சாமான்யசாஸ்த்ரார்த்தங்களிலும் மருள் மிக்க அவருடைய பங்க்திகளை இவர் பக்கம் பக்கமாக எடுத்து நிரப்புகிறுர். அவற்றுக்கு இவருடைய புத்தகத்தில் ப்ரஸக்தி லவலேசமேனுமுண்டோ வென்று பார்க்க. விஷயமற்ற தமது புத்தகத்தின் உருவத்தைப் பெருக்கடிக்கவேயாம். இங்கு நாம் நிரூபித்துள்ள சதாவதானருடைய தவறுகளுக்குக் கோப தாபங்களின்றி ப்ராமாணிகமாக இவர் சமாதானம் வெளியிட்டுவிட்டால் அவரையுமிவரையும் சேர்த்து நாம் ஆசார்யராகப் போற்றத் தடையேயிராது. இவர் அந்த ருஜு மார்க்கத்திற் செல்லாமல் ‘அண்ணங்கராசாரியருடைய நூல்களிலும் இப்படிப்பட்ட தவறுகளைக் காட்ட முடியாதோ?’ இத்தகைய வீண் வம்பு வார்த்தைகளையே யெழுதுவர். நாம் அல்பஜ்ஞரென்றும் அவர் ஸர்வஜ்ஞரென்றும் இவருடைய துணிபாகையால் இந்த வார்த்தையை ப்ரதிபந்தியாக இவர் சொல்லத் தகாது. நம்மைப் போலவே அவரும் நிந்தநீயரென்று தானே முடிந்தது. அவருக்கு என்ன விசேஷம்?

5. ஸ்ரீ பரகால ஸ்வாமி தூஷண விஷயம்.

மைசூர் பரகால ஸ்வாமி மடத்து ஆஸ்தானத்தை அலங்கரித்திருந்த பெரிய பரகால ஸ்வாமி யென்கிற மஹான் தாம் எல்லா திவ்ய தேசங்களிலும் தேசிகதிவ்ய மங்கள விக்ரஹ ப்ரதிஷ்டை செய்தவர் என்கிற உண்மை ஆராய்ச்சி நூலில் எழுதப் பட்டிருக்கிறது. இது பரகால ஸ்வாமியை தூஷித்த படியாம். [மற்றொரு தூஷணமும் காட்டுகிறுர்; அதைப் பற்றி அடுத்த படியாக விமர்சிப்போம். விக்ரஹ ப்ரதிஷ்டா விஷயத்தை இப்போது ஆராய்ந்து முடிப்போம்.] பெரிய பரகால ஸ்வாமி யென்பவருடைய காலம் இருநூறு வருஷங்களுக்கு உட்பட்டது. அவர் தாம் எல்லா திவ்ய தேசங்களிலும் தேசிகவிக்ரஹ ப்ரதிஷ்டை செய்வித்தவர் என்றுல் ப்ராசீனமன்றி நவீனமாகத்தான் இது ஏற்பட்டதென்று தேறுகிற படியாலே இதைப் பெரிய குறையாகக் கருதி

ஜவாயரவு போல் சீறி விழுகிறாரிவர்: சிறந்த ப்ரமாணம் காட்டி ஒரு விஷயம் நிரூபிக்கப் பட்டிருந்தால் யார் மேல் யார் எதற்காகச் சீறி விழுவது? "ஸ்ரீமத் முக்கர ஸவை ராஜா ஸ்ரீராம பூபால பல்வந்து பஹாதூர்" அவர்களால் தெலுங்கு பாஷையில் அச்சிடுவிக்கப் பட்டு உலகமெல்லாம் பரவியுள்ள ஸ்ரீபரகால ஸ்வாமி வைபவத்தில் 39வது பக்கத்தில் 4வது வரி முதல் 20வது வரி வரையில் எழுதப் பட்டிருக்கும் விஷயம் யாராலும் மறைக்கப் போகாது. அங்குள்ள தெலுங்கு வாசகங்களுக்கு நேரான மொழி பெயர்ப்பு வருமாறு:—

"ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவாஸ்தானத்தில் 21 வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த பெரிய பரகால மஹா தேசிகன் 'அரகல கூடு' என்கிற க்ராமத்தில் அவதரித்தாலும் முன்னோர்கள் வாழ்ந்த மாகடி யென்னும் க்ராமத்திலேயே வாழ்ந்து வந்தார். இந்த ஸ்வாமி 23வது திருநக்ஷத்ரத்திலேயே ஸம்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்து 60 சாதுர்மாஸ்யங்கள் அநுபவித்தார். இவர் வட தேச யாத்திரை யெழுந்தருளி டில்லி மஹா ப்ரபுவால் விசேஷமாக ஸம்மானிக்கப்பெற்று எல்லா திவ்யதேசங்களிலும் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிக திவ்யமங்களவிக்ரஹத்தை அர்ச்சையாக ப்ரதிஷ்டிப்பித்து மைஸூர் தொட்ட க்ருஷ்ண ராஜ வுடையாருக்கு பஞ்ச ஸம்ஸ்காரமநுக்ரஹித்து, அக் காலத்தில் பிரபலமாயிருந்த சைவ வைஷ்ணவ விவாதத்தில் வெற்றி பெற்று ஸித்தாந்த ஸ்தாபனம் செய்து ஆர்த்த ப்ரபத்தியை யநுஷ்டித்துப் பரமபதத்திற்கெழுந்தருளினவர்" இத்யாதி.

இவ் விஷயம் கன்னட பாஷையில் இப்படியே யெழுதப் பட்டிருப்பதை ஆராய்ச்சி நூல் எடுத்துக் காட்டியுள்ளது. இல்லாததை யாரும் எடுத்துக் காட்டவில்லை. காட்டத் தான் முடியுமோ? இதில் தமக்கு அநிஷ்ட ஸித்தி கண்டால் என் செய்வது? யார் மேல் சீறுவது? 'இவ் விஷயம் பரகால ஸ்வாமி வைபவத்தில் கிடையாது, இருப்பதாகச் சொல்லுவது பொய்' என்று வாதிக்க சிறிதும் அவகாசமில்லாத படி விஷயம் ஸத்யமாயிருப்பதால் தலைகாலில்லாத தூஷணங்களினால் ஒருவாறு ஆத்ம த்ருப்தி செய்து கொள்ளுகிறார். இது ப்ராமாணிக பத்ததியாகுமா? எல்லா திவ்ய தேசங்களிலும் தேசிக திவ்ய விக்ரஹ ப்ரதிஷ்டை செய்தது பெரிய பரகால ஸ்வாமியே யென்று இதனை நாம் கல்பித்து எழுதவில்லை. மைசூர் மடத்துத் தலைவர்கள் எழுதிப் பிரசுரம் செய்திருப்பது அபலபிக்க முடியாதது. அதனால் இவர்க்கும் இவரைச் சேர்ந்தவர்கட்கும் வருத்தமுண்டாகக் காரணமே இல்லை. இது உண்மைக்கு மாறான விஷயமாயிருந்தால் இதை வெளியிட்டருளின அவர்கள் மீது ஏதாவது எழுதலாமேயல்லது நம் மேல் படையெடுக்க ப்ரஸக்தியுண்டோ? கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் திருவெவ்வுளூர் திருவயிந்திரபுரம் திருக்குடந்தை தேரழுந்தூர் திருவிந்தளூர் திருப்புட்குழி தஞ்சை மாமணிக் கோயில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆழ்வார் திருநகரி ஸ்ரீ பெரும்பூதூர் என்றிப்படி சில திவ்ய தேசங்களில் பெரிய பரகாலஸ்வாமி தேசிகதிவ்ய விக்ரஹ ப்ரதிஷ்டை செய்தது வாஸ்தவமாயிருக்கலாமானாலும் எல்லா திவ்ய தேசங்களிலும் அவரே ப்ரதிஷ்டை செய்தாரென்பது யதார்த்தமன்று என்று ஒரு ஆராய்ச்சிக்காரர் எழுதினார். அங்ஙனே இவர் எழுதினாலும் நன்றாம். அதைப் பற்றி ஒன்றும் வாய் திறவாமலே நம்மைப் பற்றிக் கடிவது என்றிய வென்று மத்யஸ்தர்கள் கேட்பது. இவர் ஒரு வக்கீல் என்று பெயர் பெற்றவர். நியாயஸ்தர்

ணங்களில் ஒரு சாஸன பத்திரம் (ரிகார்டு) தாக்கல் செய்யப் பட்டால் அதனுடைய ஸத்யத்வ மித்த்யாத்வங்களைப் பற்றிப் பேசுவது வக்கீல்களுக்கு முறைமையே யல்லது அதை தாக்கல் செய்தவர் மேல் சீறி விழுவது முறைமையன்று என்பதைக் கூட அறியாத வக்கிலிவர்? இவ் விஷயத்தில் இப்போது இவ்வள போதும்.

6. தோஷபோக்யத்வவாதத்தின் தத்துவம்.

சடகோபாசாரியர் தமது அநுபந்த நூலில் (பக். 13, 14ல்) வாத்ஸல்யார்த்த விஷயமாகச் சில தூஷண பரிஹாஸங்கள் எழுதியுள்ளார். நாம் செய்யும் பாபங்களே பகவானுக்கு மிகவும் ப்ரீதியை விளைப்பனவென்றும் பாபங்களையே அவன் தனக்கு பரம போக்யமாகக் கொள்ளுகிறனென்றும், பாபங்களைச் செய்பவர்கள் மீதே பகவானுக்கு அளவிறந்த காதல் என்றும் நாம் சொல்லுவதாக இவர் அநுவாதம் செய்து தூஷிக்கிருர். இவ் விஷயத்தில் பூருவாசார்யர்களின் திருவுள்ளம் எப்படிப்பட்ட தென்பதைச் சிறிதும் அறியகில்லாரிவர். இரண்டு நூற்றுண்டுகட்கு முன்பு "கேசவம் தோஷபோக்யம்" என்று கூறிவைத்தவொரு வித்வானுக்கே ஸித்தாந்திகளின் திருவுள்ளம் இன்னதென்று தெரிய வில்லையென்றுல் அதையறிய இவர் எவ்வளவினர்? இவ்விஷயத்தில் இவர்கள் ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்திகளையே ஸ்பஷ்டமாக தூஷிப்பவர்கள் என்பதையும் அது பிசகு என்பதையும் விரிவாக நிரூபித்து **ச்ருத ப்ரகாசிகா ரக்ஷா** என்னும் பெயர் பூண்ட **வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகை** யென்கிற வடமொழி நூலை (210 ச்லோகங்கள் கொண்டது) இயற்றி அதன் தாற்பரியத்தையும் விரிவாக விளக்கி, அவற்றை இந்த க்ரந்தத்திற்கு அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன். தேசிகனது திருவுள்ளத்தையே இவர்கள் நன்கு உணரப்பெருதவர்களென்பது அதனுல் மிகத் தெளிவாகும்.

7. 'ஸபாபுஜங்கீ' விஷயத்தின் தத்துவம்.

திண்டுக்கல் வக்கீல் எழுதின தேசிக சரித்திரத்தில் தேசிகன் வைபவம் ஸ்வல்பபாகம், பூர்வாசார்ய தூஷணமே அதிக பாகம் என்பது யாவருமறிந்தது. ஸ்ரீரங்கத்தில் ஆசார்ய பதவியை வஹித்திருந்த பெரியார்கள் ஸபைக்குச் சென்று வாதம் செய்து ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யக் கூடிய சக்தி யற்றவர்களாய் கேவலம் தமிழ்ப் பாட்டுக்களிலேயே போது போக்கிக் கொண்டிருந்த படியால் அவ்விடத்திற்கு தேசிகனை வரவழைத்து துர்வாதிகளை விலக்கி மதஸ்தாபனம் பண்ண நேர்ந்ததென்று அவரால் எழுதப்பட்டிருந்தது. அதன் மேல் அவ் வுண்மை ஆராய்ச்சி செய்யப் பட்டது. தேசிகனுடைய உண்மை நிலைமையை யுணர்ந்து அவருடைய பெருமைகளை விளக்கி யிருக்கின்றவொரு பக்தர் "**ஸபா புஜங்கீ**" என்று கூறியிருப்பதனுல் சபைகளிற்செல்ல வெருவியிருப்பவரான தேசிகனை சபைக்கு எழுந்தருளினவராகக் கூறுவது வெறுங் கல்பனை யென்று பண்டே பல நூல்களில் பரக்க நிரூபிதம். அதைப்பற்றி இவர் (பக். 82, 83களில்) சிறிதும் விமர்சமின்றிக்கே யெழுதியுள்ளார். 'ஸ்ரீதேசிகன் வாதிகளைப் பல முறை வாதத்தில் ஜயித்தாரென்கிற விஷயத்தை மறுக்க வேணுமென்கிற துராக்ரஹம் இவருக்கு ஏன் ஏற்பட்டதென்று நாம் கேட்கிறேம்' என்கிருர். மஹாசார்ய ஸார்வபௌமரான தேசிகனுக்கு ஒரு அவத்யமும் இருக்கத் தகா

தென்கிற நோக்கத்தினுலேயே நாம் உண்மைப் பொருளை விளக்குகிறேமென்பதை உலகமெல்லாம் அறியும்பொருட்டு 'ஸபா புஜங்கீ ஸர்வஸ்வம்' என்றெரு பத்ய ப்ரபந்தம் எழுதியுள்ளோம். அது வடமொழியில் 104 ச்லோகங்கள் கொண்டது. அதற்குத் தமிழ் தெலுங்கு ஹிந்தீ ஆகிய மூன்று பாஷைகளிலும் வியாக்கியானமெழுதி வெளியிட்டிருக்கிறேம். அந்த மூல க்ரந்தத்தையும் தமிழுரையையும் இதற்கு அநுபந்தமாக இத்துடன் சேர்த்திருக்கிறேம். விவேகிகள் நன்கு விமர்சிப்பது. அதனுடைய ஸாராம்சமாவது— ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஹயக்ரீவனை உபாஸித்த காலத்தில் * ஜிகீஷுதோ மே கவிதார்க்கிகேந்த்ராந் ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநமப்யுபேயா: * என்றும் * ஸ்வாமிந் ஸமாஜேஷு ஸமேதிஷீய ஸ்வச்சந்த வாதாஹவபத்தசூர: * என்றும் ப்ரார்த்தித்திருப்பதனுலும், * அகணி ஸதஸி ஸத்பிர் யஸ் ஸமஸ்யா ஸஹஸ்ரீ * இத்யாதிகள் அருளிச் செய்திருப்பதனுலும் கவிகளையும் தார்க்கிகர்களையும் வெல்ல வேண்டியும், 'ஸமஸ்யா ஸஹஸ்ரீ' இத்யாதி பிருதுகளைப் பெற வேண்டியும் இளமையில் சபைகளிற் சென்று வாதங்கள் செய்ததுண்டு. அதை யாரும் இல்லை செய்வாரில்லை. ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும் பரமத பங்க ரஹஸ்யத்திலும் ப்ரதிஷ்டிதர்களாயுள்ளவர்கள் வாத சபைகளில் சென்று வாதிக்கக் கூடாதென்றும் அப்படி வாதித்து அந்தணர்களை வென்றுல் ச்மசானத்தில் வ்ருக்ஷமாகப் பிறக்க நேருமென்றும் சாஸ்த்ரமிருக்கையாலே விரக்தர்களான வைதிகர்கள் ஒரு போதும் வாத சபைக்குச் செல்லவே கூடாதென்றும், விரோதி நிரஸநம் பண்ண அவசியமேற்பட்டால் விச்வாமித்ர முனிவன் இராமபிரானைக் கொண்டு தாடகாதி நிரஸனம் செய்தது போல, ஆசார்ய பதவியிலுள்ளவர்கள் தங்கள் பெருமைக்குக் குலைதலின்றியே சிஷ்யர்களைக் கொண்டு விமத நிரஸநம் செய்யலாமென்றும் அருளிச் செய்திருக்கையாலே இப்படி வடிக் கட்டின சாஸ்த்ரார்த்தமறிந்த ஸ்வாமி தாம் ப்ரதிஷ்டிதராய் ஆசார்ய பதவியை வஹித்த பின்பு வாதசபைக்கு ஒரு காலும் எழுந்தருளியிருக்க மாட்டார்; உண்மையாகவே எழுந்தருளினுரென்னில், அப்போது தாம் ஆசார்ய பதவியை வஹித்திலர் என்றும், அப்போது ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த மஹாசார்யர்கள் தமது சிஷ்யரான இவரைக் கொண்டு விமத நிரஸநம் செய்வித்தது பொருத்தமென்றும் இசையவேணும். வேறு விதமாக நிர்வஹிக்க அவகாசமில்லை. ஸ்வாமி ப்ரதிஷ்டிதரான பின்பு எப்படிப் பட்ட வாத சபைக்கும் எழுந்தருளினதில்லை என்று விவக்ஷித்தே : "ஸபா புஜங்கீ" என்று ஸ்துதி செய்யப் பட்டுளது. ஸ்ரீரங்கத்திலெழுந்தருளியுள்ள மஹாசார்யர்கள் மீது அணுவளவும் அவத்யம் கூற அவகாசமில்லை— என்பதேயாம்.

8. ந்யாஸ விம்சதி வ்யாக்யான சோதநம்.

யாம் அச்சிடுவித்து வெளியிட்டுள்ள ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்த மாலையில் ந்யாஸ விம்சதி வ்யாக்கியானத்தில் மூன்று பிழைகள் விழுந்திருப்பதாக இவர் (பக். 21ல்) எடுத்துக்காட்டியுள்ளார். முதல் சுலோக வியாக்யானத்தில் ஒரு பிழையும், 7வது ச்லோக வியாக்கியானத்தில் ஒரு பிழையும், 22வது ச்லோக வியாக்கியானத்தில் ஒரு பிழையுமாக மூன்று சிறு பிழைகளே இவர் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த எமது ந்யாஸ விம்சதி வியாக்கியானப் பதிப்பில் மூன்று பிழைகள்

அல்ல; நாற்பத்தேழு பிழைகள் நேர்ந்து விட்டன. உடனே இதை நாம் கவனித்து அந்த நாற்பத்தேழு பிழைகளேயும் நீக்கி மறுபடியும் சுத்தமாக அந்த க்ரந்தத்தைப் பதிப்பித்து (5 வருஷங்களுக்கு முன்னமே) உலகமெங்கும் பரவ விட்டிருக்கிறேம். இப்போதும் இதற்கு அநுபந்தமாகவும் அதைச் சேர்த்திருக்கிறேம். இந்த வியாஜத்தால் ஸத்துக்கள் நல்ல பாடங்களைக் கண்டு களிக்கவேணும். இப்படித் திருத்தமான பதிப்பு பண்டே வெளி வந்திருப்பது இவர்க்குத் தெரிய வில்லை யென்பது இங்கு விஷயமன்று. இவர் எடுத்துக் காட்டியுள்ள பிழைகள் மூன்றே. அம் மூன்றும் அஸாரமானவை. அவசியம் திருத்தியே யாகவேண்டிய பிழைகள் பல பல இருந்தும் அவற்றை இவர் சிறிதும் கிரஹிக்க வில்லை. கிரஹிக்க சக்தருமல்லர். முதல் ச்லோகத்தில் "ஜித விஷய கணம்" என்று விழுந்திருக்கிறது. உலக மெல்லாம் இப்படியே பாடம் க்ரஹித்திருக்கிறது. இங்குப் பெரிய பிழையுள்ளது. இதன் வியாக்கியானத்தில் "ஸ்வவசேந்த்ரிய வர்க்கம்" என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருப்பதால் "ஜித விஷயி கணம்" என்பது தான் சுத்தமான பாடம். இது வன்றே முக்கியமான முதற்பிழை. இப்படிப் பட்ட பிழைகள் பல (முதற் பதிப்பில்) விழுந்து விட்டன. அன்னவற்றுள் ஒன்றையாவது இவர் எடுத்துக் காட்டியிருந்தால் இவரது ஞானத்தை மெச்சுவோம். அதற்கு ப்ரஸக்தி யேது?

9. ராமாநுஜ தயாபாத்ர விஷயம்.

ஆராய்ச்சி நூலில் 59, 60 பாராக்களில் இவ்விஷயம் மிக விரிவாகவும் தெளிவாகவுமுள்ளது. உலகுக்கெல்லாம் பெரிய க்ஷோபத்தை விளைக்கவும் த்வீபாந்தரங்களிலும் பங்கமடையவும் நவீநர்களால் கல்பிக்கப் பட்ட *ராமாநுஜ தயாபாத்திரத் தனியனைப் புராதனமென்று காட்டிக் கொள்ள ஏழெட்டு வருஷங்களுக்கு முன் ராமாநுஜ தயா பாத்ரோத்ஸவ மென்று பொம்மை தூரக் கலியாணம் போன்றவொரு திருவிழவை எங்கும் நடத்திவைத்தார்கள். அப்போது அந்தத் தனியனுடைய தத்துவத்தை நாம் பல பிரமாணங்களுடன் விளக்கி மூன்று நூல்கள் வெளியிட்டோம். அவற்றில் ஒரு விஷயத்திற்கும் இவராவது இவரைச் சேர்ந்தவர்களாவது பதில் சொல்ல முடியாதென்பது கல் வெட்டு. அந்த மூன்று நூல்களிலுள்ள விஷயங்களை ஸாரமாகச் சுருக்கி இதிலேயே அநுபந்தமாகச்சேர்த்து வெளியிட்டிருக்கிறேம். கண்ணுடையார் நன்கு காண்க. இப்போது இவர் தமது நூலில் 84—87 பக்கங்களில் அர்த்தமற்ற சுஷ்க வாக் ஜாலங்களைப் பரவ விட்டிருக்கிறர். கோவில்களிலும் க்ருஹங்களிலும் எங்குமே இரண்டு வகையான பாத்திரங்களுண்டு. திருவாராதனம் முதலிய பரிசுத்த காரியங்களுக்கு உபயோகப் படுகை ஒரு வகை. மற்றொரு வகையை நாம் சொல்ல வேணுமோ? தமது பாத்திரம் அந்த வகையிற் கூட்ச் சேராமல் போயிற்றேயென்கிற வயிற்றெரிச்சலினல் இவர் ஸ்ரீசைலேசதயாபாத்திரத்தை எவ்வளவு தூஷித்தாலும் அது சூர்யன்மீது நிஷ்டீவனஞ்செய்வதொக்குமத்தனை. அந்த பாத்திரம் உதிக்க வேண்டிய காரணமென்ன? என்பது முக்கியமான விசாரம். இதிலிவர்கள் பெரும் புளுகு ஒன்று எழுதினர்கள். அதாவது, நயனாசார்யர் தேசிகனிடம் பகவத்விஷயம் ஸேவிக்கும்போது ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி விலகியிருந்து, பிறகு நயனாசார்யரிடத்தில் ஸேவித்ததாகவும் அப்போது அவர் ராமாநுஜ தயாபாத்ரத்

தனியன் இட்டதாகவும் அதைக் கேட்டு தேசிகன் மிக வுகந்ததாகவும்... இத்யாதி ஆகாசப் பந்தல்கள் வேண்டிய மட்டும் போட்டார்கள். இதெல்லாம், சண்ட மாருதம் தொட்டயாசார்யர் ஸ்வாமி ஸாதித்ததென்று இவர்கள் மிகமிகக் கொண்டாடுகிறதேசிகவைபவப்ரகாசிகா ஸ்தோத்ரத்தில் *108* ஆம் ச்லோகத்தினுல் பெரும்புளுகாக்கப் பட்டவை. இப்படிப் பட்ட விஷயங்கள் பலபல காணலாகும் அநுபந்தத்தில்.

ஆங்கிலத்தில் மூன்று மாதங்களுக் கொருமுறை வெளிவரும் த்ரிவேணி யென்கிற பத்ரிகையின் சென்ற ஸெப் டம்பர்மீ வெளியீட்டில் 'ஆண்டாள் யார்?' என்று மகுடம் புனைந்தவோர் வியாஸம் வெளிவந்துளது, அதை யெழுதினவர் C. R. என்று இவ்வளவே காண்கிறது.

ஆண்டாள் யார்? என்கிற வினுவுக்கு எவ்விதமான விடை யிறுக்கப் பட்டு முடிந்திருக்கிற தென்னில்; ஆண்டாள் பெரியாழ்வாருடைய நிஜ புத்திரியுமல்லள், வளர்த்த புதல்வியு மல்லள்; ஆண்டாளென்று ஒரு வ்யக்தி இருந்ததே கிடையாது; ஆழ்வார்கள் தங்களுடைய ஆண் தன்மையைவிட்டுப் பெண் தன்மையை யடைந்து பேசுகிற முறைமையும் ஒன்று உண்டாதலால் இந்த முறைமையைக் கைப்பற்றின பெரியாழ்வார் தம்முடைய மனோ பாவனையையே ஒரு பெண்ணாக வைத்துப் பேசியிருக்கிறார். இது காவிய மனோபாவத்தின் கற்பனை யாகும்.— என்கிற இதுவே மேற்குறித்த ஆங்கில வியாஸத்தின் தேறின தாற்பரியம். இது C. R. என்பவருடைய தமது கற்பனையல்ல வென்றும், தம்முடைய மதிப்புக்குப் பாத்திரமான ஒரு நண்பரின் அபிப்பிராய மென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது யாருடைய அபிப்ராயமானு லென்ன? ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு ஒரு தமிழ்ப் பத்திரிகையிலேயே இவ்வபிப்ராயம் வெளிவந்திருந்ததாக வும் இப்போது நாம் சில நண்பர் முகமாகக் கேள்விப்படுகிறோம். இவ்வபிப்ராயம்சிறிதேனும் பொருத்தமுடையதாக இருக்கவில்லையே. இதன் தத்துவத்தைப் பலர் அறிய விரும்புவதால் இங்கு இதைப்பற்றி நாம் விவரிக்கின்றோம்.

நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் தங்களுடைய பக்திப் பெருங் காதல் புறவெள்ளமிடப் பெற்று அதனுல் ஆண்மையை யிழந்து பெண்மையை யெய்தித் தாய் பாசுரமாகவும் மகள் பாசுரமாகவும் தோழி பாசுரமாகவும் பேசி யிருப்பது உண்மையே. அப்படிப்பேசுமிடங்களில் பதிகத்தை முடிக்கும்போது "குருகூர்ச் சடகோபன் சொன்ன" என்றும், "பரகாலன் கலியன் சொன்ன" என்றும் தம்முடைய சொந்த வாக்காகவே முடிப்பதுதான் காண்கிறது. அதனுல் அப்பதிகத்தில் மகளாகக் கூறப்பட்டவர் ஆழ்வாரே யென்பது தேறும்.

இதே வகையில் பெரியாழ்வாரும் தம்முடைய சொந்தப் பிரபந்தமான [பெரியாழ்வார் திருமொழியென வழங்கும்] திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவை மூன்ருவது நூறில் 7, 8 பதிகங்களாகும். அவை யிரண்டும் தாய்ப்பாசுரமாகவே பேசியவை. அவற்றில் பெரியாழ்வார் மகளாக வைக்கப்பட்டு அம்மகளினது ஈடுபாட்டைத் தாய் சொல்லி முறையிடுவதாக அமைத்திருக்கிறது. அவற்றுள் முதற்பதிகம் "ஐயபுழுதி யுடம்பளைந்து இவள் பேச்சு மலந்தலையாய்" என்று தொடங்குவது. இரண்டாவது பதிகம் "நல்லதோர் தாமரைப் பொய்கை நாண்மலர்மேல் பனிசோர, அல்லியுந் தாது முதிர்ந்திட்டு அழகழிந்தாலொத்த தாலோ, இல்லம் வெறியோடிற்றுலோ என்மகளை யெங்குங் காணேன், மல்லரை அட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ" என்கிற பாசுரம் தொடங்கியுள்ளது. எனது மகள் என் வீட்டை விட்டு எம்பெருமான் பின்னே போய்விட்டாள் போல் தெரியவருகிறது என்று இதில் கூறப்படுகிறது. இப்பதிகத்திலேயே நான்காவது பாசுரம்—"ஒரு மகள்

தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்" (3-8-1) என்பதாம்.

இப் பாசுரங்களை நோக்குமிடத்து, பெரியாழ்வார் தம்முடைய ஒரு பெண் பிள்ளையின் செய்தியை யெடுத்துக் கூறுவதாக மேலெழுந்த பார்வையில் தோன்றும். இப்படியே உண்மையாகச் சிலர் க்ரஹிப்பதுமுண்டு. '* ஒருமகள் தன்னையுடையேன் என்று பெரியாழ்வார் தாமே தமக்கு ஒரு பெண் இருந்ததாகவும் அவளைச்செங்கண்மால்கொண்டு போனதாகவும் கூறுகிறார்' என்று ஹரிகதா காலக்ஷேபகாரர்கள் சிலர் கூறுவதுமுண்டு. இது மிகவும் தவறான கொள்கை. ஏனெனில்; இங்கு மகள் என்று சொல்லுவது ஸ்த்ரீ பாவனையை யடைந்த பெரியாழ்வாரையே யல்லது ஆண்டாளையன்று. ஆண்டாளைப்பற்றின ப்ரஸ்தாவம் இந்தப் பதிகங்களில் இல்லை. மேலே விவரித்த கொள்கையை த்ரிவேணியில் காணும் வியாஸம் கண்டிக்க எழுந்ததாகில் நாமும் அதில் சேர்ந்துகொள்ளுகிறோம்.

இங்குச் சிலர் கேட்கக்கூடும். ஆண்டாளென்றொரு வ்யக்தி இருந்ததேயில்லையென்று C. R. என்பவர் சொன்னாலும், பெரியாழ்வார் மகளாக ஆண்டாள் இருந்ததாகவே ஸித்தாந்த மாதலால் "ஒருமகள் தன்னையுடையேன்" என்கிற பாசுரமானது அத்திருமகளை நோக்கியே அவதரித்ததென்று கொண்டாலென்ன? பெரியாழ்வார் தம்முடைய பக்தியை வெளியிடுதல் போலவே தம்முடைய மகளின் பக்தியை வெளியிடவும் ப்ராப்தமாகையாலும், உண்மையில் தமக்கு பரமபக்தியே வடிவெடுத்த புதல்வி யொருத்தி இருக்கிறபடியாலும் அவளைப்பற்றியே "ஒருமகள் தன்னையுடையேன்" என்கிறபாசுரம் அவதரித்ததாகக் கொண்டால் பிசகு என்ன? என்று கேட்கக்கூடும்.

இதற்குச் சொல்லுகிறோம் கேண்மின். இப்பதிகத்தின் முடிவு பாசுரம் எங்ஙனே யுள்ளதென்று பார்க்க வேணும். "தாயவள் சொல்லிய சொல்லைத் தண்புதுவைப் பட்டன் சொன்ன" என்றன்றோ வுள்ளது. தாய்ப் பாசுரமாக வைத்துப் பெரியாழ்வார் தமது நிலைமையைத் தாம் பாடின பதிகம் என்றே இதற்குப் பொருளாதலால் இப்பதிகத்திலும் இதன் முற்பதிகத்திலும் பெரியாழ்வாரே மகளாக வைத்துப் பேசப்பட்டிருக்கின்றாரே யல்லது ஆண்டாளைப்பற்றின ப்ரஸ்தாவமே இங்குக் கிடையாதென்பது நிஸ்ஸந்தேஹம். த்ரிவேணி பத்ரிகையின் வியாஸம் இவ்விஷயத்தையெடுத்து விளக்கி யிருக்குமாயின் மிக நன்றாம். உலகமெல்லாம் இதை மெச்சும். ஆண்டாளுடைய பாசுரங்களாகத் திருப்பாவையென்றும் நாச்சியார் திருமொழியென்றும் இரண்டு திவ்வியப் பிரபந்தங்கள் பிரசித்தமாயிருக்க, அவற்றினுட் புகுந்து விஷய மருமங்களைச் சிறிதும் நோக்காமல் ஆண்டாளென்றொரு வ்யக்தியே யிருந்ததில்லை யென்றால் இதற்கு அர்த்தமுண்டோ?

திருப்பாவையின் முடிவு பாசுரத்தில் "பட்டர்பிரான் கோதை சொன்ன" என்றுள்ளது. அடுத்த நாச்சியார் திருமொழியின் பதினான்கு பதிகங்களிலும் முடிவில் "விட்டுசித்தன் கோதை சொன்ன" "குழற்கோதை கூறிய" "சுரும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த" "வில்லைத் துலைத்த புருவத்தாள் வேட்கையுற்று மிக விரும்புஞ் சொல்" என்றிங்ஙனே கூறி முடித்திருப்பதால் தனியே கோதை யென்றொரு பெண்மணி யிருந்தே தீரவேண்டும். இங்குப் பிறர் என்ன சொல்லக் கூடுமென்னில், திருப்பாவை யென்றும் நாச்சியார் திருமொழி யென்றும் இரண்டு பிரபந்தங்கள் இருப்பது வாஸ்தவமே; இவையும் பெரியாழ்வார்

தாமே பாடியவை என்கிறேம்—என்று சொல்லக்கூடும். இது பொருந்தாதென்பதை நிரூபிக்கிறோம். பெரியாழ்வார் பாடியவை இரண்டு பிரபந்தங்களென்றும் ஆண்டாள் பாடியவை இரண்டு பிரபந்தங்களென்றும் உள்ள வ்யவஹாரத்தைத் தள்ளி, பெரியாழ்வாரருளியவை நான்கு பிரபந்தங்கள் என்று கொள்ளவேணுமென்பதே பிறருடைய கொள்கை யென்று தேறிநிற்கும். பெரியாழ்வார் திருப்பல்லாண்டிலும் அதற்கடுத்த திருமொழியிலும் பதிகந்தோறும் "விட்டுசித்தன் சொன்ன மாலை" "பட்டர்பிரான் சொன்ன பாடல்" என்றே கூறிவைத்து, திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் அங்ஙனங் கூறாது "பட்டர்பிரான் கோதை சொன்ன" "விட்டுசித்தன் கோதை சொன்ன" என்றிப்படி கூறினது வஞ்சனையின் பாற்படுமன்றோ. இக்குற்றத்திற்கு ஆளாகார் பெரியார். பெரியாழ்வாரே பாவனையின் கனத்தாற் பெண்மையெய்தி இவை பாடினரென்னில், பிறவிடங்களிற்போலப் பட்டர்பிரான் பாடலாகவும் விட்டுசித்தன் சொல்லாகவுமே நிகமனப் பாசுரம் அமையுமே யல்லது "சுரும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த" என்றும் "வில்லைத் துலைத்த புருவத்தாள் விரும்பிய சொல்" என்றும் இவ்வகைகளிலேயே அமைந்திருப்பது பொருந்தாது. பெரியாழ்வாரே இப்படி மாறுபாடாக அமைத்தாரென்னில் அவரை வஞ்சனைக் குற்றத்திற்கு ஆளாக்க வேண்டியேவரும்.

நாச்சியார் திருமொழியினுட் புகுந்து நோக்குவோமாயின், பெரியாழ்வாரிற் காட்டில் வேறுபட்ட ஆண்டாள் என்னும் வ்யக்தி உள்ளபடி உண்டென்பது ஸ்பஷ்டமாகப் புலப்படும். மூன்றிடங்களெடுத்துக் காட்டுகிறேம். அத்திருமொழியில் (10-4.) "கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே" என்றொரு பாசுரமுள்ளது. இதற்குப் பூருவாசார்யர்கள் என்ன பொருள் கூறியிருக்கிறார்களென்று தெரிந்துகொள்ள விரும்பி அவர்களது வியாக்கியானங்களை நாம் தேடவேண்டாம். வெறுந்தமிழர் முறையில் நாமே பார்ப்போம். இப்பாசுரத்திற்கு என்ன பொருள் சொல்லத் தகுமென்று ஒவ்வொரு தமிழரும் பார்க்கலாம். "நானும் பிறந்தமை பொய்யன்றே" என்றவளவுக்குப் பொருள் உணரவேணும். விபீடணனை நோக்கிப் பெருமாள் கடற்கரையிலே அபயமளித்தது அவனொருவனுக்கே யன்று; அவனை வியாஜமாகக் கொண்டு அவதரித்த சரமச்லோகமானது பக்தர்களெல்லாரும் தேறியிருப்பதற்குப் பாங்காகும். ஒருகால் அந்த வார்த்தை, பொய்யாக ஆய்விட்டாலுங்கூட [அதாவது, அவ்வழியால் பேறு தவறினாலுங்கூட] **நானும் பிறந்தமை பொய்யன்றே**= நான் ஒரு மஹா பாகவதருடைய பெண்ணைய்ப் பிறந்திருக்கிறேனே; இப்பிறப்பு பொய்யாகமாட்டாதே; [அதாவது, இவ்வழியாலே பேறு தவறிப் போகமாட்டாதன்றோ] என்பதே இவ்விடத்திற்கு ஏற்ற பொருளாகும். இப்பாசுரத்தைக் கொண்ட பதிகத்தின் இறுதிப் பாசுரமும் இப்பொருளையே வற்புறுத்தும். அப்பாசுரமும் முக்கியமானதாகையால் அதனையும் விவரிக்கிறேம் :—

"நல்லவென் தோழி நாகணை மிசை நம்பர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்
[செய்வதேன்?
வில்லிபுதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே."

இதன் தாற்பரியமாவது, என்னிழவுக்கு என்னைக் காட்டிலும் முன்னம் நோவுபடுகின்ற தோழியே! பராத்பரரான எம்பெருமான் ஒருவர்க்கு மெட்டவொண்ணாத பெருமையை யுடையரா

யிருப்பர்; நானோ 'நீசனேன் நிறையொன்றுமிலேன்' என்னும்படி சிறுமைக்கு எல்லை நிலமாயிருப்பவள். அவர்க்கும் எனக்கும் பர்வத பரமாணுக்களோட்டைவாசி போந்திருக்குமான பின்பு அவரைப் பெறுதற்கு நம்மாற் செய்யலாவதுண்டோ? ஆனாலும் எனக்குப் பேற்றுக்கு வழியுண்டுகாண். ஸர்வவ்யாபகனான அப்பெருமானைத் தம் திருவுள்ளத்திலே யடக்கிக்கொண்டு அதனால் விஷ்ணுசித்தரென்று விருது வஹிக்கும் நமது பெரியாழ்வார் தமக்குத் தேவராயிருக்கிற அப்பெருமானை ஓரிசையைச் சொல்லி யழைக்கவுமாம்; கிழியறுத்து வரப்பண்ணவுமாம்; திருமஞ்சனத்தைச் சேர்த்து வைத்து 'நாரணா! நீராட வாராய்' என்றழைக்கவுமாம்; திருக்குழல் பணியைச் சமைத்து வைத்துக் குழல்வார வாராய் என்றழைக்கவுமாம்; பூச்சூட வாராய் என்றழைக்கவுமாம்; திருவந்திக் காப்பிடவழைக்கவுமாம்; தமக்குப் புருஷகாரமானாரை முன்னிட்டு வரப்பண்ணவுமாம்; ஏதேனுமாக, அவர்க்கு ஸாத்யமான வொருவகையாலே வருவித்தாராகில் அவ்வழியாக அப்பெருமானை ஸேவிக்கப் பெறுவோம்; நம்முடைய சிறுமை காரணமாக நாம் இழக்கவேண்டியதில்லை; நமக்கு ஆசிரியரான பெரியாழ்வாருடைய வலிமையினால் நாம் பெற்றே தீருவோம்—என்பதாம்.

அன்றியும் (11 - 10) "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பார்" என்கிற பாசுரமும் முக்கியமாகக் குறிக்கொள்ளத் தக்கது. எம்பெருமான் அர்ஜுநவ்யாஜத்தாலே திருத்தேர்த் தட்டிலே நின்றருளிச்செய்த யதார்த்தமான * மாமேகம் சரணம் வ்ரஜ * என்கிற சரமச்லோகவார்த்தையை எங்கள் பெரியாழ்வார் கேட்டு தந்நிஷ்டராயிருப்பர்-என்பது இதன் பொருள்.

ஆக இப்பாசுரங்களைப் பெரியாழ்வார்தாமே எழுதிவைத்தாரென்னில், இது சிறிதும் பொருந்தமாட்டாதன்றோ. இப்பாசுரங்களை நோக்கின பின்பு கோதை அல்லது ஆண்டாளென்கிற வ்யக்தி தனிப்பட இல்லையென்கிற வார்த்தை தோன்ற நியாயமில்லை.

ஆங்கில வியாஸத்தின் முடிவில் "இத்தகைய அபிப்பிராயம் தற்காலம் நாஸ்திக வாதம்போல் தோன்றலாம்; [நாஸ்திக வாதமன்று.] பெரியாழ்வார் ஆண்டாள் என்று இரண்டு வ்யக்திகளாகக் கொள்வதைவிட ஒரே வ்யக்தியிடத்தில் இந்த இரண்டு விசேஷணங்களையும் கொள்வது குறைவா?" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது சிறிதும் அர்த்தமில்லாத வார்த்தையே. இரண்டு வ்யக்திகளென்று ஐயமின்றி வ்யக்தமாகத் தெரிந்திருக்க, ஒரே வ்யக்தியாகக் கொள்வது பிசகன்றோ. எதைக்கொண்டு ஒரே வ்யக்தியாகக் கூறுவது? கூறுவதற்கு அற்பமான ஆதாரமாவது இருந்தால் கூறலாம். யுக்தியும் பிரமாணமும் சிறிதுமில்லையே.

ஆழ்வார்களுள் பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசையார் திருப்பாணனர் ஆகிய இவ்வைவரது பாடல்களில் இன்னார்பாடியதென்கிற குறிப்பேயில்லாமலிருக்கிறது. நம்மாழ்வாருடைய நான்கு பிரபந்தங்களுள் திருவாசிரியத்திலும் பெரிய திருவந்தாதியிலும் மாத்திரம் ஆழ்வார் பெயர் குறிப்பிடப்பெறாம லிருக்கிறது. திருமங்கையாழ்வார் பாடிய ஆறு பிரபந்தங்களுள் திருவெழு கூற்றிருக்கையிலும் இரண்டு திருமடல்களிலும் ஆழ்வார் பெயர் குறிப்பிடப்பெறாம லிருக்கிறது. இவற்றைக்கொண்டு நவீனர்கள் 'அந்தப் பிரபந்தம் அவர் பணித்ததன்று; இந்தப் பிரபந்தம் இவர் பணித்ததன்று.' என்று எதை

யாவ்து சொல்லியுமெழுதியும் போந்தால் 'ப்ராமாணிகர்களான பெரியார் ஏற்றுக்கொள்ளார்' என்கிற ஒரு வார்த்தையோடு முடிக்கவேண்டியிருக்கும். விவாத விஷயமோ அப்படிப்பட்டதன்று. ஆண்டாளென்பாள் தனி வ்யக்தியேயென்பதற்கு நாம் கீழே காட்டியவை தவிர இன்னமும் பல காட்டுகிறோம்.

ஆண்டாளுடைய அவதார ஸ்தலமான ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு நாச்சியார் திருமாளிகையென்றே பெயர் வழங்கி வருகின்றது. சூடிக்கொடுத்த நாச்சியாரென்று அவளுக்குத் திருநாமமாவதற்கு ஒரு ஐதிஹ்யம் ப்ரஸித்தமானது. அதனை வேதாந்த தேசிகரும் தாமருளிய கோதாஸ்துதியில் பலகாலெடுத்துக் கூறியுள்ளார். பிள்ளைப்பெருமாளையங்காரும் தமது பிரபந்தங்களிற் பேசியுள்ளார். திவ்ய ஸூரி சரிதம் குருபரம்பரா ப்ரபாவம் முதலான பல க்ரந்தங்களிலுமுள்ளது. அவ்வைதிஹ்யத்தின்படி நாளைக்கும் அத்தலத்தில் நாடோறும் காலையில் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை மேளதாள மரியாதைகளுடன் வடபெருங்கோயிலுடையானென்னும் பெருமாளுடைய ஸன்னிதிக்குக் கொண்டுபோய் ஸமர்ப்பிப்பது முதற் காரியமாக நடைபெற்று வருகின்றது.

ஆண்டாள் தனது திருமொழியில் "மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவிவைத்தேன், நூறுதடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்" என்று கூறியிருந்ததை அப்படியே உண்மையான அனுட்டானமாக நடத்திவைத்து உடனே ஆண்டாளையும் ஸேவிக்கவெழுந்தருளின ஸ்ரீ ராமாநுஜரை ஆண்டாள் அர்ச்சாவதார ஸமாதியையுங் கடந்து எதிர்கொண்டுவந்து 'எம் அண்ணரே!' என்று தழுவிக்கொள்ள அன்று முதலாகப் "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று உலகமெல்லாம் வாழ்த்த நேர்ந்திருக்கின்றது. "கோதற்ற ஞானத் திருப்பாவைபாடிய பாவை தங்கை" என்றார் ஆன்றோரும்.

இப்படி இன்னமும் பல ஹேதுக்களுண்டு. ஆனால் இவையெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஒரு ஸங்கேதமான ஐதிஹ்ய வாதங்கள் என்று பிறர் இலேசாகச் சொல்லிவிடவுங் கூடும். அப்படிச் சொல்லுமவர்களைத் திருத்த வேணுமென்கிற எண்ணம் நமக்குச் சிறிதுமில்லை. இவ்விஷயங்களில் நம்பிக்கை யுள்ளவர்களுக்குத் தோன்றும் கலக்கங்களைப் பரிஹரிக்கவே நாம் இஃது எழுதினது. ஸ்ரீ ராமாயணத்தைப் பார்ப்பவர்கள் சிலர் 'ராமனும் அவதரித்ததில்லை ஸீதையும் அவதரித்ததில்லை; ஸுக்ரீவாதிகளுமில்லை, ராவணாதிகளுமில்லை; நல்ல சில நீதிகளை யுணர்த்துவதற்காகவே ராமாயணம் கற்பனை செய்யப்பட்டது-என்று கூறுமவர்களும் எழுதிவைத்திருப்பவர்களும் உளரன்றே. அன்னவர்களைப் பற்றி நாம் என்ன செய்ய நினைப்போம்? ஒன்றுமில்லை. "கருவிலே திருவிலாதீர்! காலத்தைக் கழிக்கின்றீரே" என்கிற திருமாலைப் பாசுரத்தையே அநுஸந்தானஞ் செய்துநிற்போம்.

ப்ரக்ருத விஷயத்தில் ஐதிஹ்யங்களிலொன்றையும் இவர்கள் நம்பவேண்டா. நாச்சியார் திருமொழியிலுள்ள பாசுரங்கள் ஆண்டாளென்கிற வ்யக்தியை அவசியம் ஸ்தாபித்துத்தரும். "நானும் பிறந்தமை பொய்யன்றே" என்று அவள் கூறியிருந்தும் அவள் பிறந்தது பொய்யேயென்று கூறுவதுதான் ஆச்சரியம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

" பணியவிசைவில் திசைமுகன் தன் முடிகள் பத்து அறுத்தனை " என்பது தேசிகப்பிரபந்த ஸ்ரீஸூக்தி. இங்கு சப்தத்தில் சிறிய விசாரம், அர்த்தத்தில் பெரிய விசாரம். திசைமுகன் என்றிருக்கலாகாது, தசமுகன் என்றிருக்க வேணும்-என்று சிலர் மூலத்தைத்திருத்துவர். இந்தத் திருத்தம் வேண்டா ; தசமுகன் என்கிற சொல்போலவே திசைமுகன் என்கிற சொல்லும் இராவணனைக் கூறுமாதலால் - என்பது ஆன்றோர் கொள்கை. [திசைகள் பத்தாதலால் திசையென்னுஞ் சொல் பத்தென்கிற லக்கத்தைத் தெரிவித்தே தீருமென்க.] இது சப்த விசாரம். இதன் முடிவு எப்படியாயினும் நமக்கு விசாரமில்லை. இங்கு அர்த்த விசாரமே முக்கியமானது. இராவணனுக்கு " பணிய இசைவில்லாதவன் " என்று விசேஷணம் கொடுக்கப்பட்டுள்ளது. யாரைப்பணிவதற்கு இசையமாட்டாதவன் ? என்று கேள்வி பிறக்கும். யாரையுமே பணிய இசையமாட்டாதவன் என்று கொள்வதே தகுதி. அந்த ராவணன்தானே " ந நமேயம் து கஸ்யசித் ' [நான் யாரையுமே பணியமாட்டேன்] என்று ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதனால் அதற்குச் சேர, " பணியவிசைவில் " என்கிற இவ்விடத்திற்கும் உலகில் ஒருவரையுமே பணிய இசையமாட்டாத வென்றே பொருள் கொள்வது சுவையுடைத்தாம். என்பது ஆன்றோர் கொள்கை. இங்குச் சிலர் கூறுவதென்னெனில்; தசமுகனுடைய முடிகள் பத்தையு மறுத்த பெருமானைப் பற்றியே இங்கு ப்ரஸ்தாவமாதலால் இதற்குச்சேர, தன்னைப்பணிய இசையாதவென்று இவ்வளவேதான் சொலத்தகும். உலகத்திலுள்ள யாரையுமே பணியவிசையாத - என்று பொருள் கொள்ள இங்கு ஒளசித்யமில்லை. அன்றியும், 'ந நமேயம் து கஸ்யசித்' என்கிற இராவணனுடைய வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு யாரையுமேபணிய விசையாதவன் என்கிற பொருள் பணிப்பதால் அந்த ஸ்ரீராமாயண ச்லோகத்தின் பொருளையே ஆராய்வோம்; கஸ்யசித் ந நமேயம் - ஒருவர்க்கும் நான் வணங்கமாட்டேன் என்று பொதுப்பட இருந்தாலும் பிரகரணத்திற்குச் சேர கஸ்ய சித் என்பதற்கு இராமனை மாத்திரமே பொருளாகக் கொள்ள வேணும். ஏனென்னில்; " விஷ்ணும் மந்யாமஹே ராமம் மாநுஷம் தேஹமாஸ்திதம், குருஷ்வ நரராஜேந ஸந்திம் ராமேண ராவண !" என்று மால்யவான் கூற, அதற்கு மறு மாற்றம் கூறிவருகிற பிரகரணத்திலேயே 'ந நமேயம்து கஸ்யசித்' என்கிற விது இருப்பதால் இராமனே தான் இங்கு விவக்ஷிதன். இப்படியானல் 'ந நமேயம் து ராகவம்' என்றோ 'ந நமேயம் து தம் ரிபும்' என்றோ சொல்லியிருக்கலாமே, அப்படி ஏன் சொல்லவில்லை யென்னில், துராத்மாவான ராவணன் தன்வாயால் ராம நாமத்தையுச்சரிக்கக் கூசியே (ஜுகுப்ஸையினல்) ராகவம் என்னமல் 'கஸ்யசித்' என்ருன். என்று சிலருடைய கூற்று. இதைத்தழுவி உத்யாந பத்திரிகையாசிரியன் வியாஸமொன்று வெளிவந்துள்ளது.

சுவை மிக்கதும் மிகப் பொருந்துவதுமான பொருளை ஈண்டு உபபாதிக்கிறோம். மால்யவான் இராவணனுக்கு ஹிதமாகச் சொன்ன வார்த்தையில் 'இராமனேடு நீ ஸந்தி செய்துகொள்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே யல்லது 'இராமனை நீ வணங்கு' என்று ப்ரணமப்ரஸ்தாவமே அதில் இல்லை. ப்ரணமம் செய்தே ஸந்தி செய்து கொள்ள வேணுமென்பது கிடையாது.

இராவணனுக்கு உபதேசமளித்த பிராட்டியும் "தேந மைத்ரீ பவது தே" என்றும் "மித்ர மௌபயிகம் கர்த்தும் ராம:" என்றும் இராமனோடு தோழமை கொள்ளும்படி கூறினளேயல்லது வணங்கும்படி நியமிக்கவில்லை. அப்படியே மால்யவானும் ப்ரணமப்ரஸ்தாவமே செய்யாமலிருக்க ந நமேயம் து கஸ்யசித் என்று இராவணன் கூறினனென்றால், இது அர்த்தாத் தன்னுடைய திடமான மனவுறுதியை வெளியிட்டபடியே யென்று உணரவேணும். "ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம:" என்பதும் அவ்விடத்திலேயே அடுத்த வாக்கியம். இராமனை வணங்கமாட்டேனென்பதையா ஸஹஜதோஷமாகச் சொல்லுகிறானிங்கு. அல்ல; எப்படிப் பட்டவனையும் வணங்காமையே தனக்கு ஜந்மஸித்தமென்கிறானென்பதே பொருந்தும்.

ராமன்பெயரைச் சொல்ல ஜுகுப்ஸித்து கஸ்யசித் என்றான் என்பதும் ஸ்ரீராமாயணத்தோடு சேராது. "குருஷ்வ நரராஜேந ஸந்திம் ராமேண ராவண" என்ற மால்யவானது வார்த்தைக்குப் பிறகு 'ந நமேயம் து கஸ்யசித்' என்றதற்கு முன்னும் பின்னும் இராவணன் எத்தனை தடவை ராம நாமக்ரஹணம் பண்ணியிருக்கிறானென்பதை ஸ்ரீராமாயணம் ஸேவித்தவர்கள் அறிவார்கள். யுத்த காண்டத்தில் முப்பத்தைந்தாவது ஸர்க்கத்தின் முடிவிலுள்ளது மால்யவானுடையவார்த்தை. அதன் பிறகு முப்பத்தாறுவது ஸர்க்கத்தில் பதின்மூன்றாவது ச்லோகம் வரையில் கண் செலுத்திப் பார்க்க. "மாநுஷம் க்ருபணம் ராமம்" என்றும், "கிமர்த்தம் ப்ரதிதாஸ்யாமி ராகவஸ்ய" என்றும், "பச்ய கைச்சித ஹோபிஸ் த்வம் ராகவம் நிஹதம் மயா' என்றும் "ராமேண விஸ்மய: கோத்ர" என்றும் "ராமஸ் ஸஹ வாநரஸேநயா" என்று மிங்ஙனே ராமநாம க்ரஹணமயமாகவே யன்றோ வுள்ளது. ஆகவே ஜுகுப்ஸையினால் ராமநாமக்ரஹணம் செய்திலன் என்று சொல்வது பிசகு; ராம மாத்ர விவக்ஷையின்றிக்கே ஸர்வவிவக்ஷையிருந்தபடியால் தான் 'ந கஸ்யசித் நமேயம்' என்றான். யாரை வணங்க மாட்டேனென்கிறானென்று கேள்வி பிறந்தால், ப்ரக்ருதத்தில் ஸ்ரீராமன் உபஸ்திதனாயிருக்க அவ் விராமனைவிட்டு அநுபஸ்திதர்களான ஸகலரையும் இங்கே கொண்டு கூட்டிக்கொள்வது அந்யாய்யம் - என்றதும் தவறு. இராமனை விட்டதாக எது கொண்டு கூறுவது? 'இராமபிரானை வணங்குவேன், மற்றையோர்களைவணங்கமாட்டேனென்கிறானிராவணன்' என்றுயாரும் சொல்லவில்லையே. அநுக்தோபாலம்ப மன்றோவிது. இராமன் தவிரமற்றையோர்களுக்கு இங்குஉபஸ்திதியில்லை யென்பதும் தவறு. சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லக்கூடிய வார்த்தையன்றிது. "பகவான் அபராதிஜநசிக்ஷகன்" என்றால், யாரிடத்தில் அபராதப் படுகிறவர்களை சிக்ஷிப்பவன்? என்று கேள்வி பிறக்கும். இந்த வாக்கியத்தில் பகவான் மாத்திரமே உபஸ்திதனாயிருப்பதால் அவனிடத்தில் அபராதப் படுமவர்களே இங்கு விவக்ஷிதர்களாக வேணும் என்று யாரேனும் சொல்ல முடியுமோ? வஸ்துத: எவ்வெவர் விஷயத்தில் அபராதப்பட்டிருப்பதுண்டோ அவர்கள் அனைவரும் இங்கு அஸங்கோசேந க்ராஹ்யர்களாகக் குறையில்லை.

முதல் திருவந்தாதியில் "வரத்தால் வலி நினைந்து மாதவ! நின்பாதம் சிரத்தால் வணங்கானுமென்றே? உரத்தினால் ஈரரியாய் நேர் வலியோனாய விரணியனை, ஓரரியாய் நீ யிடந்த தூன்." என்பது ஆச்சரியமான பாசுரம். (90) எம்பெருமான், தன்னளவில் யார் எவ்வளவு அபராதப் பட்டாலும் அதைச் சிறிதும் கணிசிப்பவனல்லன் என்பது இப்பாட்டில் மிக இனிதாகச்

சொல்லப்பட்டது. இதைக் கூரத்தாழ்வான் "யதபராத ஸஹஸ்ர மஜஸ்ரஜம்" என்கிற (வரதராஜஸ்தவ) ச்லோக ரத்நத்தினுல் விவரித்தருளினர். தன்னை வணங்காதவர்களைப் பகவான் தலையறுப்பவன் என்று பிறர் கூறும் பொருள் எம்பெருமான் திருவுள்ளத்திற்குச் சிறிதும் பொருந்தாது; ரஸலேச மற்றது. சாஸ்த்ரார்த்தமுமன்று.

"லோகநாத! பகவந்! 'க்ஷிதிலோகே மாம் நிதேஹி ஸுசிரம் க்ருபயாத்ர" என்று ஒரு பக்தன் பகவானை நோக்கி வேண்டுகிருன். லோகநாதனை பகவானே! என்னை இந்தப் பூலோகத்தில் நீ நெடுநாளைக்கு வைத்திருக்க வேணுமென்பது இங்குப் பிரார்த்தனை. இங்கே லோகநாத! என்ருனே; எந்த லோகத்திற்கு நாதனென்று விவக்ஷிதமென்று கேட்டால், க்ஷிதிலோகே மாம் நிதேஹி' என்று இந்த வாக்கியத்தில் நிலவுலக ப்ரஸ்தாவமே யிருப்பதால் இதற்குச் சேர லோகநாத! என்பதற்குப் பூலோக நாதனே! என்றுதான் அர்த்தம் கொள்ளவேணும்; ஸர்வலோக நாதனே! என்று கொள்ளவே கூடாது என்று சொல்லுவாருளரோ? உண்மையில் பகவான் ஸர்வலோக நாதத்வத்திற்குக் கொள்கலமாயிருப்பவனுனதால் அதை ஸங்கோசிப்பதற்கு எந்த ப்ரமாணமும் சக்தமாகாது. ஸம்பாவிதமான உத்கர்ஷத்தைச் சிறிதும் குறைக்க வொண்ணுதாகையாலே. அதுபோலவே, நநமேயம்து கஸ்யசித் என்று மார்புதட்டிக்கூறின ராவணன் தனக்கு எவ்வளவு அம்சத்தைப் பெருமையாக நினைத்திருக்கிருனே அவ்வளவும் இங்குத் தேறி நிற்கவேணுமே. தேறும்படியாகவே அவன் பதப்ரயோகம் பண்ணியிருக்க, அந்தச்சுவடறியாதே அரஸிகர்கள் பேசுவதும் ஒருபேச்சோ? மால்யவானுக்கு மறுமொழி கூறுகின்ற ராவணன் இராமனை ஒரு க்ஷத்ரனை காபுருஷனுக இட்டன்ருே பேசி வருகிருன்; இவனை நோக்கி வணங்காமையை அவன் தனக்கு ஒரு பெருமையாக நினைப்பனே? இந்த ப்ரஸ்தாவத்தில், தனக்குள்ளமுழுப்பெருமையை வெளியிடுவதன்ருே ராவணனுக்கு உத்தேசயம். 'மால்யவானே! இந்த அற்பனை ராமன் கிடக்கட்டும்; இவனிலும் எத்தனையோ மடங்கு மேம்பட்ட தேவாதி தேவர்களுக்கும் என் தலை வணங்காதுகாண்' என்று விவக்ஷித்தல்லவோ 'ந நமேயம் து கஸ்யசித்' என்றது. அவனுடைய உண்மைச் செருக்குக்கு உரியபடியாகவன்ருே பொருள் கூறவேண்டும்.

இராவணன் பிராட்டியை வணங்கினதாக ஆரண்ய காண்டத்தில் வால்மீகியும் கம்பனும் ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதாகக் கொண்டு பிறர் வரைந்திருக்குமதும் விரஸம். பிராட்டியின் ஸௌந்தர்யத்திலீடுபட்டு வணங்கினுனென்றும் அந்தோ! எழுதுகிருர்கள். "நாஹம் ஜாநாமி கேயூரே நாஹம் ஜாநாமி குண்டலே, நூபுரே த்வபிஜாநாமி நித்யம் பாதாபிவந்தநாத்." என்ற இளைய பெருமாளைப் போன்று பரமபக்திப்ரகர்ஷ ப்ரேரிதனுயோ வணங்கினுன்? காமவெறி கொண்டு க்ருத்யாக்ருத்யவிவேகாந்தனுய்ச்செய்த காரியத்தை ஒரு காரியமாக எடுத்துக் கூறுவது முண்டோ? "மஹ்யம் நமோஸ்து கவயே நிரபத்ரபாய" என்கிற ஸ்ரீஸூக்தியைக்கண்டு 'இதென்ன அநீதி! ஆளவந்தார் தம்மைத்தாமே தொழுது கொள்ளுகிருரே!' என்று வயிறு பிடித்தாராம் ஒரு மஹாப்ராஜ்ஞர்: தஸ்யைவாஸௌ ஸஹோதர:.

அர்த்தாத் ப்ரஸக்தமான இந்தச் லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள ஆச்சரியமான வொரு விஷயத்தையும் நினைப்பூட்டுகிருேம். இங்கு "மஹ்யம் நமோஸ்து கவயே" என்றுள்ளது. இந்த நமஸ்காரத்திற்குக் கர்த்தா யார்? என்று கேட்டால் ஆளவந்தார்தாம் என்றே

ஒவ்வொரு வித்வானுக்கும் தோன்றும். தேசிகன் இங்கு அருளிச் செய்வது பாரீர்; "நமோஸ்து இதி ஸாமாந்யோக்த்யா ஸர்வை: க்ரியமாணம் நமோ மஹ்ய மேவாஸ்து, கிமந்யேந ஸர்வேச்வரேண? இதி வ்யஜ்யதே." என்றருளியுள்ளார். உலகில் அவரவர்கள் யாவரும் செய்யும் நமஸ்காரமெல்லாம் எனக்கேயாருகவென்று ஆளவந்தார் கூறுவதாகவன்றோ தேசிகன் அர்த்தம் காட்டியுள்ளார். ஸுபாஷிதநீவியின் முதல் ச்லோகத்திலும் இவ்வர்த்தமே அறியத்தக்கது. இதில் என்ன ரஸபரிபோஷ மென்பதையும் இவர்கள் ஆராயவேணுமே. * ந நமேயம் * என்ற விடத்தில் கர்மவிசாரம்; * மஹ்யம் நமோஸ்து என்ற விடத்தில் கர்த்ருவிசாரம் இவ்வளவேவாசி.

*ந நமேயம் து கஸ்யசித்*என்றவிடத்தில் எவரையும் பணியேன் என்று பொருள்கொள்வதில் என்ன ரஸவிசேஷம்? இராமனைப் பணியேனென்று பொருள் கொள்வதில் என்ன ரஸ பங்கம்? என்று கேட்கிறார்கள். எந்த வாக்யத்திற்கு எவன் வக்தாவோ அந்தவாக்யத்திற்கு அவனுடையஹ்ருதயாநுஸாரமாக வன்றோ அர்த்தத்தில் ரஸபரிபோஷம் அறுதியிடத்தக்கது.ப்ரக்ருதம் * ந நமேயம் * என்ற வாக்யத்திற்கு வக்தா இராவணன். அவன் தன் மனத்தால் தனக்கு வைபவமாக அபிமானிப்பது தேவகந்தர்வமநுஷ்யாதிகள்யாவராலும் தானொருவனே வணங்கத் தக்கவனென்றும் தான் ஒருவனையும் வணங்கத் தகாதவனென்றும் இதையே. இப்பொருளைக் கொள்ளாமையே ரஸபங்கம்.

ஒன்று பாருங்கள். 'இந்த ச்லோகத்தின் பொருள் எவனுக்கும் தெரியாது' என்கிறாரொருவர். 'இந்த ச்லோகத்தின் பொருள் எவனுக்கும் தெரியும்' என்கிறார் மற்றொருவர். 'எவனுக்கும்' என்கிற வாசகம் இரண்டிடத்திலும் சொல்வகையில் துல்யமாக இருந்தாலும் பொருள் வகையில் நெடுவாசியுண்டு. முந்தின வார்த்தையில் எவனுக்கும் தெரியாதென்றது—எப்படிப்பட்ட மஹாவித்வானுக்கும் தெரியாதென்றபடி. பிந்தின வார்த்தையில், எவனுக்கும் தெரியுமென்றது—எப்படிப்பட்ட அறிவிலிக்கும் தெரியுமென்றபடி. உலகில் இது ஸர்வஜ்ஞ நிர்விவாதமான வ்யுத்பத்தி. இராவணன் எவனேயும் வணங்கான் — விபீஷணன் எவனேயும் வணங்குவன்—என்கிற இரண்டு வாக்யங்களைக் கொள்வோம். முந்தின வாக்யத்தில் எவனேயும் என்பதற்கு—பரமபத நாதனேயும் என்பதே அர்த்தமாகும். பிந்தின வாக்யத்தில் எவனேயுமென்பதற்கு—ஒரு சிறுவனேயும் என்பதே அர்த்தமாகும். இப்படியல்லவென்று ஒரு விவேகியாலும் மறுக்கவொண்ணுது. இவ்வண்ணமாகவே * ந நமேயம் து கஸ்யசித் * என்ற ப்ரக்ருதஸ்தலத்திலும் இந்த்ர சந்த்ர வருண குபேர சதுர்முக பஞ்சமுக ஷண்முக ப்ரப்ருதிகளில் எவரையும் வணங்கமாட்டேனென்பதுவே பொருளாகும். அதற்குச் சேர * பணியவிசைவில் * என்ற பாசுரத்திலும் அப்பொருளேதான் பொருந்தும்; அதுவேதான் ரஸவத்தரம். வேறுவிதமான பொருள் விவேகிகளின் உள்ளத்தில் உதிக்கக்கூடியதேயன்று என்பது சிலாலிகிதம்.

குறிப்பு:—உத்யாந பத்ரிகையில் ஸம்ஸ்கிருத பாஷையில் வெளிவந்த (ராவண ப்ரணதி:) என்ற வியாஸத்திற்கு ஸம்ஸ்கிருத பாஷையிலேயே விரிவான மறுப்பு வைதிக மநோஹராவில் வெளிவந்துளது. அதன் சுருக்கம் இது.

11. பெரியவாச்சான் பிள்ளையும் தேசிகனும் (ப்ர - அ.)

திருவாய் மொழிக்கு வியாக்கியானமாகப் பிள்ளானுடைய ஆறாயிரப்படி அவதரித்திருந்தும் அது மிகவும் சுருக்கமான வியாக்கியானமாதலால் அதைவிட விரிவான பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தையே தேசிகன் ஸேவித்து த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியையும் ஸாரத்தையும் இயற்றியருளினாரென்பது பரமார்த்தம். ஈடு முப்பத்தாறாயிரப்படி தேசிகன் காலத்திலே பிரசாரம் பெறாதிருந்ததனால் அதை அவர்ஸேவிக்கப் பெற்றிலர். பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்திருந்த வியாக்கியானங்கள் முழுவதும் தேசிகன் காலத்தில் பரிபூர்ண ப்ரசாரமடைந்திருந்தனவென்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஸ்தோத்ர பாஷ்யாதிகளால்நன்கு அறிய வெளிது. நாலாயிரத்திற்கும் அந்த வியாக்யானங்களைக் கொண்டே ஸ்வாமிதேசிகன் பொருளுணரப்பெற்றார் என்பது மாத்திரமல்ல; அந்தவியாக்கியானங்களிலே மஹத்தான கௌரவ புத்தியும் வஹித்திருந்தாரென்பதுஸ்பஷ்டமாகவுள்ளது. வியாக்கியானங்களிலே நிர்வாஹ பேதங்கள் உண்டாவது ஸஹஜமே. நம் ஆசாரியர்கள் பேசிற்றே பேசும் ஏககண்டர்களாயிருக்கச் செய்தேயும் சில விடங்களில் ஓரோ ஸ்வாரஸ்யாதிசயத்திலே நோக்காக ஒருவர் ஒரு நிர்வாஹத்தையும் மற்றொருவர் மற்றொரு நிர்வாஹத்தையும் வெளியிடுவதுண்டு. ஒன்றுக்கொன்று கண்டனமாகத் தோன்றினதன்று. அநுபவைகபரமான பகவத் விஷயத்திலே கண்டனமென்கிற வார்த்தைக்கே ப்ரஸக்தியில்லை. ஆளவந்தாரருளிச் செய்ததாகத் திருமாலையாண்டானருளிச்செய்தபடி இங்ஙனே; எம்பெருமானாரருளிச்செய்தபடி இங்ஙனே; பட்டர் அருளிச்செய்தபடி இங்ஙனே.... என்று பலவிடங்களில் நிர்வாஹ பேதங்கள் காட்டுவதுண்டு. இவை ஒன்றுக்கு ஒன்று கண்டனமாகத் தோன்றினவையல்ல. ஒவ்வொருவர் ஒவ்வொன்றிலே நோக்காக நிர்வஹித்தபடி. தேசிகன் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் விப்ரதிபத்தி கொண்டவரென்று திண்டுக்கல் வக்கீல் அஸ்தாநே எழுதியிருந்தபடியால், தேசிகனுக்கு ஸ்ரீபாஷ்யத்தில் விப்ரதிபத்தி தோன்றியிருக்குமாகில் பெரியவாச்சான் பிள்ளையின் அருளிச் செயல் வியாக்கியானத்திலும் அது தோன்றியிருக்குமென்று ப்ராமாணிகர்கள் சொல்லவும் இதை ஸ்தாபிக்கவும் ப்ராப்தமேயாகும். தேசிகன் பிள்ளானுடைய நிர்வாஹத்தைவிட பெரியவாச்சான் பிள்ளை காட்டியருளின நிர்வாஹத்தில் மிகவும் ரஸம் கண்டு அதையே ஆதரித்துத் தம்முடைய க்ரந்தங்களில் ஏற்றுக்கொண்டவர் என்பது ப்ரக்ருத விஷயம். இதை இல்லை செய்யப் பிறர் பாடுபடுவதெல்லாம் இன்னமும் இவ்விஷயத்தை வெகு த்ருடமாக ஸ்தாபிப்பதற்கே உறுப்பாகும். மஹாஜ்ஞாநாதிகராய் ஸத்வநிதியாயெழுந்தருளி யிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ. கருடபுரம் ஸ்வாமி ஸந்நிதியிலே ஒருகால் இவ்விஷயம், ப்ரஸ்துதமாக, அவர் தம்முடைய பரமப்ராமாணிகத்வம் பொலிய இதற்குப் பாங்காக இன்னமும் எடுத்துக் காட்டிய விஷயங்களை இங்கு முன்னம் விஜ்ஞாபிக்கிறேன். (2—8) * அணைவதரவணைமேலென்கிற திருவாய்மொழிக்கு ஸர்வேச்வரத்வத்தின் உபபாதநம் ப்ரமேயமென்று ஆறாயிரப்படியில் பிள்ளான் அருளிச் செய்திருப்பது. நம்பிள்ளை திருவருளாலவதரித்த வியாக்கியானங்களிலோ வென்னில், “ இத்திருவாய்மொழி தன்னை ஸர்வேச்வரத்வஞ்

சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு; பலவிடத்திலும் அது சொல்லாநின்றது; மோக்ஷப்ரதத்வம் தனியே சொல்லவேண்டுவதொன்ருகையாலே அதைச் சொல்லுகிற' தென்று பட்டர் அருளிச் செய்யும்படி — என்றுள்ளது. இதைத் தழுவியே தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் "முக்தி ஸௌக்யம் முகுந்தே உபஜகௌ" என்றருளிச் செய்தார். "மோக்ஷஸுகப்ரதனென்று இத்திருவாய் மொழியிலே ஆழ்வாரருளிச் செய்தாரென்கிருர்" என்று அதற்கு வியாக்கியானமும் பண்ணினுர்கள். தேசிகன் ஒவ்வொரு தசகத்திற்கும் தாத்பர்ய ஸங்க்ரஹம் செய்வது போலவே, சதகம் முடிந்தவுடனே நூறு பாட்டின் தாத்பர்யத்தை ஸங்க்ரஹித்து ஒரு ச்லோகத்தாலருளிச் செய்வது முண்டாகையாலே மேலே அப்படி யருளிச்செய்த "இத்யப்ருத" இத்யாதி ச்லோகத்திலும் "முக்தி ஸாரஸ்யதாநாத்" என்று இது தன்னையே யருளிச்செய்தார். த்ரமிடோபநிஷத்ஸாரத்திலும் [இரண்டாம் பத்தின் ஸாரஸங்க்ரஹமான ஒன்பதாம் ச்லோகத்தில்] "முக்தி ரஸதம்" என்றே யருளிச் செய்தார். ஆருயிரப்படியில் இல்லாததாயும் நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களிலேயே உள்ளதாயுமிருக்கின்ற அர்த்த விசேஷம் தேசிக ஸ்ரீஸூக்தியில் காணப்பட்டால் தேசிகனுடைய ப்ரதிபத்தியை எப்படி நிர்ணயிப்பதோ அது அபக்ஷபாதர்களுக்கன்ருே தெரியும்.

இன்னமும் வெகு நுட்பமாக ஒரு விஷயத்தை க்ரஹித்து கருடபுரம் ஸ்வாமி ஸாதித்தார்; அது அடியேனுடைய நெஞ்சை மிகவுருக்குகின்றது. (அதாவது,) * வீடுமின் முற்றவும் பதிகத்தில் (பா. 9) "ஒடுங்கலும் எல்லாம்" என்பதற்கு "பகவத் கைங்கர்ய ப்ரதிபந்தகங்களெல்லாம்" என்று ஆருயிரம்படியில் பிள்ளானருளிச் செய்தது. "ஆத்மாவுக்கு ஸங்கோசகங்களானவை யெல்லாம் போம்" என்று பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்தது. தேசிகன் ரத்நாவளியில் இந்தபதத்தை அப்படியேகொண்டு "ஸங்கோசோந்மோசகத்வாத்" என்றருளிச்செய்தார். இங்கு ஆருயிரப்படி ரீதியிலே அருளிச் செய்வதானுல் "ப்ரத்யூஹஹத்வம்ஸகத்வாத்" என்ருே வேறுவிதமாகவோ அருளிச் செய்திருக்கவேணும். ஸங்கோசமென்கிற பதம் இங்கு தேசிகன் திருவாக்கில் புகுந்திருப்பதை நோக்கினுல் தேசிகன் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தைக் கண்டபாடம் செய்து தரித்திருந்தாரென்பது தவிர வேருென்றும் சொல்லமுடியாது....இங்ஙனே பல விஷயங்களுள்ளன.

ஸாக்ஷாத் பகவத் பாஷ்யகாரருடைய அந்தரங்க சிஷ்யரான பிள்ளான் அருளிச்செய்த பொருளை யநுவதித்து "என்பாருமுண்டு" என்று கேசித்பக்ஷமாக அவஜ்ஞை தோற்ற எழுதியிருப்பது அபசாரம் என்று பிறர் கூறுவது மிகமருள். என்பாருமுண்டு என்பதனுல் அவஜ்ஞை சிறிதும் தோற்ருது. தத்வமுக்தாகலாபத்தில் "இஹ ஜடாமாதிமாம் கேசிதாஹு:" என்கிருர் ஸ்வாமி. இங்கு கேசித் என்னப்பட்டவர்கள் அவஜ்ஞா லக்ஷ்யபூதர்களல்லரென்பதை ஸர்வார்த்த ஸித்தியைக்கொண்டே யறியலாம். "என்பாருமுண்டு" என்பதும் "பூர்வர்கள் நிர்வாஹம்" என்பதும் பர்யாயம். பிள்ளானிடத்தில் ஸகல ஆசார்யர்களும் பரமபக்தி பூண்டவர்களே யல்லது சிறிதும் விப்ரதிபத்தி கொண்டவர்களல்லர்; கொள்ளக் காரணமுமில்லை. ஈட்டில் பலவிடங்களில் பிள்ளானுடைய ப்ரசம்ஸை செவ்வனே காண்கிறது. இரண்டிடங்களை யெடுத்துக் காட்டுகிறேன். * ஆடியாடி வியாக்கியானத்தில் "கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி சோகஜம்" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்திற்கு பட்டரருளிச்செய்யும் படியை முன்னம் காட்டி,

உடனே பிள்ளான் பணிக்கும்படி காட்டப்பட்டுளது. அங்கு அரும்பதவுரையில் "பட்டர் நிர்வாஹத்தைப்பற்றவும் பிள்ளான் நிர்வாஹமே உத்தரார்த்தத்துக்குச் சேர்ந்திருப்பது" என்று நம்பிள்ளை திருவுள்ளமாக விவரிக்கப்பட்டிரா நின்றது. (5-5-7. ஈட்டில்) நஞ்சீயர் பிள்ளானைக்கேட்டு ஒரு சாஸ்த்ரார்த்தம் தெளிந்துகொண்டதாகவுள்ளது. விரிப்பிற் பெருகும்.

இனி இவ்விஷயத்தை ஸங்க்ரஹித்து உபஸம்ஹரிப்போம். * ஓடும் புள்ளேறி பதிகத்திற்கும் * பொருமாநீள்படை பதிகத்திற்கும் பிள்ளான் காட்டின ப்ரமேயமொன்று இருக்கச் செய்தேயும் ஸ்வாமி தேசிகன் நம்பிள்ளை திருவடிகள் காட்டியருளின ப்ரமேயத்தையே நிதியாகக்கொண்டு க்ரந்தமிட்டார் என்றும், ஆகவே இப்படி தேசிகன் தாம் உச்சியில் வைத்து மெச்சின வியாக்கியானங்களில் தோஷங் கண்டதாகவும் அதைக் களைவதற்காக எழுபத்திராயிரப்படி யொன்று ஸாதித்திருந்ததாகவும் திண்டுக்கல் வக்கீலெழுதினது மிகத் தவறென்று ஆராய்ச்சி நூலில் நிரூபித்த விஷயம் அசைக்க முடியாததென்று அறுதியிட்டாயிற்று. "தேசிகன் குணபக்ஷபாதியாகையாலே பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளில் ஈடுபட்டாரென்பதும் பொருத்தமே" என்று சடகோபார்யர் எழுதியிருப்பது ஆர்ஜவமுள்ள வார்த்தை. இவ்வளவோடு நிறுத்த வேண்டியதைவிட்டு அதிகமான ப்ரஸங்கங்கள் செய்திருப்பது தவறு. இவர் அருளிச் செயலில் ப்ரவேச லேசமுமில்லாதவரென்பதோடு அதில் வித்வேஷமு முடையவரென்பது ப்ரஸித்தமாதலால் * ஓடும் புள்ளேறி பாசுரங்களுக்குத் தாம் ஏதோ பொருள் கண்டதாகக் காட்டி ப்ரமாபாஸமாக எழுதியிருப்பவை உபேக்ஷிக்கப்பட்டன. ருஜுவாக விஷயமெழுதுகிறவர்கள் சர்ச்சையில் வந்த எல்லா விஷயங்களுக்கும், அல்லது மிகவும் முக்கியமான விஷயங்களுக்கு அவசியம் பதில் சொல்லவேண்டும். * பொருமாநீள்படை பதிகத்திற்கு நிர்ஹேதுகக்ருபாப்ரகாசநம் ப்ரமேய மென்று பிள்ளானருளிச் செய்யவில்லை; நம்பிள்ளை திருவடிகளே இதையருளிச் செய்திருப்பது. இதைத்தான் தேசிகன் ரத்நாவளியிலும் ஸாரத்திலும் நிதியாகக் கைப்பற்றினரென்று ஆராய்ச்சி நூலில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி இவர் சிறிதேனும் பதில் கூறினரோ? கூறத்தான் முடியுமோ? நிர்ஹேதுக க்ருபாளுத்வமென்கிற சிறந்த சாஸ்த்ரார்த்தத்தை 'அபார்த்தமென்று கொண்டு கண்டிக்கிறவர்களின் வகுப்பில் பிறந்துளரிவர். இவர்களுக்குக் கண்டே கடுவாக அவதரித்திருக்கிறது இங்கு தேசிக திவ்யஸூக்தி. இதில் சர்ச்சை செய்தால் ஸ்வமத பங்கம் ஸுஸ்பஷ்டமாய்த் தேறிவிடுமென்றுணர்ந்து இந்த சடகோபர் அதைத் தொடாமலே வீண் வசவுகளையிட்டுப் பல பக்கங்கள் நிரப்பியுள்ளார். சர்ச்சையில் * ஓடும் புள்ளேறி விஷயம் முக்கியமா? * பொருமாநீள்படை விஷயம் முக்கியமா? என்று பார்க்கவேணும். இவரும் இவரைச்சேர்ந்தவர்களும் ஸம்ப்ரதாயார்த்தமென்று கூறிவருகிற ஒவ்வொரு அர்த்தமும் ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளுக்கு நேர்விருத்தமென்று நாம் ஸப்ரமாணமாக உபபாதனம் செய்துவருகிறோம். தத்வஹிதோபதேச நூலில் பத்து விஷயங்களை யெடுத்துக் காட்டி ஸ்ரீதேசிக ஸூக்தி விப்ரதீபவாதிகள் இவர்களே யென்று நிலைநாட்டியிருக்கிறோம். அப்படிப்பட்ட விஷயங்களில் இது தலையானது. இதில் சர்ச்சை செய்யவேண்டியது மிக அவசியமென்று இவர் நெஞ்சில் படாமலா இருக்கும்? நன்றாகப்பட்டிருக்கும். பட்டிருந்து பயனென்ன? வாய்திறக்க விஷயமில்லையே. அஸம்பத்தப்ரலாப

மென்று விட்டிட்டேனென்கிறார். இவருடைய மனதால் நமது உக்திகள் யாவும் அஸம்பத்த ப்ரலாபங்களே யாதலால் ஒன்றைப்பற்றியும் பேசாமல் விட்டிருக்கவேண்டும். அஃதில்லையே. நூற்றுக்கணக்கான பக்கங்களை யெழுத இவர்க்கு அவச்ய மேற்பட்டதன்றோ. விஷயமற்ற வம்பு நூலை யுத்தேசித்து விரிவான புத்தகமெழுத ஒரு விவேகி முயல்வரா? நாம் எழுதும் நூல்களில் அவச்யம் சர்ச்சை செய்யவேண்டிய விஷயங்களில் நாம்சிறிதளவாவதுகுறை வைப்பதுண்டா வென்று பாருங்கள். இவருடைய நூலுக்குப் பதில் சொல்லுவதாக ஒரு வியாஜம் வைத்து அரிய பெரிய விஷயங்களையன்றோ நாமெடுத்து உலகுக்கு ஊட்டுகிறோம். உயிரான விஷயங்களை விட்டுவிட்டு வ்ருதா கர்ஜநம் செய்வதில் என்ன பயன். பிராட்டியின் உபாயத்வ விஷயம், அத்ருஷ்டார்த்த விஷயம், ப்ரஹ்மவ்யாப்தி விஷயம் போன்ற உயிரான விஷயங்களிலும் நான் வேண்டியது எழுதியிருக்கிறேனே யென்பர். வாஸ்தவம்; அத்தனையும் மருள் என்று கண்ணாடிபோல் காட்டுகிறேன் காண்மின்.

12. பிராட்டியுபாயத்வ விஷயம்.

இதில் தேசிகனுடைய பரச்சத ஸ்ரீஸூக்திகளுக்கு நேர் விருத்தமாகவே இவர்களுடைய கொள்கை யுள்ளதென்பதை ஸாரமாக இங்கு நிரூபிக்கிறேன்; இவ்விஷயத்தின் மருமத்தை இவர் சிறிதும் அறிந்துகொள்ளாதவர் என்பதை இவருடைய வார்த்தைகளைக் கொண்டே முன்னம் நிரூபித்துவிட்டு மேல் செல்லுகிறேன். இவர் தமது அநுபந்த நூலில் (பக் 33. வரி 16ல்) "பிராட்டியின் உபாயான்வயத்தை ஸ்தாபித்து" என்றும், (பக் 35. வரி 14-லும்) "உபாயத்தில் அந்வயம் ஸ்வதஸ் ஸித்தம்" என்றும் இப்படி அஸக்ருத் எழுதியுள்ளார். பிராட்டிக்கு உபாயத்தில் அந்வயமில்லை யென்று நாம் சொல்லுவதாக இவர் க்ரஹித்து பதில் எழுதுகிறாரே யொழிய நாம் சொல்லுவது இன்னதென்பதையே இவர் அறிந்தவரல்லர். பிராட்டிக்கு உபாயத்தில் அந்வயமில்லையென்று ஒரு ஸ்ரீவைஷ்ணவரும் சொல்லார், சொல்லவுமில்லை. உபாயத்வத்தில் அந்வயமில்லை யென்றே தேசிகனுட்பட ஸகலாசார்யர்களும் சொல்லுவது. உபாயத்தில் அந்வயமென்றால் என்ன அர்த்தம்? உபாயத்வத்தில் அந்வயமென்றால் என்ன அர்த்தம்? என்பதை ஸம்ஸ்க்ருதபாஷாமர்மஜ்ஞர்களும் சாஸ்த்ரஜ்ஞர்களுமே தான் அறியமுடியும். புரியும்படி விவரிக்கிறோம். உபாயத்தில் அந்வயமென்றால் உபாய பூதனான [ஸித்தோபாயமான] எம்பெருமானிடத்தில் அந்வயமென்றபடி. இதை யாரும் இல்லை செய்யகில்லார். *அகலகில்லேனிறையுமென்றலர் மேல்மங்கையுறை மார்பா!* என்கிற பாசுரமநுஸந்திக்கும் குடியிற்பிறந்தவர்கள் பிராட்டிக்குஉபாயே பரமபுருஷே ஸததாந்வயத்தை இசைந்தே யிருப்பதால் அதை ஸ்தாபிக்க இவர் ச்ரமப்படுவானேன்? உபாயத்வத்தில் பிராட்டிக்கு அந்வயமில்லை யென்பது உள்ளது. புருஷகாரத்வத்தில் அந்வயமுள்ள அவளுக்கு உபாயத்வத்தில் அந்வயம் அஸம்பாவிதமென்று பரக்க நிரூபித்திருக்கிறோம். அதை க்ரஹிக்கவும் மாட்டாத விவர் 'பிராட்டிக்கு உபாயாந்வயம் திடமாகவுண்டு' என்று எழுதுவதில் என்ன லாபம்? ஸித்தஸாதநமன்றோவிது. புருஷகாரம் செய்யும் முகத்தால் உபாயத்வத்திலும் அந்வயமுண்டு என்பதும் அபாதிதமே. உலகில் தாபயிதாவையும் தாதா வென்று சொல்லுவதோடொக்குமிது. புருஷகாரத்வத்திற் காட்டிலும் வேறுபட்டதன்று என்பதே முடிந்து நிற்கும். தேசிகன் இவ்வர்த்தத்தைச் சிறிய ரஹஸ்யங்களிலும் பெரிய ரஹஸ்யங்களிலும் அடிக்கடி ஸாதிக்கிறார், ரஹஸ்ய ரத்நாவளியிலே

"ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்; ...ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்ம சாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்"

என்றருளிச்செய்து இதன் பொருளை ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதயத்திலே அழகாக விவரித்தருளினார். இங்கு விவரணம் ஸாதராம் அநபேக்ஷிதம். எம்பெருமானுடைய காரியம் இன்னது, பிராட்டியின் காரியம் இன்னது என்பதை ரஹஸ்யங்கள் கத்யபாஷ்யம் சதுச் ச்லோகீபாஷ்யம் ஆகிய இவற்றில் பன்னிப்பன்னி யருளிச்செய்திருக்கிறார். இதையேதான் லோகாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் கூறுவது. இப்படி உபயாசார்யர்களும் இதில் ஸமகண்டர்களாயிருக்க, புதுத்தெய்வங் கொண்டாடும் நவீந ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ன சொல்லுகிறார்களென்பதை அவர்களுடைய உள்ளமேதான் அறிய வேண்டும். ஸாக்ஷாத்தாகப் பலப்ரதாநம் செய்வது எம்பெருமானொருவனே; அப்படி அவன் கொடுப்பதற் குறுப்பான முயற்சிகளைச் செய்பவள் பிராட்டி—என்பது தவிர வேறு என்ன சொல்லமுடியுமிங்கு. வேறுவிதமாகச் சொல்வது பொருந்தவே மாட்டாதென்று பல ப்ரமாண ந்யாயங்களைக் கொண்டு நாம் நிரூபித்திருக்குமவற்றுக்கு இவர் ஒரு உத்தரமும் எழுதினாரல்லர்.

இவர் தமது புத்தகத்தில் (பக் 37. வரி 5.) "இவர் மதத்தில் பிராட்டிக்கு போலீஸ்காரத்வமே ஸித்திப்பதால்" என்று அநுவாதத்திற்கும் அநர்ஹமான வொரு அசட்டு வார்த்தையை யெழுதியுள்ளார். பெரியாழ்வார் "தாமரையாள் சிதகுரைப்பதாக" அருளிச்செய்திருப்பதை நாம் கொண்டாடுகிறோமாம். அவர் பாசுரத்தில் பிராட்டிக்குப் போலீஸ்காரத்வமே ஸித்திக்கிறதாம். ஒரு விவேகி யெழுதுகிற வார்த்தைகளா இவை? ஆழ்வார் ஸ்ரீஸூக்தியிலுள்ள வித்வேஷம் உள்ளடங்கி யிருக்கமாட்டாமல் புறவெள்ளமிட்டபடி பாரீர். *தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்* என்ற பாசுரத்தின் பொருளை இந்த ரக்ஷையிலேயே [அநுபந்தத்தில்] விரியவுரைத்திருக்கிறோம். அதைக் கண்டு மிக்க தெளிவு பெறுவராதலால் இங்கு ஸங்க்ரஹித்துக் கொண்டோம்.

இந்த ப்ரகரணத்தில் நஞ்சீயர் ஸ்ரீஸூக்த பாஷ்யமென்று ப்ரஸங்கித்து அதிலிருந்து சில வாக்யங்களை உதாஹரிக்கிறாரிவர்; விஷு ஸூ கார்த்திகைமீ வெளிவந்த (1941 ஸூ டிஸம்பர். தொகுதி—4. பகுதி 3.) அம்ருதலஹரியில் ஐந்து வருஷங்களுக்கு முன்னமே நாம் வெளியிட்டிருக்கும் வியாஸம் "ஸ்ரீஸூக்த பாஷ்ய பரிசீலநம்" என்னும் மகுடம் புனைந்தது. அதை அப்போதே திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணசார்யர் ஸ்வாமி கடாக்ஷித்து "ப்ராமாணிகர்கள் இதன்மேல் ஒன்றும் சொல்ல முடியாதுதான்; இது ப்ராமாணிகமான நிரூபணமென்றே நான் கருதுகிறேன்" என்று ஸாதித்தார். அந்த ஸ்வாமி யொருவரே யல்லர்; மற்றும் பல ப்ராமாணிக வித்வான்களும் "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம்" என்றே சொல்லி நின்றார்கள். அந்த வியாஸத்தை அப்படியே இதன் கீழ்க் காணலாம்:—

ஸ்ரீ ஸூக்த பாஷ்ய பரிசீலநம். (ப்ர. அ.)

1937-ம் வருஷத்தில் ஸ்ரீ ஸூக்த பாஷ்யம் என்றொரு புத்தகம் அஸ்மத் பரம ஸுஹ்ருந்மணியான ஸ்ரீ. உ. வே. புதுக்கோட்டை காலேஜ் ப்ரொபஸர். A. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் M. A. ஸ்வாமியால் தேவநாகரி லிபியில் அச்

சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. இதற்கு ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணசார்ய ஸ்வாமியால் ஒரு பூமிகை எழுதப்பட்டு அதுவும் அச்சாகி யிருக்கின்றது.

நஞ்சீயர் ஸ்ரீ ஸூக்த பாஷ்ய மொன்று அருளிச் செய்திருக்கிறாரென்பது நிர்விவாதம். ஆனால் இப்போது அச்சாகி வெளிவந்திருக்கிற ஷை புஸ்தகம் நஞ்சீயர் ஸ்ரீஸூக்திதானா? என்பதைப் பற்றிப் பல மஹான்கள் விசாரம் செய்துகொண்டிருப்பதாக அறிகின்றோம். ஸமீபகாலத்தில் திருவல்லிக்கேணியில் சில வித்வான்கள் இதைப்பற்றி விமர்சிக்கப்புகுந்து இதில் அடியேனுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்குமாறு நியமித்தார்கள். அவர்களுக்கு அடியேன் தெரிவித்துக் கொண்ட உத்தரம் வருமாறு:—

இது நஞ்சீயர் அருளிச் செய்ததென்றுகொள்வதற்கு ஔசித்ய மொன்றும் காண்கிறிலேன். இடையிடையில் அபசப்த ப்ரயோகங்கள் காணப்படுகின்றன. (பக்கம் 26ல்) "லபேயமிதி" என்றும், (பக்கம் 51-ல்) "ப்ரயுஞ்ஜத்பி:" என்றும் இங்ஙனே பலவகையான பிரயோகங்கள் நஞ்சீயருடைய அப்ரதிம வைதுஷ்யத்திற்கு ஒவ்வாமலிருக்கின்றன. இவற்றிற்கு ஒருபடி ஸமாதானம் சொல்லிவிடலாமென்று வைத்துக் கொண்டாலும், ஸர்வாத்மநா அஸமாதேயமாக ஒருவிஷயம் அடியேனுக்குத் தோன்றுகிறது.

நஞ்சீயர் பட்டருடைய திருவடிகளில் ஆச்ரயித்துத் தேவு மற்றறியாதிருந்தவர் என்பது விவாதமற்ற விஷயம். அங்ஙனம் ஆசார்ய பூதரான பட்டருடைய ஸ்ரீ ஸூக்திகளை இவர் உதாஹரிப்பதானால் (ததுக்தம் ஆசார்யபாதை:) என்று அருளிச் செய்யலாகுமேயல்லது வேறுவிதமாக இருக்கமாட்டாது. இதில் (பக்கம் 48-ல்) "ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரைரபி ப்ரதிபாதிதம். ததாத்மஜைச்ச பட்டபராசரபாதை:....இதி." என்றும்; பக்கம் 49-ல் "ஸ்தாபிதஞ்சைதத் ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரை: பட்டபராசரபாதைச்ச" என்றும், பக்கம் 51-ல் "ததைவ பட்டபராசரபாதை: நிர்வ்யூடம்" என்றும் இங்ஙனே பல விடங்களிற் காண்கிறது.

ஸாக்ஷாத் சிஷ்யர்கள் அருளிச்செய்யும் க்ரந்தங்களில் ஸ்வாசார்யரைப் பற்றி இப்படியருளிச் செய்கிற முறை இதுகாறும் வேறு எந்த நூலிலும் கண்டதில்லை. பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஆழ்வானைப்பற்றி ப்ரஸ்தாவிக்கும்போது "தாதபாதைச்ச" என்கிறார். நயனாசார்யர் தேசிகனைப் பற்றி ப்ரஸ்தாவிக்கும்போது "ஆசார்ய பாதைச்ச" என்கிறார். நஞ்சீயர், பட்டர் திருவடிகளில் வைத்திருந்த ப்ராவண்யம் ஒப்புயர்வற்றது. அப்படியிருக்க, "ஆழ்வானுடைய திருக்குமாரர் சொல்லியிருக்கிறார்" என்று எழுதியிருப்ப தொன்று கொண்டே இது நஞ்சீயருடைய நிபந்தமன்று, அர்வாசீநப்ரணீதமே யென்று எளிதில் அறுதியிடத்தட்டில்லை. என்று.

இந்த வியாஸத்தின்மீது பதில் எழுத சக்தியுள்ளவர்கள் தாராளமாக எழுதலாம். இந்த சடகோபாசார்யருடைய ஆசார்யரான சதாவதாநர் ஷடர்த்தஸம்க்ஷேப மென்கிற (ஸோமாசி யாண்டானுடைய) க்ரந்தத்தை மணக்கால் நம்பி பணித்ததாக வெளியிட்டதில் போலவே இங்கும் ஒரு மஹத்தான வ்யக்தி ப்ரமமே யென்பதில் ப்ராமாணிகர்கள் ஸந்தேஹிக்கமாட்டார்கள். யாரோ வொரு அர்வாசீநர் எழுதிய நூலை நஞ்சீயருடையதாக வொருவர் மருண்டோ விப்ரலிப்ஸையினாலோ வெளியிட்டு விட்டார், அதிலிருந்து எடுத்துக்காட்டும் வாக்யம் தேசிக ஸ்ரீஸூக்தி விருத்தமான அர்த்தத்தைச் சொல்லுகிறதே யென்கிற ஆராய்ச்சி சிறிதுமில்லாமல் ப்ரஸங்கிக்கிறவர்களுக்கு நாமென் சொல்வது?

கொள்ளுகிருனு? அல்லது நற்றமாகக் கொள்ளுகிருனு? அல்லது காணுமலேயிருந்து விடுகிருனு? என்று ஒருவர் வினவினுல் இதற்குத் திண்ணமான விடையிறுக்க ஒருவர்க்குமியலாது; ஏனென்ருல், அவனது திருவுள்ளத்தை யறிவாராருமில்லையே. அப்பெருமான் ஒருகால் தோஷங்களை தோஷமாகவே கொள்ளக்கூடும். ஒருகால் குணமாகவும் கருதக் கூடும். ஒருகால் குணங்களையும் தோஷமாகக் காணக்கூடும். எந்த விதத்திலும் அவன் ஸ்வதந்திரன். நியோகபர்யநுயோக அநர்ஹன். ஆகவே அவனது திருவுள்ளமோ ப்ரவ்ருத்தியோ ஒருவருடைய புத்திக்கும் எட்டுமதன்று. இதுதான் ஸித்தாந்தமாகத் தேறி நிற்கும். ஆனல் இங்கு முக்கியமாகக் குறிக் கொள்ளவேண்டும்; — உலகத்தில் மிக உயர்ந்தவனுகச் சொல்லப் படுகிறவொரு மஹா புருஷனிடத்தில் எங்கெந்த நற்குணங்களிருக்குமோ அவையெல்லாம் நூறுயிரம் மடங்கு அதிகமாய் எம்பெருமானிடத்து உள்ளனவாகப் பேச வேணுமென்று பெரியோர்களின் கொள்கை. கட்கிலியான அவன் ராமக்ருஷ்ணுதி விபவாவதாரங்களைச் செய்தருளினபோது அந்த நற்குணங்களையெல்லாம் குஹஸுக்ரீவ விபீஷணுதிகள் திறத்திலே போரப் பொலியக் காட்டியிருப்பதும் காணத்தக்கது. [* நிஷாதாநாம் நேதா * இத்யாதி தயாசதக திவ்ய ஸூக்தி யொன்றே இங்கு அநுஸந்திக்கப் போதும்.] பகவான் அவதாரங்கள் செய்வது எதற்காக? என்கிற கேள்விக்குப் பலவாறு விடைகள் பகரலாமானுலும், தனது திருக்கல்யாண குணங்களைக் காட்டுவதற்காகவே திருவவதாரம் செய்கிருன்—என்பதொன்றே பரமார்த்தமான விடை. ஸ்ரீ ராமாயணத்தில் * கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் என்கிற உபக்ரமமே இதனை வற்புறுத்தும். * குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் என்கிறபட்டர் ஸ்ரீ ஸூக்தியும் அதையே யெடுத்துக் காட்டி நின்றது.

51—60. விபவாவதாரங்களில் ஸ்ரீ ராமக்ருஷ்ணுதிகள் காட்டியருளின ஒவ்வொரு திருக்குணமும் மெய்யன்பர்களின் உள்ளத்தையுருக்குமவை. அத்தகைய திருக்குணங்களை அநுபவிக்கைக்காகவே நாம் ஸ்ரீ ராமாயண ஸ்ரீ பாகவதாதிகளைப் பாராயணம் செய்து போருகிறேம். அத்திருக்குணங்களில் தோஷாரோபணம் செய்து அவற்றை இல்லைசெய்வது பக்தர்களுக்கு உரியதன்று. 'ஒப்புயர்வற்ற கல்யாண குணங்கள் எப்பெருமானிடத்துள்ளன' என்று வெறுமனே சொல்லிவிட்டால் போதுமோ? அந்தச் சொல்லுக்கு ஓர் அர்த்தமிருக்கவேண்டாவோ? இருக்கிறதென்னில் அதை உபபாதித்துக் காட்டவேணுமே. நம்போன்ற ஸாமான்ய புருஷர்களிடத்துக் காணும் குணங்களிலும் ஏகதேசத்தையுங் கூட எம்பெருமானிடத்தில் இசைகின்றிலீர்களே. உலகில், குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுமவனை அன்பர்களில் தலைமை பெற்ற சிறந்த புருஷனுகக் கொண்டாடுகிறேம். குணங்களையும் குற்றமாகக் கொள்ளுமவர்கள் அதமர்களென்றும், குற்றத்தைக் குற்றமாகக் காண்பவர்கள் மத்யமர்களென்றும், குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுமவர்கள் உத்தமர்களென்றும் உலகில் அனைவருமிசைந்து கூறுவதாம். ஆகவே உத்தம புருஷ குணமாகப் புகழ் பெற்றிருக்கின்ற தோஷ போக்யத்வத்தைப் புருஷோத்தமன் பக்கலிலே இல்லைசெய்வது எப்படி பொருந்தும்? இந்தக் கேள்வி இன்று புதிதாக நாம் கேட்பதன்று. முற்காலத்தில் பட்டர் கேட்ட கேள்வி இது என்பதை பகவத் விஷய ஸ்ரீ கோசத்திற் கண்டு தெளிக.

61—70. குற்றத்தில் குற்றமென்கிற தன்மையானது உள்ளது; அதனை உள்ளபடி காணுமல் குணமாகக் கண்டால் இது விபரீத வுணர்ச்சியே யாதலால் எம்பெருமானை [தோஷேஷு குணத்வபுத்தி காரணமாக] ப்ராந்தனென்று சொல்லநேருமே யென்று சோத்யம் செய்வார்க்கு இனிவிடை கூறுகிறேம். அளவுகடந்த அன்புக்கு உரியவர்களிடத்தில் ப்ரேமமடியாக மருண்டு போவது தான் எம்பெருமானுக்குச் சிறந்த குணம். உலகிலும் குற்றங்

களை நற்றமாகக் கொள்வதென்பது எல்லார் திறத்திலும் குணமாகாது; விலக்ஷணப்ரீதி பாத்ரமானவர்களிடத்திலேயே அது குணமாகவுள்ளது. அப்படியே விலக்ஷண பக்த விசேஷ விஷயத்தில் * கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந * என்கிற முறையில் இருகரையுமழியப் பெருகும் எம்பெருமானது அன்பு வெள்ளமானது அப்பெருமானை ப்ராந்தியுள்ளவனாக ஆக்குமானால் அந்த ப்ராந்தியே யன்றோ பக்தர்களுக்குச் சேமநிதி. இந்த ப்ராந்தி எம்பெருமானிடத்து இருப்பது பற்றியே யன்றோ ஆழ்வார்கள் களிப்பதும் கூத்தாடுவதும். மாலென்றும் பித்தனென்றும் பேயனென்று மிப்படி பல திருநாமங்களை அவனுக்கு ஆழ்வார்கள் சாற்றியுள்ளார்கள். தத்வதர்சிகளில் தலைவர்களான அவர்களது ஸ்ரீ ஸூக்திகளையே நிதியாகக் கொண்ட நம் ஆசிரியர்கள் அருளிய அரும்பெரும் பொருள்கள் பிறர்க்கு ருசிப்பது எங்ஙனே? ப்ராந்தியும் அதற்கு எதிரிடையான ப்ரமையும் உபாதி பேதத்தாலே குணமாகவும் தோஷமாகவும் மாறு மென்று தெளியவேணும்.

71—80. கூரத்தாழ்வான் எம்பெருமானார்க்கு இட்ட தனியனில் * யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹத: என்று வ்யாமோஹத்தை நிரூபகமாகக் கூறியுள்ளார். மணவாளமாமுனிகள் நம்மாழ்வார்க்கு * ஸ்ரீ மாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவாப்ரேமா விலாசயபராங்குச என்று கலக்கத்தை நிரூபகமாகக் கூறியுள்ளார். இந்த வ்யாமோஹமும் கலக்கமும் அப்பேராசிரியர்களுக்கு பூஷணமே யல்லது தூஷணமல்ல. "ஹூஸாமாந்யமும் தோஷம், ஊஹா ஸாமாந்யமும் குணம்" என்று நிர்ணயிக்க யாருமதிகாரிகளல்லர். புண்யமென்றாலென்ன? பாபமென்றாலென்ன? இவற்றின் லக்ஷணம் கூறவேணுமென்று கேட்டால் இதற்கு ருஜுவான விடையிறுக்கக் கூரத்தாழ்வானொருவரேவல்லவர். * யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யமபுண்யமந்யத் * என்றவர் அவ்வாசிரியரே. அவன் திருவுள்ளத்திற்கு உகப்பானது புண்யம், வெறுப்பானது பாபம் — என்றிவ்வளவேயன்றோ புண்யபாபலக்ஷணம். பக்த தோஷங்கள் அவன் திருவுள்ளத்தால் ப்ரியமாகத் தோன்றினால் அவற்றில் பாப சப்த வாச்யத்வம் தொலைந்து புண்யசப்த வாச்யத்வமன்றோ வந்துவிடும். ஆழ்வானும் பட்டரும் எம்பெருமானை ப்ராந்தனென்றே அறுதியிட்டுரைத்தனர். பக்தர்கள் கலங்கி நின்றால் அன்னவர்கள் திறத்திலே பகவானும் கலங்கி நிற்க ப்ராப்தமேயன்றோ. அப்படி அவன் கலங்கிற்றிலனாகில் * ரஸோவை ஸ: என்று உபநிஷத்து அவனை ரஸமாகவே ஓதினது பொய்யாகுமே. * சுவையன் திருவின் மணாளன் என்றபடி பிராட்டியோட்டைச் சேர்த்தியினால் பரமரஸிகனாகப் பெற்ற பெருமான் ப்ராந்தியை யிட்டே நிரூபிக்க வுரியனென்றே ப்ராமாணிகர்கள் அறுதியிட்டிருப்பது. "மஹர்ஷிகளின் ஓலக்கத்தில் ப்ரமையை யிட்டே நிரூபிக்க வேண்டியிருந்தவன் ஆய்ச்சிகள் திரளிலே ப்ராந்தியை யிட்டே நிரூபிக்கத்தக்கவனாயினான்" என்றது அர்த்தமில்லாத அதிசயோக்தியன்று; உண்மையுரை. "மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை" இத்யாதிகள் இங்கு அநுஸந்தேயம்.

81—90. எம்பெருமானை தோஷபோக்ய னென்று சொல்லலாகாதென்றும் தோஷாதர்சி யென்றே [குற்றங்களைக் காணாதவனென்றே] கூறவேணு மென்றும் சொல்லுமவர்களை ஒன்று கேட்கிறோம்; ஸர்வஜ்ஞனென்று பேர் பெற்றிருக்கிற எம்பெருமான் சிலருடைய குற்றங்களை யறியகில்லானென்னில் இதுவொரு அஜ்ஞானமேயல்லவா? ஸர்வஜ்ஞனை அஜ்ஞனென்றால் அவத்யம் வாராதோ? *யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:* என்று ஆழ்வான் அருளிச் செய்துள்ளார். அடியோடு இல்லாததை அறியாமலிருந்தால் ஸர்வஜ்ஞத்வத்திற்குக் கொத்தை வாராது. உள்ளதையும் அறியாமலிருந்தால் ஸர்வஜ்ஞத்வம் எப்படி ஸம்ரக்ஷித மாகும்? ஹேயமான அஜ்ஞத்வம் எப்படி குணமாகும். மேலும், தோஷங்

களைக் காணுமை யென்பது க்ஷமா குணத்தின் காரியம். அதை வாத்ஸல்யத்தின் காரியமாகக் கூறுவதும் தவறு. எம்பெருமானுக்கு க்ஷமா குணமுண்டென்று இசைந்தாலும் ப்ரபலமான ஆபத்து அபரிஹார்யமே யாகும். * வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் * என்கிற ப்ரஹ்ம ஸூத்ரம் முதலியவற்றால் எம்பெருமான் கர்மாநு ரூபமாகப் பலன்களைக் கொடுத்தே தீருவனென்று நிர்ணயிக்கப் பட்டிருக்க, அதற்கு முரணாக க்ஷமாகுணத்தைக் காட்ட அவனால் எப்படி முடியும்? என்று கேட்டால் இக்கேள்விக்கு வர்ஷ சதமானாலும் விடை யிறுக்கமுடியுமோ இவர்களுக்கு? ஏதேனு மொரு விடை கூறினர்களாகில் அது க்ஷமாகுணத்தின் பெருமையைக் குலைத்தே நிற்கும். அதிகாரி விசேஷ விஷயத்தில் சாஸ்த்ரங்களைக் கடந்து க்ஷமிக்கக் கூடுமென்னில், நம் வழியே வந்து நின்றார்களானார்கள். வாத்ஸல்ய விஷயத்தில் நாம் சொல்லுவது மிதுவே காணீர்.

91—100. எம்பெருமானை தோஷ போக்யனென்றிசைந்தால் அவரவர்கள் புத்தி பூர்வகமாகவே பல பல பாவங்களைச் செய்யவேண்டிய தாகுமே யென்றே ஆக்ஷேபம் செய்பவர்கள் க்ஷமாகுணத்திலும் இவ்வாக்ஷேபம் அபரிஹார்யமென்று உணரவேணும். 'நமது குற்றங்களை எம்பெருமான் க்ஷமித்தருள்வன்' என்று தெரிந்து கொள்ளுமவர்கள் புத்திபூர்வமாகத் தீவினைகளைச் செய்யத் தடையுண்டோ? எம்பெருமான் எந்த வ்யக்தி யினிடத்தில் தன்னுடைய எல்லைகடந்த அன்பைக் காட்டுவனென்று யாரும் தெரிந்து கொள்ளமுடியாததலால் இவ்வாக்ஷேபத்திற்கு ப்ரஸக்தியே யில்லை. 'வாத்ஸல்யத்தின் தன்மை இத்தகைத்து' என்று கூறின வளவிலேயே ஏதோ ஆபத்து விளைந்திட்டதாக ஸம்ப்ரமங்கள் செய்வது அபஹாஸ்யம். 'நெருப்பு விட்டைக் கொளுத்தி விடும்' என்று ஒருவர் அதன் தன்மையைச் சொன்ன மாத்திரத்திலேயே தம் வீடு தீப்பற்றி யெரிந்ததாகக் கொண்டு புலம்புவாருண்டோ? ஒர் அரசன் அபரிமிதமாக தானம் செய்கிறானென்று கேட்டவளவிலேயே தங்கள் தாரித்ர்யம் ஹதமாயிற்றென்று களிப்பாருண்டோ? விபத்தோ ஸம்பத்தோ தமக்கு விளைந்த பிறகேயன்றோ கதறுவதும் களிப்பதும் ப்ராப்தமாகும். வஸ்து ஸ்வரூபத்தை வருணித்தவளவிலேயே ஆபத்திகளை ஆபாதனம் செய்வதென்பது விவேகிகளின் பணியன்று.

101—110. அர்ச்சாவதாரப் பெருமான்கள் திறத்தில் பாதாதிகேசாந்தமான ஸௌந்தர்யலாவண்யங்களை ஆழ்வார்களுமாசாரியர்களும் அநுபவித்துப் பாசுரமிடுகிறார்கள். அர்ச்சா மூர்த்தியில் கூந்தலென்பது காணவே முடியாது. அப்படியிருக்க, கருங்குழல்கள் தடந்தோள் மேல் தொங்குவதாகவும் திருநெற்றியில் அலைவதாகவும் அருளிச் செய்கிறார்களே! இது எப்படி பொருந்து மென்று ஒரு பாமரன் கேட்டுவிட்டால் இதுவும் அதிவாதமே யென்று தான் இவர்கள் சொல்லித் தீரவேணும். இதில் அநுபவராஸிக்யம் இவர்களுக்கு இப்பிறவியில் உண்டாக விரகில்லை. இதற்காகவே மறு பிறவியைக் கோரவேணுமிவர்கள், "அருளிச் செயல்களையே அருமருந்தாகக் கொள்வோமாக; ஸ்ரீசைலேசத்தனியனையே தஞ்சமாகக் கொள்வோமாக" என்று திருமலையடிவாரத்தில் நீடூழிகாலம் நின்று தவம்புரிதல் நன்று. எம்பெருமானது திருக்குணங்களில் தயை, வாத்ஸல்யம் என்னு மிவையிரண்டே மிகச் சிறந்தவை; இவற்றின் பெருமையை ஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும் ச்ருத ப்ரகாசிகையிலும் பட்டர்கள் மூதலிக்கிறார்கள். இவ்விரண்டு குணங்களிலும் குசோத்யங்களைச் செய்துகொண்டே யிருக்குமிவர்கள் நாங்களும் பகவத் பக்தர்களே யென்று சொல்லிக்கொண்டு பக்தர்களின் குழுவிலே கலந்து பரிமாறுவது எங்ஙனேயோ! "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்." இவர்களது செயல் எங்ஙனேயாயினுமாகுக. நமது அநுபவத்திற்கும் ஆனந்தத்திற்கும் ஒரு குறையில்லையே.

ச்ருதப்ரகாசிகாரக்ஷா என்கிற வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகையில் பூர்வசதகத்தின்
பொழிப்புரை முற்றிற்று.

உத்தர சதகத்தின் பொழிப்புரை.

1—10. ச்ருதப்ரகாசிகையில் "ஸம்பந்த விசேஷாந்விதேஷு ப்ரீதி: ஸ்நேஹ:; யஸ்ய விபாகா: அஸ்தாநபயசங்கித்வம், தோஷாநவபாஸ:, தோஷேபி குணத்வபுத்தி:" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. ப்ரேமம் பரிபக்குவமானால் அஸ்தானத்திலும் பயசங்கை பண்ணுவிக்கும்; குற்றங்களைக் காணாதிருக்கச் செய்யும்; கண்டாலும் அக்குற்றங்களை நற்றமாகவே கொள்ளச் செய்யும் என்பது இந்த ஸ்ரீ ஸூக்தியின் கருத்து. இவ்வளவான பரிபாக தசையையடையும் அன்புக்கே ப்ரேமமென்று பெயர் தகும். இப்படிப்பட்ட ப்ரேமம் மனிதர்களிடத்தில் ஸாமான்யமாக வுள்ளது. இது எம்பெருமானிடத்தில் இருக்குமானால் இன்னுமெவ்வளவோ சிறந்த நிலைமையில் விளங்கும். அச்சிறப்பை நம் போன்றவர்கள் அறியமுடியாது. அது நிற்க. லோக ப்ரஸித்தமான ப்ரேமமும் எம்பெருமானிடத்தில் இல்லையென்று அபலபிக்கப் படுமாகில் *அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகணனென்று அப்பெருமானைக் கூறிவருவதில் அர்த்த முளதோ? அஸ்தானத்தில் பயசங்கைபண்ணுவதென்பது இதர மநுஷ்யர்களிடத்தில் இருக்கக் கூடியதேயன்றி எம்பெருமானிடத்தில் அதற்கு ப்ரஸக்தியே கிடையாதென்று பிறர் கூறுவதானது ஆழ்வாராசார்ய ஸ்ரீ ஸூக்திகளில் அவகாஹன மில்லாமை. * ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு * என்று திருமழிசைப் பிரான் அருளிச் செய்கிறார். * ஸ்நேஹாத் அஸ்தாந ரக்ஷாவ்யஸநிபி: * என்று பட்டர் அருளிச் செய்கிறார். இங்ஙனேயுள்ள ஸ்ரீ ஸூக்திகளைக் கனவிலும் கேட்டறியாதவர்கள் சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷத்தில் தலையிடுவது தகுதியன்று. * யஸ்ய விபாகா: * இத்யாதி ச்ருதப்ரகாசிகாஸூக்தியானது வழிப் போக்கர்களான சில க்ஷுத்ர மநுஷ்யர்களை நோக்கியா அவதரித்தது? உலகில் ப்ரேமசாலிகளென்று புகழ் பெறக் கூடிய மஹநீயர்களிடத்திலெல்லாம் ஸம்பவிக்கக் கூடிய ப்ரேமபரிபாகாவஸ்தையை யன்றோ ஆசார்யர் அருளிச் செய்திருப்பது. அது பரம ப்ரேமசாலியான பகவானிடத்தில் இல்லையென்று மறுக்குமவர்கள் பகவத் குணவர்ணனத்திற்கு அதிகாரிகளாகத் தகுமோ ?.

11—20. பெரியாழ்வார் திருமொழியில் * தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும் * என்கிற பாசுரம் (4–9–2) ப்ரஸித்தமானது. ஆழ்வார் இப்பாசுரத்தினால் வெளியிடத் திருவுள்ளம் பற்றிய பொருளை இவர்கள் தலைகீழாக்குகின்றனர். அதனை விவரிக்கிறோம். பிராட்டி தன் புருஷகார பலத்தினால் சில சேதனர்களை எம்பெருமான் அங்கீகரிக்கக்கண்டு இவ்வங்கீகாரம் நம்முடைய நிர்ப்பந்தத்திற்காக மாத்திரமேயோ, அல்லது தன் திருவுள்ள முகந்து திடமாகவே ஸ்வீகரித்தபடியோ என்று தெரிந்து கொள்வதற்காக அந்த பக்தர்விஷயத்தில் சிதகுரைப்பள்; [அதாவது, நாதா! நான் ஆலோசியாமல் இவர்கட்குப் புருஷகாரம் செய்து விட்டேன்; பிறகு நன்கு பரிசீலனை செய்ததில் இவர்கள் பெருங் குற்றவாளரென்று தெரிய வந்ததால் இவர்களைக் கைவிட்டிடுதல் நன்று என்றுரைப்பள்.] அப்போது எம்பெருமான் 'லக்ஷ்மீ! இவர்கள் உன்னடியார்களா யிருந்த காலத்தில் ஒருகால் குற்றவாளர்களா யிருப்பினும் என்னடியார்களான பின்பு ஒரு போதும் குற்றவாளர்களாகார்கள்' என்று கூறுவன். அதற்கு மேலும் பிராட்டி எம்பெருமான் திருவுள்ளவுறைப்பை இன்னமும் சோதிப்போமென்றெண்ணி அவர்கள் அபராதிகளேயென்று திடப்படுத்திக்கூறுவள்.

அப்போது எம்பெருமான் 'என்னடியார் அது செய்யாரென்று நான் ஏற்செனவே சொன்னேன்; செய்யவே செய்தார்களென்னில், அது நன்றேயன்றித் தீதன்று' என்று சொல்லி மறுபடியும் பிராட்டி வாய்திறக்க வொண்ணாதபடி செய்தருள்வன். [அது கேட்டுப் பிராட்டியினுள்ளம் பூரிக்கும். இந்த வார்த்தையைக் கேட்பதற்காகவே நாம் சிதகுரைத்தோம், அது ஸபலமாயிற்று என்று கொண்டு மிகவுகப்பள்.] ஆகவிப்படி ஆச்ரித பக்ஷபாதத்தைக் காட்டி யருள்பவன் யாவனெனில், ஸ்ரீ விபீஷணாழ்வான் திறத்துக் கடற்கரையில் பண்டு காட்டின பக்ஷபாதத்தை இன்னமும் காவிரிக்கரையிலே காட்டிக்கொண்டு சாய்ந்தருளும் நம் திருவரங்கனே. அவ்வரங்கனுக்கன்றி நாம் மற்றவர்க்கு ஆட்படத்தகுமோ? என்கிற விது * தன்னடியார் பாசுரத்தின் தலைசிறந்த தாற்பரியம். இவ்வழகிய தாற்பரியங் கொண்ட பாசுரத்தையும் இவர்கள் தூஷிக்கத் தலைப்படுகின்றனர். இப்பாசுரத்தைப் பாங்காக நிர்வஹிக்கிறோமென்று எழுந்து தூஷணத்தில் முடித்து நிற்கின்றார்கள். ச்ருத ப்ரகாசிகையின் கதியே அங்ஙனாகும்போது இதில் வியப்பொன்றுமில்லையே. இப்பாசுரத்தில் இரண்டாமடியின் முடிவில் போலும் என்று இடைச்சொல்லொன்று உளதென்று அது கொண்டு இவர்கள் செய்யும் ஆகாசதாண்டவத்தைக் கண்ணுடையார் கண்டுகளிப்பது.

21—30. விபீஷணாழ்வானிடத்துள்ள பக்ஷபாதம் இப்பாசுரத்தின் பின்னடிகளில் ப்ரஸ்தாவிக்கப் பட்டிராநின்றது. இதுவே யிங்கு ஸாரமான விஷயம். ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனார்க்கு விபீஷணாழ்வான் திறத்து இருந்த அன்பு எத்தகைத்து என்பதை ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளைக் கொண்டே அறியிட வேணும். விபீஷணன் * நிவேதயத மாம் க்ஷிப்ரம் என்று அடைக்கலம் புகுந்தவன்று இரண்டு பக்ஷங்கள் தோன்றின; இவன் துஷ்டனாகையாலே அங்கீகரிக்கத்தக்கவனல்லன் என்று ஸுக்ரீவபக்ஷத்திற் பேச்சு, அதுஷ்டனாகையாலே அங்கீகரிக்கத்தக்கவனே யென்று திருவடி பக்ஷத்திற் பேச்சு. இது அனைவரு மறிந்ததே. பெருமாள் ஸுக்ரீவபக்ஷத்தைக் கண்டித்து மாருதி பக்ஷத்தை ஆதரித்ததாக எல்லாரும் க்ரஹித்திருப்பர்கள். அங்ஙனன்றிக்கே பெருமாள் ஸுக்ரீவ பக்ஷத்தோ டொப்ப மாருதி பக்ஷத்தையும் கண்டித்து மூன்றாவதாக வொரு விலக்ஷண பக்ஷத்தைத்தாம் வெளியிட்டருளினதாக அபயப்ரதாநஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் அற்புதமாக அருளிச் செய்கிறார். அந்த மூன்றாவது பக்ஷம் ஏதுவாயிருக்குமென்று வித்வான்கள் தம்தம் உள்ளத்தில் சற்று ஆலோசித்துப் பார்க்கலாமே. மேதாவிகளில் தலைவரான தேசிகனுடைய மேதைக்கே நிலமானவது மற்றையோருடைய மதிக்கு எட்டுமோ? அவர் எடுத்துக்காட்டி யருளின திவ்யமான்பொருளை ஆர்ஜவத்துடன் ஏற்று அநுபவிக்கப்பெற்றால் அதுபோதுமே. இவ்விசேஷார்த்தம் பிறர்க்கு துரவகாஹமாதலால் நாமே விசதீகரிப்போம். ஸுக்ரீவமாருதிகளின் இரண்டு பக்ஷங்களிலும் ஸாத்ய ஹேதுக்கள் உண்டே; ஸுக்ரீவபக்ஷத்தில் ஸாத்யாம்சத்தைக்கண்டித்தும் மாருதி பக்ஷத்தில் ஹேத்வம்சத்தைக் கண்டித்தும் போந்தார் பெருமாள். இவன் துஷ்டனாகையாலே ஸ்வீகரிக்கத்தகாதவன் [த்யாஜ்யன்] என்ற முந்தின பக்ஷத்தில் த்யாஜ்யத்வ ரூபமான ஸாத்யாம்சமொன்றையே கண்டித்தார்; துஷ்டத்வமென்னும் ஹேதுவைக்கண்டிக்கவில்லை. இவன் அதுஷ்டனாகையாலே ஸ்வீகார்யன் என்ற பிந்தின பக்ஷத்தில் அதுஷ்டத்வமாகிற ஹேதுவைக்கண்டித்து ஸ்வீகார்யத்வமாகிற ஸாத்யாம்சத்தை ஏற்றுக்கொண்டார்.

31-40. ஆகவே பெருமாளுடைய மூன்றாவது பக்ஷமாகத் தேறினது யாதெனில், விபீஷணன் தோஷவானாகையினாலேயே ஸ்வீகரிக்கத் தக்கவன் என்பதாகத் தேறிற்று. இங்ஙனே நுட்பமாகக் கண்டுபிடித்தருளிச் செய்த தேசிகனது திவ்ய ஸூக்தியை அவரை

யடிபணியுமவர்களாகச் சொல்லிப் போருமவர்களே அபலாபம் செய்யும் முகத்தால் தூஷித்து நிற்கிறார்கள். ஸ்வாமி இவ்வர்த்த விசேஷத்தை யருளிச் செய்தவிடமோ ரஹஸ்ய க்ரந்தம். சாஸ்த்ரார்த்த தத்துவங்களை வெளியிடுதற்கென்றே அவதரித்தது ரஹஸ்ய க்ரந்தம் என்பது ஞாபகமிருக்கவுரியது. உலகில் ஆச்சரியமாக ஸ்ரீராமாயண ப்ரவசநம் செய்வார் பலருளர். ஆனால் இத்தகைய ரஸ்ய ரஹஸ்யார்த்தம் நம் தேசிக ஸார்வ பௌமனுக்கன்றி மற்றொருவர்க்கு ஸ்புரிக்க விரகில்லையே. தேசிக திவ்ய ஸூக்திகளையே தமக்குத் தஞ்சமாகக் கூறுமிவர்கள் அதனை நஞ்சமாகக் கொள்ள வேண்டி வந்திட்டதே. தேசிக திவ்ய ஸூக்தியே நமக்கு நிதியென்று இவர்கள் கூறும் வார்த்தைக்கு எவ்வளவு பொருளமைதி யென்பதை இவ்விஷயமொன்றில் விவேகிகள் நன்குணரலாம். இதையும் அதிவாத மென்றிட்டுத் தள்ளியாக வேண்டு மிவர்கட்கு. வேறு வழியில்லை கிடீர். அதி வாதகதாவாஸனையற்றதொரு க்ரந்தத்தை இவர்கள் வாழ்நாளுள்ளவரை தேடிப்பார்த்துப் பிடிக்கவேணும். எதையும் அதிவாத மென்றே உதறித்தள்ள வேண்டியவர்களாக ஆயினர் இவர்கள். எம்பெருமானைப் பற்றி 'தண்டதரன் கொடியன் சீற்றமே வடிவெடுத்தவன்' என்றிப்படிப்பட்ட குணங்களையே இவர்கள் உபதேசித்துக் கொண்டு காலக்ஷேபம் செய்க.

41—50. விவாதாஸ்பதமான பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து ஆழ்வாருடைய திருவுள்ளத்தை அறுதியிடவேணும். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஒரு ஸம்வாதம் நிகழ்ந்ததாக அப்பாசுரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. அது கவி முறையில் கல்பித மென்கின்றனர் பிறர். உண்மையில் ஸம்பாவிதமானதே அது. ஸர்வஜ்ஞர்களான ஆழ்வார்களே அதனையறியவல்லார்.

அனுக்ரஹமயியான பிராட்டி எப்படி சிதகுரைப்பளென்று பிறர் க்ஷேபித்துக் கொண்டேயிருப்பார்கள். ஸ்தாணுநிகநநந்யாயத்தாலே இது ஸம்பாவிதமே யென்பதை நன்கு நிரூபித்திருக்கிறோம். எம்பெருமானது திருவுள்ள வுறுதியைப் பரீக்ஷிக்கைக்காகவே சிதகுரைக்கத் தோன்றிற்று. பிறகு எம்பெருமான் கூறின வுத்தரத்தினால் பிராட்டிக்குண்டான ஹர்ஷப்ரகர்ஷத்தை யாரேயறிவார்? அப்படிப்பட்ட மகிழ்ச்சியைப் பெறுவதற்காகவே யன்றோ பிராட்டி முன்னம் ஸ்வஸ்வரூப விருத்தமான சிதகுரையிலே ஊன்றி நின்றது. இந்த ஸம்வாதம் நடந்ததில்லை யென்று கொண்டாலும் * ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநு தாவதி * என்ற கணக்கிலே இவ்வருளிச் செயல் அவதரித்த பின்பாவது இது நடந்தே யிருக்க வேண்டுமாதலால் ஸர்வாத்மநா ஸத்யமானதேயிது என்று கொள்ள வடுக்கும்.

51—60. இந்த ஸம்வாதம் கல்பித மென்கிற பிறர் கொள்கையின்படியேதான் இருக்கட்டுமே. ஸம்வாத கல்பனைக்கு ஒரு பலன் இருந்தே தீர வேணுமாதலால் இங்கு என்ன பலன் தேறுகிறதென்பதை இவர்களே ஆராய்ந்து கூறுக. பிராட்டி சேதநாபராதத்தைத் திடப்படுத்திக் கூறியபின் எம்பெருமான் செய்த காரியமென்ன? அந்த அடியார்களைக் கைவிட்டு விட்டானா? கைக்கொண்டானா? என்று கேட்கிறோம்; கூறவேணும். கைவிட்டு விட்டானென்று கூற உங்கட்கும் வாய் எழாதாதலால் கைக்கொண்டானென்றே கூற வேண்டியதாகும். 'என்பர் போலும்' என்றிருப்பதனால் வஸ்து வ்ருத்தியில் நன்றன்று என்று கூறினதாகத் தேறுகின்றதென்கிற வாதமொன்று வலிதாக இருப்பதால், இந்த வாதத்தின்படி அந்த சேதநர்களின் தோஷ பூயிஷ்டத்வமே எம்பெருமானால் திடப்படுத்தப் பட்டதென்று தேறுகிறது. அங்ஙனம் துஷ்டத்வத்தைத் திடப்படுத்திக்கொண்டே அவர்களை எம்பெருமான் ஸ்வீகரித்துக் கொண்டானென்று நீங்கள் சொல்லுகிறபடியால் இதனால்

பலித்ததென்னவென்று பார்க்க. அங்கீகாரத்திற்குக் குற்றமே பச்சையாயிற்றென்று தேறுமேயல்லாது வேறொன்றும் தேருது. மரத்தின் முடியிலிருந்து கொண்டு அடிமரத்தை வெட்டுவார் கணக்காயிற்று. தோஷம் அங்கீகாரத்திற்குப் பச்சையாகாதென்று ஸாதிக்கப் பட்டபாடெல்லாம் விபரீதபலமாய் முடிந்தது காணீர். இனி, தங்கள் பிடிவாதத்தைக் காத்துக் கொள்ளவேண்டி, எம்பெருமான் பிராட்டியின் சிதகுரையைக் கேட்டு அவ்வடியார்களை உதறித் தள்ளிவிட்டானென்றே இவர்கள் சொல்லியாகவேண்டும். இங்ஙனம் அவர்களை யொதுக்கித் தள்ளும்படிக் குறிப்பாகவே பிராட்டி பாடுபட்டாளென்கிற இவ்வர்த்தம் மிகவழகியதே. திவ்ய தம்பதிகளுக்கு இத்தகைய சிறந்த குணத்தைப் பெறுவிப்பதும் இங்ஙனே பெறுவிப்பதற்காகவே ஆழ்வார் ஒரு ஸம்வாதத்தைக் கல்பனை செய்து பாசுர மமைத்தாரென்பதும் உங்கட்கே உரிய அழகிய வார்த்தையாம். திவ்ய தம்பதிகளுக்கு ஒரு குணோத்கர்ஷத்தை நிலை நாட்டவேண்டி ஆழ்வார் செய்த செயலை இப்படி விபரீதமாக்க வல்லவர்கட்கே உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யத்வவிருது உத்கோஷிக்கத் தகும்.

61-70. வத்ஸல: என்கிற பதமானது *வத்ஸாம்ஸாப்யாம் காமபலே* என்கிற பாணினி ஸூத்ரத்தாலே தேறியது. காமமென்கிற அர்த்தத்தில் லச் ப்ரத்யயம் வருமென்பதை வத்ஸ பதத்தின்மேல் விதித்த பாணினி மஹர்ஷியின் உள்ளம் ஆராய்ந்துணரவுரியது. இத்துடன் பலார்த்தே ப்ரத்யயத்தை அம்ஸபதத்தின் மேல் விதித்திருப்பது ஸாபிப்ராயமல்லவா? [வலிமைக்கு இருப்பிடம் தோளாதலால்.] அப்படியே ப்ரேமத்திற்கு லக்ஷ்யம் வத்ஸமாதலால் அதையிட்டு ப்ரத்யய விதானம் பண்ணினது, வத்ஸத்தினிடத்தில் பசுவுக்குள்ள ப்ரேமம் போன்ற ப்ரேமத்தையுடையவன் வத்ஸலன் என்று காட்டினபடி யல்லவா! பசுவுக்குக் கன்றினிடத்துள்ள அன்பு தோஷ போக்யத்வ ரூபமாகவன்றே உலகில் நன்கு காண்கிறது. இதை ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் பட்டரும், ஞானஸாரத்தில் அருளாளப் பெருமாளெம்பெருமானாரும் நன்கு நிரூபித்தருளினர். "அற்றமுரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன், குற்றமுணர்ந்திகழுங் கொள்கையனோ?, எற்றே தன்கன்றினுடம்பின் வழுவன்றோ காதலிப்பது அன்றதனை யீன்றுகந்த ஆ." என்பது ஞானஸாரத்தில் அற்புத மான பாசுரம். "குற்ற முணர்ந்து இகழுங்கொள்கையனோ" என்றது — இகழுங் கொள்கையனல்லன், மகிழுங் கொள்கையன் என்று நாட்டினபடி. அருளாளப்பெருமாளெம் பெருமானார் உடையவர் திருவடிகளில் நெடுநாள் பழுக்க ஸேவித்துப் பணிவிடைகளைச் செய்து நிதியாகப் பெற்ற விசேஷார்த்தங்களையே ஞானஸாரத்தில் இட்டருளினரென்பது ப்ரஸித்தம். ஆகவே வத்ஸலபதத்திற்கு தோஷ போக்யத்வரூபமான அர்த்தம் யதிஹ்ருதாஹக ரூபாணஸித்த மென்றதாயிற்று. இப்படிப்பட்ட சிறந்த ப்ராமாணிகார்த்தத்தை விட்டு வேறொரு சூஷ்கமான அர்த்தத்தையே ஆதரிக்குமவர்கள் அப்படியே ஆதரித்திடுக. பகவத் குணம்ருத ஸாகரத்தில் ஆழ்ந்திருப்பார்க்கு இதனால் யாதொரு ஹாநியுமில்லையே. நம்முடைய பாக்யத்தைக் கொள்ளை கொள்வார் யாருமில்லாமையால் நாம் வாழ்நாளுள்ளவரை பகவத் குணங்களையே பன்னிப் பன்னியுரைத்து வீறுபெற்று விளங்குவோமாக. குணோத்கர்ஷங் களை எவ்வளவும் மேலாகப் பேசவேண்டுவது எம்பெருமான் திறத்திலேயே ப்ராப்தம். அதைவிட்டு குணதரித்ரர்களான க்ஷுத்ரர்களிடத்தில் விசேஷகுணங்களிருப்பதாக இவர்கள் பேசிக்கொண்டு நாள்கடலைக் கழிப்பது இவர்கட்கு நன்றே.

71—80. திருமழிசைப்பிரான் "செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே" என்று பிரார்த்திக்கிறார். குற்றத்தை நற்றமாகக் கொள்ளுங் குணம் எம்பெருமானிடத்துள்ளதென்று உணர்ந்தன்றோ இங்ஙனம் பிரார்த்திக்கிறார். இவ்வாழ்வார் பேயாழ்

வாருடைய சிஷ்யராதலால் இவரும் ஒரு பேயார் என்பர் போலுமிவர்கள். தேசிகன் தயா சதகத்தில் “உபதிஷ்டதி துஷ்க்ருதாம் ப்ரயாணே விததோஷாநிதநாய விதிர்நூதீசவழ। ஸ்வநாயஸமேதரவணை குருக்ஷி: கரோமாகாதயே! கயம் ஹவிர் ॥” என்ற ச்லோகத்தாலும் *வ்யபமுவ்ருஜிந வ்யாஹரதெத்யாதியாலும் வெளியிட்டருளின அர்த்த விசேஷமும் இவர்களுக்கு தூஷணீயமாகவேயுள்ளது. வரதராஜ பஞ்சாசத்திலுள்ள “தோஷா நதெஹதிஷுநி ஸாவஸாநே” இத்யாதி ச்லோகத்தின் வியாக்கியானத்தில் தோஷ போக்யத்வமே வாத்ஸல்யமென்னுமிடம் நிரூபிக்கப் பட்டிருக்கின்றமை காண்க. * ஸம்ஹ்ருஷ்டாத்மா:........ஸம்ஸாரே நா ஹதவ்யஸ்ய நததோ விஜுகுப்ஸதெ* என்கிற கடோப நிஷத்தின் பாஷ்யத்தில் ரங்க ராமாநுஜ ஸ்வாமி பணித்திருப்பதும் இவர்கட்கு மறுக்கத் தக்கதே. பல சொல்லியென்? இங்ஙனே பலபல ஸ்ரீஸூக்திகள் இவர்கட்கு தூஷணீயங்களாய் முடிகின்றன.* குன்றனைய குற்றஞ் செய்யினுங் குணங்கொள்ளும் என்ற முதல் திருவந்தாதிப் பாசுரத்தின் திவ்யார்த்த தீபிகையில் இதையெல்லாம் மிகவிரிவாக விளக்கியுள்ளோம், காண்க.

81—90. இவ்விஷயத்தில் ஏற்கெனவே சில மஹான்கள் [திருச்சி. ஏ. வி. கோபாலாசார்ய ப்ரப்ருதிகள்] மறுப்புரையாகச் சில எழுதி த்ருப்திகரமான ஸமாதானங்களை உடனுக்குடனே பெற்றுக் கையொழிந்து நின்றார்கள். (அது பத்துவருஷமாயிற்று.) இப்போது சிலர் கிளர்ந்துள்ளார்கள். மீண்டும் பத்தெட்டு வருஷங்களுக்கப்பால் சிலர் கிளரக் கூடும். யார் கிளர்ந்தாலென்ன? பகவத் குண தூஷகர்களென்னும் விருதை நிலை பெறுத்திக்கொண்டு நிற்பதொழிய வேறொரு பலனும் கைபுகாதென்பதை யறிந்துவைத்தும் வீணான ஆக்ஷேபங்களையே வரைந்து கொண்டிருப்பதும் விலக்ஷணக்ருத்யமே. பகவத் குணங்களில் இப்படி யவர்களுக்கு மாத்ஸர்யமுண்டாகக் காரணமென்னவென்று நெடுநாள் விமர்சித்து முடிவாக வொன்றுணர்ந்தோம். அதனை யிங்கு வெளியிடுவதிற் பயனில்லை யென்று நிற்கின்றோம். எந்த காரணத்தினாலாவது இவர்கள் இந்த விவாதத்தை நடத்தி வருக. இதில் நமக்கு மிக மகிழ்ச்சியே. இவர்கட்கு மறுப்புரைக்கும் வியாஜத்தினால் பலபல அபூர்வார்த்தங்கள் உலகில் வெளிவருமாறு ஆசாரியர்கள் அருள்புரிந்து வருவதனால் இதற்கு மிக நன்றி பாராட்டுகிறோம். நம்முடைய குணாநுபவத்தில் இதுவொரு புடையாதலால் இதற்காக நாம் உகக்கவே ப்ராப்தமாகிறது. ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளில் எமக்குள்ள பக்திச் செல்வம் இத்தகைய நூல்களை அடிக்கடி படைக்குமாக.

91—100. இந்நூலைக் காணும் பிறர், நாங்களும் ச்லோகங்களியற்ற வல்லோமென்று சிலச்லோகங்களை யியற்றவும் வெளியிடவும் துணியக்கூடும். அதனால் அவர்களுக்கு பகவத் குண தூஷணத்திலுள்ள ஆஸ்தைதான் பிரசுரமாகிநிற்கும். இவ்விஷயத்தில் இவர்கள் போராடுவது மிகவும் அநுசிதமென்பதை முடிவில் ஸாரமாகவுணர்த்துகிறோம். இந்த விவாதமோ பகவத்குணத்தைப் பற்றியது. எம்பெருமானது திருக்குணத்திற்குள்ள பெருமையைக் குறைத்து இழிவாக ஒருவர் சொன்னால் அதைக்கண்டிக்க வெழுந்து ஆக்ஷேபங்களைச் செய்ய அவசியமுண்டு. ‘பக்தர்களுடைய குற்றங்களையும் நற்றமாகக் காண்கிறானெம்பெருமான்’ என்று சொல்வதனால் அப்பெருமானுக்கொரு ஹேயகுணம் சொன்னதாகத் தேறுமாகில் அதனைமறுக்கப் போராடவேண்டியது அவசியமேயாகும். பக்திமான்களுக்கு அது அழகியதே. ப்ரக்ருதம் அப்படி ஹேயகுண ப்ரஸங்கமில்லாததோடு பரம கல்யாணகுண ஸ்தாபனமே பண்ணுமவர்களைக் கண்டிக்கப் புறப்படுவதென்பது மிகவும் அஸ்தாநே. இதற்குமேல் இவர்கள் என்ன சொல்ல வேண்டுமென்றால், நாங்கள் அஸ்தாநே ஆக்ஷேபிக்கவரவில்லை; தோஷேஷு குணத்வபுத்தியென்ற விதனால் பகவானுக்கு ஹேயகுணம் நேர்ந்து

விடுகிறதென்றுதான் ஆக்ஷேபிக்க எழுகின்றோம்' என்ன வேண்டும். ஆனால் இந்தவாதம் இவர்களால் செய்யமுடியாதபடியாய் விட்டது. ஷோடஷேஷு குணத்வபுத்தியென்பது ஷூஸம்ஸார்த்தமான அதிவாத மென்று இவர்கள் எழுதித் தீர்ந்துவிட்டபடியால் ஹேயகுண ப்ரஸங்ககந்தமும் தலைகாட்ட வழியில்லையே. ஆகவே கௌரவமாய் வாய்மூடிநிற்றல்தகும். ஆனால் அந்த கௌரவம் நேர்வதரிது. இயற்கையாகவே பகவத்குணங்களைக் குறைத்துப் பேச இட்டுப்பிறந்தவர்கள் அந்தக்ருத்யத்திலேயே ஊன்றியிருக்க ப்ராப்தம். *பிணங்கி அமரர் பிதற்றுங் குணங்கெழு கொள்கையினானுடைய திருக்குணங்களைப் பெருக்கப் பேசுவ தற்கென்றே யிட்டுப்பிறந்த நாமும் நமது பணியிலே பாரித்திருப்போமாக. இப்படியே பகவத்குண போஷகங்களான பல பல நூல்களை இயற்றிக் கொண்டேயிருந்து பெருமை பெறுவோமாக. விஜய வருஷ ஆவணி ஸ்ரீ ரோஹிணியன்று த்வாரகையில் த்வாரகாநாதனுடைய திருமுன்பே யெழுதப்பட்டு அப்பெருமானுடைய திருவடிகளில் ஸாக்ஷாத் ஸம்பந்தத்தையும் அர்ச்சகர்கையினால் பெற்றுவந்த இந்நூல் *கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்திருக்குமதி காரிகளை மகிழ்வித்துக் கொண்டு நீடூழிவாழ்க.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் **அண்ணங்கராசாரியர் எழுதிய**
வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகையின் மொழிபெயர்ப்பு முற்றிற்று.

பரமார்த்தரக்ஷா-அநுபந்தம். 3

பாத்திரத்தனியன் தத்துவம்.

முதல் அத்யாயம்

1. திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஆரம்பத்தனியனாக *ஸ்ரீசைலேசதயா பாத்ரத்தனியனே பகவந்நியமனத்தினால் ப்ராமாணிகமானது. பிறகு 3-4 நூற்றாண்டுகள் கடந்த பின் சண்டைக்காக மற்றைத்தனியனும் அதைச் சேர்ந்த வாழித்திருநாமங்களும் போட்டியாகப் பிறந்தவை. அச்சுக்கூடங்கள் ஏற்பட்ட பின்பு அவரவர்கள் யதேஷ்டமாக எழுதியச்சிடுமவற்றால் சில சரித்திரங்கள் தலைதடுமாறான நிலைமையில் வந்துவிட்டன. இப்படியே சில ஆண்டுகள் கழிந்துவிட்டால், பொய் மெய்யாகவும், மெய் பொய்யாகவும் ஆய்விடுகின்றது பாமரஜநங்களின் ப்ரதிபத்தி எவ்வாறாக இருந்தாலும் விவேகிகளின் உள்ளம் என்ஞான்றும் உண்மையை உள்ளபடியே கடைப்பிடித்தேயிருக்கும். எத்தனையுகமானாலும் உண்மையான செய்தி உலகில் ஒரு புறத்திலாவது உலாவியே நிற்கும். "இது அடியோடு பொருந்தாத விஷயம்" என்று விவேகிகள் உணர்த்த உணர்ந்த பின்புங்கூட ஆக்ரஹத்தாலே பற்றினது விடாதொழிய ப்ராப்தமாகிறது. இந்த ஷூபல ஆபத்தில் தப்பிப்பிழைப்பார் மிகச் சிலரே. இப்போது நாம் விவேகிகள் உகக்க நிரூபிக்குமிதனைக்கண்டு அவரவர்கள் தம்தம் கொள்கையை மாற்றிக்கொள்ளப் போகிறார்களென்று நமது ப்ரதீக்ஷையல்ல. இன்னமும் அதிகமாகவே பிடிவாதம் கொள்ளவுங் கூடும். ஆனாலும் சில பிராமாணிகர்களுக்காவது பயன் படுமென் றெண்ணியே இதில் ப்ரவர்த்திக்கிறோம். தனியனுக்கு ஒரு மஹோத்ஸவம் கொண்டாட வேணுமென்று ஆசைகொண்டாலும், உண்மையில் எது தனியனோ, எது மிக்க பெரும்புகழ் படைத்ததோ அதற்கன்றோ உத்ஸவம் கொண்டாட வேண்டும். ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்கிற தனியனே உண்மையான பெருமையுடையது. தேசிகனுக்கு எவ்வளவு பெருமை

யுண்டோ அவ்வளவு பெருமை இந்தத் தனியனுக்கு முண்டென்றால் மிகையாகாது. இதுவே ஸகல ஸஜ்ஜந பரிக்ருஹீதம். இதுவே தேசிகனுடைய திருவவதார ஸ்தலத்திலும் ஸமய விசேஷங்களில் மேன்மைபெற்று விளங்குவது. இதுவே ஒருவிதமான பங்கத்தையும் பெறுதது. இதுவே தேசிகன் காலத்தில் அவதரித்தது. இதுவே நாடு நகரமெங்கும் பரவியது. மற்றொரு தனியனும் அப்போதே அவதரித்தது என்பவர்களுங்கூட ஸ்ரீமாங்வேங்கட தனியனே முந்துறமுன்னம் அவதரித்த தென்பதை இசைகின்றார்கள். பாத்திரத்தனியன் பிறப்பதற்குமுன் ஒன்பதேகால் வருஷத்திற்கு முன்னமே ஸ்ரீமான் தனியன் அவதரித்த தாக எழுதியுள்ளார்கள். பலசிறப்புக்கள் பெற்ற அந்தத் தனியனை அநாதரித்து, சண்டைத் தனியனுக்குச் சிறப்புச் செய்ய முயல்பவர்களின் கருத்து என்னே? ஸ்ரீமான் வேங்கட தனியனுக்காக ஒரு சிறப்பு நடத்துகிறோ மென்றால் இதில் ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸமரஸர்களாய்க் கூடியிருந்து அநுபவித்துக் குளிரக்கூடும். புதியதொரு கட்டிடத்தில் நடத்து வதைவிட்டு ஒன்றான தூப்புல் ஸந்நிதியிலேயே இதை நடத்தவுங்கூடும். தேசிகன் திருவுள்ள மும் உகக்கக்கூடும். யுக்தமென்று உலகமும் புகழக்கூடும்.

2. இனி இந்த பாத்திரத்தனியன் ஜனித்து 600 வருஷம் ஆயினவென்பது உண்மை தானா? என்று பரிசீலிப்போம். எற்கெனவே ஸ்ரீமான் வேங்கட தனியன் அவதரித்து வீறு பெற்றிருக்கும்போது இந்த பாத்திரத் தனியன் பிறக்க என்ன ப்ரஸக்தி? ஸம்ஸ்க்ருதக்ரந்த காலக்ஷேபத்திற்காக அந்தத் தனியனும், த்ராவிட க்ரந்தகாலக்ஷேபத்திற்காக இந்தத் தனியனும் தோன்றினதாகக் கூறுகின்றார்கள். ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் எம்பார் ஆழ்வான் பட்டர் பிள்ளான் அம்மாள் அப்புள்ளார் முதலான ஸகல ஆசார்யர்களுக்கும் எந்தக்ரந்த காலக்ஷேபத்திலும் ஒரு தனியன் தான் வழங்குவதாகவுள்ளது. ஸமாச்ரயண பரம்பரைக்காக மூன்றுவதொரு தனியன் ஏற்படவேண்டாவோ? ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் ஒவ்வொரு தனியன் ஏற்படவேண்டாவோ? த்ராவிட க்ரந்த காலக்ஷேபத்திற்காகத் தனியே ஒரு தனியன் ஏற்பட்ட தென்றால் அது தமிழ்ப்பாசுரமாக இருந்தாலாவது இசையலாம். ஏற்கெனவே உள்ள தனியனில் என்ன குறைகண்டு புதிய தனியன் இயற்றினர்க ளென்பது தெரியவேணும். ஸ்ரீமாந் வேங்கட தனியனில் தேசிகனுடைய ஆசாரியரைப்பற்றி ப்ரஸ்தாவ மில்லாமையாலே ஒருகுறை யிருந்ததென்றும், அக்குறைதீர ராமாநுஜ தயாபாத்ரத்தனியன் ஏற்பட்டதென்றும் எழுதியுள்ளார்கள். அப்படியானால், குறையோடு கூடின அந்தத் தனியன் லுப்தமாகி இதுவேயன்றோ ஸர்வஜநீநமாகப் பரிக்ருஹீதமாகவேணும்.

3. மணவாள மாமுனிகளுக்கு ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியன் திருவவதரிப்பதற்கு முன்னே வேறொரு தனியன் அவசியம் இருந்திருக்கவேணும். அந்தத்தனியன் இப்போது யாருக்காவது தெரிந்துளதோ? முக்கியமானதொன்று அவதரித்துவிட்டால் அமுக்கிய மானது அடங்கிவிடுமன்றோ. ராமாநுஜதயாபாத்ரத் தனியன் தேசிகன் காலத்தில் ஜனித் திருந்து உகக்கப்பட்டிருக்குமாகில் பிறகு ஸ்ரீமாந் வேங்கட தனியன் ஜீவித்திருக்க நியாய முண்டோ? ஸகல ஸந்தர்ப்பங்களிலும் இந்த பாத்திரத் தனியனையே அநுஸந்திக்க என்ன தடை? இதை விவேகிகள் ஆராயலாகாதா? ஏற்கெனவே சிஷ்டபரிக்ருஹீதமா யிருந்த ஸ்ரீமான் வேங்கட தனியனுக்கு லோபம் செய்யக் கூடாமையாலே அதற்கும் ப்ரசாரமிருக்க வேணுமென்று கருதி ஒரு வ்யவஸ்தை பண்ணினர்கள் என்னில்; இங்கே கவனிப்பது;— நம்மாழ்வாருடைய தனியனாக இப்போது உலகில் வழங்கி வருகின்றது *மாதாபிதா யுவதய:* என்கிற (ஆளவந்தாரருளிய) ச்லோகம். இது அவதரிப்பதற்கு முன்னே பல ஆசாரியர்கள் நம்மாழ்வாருக்குத் தனியன் அநுஸந்தியாமலிருந்திருக்கவில்லை. ஸ்ரீ மதுரகவிகள் ஸ்ரீபர்

நாதமுனிகள் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி முதலானவர் பல்லாயிரவர் அநுஸந்தித்த ஆழ்வார் தனியன் எங்கே? என்றால் என்ன பதில் சொல்லுவோம். ஒருகாலத்தில் ஒரு தனியனுக்கு ப்ராபல்யம் ஏற்பட்டால் மற்ற தனியன் தன்னடையே மறைந்து போகு மன்றோ? மறைய வேணுமென்கிற அவசியமில்லை. ப்ரதானத்தனியன் என்கிற பெயர் பெறாமல் அதுவும் ஒருபுறம் இருக்கலாம்.

4. ஸ்துதி ரூபமானவொரு பத்யமோ பாசுரமோ தனியனென்று வழங்கப்படுகிறது. ஒரு ஆசார்யருக்கு இப்படிப்பட்ட ஸ்துதிபத்யங்கள் பலபலவும் இருக்கலாம். ஆளவந்தார்க்கு * ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் * நமோ நமோ யாமுநாய * இத்யாதிகளான பல ச்லோகங்கள் உண்டு. எம்பெருமானார்க்கு * ஸர்வவேதாந்த ஸாரஜ்ஞ * யோநித்யமச்யுத பதாம்புஜ * ராமாநுஜஸ்ய சரணௌ * இத்யாதி ச்லோகங்கள் பல்லாயிர முண்டு. இருந்தாலும் ஒரு ஆசார்யருக்கு ஒரு தனியன் தான் அஸாதாரணமாக அமையும். அங்ஙனம் அஸாதாரண மான தனியன் தேசிகனுக்கு எது? என்றால், ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: என்பதேயாம். 'இதுவன்று' என்று யாரேனும் சொல்லவொண்ணுமோ? மிக நவீநமான ராமாநுஜதயா பாத்ரத் தனியனை ப்ராசீநம்போல் காட்டுவதற்கு இவர்கள் செய்த முயற்சி இதனுடைய நவீநத்வத்தையே நன்கு ஸ்தாபித்துக் கொடுக்கின்றதென்பதை யார்தாமறியார்? இந்தத் தனியன் பிறந்த காலத்தைக் குறிப்பிடுவதாக ஒரு சுலோகம் சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் வெளியிட்டிருக்கிறார் [தேசிக சரித்திரத்தில் பக்கம் 45ல்.] * கல்யப்தேஷு சதுஸ்ஸஹஸ்ர ஶதபங்க்த்யப்தே............ஸச்லோகோவததார திவ்யமஹிமா ராமாநுஜோக்த்யாதிம: [கல்யப்தேஷு சதுஸ்ஸஹஸ்ர ஶதபங்க்த்யப்தே............ஸச்லோகோவததார திவ்யமஹிமா ராமாநுஜோக்த் யாதிம:] என்பதே அது. இதைப்பற்றி நமக்குப் பலவிஷயங்கள் விவக்ஷிதங்கள். விவேகிகளை நோக்கியே விளம்புகின்றோம்.

5. சதுஸ்ஸஹஸ்ர ஶதபங்க்த்யப்தே என்கிற பதம் வ்யுத்பந்நர் பிரயோகிப்பதன்று. சேட்லூர் பண்டிதரின் கவனம் இது என்பது இதனாலேயே ஸுஸ்பஷ்டம். "கலியுக நாலாயிரத்து நானூற்று நாற்பதாவதில்" என்னும் விவக்ஷைக்கு இந்தபதம் ஒரு காலும் வாசகமாகாது. அப்தா: என்பதை மேலுள்ள ஒவ்வொரு லக்கத்தோடும் சேர்த்துக் கொண்டாலும் [4440-வருஷங்கள்] என்று பொருள்படுமே யல்லது விவக்ஷிதமான ஒரு வருஷத்தை, [அதாவது 4440 ஆவது வருஷத்தில் என்கிற பொருளை] ஒருநாளும் காட்டாது. இந்த மருமத்தையறிந்துகொள்ள ஸம்ஸ்க்ருத பாஷையில் ஆழ்ந்த வ்யுத்பத்தி வேணும். அப்தே (அப்தே) என்று ஏகவசனமிருக்கையாலே ஒருவருஷத்தைத் தான் சொல்லும் என்னவொண்ணாது; வியாகரணத்தில் (* ஸங்க்யா பூர்வோத்விகு: *த்விகுரேகவசநம்) *ஸங்க்யாபூர்வோ த்விகு: * த்விகுரேகவசநம் * என்கிற அநுசாஸநத்தினாலன்றோ இந்த ஏகவசநம் ப்ராப்தமாகிறது. 4440 வருஷங்கள் என்று அத்தனை வருஷங்களையும் இச்சொல் காட்டியே தீரும். [ஆங்கிலத்தில் Five o'clock என்பதற்கும் Five Hours என்பதற்கும் உள்ள வாசியை அறியுமவர்கள் இங்கு விவாதப்பட மாட்டார்கள்.] பஞ்சவர்ஷ: என்பதற்கும் பஞ்சமவர்ஷ: என்பதற்கும் நெடுவாசியுண்டு. ஸங்கல்பஸூர்யோதயத்தில் "விம்ஶத்யப்தே விஶ்ருத நாநா வித வித்ய:" [விம்சத்யப்தே விச்ருத நாநாவித வித்ய:] என்று ஸ்வாமி அருளிச் செய்கிறார். விம்சத்யப்தே என்பதற்கு 'இருபதாவது வயதிலே' என்று பொருளன்று. மொத்தம் 20 வருஷகாலம் சிரமப்பட்டு என்பதே அங்கு அர்த்தம். அதுபோல் இங்கும் 4440 வருஷ காலம் சிரமப்பட்டு ஒருவர் இந்தத் தனியனை இயற்றினார் என்று பொருளாகுமேயன்றி 4440-வது வருஷத்தில் இது பிறந்தது என்பதாகப் பொருள்பட வழியில்லை. ஸம்ஸி என்பது

தச (ஓஸ) என்பதற்குப் பர்யாயம். அதை எப்படி ப்ரயோகிக்க வேணுமென்பதை உணராமல் வெகு சிரமப்பட்டு ச்லோகமியற்றி விட்டார். இதை ஒரு ஓலைச்சுவடியில் இவர்கள் காட்ட முடியாதென்பதை சபத மிட்டுரைப்பேன். இந்த சுலோகம் மாத்திரமே கல்பிதமன்கிறேமல்லோம்; இந்த பாத்திரத் தனியன் இன்னஷு இன்னமீ இன்னநாளில் அவதரித்ததென்று கூறுகிற வார்த்தை வசனநடையாகவும் ஒரு ஓலையேட்டில் காட்ட முடியாதென்பதையும் ஸத்யமாகக் கூறுவோம். அன்றியும், லக்கத்தைத் தெரிவிக்க வேண்டு மிடங்களில் கடீவயாஜிஸம்ஜ்ஞாஸீ தஜா சுலோகமியற்றுவதுதான் பிராசீநர்களின் வழக்கம். இங்ஙனே ஸங்க்யாவாசக சப்தத்தை நேரேயிட்டு இயற்றப்பட்ட சுலோகம் பாத்திரத்தனியன் போலவே பச்சாத் கல்பிதமென்பது எளிதாக நிர்ணயிக்கப்படும். ஒரு தனியன் பிறந்ததற்காக அந்த காலத்தைத் தெரிவிக்கவேண்டி கல்யப்தம் முதற்கொண்டு திதி வார நக்ஷத்ராதிகளை யெல்லாம் தெரிவித்து ச்லோகம் இயற்றவேண்டிய அவசியம் என்ன? என்பதை விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸ்ரீமாந் வேங்கட தனியன் அவதரித்த காலத்தைப்பற்றி ஒரு ச்லோகமும் காணேமே. அதை மாத்திரம் வசனமாகவே யெழுதி முடித்திருக்கிறூர்களே. கிம்பஹுநா? தேசிகனுடைய திருவவதாரத்தைப்பற்றி இங்ஙனே ஒரு சுலோகமுண்டோ? தேசிக சரித்ரபரமான எந்த புஸ்தகத்தையும் எடுத்துக் கொள்ளலாம். ஊஓம்வஸமாக நாம் பலநூல்களையும் பரிசீலித்திருக்கிறேம். * ஹாஉவஓஊஸஹத விஷ- விஉஷுகெஷஓ * என்பது போலவேயுள்ள சுலோகங்களினுல் "புரட்டாசித் திருவோணத்தில் திருவவதரித்தார்" என்றிவ்வளவே கிடைக்கின்றது. விபவ வருஷத்தில் என்பார் சிலரும், சுக்ல வருஷத்தில் என்பார் சிலருமாய் நாளைக்கும் போராடிக் கொண்டிருப்பது அபலபிக்க வொண்ணுதது. இதைப்பற்றின வாதப்போர் வேதாந்த தீபிகையிலேயே நிகழ்ந்துளது நாமும் அதைப்பற்றி ஒருக்ரந்தம் வடமொழியிலும் தென்மொழியிலும் ப்ரபவ வருஷத்தில் வெளியிட்டிருக்கிறேம். ஒன்றுன தேசிகனுடைய அவதார காலநிர்ணயத்திற்கே ஒரு சுலோகம் கிடைக்காமலிருக்கும்போது சண்டைத் தனியனுடைய ஜநநத்திற்கு ஒரு ச்லோகம் காட்டப்படுமேயானுல், புதியதைப் பழையதென்று காட்ட எவ்வளவு பாடுபட்டிருக்கிறூர்களென்பது தெரியவருகின்றதன்றே. தேசிகன் ஓரிரவில் ஒரு யாமத்தில் அத்யாச்சர்யமான பாதுகா ஸஹஸ்ரத்தை அருளிச்செய்தாரென்று ப்ரஸித்தமாகச் சொல்லி வருகிறேம். இது அவதரித்தது எந்த வருஷத்தில் எந்த மாஸத்தில் எந்த நாளில் என்பதைப்பற்றி ஒருவரும் ஒருவரியும் எழுதிவைக்கவில்லை. பிறந்தநாள் முதலாக நீதி ஸ்தலங்கள் தோறும் பங்கப்பட்டு வருகிற வொரு தனியனுக்கு கல்யப்தம் முதற்கொண்டு எழுதி வைத்திருக்கிறூர்களென்றுல் இந்த வேலைத்திறம் மிக மெச்சத்தக்கதே. ஆக இவ்வளவான நிரூபணங்களினுல் பாத்ரத் தனியன் புராதனமன்று என்பதும், புராதனமென்று காட்டிக்கொள்ள ப்ரயாஸப்பட்டிருக்கிறூர்களென்பதும் தேறிற்று. கண்ணழிவு சொல்லமுடியாத பற்பல ஹேதுக்களினுல் இதனை இன்னமும் நன்கு ஸ்தாபிப்போம்.

6. ஸம்ஸ்க்ருத க்ரந்தகாலக்ஷேபத்திற்கு ஸ்ரீமாந் வேங்கட தனியனும், த்ராவிட-மணிப்ரவாள க்ரந்த காலக்ஷேபத்திற்கு பாத்திரத்தனியனுமாக ஸ்வாமி தேசிகனே வ்யவஸ்தை பண்ணி நியமித்தருளினுர் என்று இவர்கள் எழுதியுள்ளார்கள். காஷகெஷவாஹஓங்களான தேசிக திவ்யக்ரந்தங்கள் யாவும் ஓலையேடுகளில் நாளைக்கும் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருகின்றன. திருமாளிகைகளிலும் மடங்களிலும் ஆங்காங்கு ஸுப்ரஸித்தங்களான (கனிமராலைப்ரெரி முதலிய) ராஜகீய புஸ்தகாலயங்களிலும் ப்ராசீந தாளகோசங்கள் பாங்காக பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. 10, 15 இடங்களில் இதம்பரமாக நாம் சென்று உண்மைதெரிந்து கொள்ளப்

பரிசீலித்திருக்கிறோம். தேசிகனுடைய வடமொழி நூல்களோடு தென்மொழி நூல்களோடு வாசியற எல்லாவற்றிலும் ஸ்ரீமாந் வேங்கடதனியன் ஒன்றே திகழ்கின்றது. பாத்திரத் தனியன் ஒன்றிலாவது காணக்கிடைக்குமோ என்று நாம் பெருமுயற்சிகள் செய்து பார்த்தும் ஒன்றிலும் கிடைக்கவில்லை. கிடைக்கின்றதென்று கண்டு காண்பிக்கவல்ல மஹான்கள் உளரேல் தாராளமாக முன்வரலாம். [இத்தனியன் ஓலை ஸ்ரீகோசங்களில் காணப்படவில்லையென்று ப்ராமாணிகரான திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸாதித்தார். மேலும், ஓலை ஸ்ரீகோசங்கள் வரையில் போகவேண்டிய அவசியமுமில்லை. கோவில் விவாதங்களில் ஸம்பந்தப்படாதவர்களும் ஸாதுக்களுமான பெரியார்கள் அச்சிடுவித்திருக்கின்ற தேசிக ரஹஸ்ய-வ்யாக்யாநாதி க்ரந்தங்களை யெடுத்துப் பார்ப்போம். அவற்றிலும் ஸ்ரீமாந் வேங்கட தனியன் தவிர இந்த பாத்திரத் தனியன் தலைகாட்டவில்லையே. ஸந்நிதி விவாதங்களில் கைதேர்ந்த ஆக்ரஹிகளான பிற்காலத்தவர்கள் அச்சிடுவித்துவரும் தேசிக க்ரந்தங்களில் இந்த பாத்திரத்தனியனையும் நுழைத்துப்பதிப்பித்து வருகிறார்களென்பது உள்ளது. காஞ்சீபுரத்தில் வ்யவஹிஷ (வ்யபதிஷ்ட) ராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ வில்லியம் பாக்கம்ஸ்வாமி தாமே சோதித்துப் பதிப்பித்திருக்கும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இந்தத் தனியன் நுழைந்திருப்பதுண்டாவென்று நோக்குமின். தேசிகக்ரந்தங்களில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் மிகவும் முக்கியமென்பது நிர்விவாதம். அதற்கு ஸாரஸ்வாதிநீவியாக்யானம் ப்ரதாநதமம் என்பதும் ப்ரஸித்தம். அந்த வியாக்யானத்தின் தொடக்கத்தில் அந்த வ்யாக்யாதாவின் கையினால் எழுதியிருக்கும் தனியன் ஸ்ரீமாந் வேங்கட தனியனா? பாத்திரத் தனியனா? என்று [திருச்சேறைப் பதிப்பில்] பார்க்கலாம். ஸ்வாமி தேசிகனே ஏதோ தனியன் வ்யவஸ்தை பண்ணினார் என்கிறார்களே; இது ஸாரஸ்வாதிநீகாரர்க்குத் தெரிந்திருக்கவில்லைபோலும்.

7. மணவாள மாமுனிகளின் எந்த க்ரந்தங்களையும் எடுத்துப்பார்க்கலாம்; தாள ஸ்ரீகோசங்களோடு அச்சுப்புத்தகங்களோடு வாசியற எல்லாவற்றிலும் ஸ்ரீசைலேச தயா பாத்ரத் தனியன்தான் இருந்து தீரும். ராமாநுஜ தயாபாத்ரத் தனியனுக்கு இங்ஙனே ஒரு ப்ராமாண்யம் லவலேஶமாகிலும் காட்டக்கூடுமாவென்று கேட்கிறோம். அச்சுக்கூடங்களோடு கூடவே இத்தனியன் ஏற்பட்டதென்பதற்கு, அசைக்கமுடியாத நிரூபகங்கள் வஶஸூதம் கிடைக்கும். இந்தத் தனியன் ஏறிய ஓலையேடு ஒன்றுகூட ஒருவரால் காட்ட முடியாதென்று துணிந்து கூறுகின்ற நாம் இவ்விஷயத்தில் எவ்வளவு பாடுபட்டு உண்மையைக் கண்டுபிடித்திருப்போமென்பதை அவரவர்கள் உள்ளத்துள்ளே ஊன்றியுணரலாம்.

8. "ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் திகழ்கின்ற ஓலை ஸ்ரீகோஶம் இதோவுள்ளது, காணாய்" என்று கம்பீரமாக கோஷித்து ஒரு ஸ்ரீகோஶத்தையாவது ஸதஸ்ஸில் காட்ட நேருமா? அப்படி ஒருவர் காட்டிவிடுவரேல், நாளது ஆவணிமாதத்தில் இவர்கள் செய்யப் பாரித்திருக்கும் பாத்ரோத்ஸவத்திற்குத் தேவையான பொருளுதவியை நாமே முன்னின்று செய்விப்போம் என்று நாம் பல பத்ரிகைகளையச்சிட்டுப் பிரசுரம் செய்தும் ஒருவரும் எடுத்துக்காட்ட முன்வரவில்லை. இல்லாததை எங்ஙனே யெடுத்துக்காட்டமுடியும்?

9. இங்ஙனே நாம் துணிவுடன் எழுதுவதைக் காணும் சிலமஹான்கள் என்ன நினைக்கக் கூடுமென்றால், "உண்மையில் இந்த பாத்திரத் தனியன் ஏற்பட்டு 600 வருஷம் ஆகாவிடினும், சில ஸந்நிதிகளில் நேர்ந்துள்ள விவாதங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இந்தத்தனியன் ஏற்பட்டு ஏறக்குறைய இருநூறுவருஷமாவது அவசியம் ஆகியிருக்குமென்று எண்ண

வேண்டியதாகிறது. வாஸதவத்தில் கி. பி. பதினெட்டாவது நூற்றுண்டின் முற்பகுதியில் இத்தனியன் ஜனித்ததாகவும் தெரியவருகிறது. அத்தருணத்திற்குப் பின்பு பலபல ஓலை ஸ்ரீகோஶங்கள் எறியருளப் பண்ணப்பட்டிருக்கலாமே; அவற்றில் ஏதாவதொரு ஸ்ரீகோஶத்தில் இந்த பாத்ரத் தனியன் சேர்த்து எழுதப்பட்டிருககவுங்கூடுமே; அப்படிப்பட்ட வொரு சுவடியைக் கொணர்ந்து காட்டிவிட்டால் என் செய்வது!" என்று நினைக்கக்கூடும்.

10. ஆரியர்காள்! ஓலை ஸ்ரீ கோஶங்களை ஆராய்ச்சி செய்வதற்காக நாம் அடிக்கடி பலதலங்களுக்குச் செல்வதுண்டு. நம்முடைய க்ரந்தங்களையெல்லாம் ஊன்றி நோக்குமவர்கள் இத்தகைய பரிச்ரமம் நமக்கு நெடுநாளாக வுண்டென்பதை நன்கறிவார்கள். அங்ஙனம் செல்லுமிடங்களில் இந்த ராமாநுஜதயாபாத்ரத் தனியன் விஷயமான ஆராய்ச்சியையும் நாம்செய்வது வழக்கம். ஏனென்றால், (1) சில திவ்யதேசங்களில் இத்தனியன் ஸம்பந்தமான சச்சரவே அதிகரித்திருப்பதாலும், (2) இத்தனியனைச் சிலவிடங்களில் வாயாற் சொன்னதற்கும் சொல்ல நினைத்ததற்கும் ராஜதண்டனைகள் ஏற்பட்டிருப்பதாலும், (3) இத்தனியனில் பற்று வைத்தது காரணமாகவே ஸ்ரீதாதாசார்ய வம்ஶஸ்தர்கள் பல திவ்யதேசங்களில் தங்களுடைய சிறந்த மரியாதைகளை அநியாயமாய் இழக்க நேர்ந்துவிட்டதென்று ஸ்ரீபெரும்பூதூர் வியவஹாரத்தில் கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜ்கள் தெரிந்து பரிதாபத்தோடு எழுதியிருக்கிறபடியாலும், (4) காஞ்சீபுரததில் மஹாவ்யாபகராகவும் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தான தர்மகர்த்தாவாகவும் எழுந்தருளியிருந்த திருப்புட்குழி ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான உ. வே. ஸ்ரீ க்ருஷ்ணதாதாசாரியர் ஸ்வாமி 1874வருஷத்தில் செங்கற்பட்டு ஜாயிண்டு மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டு 72-நெ. தாவ வில் மிஸ்டர் குருல்துரை முன்னிலையில் பிரதிவாதியாக எழுந்தருளி "விளக்கொளி தேசிகன் ஸந்நிதிவாசலில் தென்கலைத் திருமண்தான் இருந்தது" என்றும், 6, 7. மாதத்திற்குமுன் நான் வெளியூ போயிருந்தபோது யாரோ வடகலையார் அதையிடித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன் என்றும், "அந்த தேசிகன் ஸந்நிதியிலுங் கூடத் தென்கலையார்களே தென்கலை மந்திரம் சொல்லியே திவ்யப்ரபந்த ஸேவை செய்து வருகிறார்கள்" என்றும் 19-9-1874ல் ஸ்டேட்மெண்டு கொடுத்திருப்பது அப்படியே அச்சாகி வெளிவந்திருப்பதாலும் மற்றும் பல காரணங்களாலும் இத்தனியனைப்பற்றியும் திருமண்காப்பைப்பற்றியும் உண்மையைக் கண்டுபிடிக்க வேணுமென்று அடியேனுக்கு நெடுநாளாகவே ஆவல் இருந்ததனால் ஹைாஂவயெஊண பல ஆராய்ச்சிகள் செய்யலாயின. அவற்றை வெளியிடுதற்கு இப்போது தைவவஶாத் அவகாஶம் கிடைத்தது. விவாத பாத்ரத் தனியன் ஏறியுள்ள ஓலை ஸ்ரீகோஶம் ஓரிடத்திலாவது கிடைக்குமா என்று மிக அலைந்து பார்த்தும் ஒன்றுகூட அடியேனுக்குப் புலப்படவில்லை.

11, மைஸூரிலுள்ள ஸ்ரீபரகாலமடத்திற்கே சென்றிருந்தேன். மஹாகவிவரராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ பரகாலஸ்வாமி அடியேன் பால் பரமக்ருபாளு. கீலகவருஷத்தில் அங்கு ஸமாகமம் நேர்ந்தபோது அந்த மடத்திலுள்ள ஓலை ஸ்ரீ கோஶங்களை யெல்லாம் அவிழ்த்து ஸேவிக்க ஸ்வாமிநியமநம் பெற்றுக்கொண்டேன். தேசிக ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவும் எடுத்து ஸேவித்தேன். ஒவ்வொன்றிலும் ஸ்ரீமாந் வேங்கட தனியன் உள்ளதேயன்றி பாத்ரத் தனியன் ஒன்றிலும் புலப்படவில்லை. ஆனது பற்றியே நாம் இதனை ஈண்டு நிஸ்ஸங்கோசமாக எழுதலானோம். இவ்விஷயத்தை அப்போதே நாம் ப்ரபஞ்சனம் செய்தோம். அதற்குப்பிறகு யாரேனு மொருவர், விழித்துக்கொண்டு ஓலையேட்டிலும் இந்தத்தனியனை ஏற்றிவைக்க வேணுமென விரும்பி ஏதாவது வேலைத்திறங்கள் செய்திருக்கலாமோ என்று நமக்கு ஒரு சங்கையுமுண்டு. ஆனாலும் நமக்குக் கவலையில்லை, ஸுப்ரஸித்த ராஜகீய புஸ்

தகால்யங்களில் சென்று ஒரு விபர்யாஸமும் விளைக்க முடியாதன்றோ. தேசிகனுடைய தமிழ் க்ரந்தங்களான ஓலை ஸ்ரீகோசங்களை ஸ்ரீமாந் வேங்கட தனியனை உள்ளனவாகவும் பாத்ரத் தனியனுடைய ப்ரஸக்திகந்தமுமற்றனவாகவும் நாம் வஸ்ஸூதம் காட்டுவோம். இதை மறுக்கமுடியாதே. இதனால் ஏற்படுகிற உண்மையை யார் அபலபிக்ககிற்பார்?

12. திருவெவ்வுளூர் முதலான நாலைந்து திவ்யதேசங்களில் இந்தத்தனியனுக்குச் சிலகாலமாய் ப்ரவேசமிருப்பது கொண்டும் உண்மையை மாற்றவொண்ணாது. இங்ஙனே சில திவ்ய தேசங்களை ஸ்தலவாஸிகள் பறிகொடுத்து விட்டாலும் அவ்விடங்களில் இடையில் ஸம்பவித்த கோளாறுகளையும் புராதநஸ்திதியையும் உள்ளபடி காட்டவல்ல ரிகார்டுகள் அழிந்து போகவில்லை. அடியேனுக்குத் தெரிந்தவரையில் திருவெவ்வுளூரிலும் திருவஹீந்திரபுரத்திலும் ஒரு பெட்டி ரிகார்ட்டுகள் நாளைக்கும் சேமிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை அச்சாகி வெளிவந்து ப்ராமாணிகர்களை மகிழ்விக்கும்.

[திருவெவ்வுளூர் ரிகார்டுகள் யாவும் இப்போது செங்கற்பட்டு நீதிமன்றத்து ஏற வேண்டிய ப்ரஸக்தியும் ஏற்பட்டிருப்பது ப்ரஸித்தம். அதன் முடிவு எப்படியாவது ஆயிடுக; அதைப்பற்றி நமக்கு விசாரமில்லை. ப்ராசீனஸ்திதியைத் தெரிவிக்கின்ற ரிகார்டுகளன்றோ முக்கியமானவை. மாமூலாகச் சொல்லிவந்த ஸ்ரீசைலேசத்தனியனை விட்டுப் புதிய ராமாநுஜ பாத்ரத்தனியனை அஹோபிலம் ஜீயர்ஸ்வாமிகள் சொன்னதற்காக எத்தனை தடவை அவர் ஷேி ஸன்னிதி கைங்கர்யத்திலிருந்து விலக்கப்பட்டார்? புதுத்தனியனை இனிச்சொல்லுவதில்லையென்று ஜீயரே எத்தனை தடவை எழுதிக்கொடுத்தார் என்பதெல்லாம் நன்கு விளங்குகிறதே.]

13. மணவாளமாமுனிகளைக் காட்டிலும் வேதாந்ததேசிகன் முற்பட்டவராதலால், மாமுனிகளின் தனியனான ஸ்ரீசைலேச தயாபாத்ரத்திற்காட்டிலும் தேசிகனுடைய தனியனே முற்பட்டிருக்கத் தகுந்தது—என்று பொதுவாக அனைவரும் எண்ணக்கூடியது. இதில் நாமும் விப்ரதிபத்தி யுடையோமல்லோம். மாமுனிகளின் தனியனைக்காட்டிலும் தேசிகன் தனியனே முற்பட்டது என்பது மிகவும் யுக்தம். அந்தத்தனியன் ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்பதே யல்லது 'ராமாநுஜதயாபாத்ரம்' என்பதல்ல—என்று விசதமாக நிரூபித்தாயிற்று.

14. ஆனால், 'ராமாநுஜதயாபாத்ரம்' எப்போது பிறந்தது? எங்ஙனம் பிரசாரமடையத் தொடங்கிற்று? என்னும் விஷயங்கள் இனி விமர்சிக்கப்படவேண்டும். அருளிச்செயல்களை அநுஸந்திக்கத் தொடங்கும்போதுகளில் உபகாரஸ்ம்ருதியாக ஆசார்யர்களின் தனியன்கள் அநுஸந்திக்க ப்ராப்தமானால் அவர்களுள் முற்பட்டவர்கள் யாவரோ அவர்களுடைய தனியன்களை அந்த வரிசைக் கிரமமாக அநுஸந்திப்பது முறைமையாகும். இங்ஙனே யாமிடத்து ஸ்ரீமந் நாதமுனிகள் போல்வாரான பூர்வாசார்யர்களுடைய தனியன்தான் முதன்மைபெறவேண்டும். * சடகோப தயாபாத்ரம் ஜ்ஞானவைராக்ய சேவதிம். அகாதபகவத் பக்திம் வந்தே நாதமுனிம் குரும் * என்று ஒரு தனியன் இருந்து திவ்யப்ரபந்தாரம்பங்களில் அநுஸந்திக்கப்பட்டு வந்திருக்குமாகில் நன்றே. ஆனால் அங்ஙனம் வந்திருக்கவில்லை. உடையவர் வரையில் அந்தந்த பிரபந்தங்களுக்கு அந்தந்த ஆழ்வார்களுடைய தனியன்கள் அநுஸந்திக்கப்பட்டு வந்தன. பிறகு கூரத்தாழ்வான் காலத்தில் * லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் * *யோ|நித்யமச்யுத * *மாதாபிதாயுவதய:* என்கிற தனியன்கள் ஸகல ப்ரபந்தங்களுக்கும் பொதுத் தனியன்களாக அநுஸந்திக்கப்படுமாறு ஸங்கேதம் ஏற்பட்டது. பட்டர் காலத்தில் * பூதம்ஸரச்ச மஹதாஹ்வய * என்கிற தனியனும் அவற்றோடு சேர்க்கப் பட்டது. இவை திவ்யப்ரபந்தாநுஸந்தான ஆரம்பத்திற்கு மாத்திரமே ஏற்பட்டன. அநுஸந்தான முடிவில்

4

ஒரு தனியனுமில்லை. வாழித் திருநாமமுமில்லை. முடிவில் பல்லாண்டு பல்லாண்டு என்று தொடங்கி ‘அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே’ என்று முடிப்பதுவே வழக்கமாயிருந்தது.

15. பிறகு மணவாளமாமுனிகளின் காலத்தில் ஏற்பட்ட விஷயங்கள் ஜகத்ப்ரஸித்தமானவை. அவை மாமுனிகளின் காலத்திலேயே அவருடைய சிஷ்யர்களால் சம்பூரூபமும் காவ்யரூபமும் ஸ்தோத்ரரூபமுமான க்ரந்தங்களில் வடமொழியிலும் தென்மொழியிலும் அமைக்கப்பட்டு விளங்குகின்றன. அவை புராதன ஓலை ஸ்ரீகோசங்களாக அனேகம் கிடைக்கின்றன. அவை எழுதப்பட்டு எத்தனை நூற்றாண்டுகள் ஆகியிருக்குமென்பதையும் தடஸ்தர்கள் ஊன்றிப் பார்க்கலாம். மாமுனிகளின் திருவடிகளில் ஒருவரான அப்பிள்ளையருளிச்செய்த நாள்பாட்டு வாழித்திருநாமத்தில் “இப்புவியிலரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே” என்றும் “எப்புவியும் ஸ்ரீசைல மேத்தவந்தோன் வாழியே” என்றும் அமைக்கப்பட்டு நித்யாநுஸந்தானமாக வந்திருக்கிறது. இவ்விஷயங்களெல்லாம் 400 வருஷங்களுக்கு முற்பட்டவையாக மதிக்கக்கூடிய ஓலை ஸ்ரீகோசங்களில் பல ஆசார்ய புருஷர்களின் திருமாளிகைகளிலும் மடங்களிலும் ராஜகீய புஸ்தகாலயங்களிலும் காணக்கிடைக்கின்றன. கிம்பஹுநா? ஸ்ரீதேசிகனுடைய திருவவதார ஸ்தலமான தூப்புல் ஸந்நிதியுட்பட ஸகல ஸந்நிதிகளிலும் ஸகல திவ்யதேசங்களிலும் தொன்றுதொட்டு ஏகரூபமாக நடைபெற்றுவருகின்ற ஆசாரம் அபலபிக்கமுடியாதது. அத்தலங்களிலெல்லாம் ராமாநுஜதயாபாத்ரமும் அதைச்சேர்ந்த வாழித்திருநாமம் முதலியவைகளுமே அநுஸந்தானத்தில் இருந்துவந்தனவென்றும், இடையில் எப்போதோ மாறிவிட்டனவென்றும் இனி இவர்கள் சொல்லத் துணியவேண்டும். உச்ச்ருங்கலபாஷணம் எவ்வளவும் பண்ணலாம்; உலகம் நம்பவேணுமே. ஔசித்யமும் காணவேணுமே. பாத்திரத்தனியன்சண்டை புகுந்தவிடங்களில் “நூதனமாக இந்தப்பாத்திரம் தொடங்கினார்கள்” என்கிற ஹாஹாகாரமும் அதன்மேல் விசாரணைகளும் ராஜதண்டனைகளும் ஸுப்ரஸித்தமல்லவா? ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நூதனமாகச் சொல்லத் தொடங்கினார்களென்று ஒருதலத்திலாவது ஒருபேச்சாகிலும் கிளம்பினதுண்டோ? ஆக்ரமித்தல், இழத்தல் என்று இரண்டு உண்டு; ஆக்ரமிப்பவர்கள் யார்? இழப்பவர்கள் யார்? என்பதை உலகமறிந்தேயுள்ளது.

16. மருமமறியாத சிலர் — “தேசிகனுக்கு திவ்யப்ரபந்தங்களில் ஈடுபாடு இல்லையா! அவற்றை இவர் காப்பாற்றவில்லையா? வளர்க்கவில்லையா? அவற்றுக்காக இவர் எவ்வளவோ பாடுபட்டிருக்கவில்லையா? இவருடைய தனியனில் எதற்காக விப்ரதிபத்திகொள்ளவேணும்” என்று வாதிக்கிறார்கள். கேண்மின்; நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் நம்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் திருவாய்மொழிப்பிள்ளை முதலான ஆசார்யர்களுக்கும் இந்தப்பெருமைகள் பெரும்பாலும் இருந்தாலும் அன்னவர்களில் ஒருவருடைய தனியனும் இத்தகைய கௌரவம் பெறவில்லையென்பது யாவரும் இசைந்த விஷயம். விலக்ஷணமானவொரு பகவந்நியமன விசேஷத்தினால் ஒரு ஆசார்யருடைய தனியனுக்கும் வாழித் திருநாமத்திற்குமே இத்தகைய பெருமை ஏற்பட்டது. அந்த ஆசார்யர் மணவாள மாமுனிகள் ஒருவரேயன்றி மற்றொருவரல்லர் என்னுமிடம் அசைக்கவொண்ணாதது.

17. ராமாநுஜதயாபாத்ரம் தேசிகன் காலத்திலேயே அவதரித்து அப்போதே ஸந்நிதிகளிலும் க்ருஹாதிகளிலும் பிரசாரமும் பெற்று மேன்மையடைந்திருக்குமாகில் அந்த அநுஸந்தான பரம்பரை இடையறாமல் வந்தேயிருக்கும். ஓரிடத்திலும் விச்சேதமடையக் காரணமில்லை. அப்போது ஸ்ரீவைஷ்ணவர்களுள் வேற்றுமையென்பது சிறிதும் ஏற்பட்டிருக்கவில்லையாதலால் ராமாநுஜதயாபாத்ரத்தையும் அதைச்சேர்ந்த வாழித்திருநாமத்தையும்

தேசிகப்பிரபந்தாதிகளையும் அப்போது ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸந்நிதிகளில் ஆதரித்துப் பரிக்ரஹித்தேயிருப்பர்கள்; அந்த ரீதி மாறுபாடடையக் காரணமே கிடையாது. தேசிகனிடத்தில் பகையும் பொருமையும் கொண்டவர்கள் அக்காலத்திலுமிருந்தார்களென்று சொல்லி அதனால் வேறுபாடு உண்டானதாகச் சொல்லித் தீரவேண்டுமிவர்கள். உண்மை அப்படி இருக்குமானால் அந்த ஸமயத்திலேயே பிள்ளை லோகாசார்யர் விஷயமான தனியன் வாழி திருநாமங்கள் அதற்குப்போட்டியாக ஏற்பட்டிருக்கும். 70, 80 வருஷங்கள் பொறுத்து மணவாளமாமுனிகளின் தனியனும் வாழிதிருநாமமும் போட்டியாக வந்துபுகுமாட்டாதென்பது திண்ணம். கலிவருஷ 4440ல் ராமாநுஜதயாபாத்ரம் ஜனித்து அப்போதே ஸந்நிதிகளிலும் பிரசாரம் அடைந்திருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அப்போது அந்தத்தனியன் முதலியவற்றை ஸந்நிதிகளில் ஓதிவந்த அத்யாபகர்கள் யாவர்? அவர்களுடைய பரம்பரை இப்போது இருக்கின்றதா இல்லையா? என்று விமர்சிக்கவேண்டும். இவ்வாராய்ச்சிகளையெல்லாம் நாம் செவ்வனே செய்து பலபல உண்மைகளை உலகமுகக்க வெளியிடவல்லோம். ஒன்றையும் விடாது எல்லாவற்றையும் வெளியிடுகிறோம்.

18. இக்காலத்தில் நாம் ஸேவித்துவரும் ஸ்ரீவைஷ்ணவஸமுதாயத்தில் ஒருவகுப்பு-திவ்ய ப்ரபந்தங்களில் அபிமானமுடையதும், மற்றொருவகுப்பு- அந்த அபிமாந மற்றதுமாயுள்ளதென்னுமிடம் மறுக்க வொண்ணாதது. அபிமான மற்ற வகுப்பினர்கள் (1) வைதிக கர்மாநுஷ்டாநங்களில் அதிக நோக்குடையவர்களாயும், (2) குளக்கரைகளிலேயே பெரும்பாலும் போதுபோக்குமவர்களாயும் (3) ஸந்நிதிகளில் வந்தாலும் நூற்றுக்கணக்கான நமஸ்கார ப்ரதக்ஷிணங்களைச் செய்துவிட்டு * ஶ்ரூயதாம் ஶிஶுபாலாதிபிஶ்ச ... பாஸீநா: * இத்யாதிகளை ஓதி மீள்பவர்களாயும், (4) திவ்யப்ரபந்த ஸேவைகளில் இகழ்வுடையராயும், (5) 'இப்பாட்டுகள் அவைதிகசப்தம்' என்று சொல்லி அதிலே சிறிதும் செவிகொடாதவர்களாயும், (6) இயல் நடக்குமிடங்களில் தலைகாட்டவும் விரும்பாதவர்களாயும் இங்ஙனே ஷாட்குண்ய பரிபூர்ணர்களாய் இருந்து வந்தவர்கள். [இன்னமும் பலர் இப்படியேயிருந்து வருகிறார்கள்.]

19. மஹாவித்வானாகப் புகழ்பெற்றிருந்த அரசாணிபாலை. வேங்கடாத்வரி இயற்றிய ஜகத்ப்ரஸித்தமான விச்வகுணாதர்சத்தில் ஸ்ரீ பெரும்பூதூர் வருணனையில் அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களைப்பற்றி க்ருசாநுவின் வார்த்தையாகச் சில விஷயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்போது தென்கலையார்கள் என்று வியவஹரிக்கப்பட்டு வருகின்ற ஒரு வகுப்பினரைச் சுட்டியே அவை பிறந்தனவென்பது நிர்விவாதம். வைச்வ தேவம் முதலியவற்றை விட்டவர்கள் என்றும், க்ருஹாராதனத்தில் திருமணி ஸேவிப்பதை விட்டவர்கள் என்றும், ஸக்ருத்ப்ரணாமம் செய்பவர்கள் என்றும்—இங்ஙனே பலகுறைகள் கூறி வருகையில், ஸம்ஸ்க்ருத வேதத்தை உபேக்ஷித்துத் தமிழ்ப்பிரபந்தங்களை விசேஷமாக ஆதரிப்பவர்கள் என்றும் குறை கூறியுள்ளது. *நைஷாம் ந்யாயதூஷா விஶ்வதேவார்சநம் ஸாஷ்டாங்கப்ரணாம: க்ருதோ வைஷ்ணவை: ... * என்றும் * ... வஞ்சநா ... * என்றும் * வர்ணாஶ்ரமம் த்யஜந்தோ ஹரிவாஸிஶரணே * என்றுமுள்ள சுலோகங்கள் காண்க.

20. இதனால் என்ன ஏற்படுகின்றதென்பதை மத்யஸ்தர்களான விவேகிகள் நன்கு தெளியவேணும். வைச்வதேவாதிகளை அநுஷ்டிப்பவர்களும், ஆராதனத்தில் மணிஸேவிப்பவர்களும் அஸக்ருத் நமஸ்காரம் செய்பவர்களுமான வகுப்பினர் தமிழ்ப்பிரபந்தங்களைத் தள்ளி வேதத்தையே விரும்புமவர்கள் என்றும், இதற்கு எதிரிடையான வகுப்பினர் தமிழ்ப்

பிரபந்தங்களிலேயே போதுபோக்கு மவர்கள் என்றும் விச்வகுணாதர்ஶகாரர் ஸ்பஷ்டமாகத் தெரிவித்தாராகிறார். வைச்வதேவாதிகளை அனுட்டிப்பவர்களான வகுப்பினரும் தமிழ்த் திவ்யப்பிரபந்தங்களில் பிரவேச முடையவர்களாக அப்போது இருந்திருப்பார்களாயின் இந்த விச்வகுணாதர்ஶகாரர் இப்படி சுலோகங்களை இயற்றியிருப்பாரா? இக்கேள்விக்கு நேர்மையான உத்தரமுரைக்க ஒவ்வொருவரும் முன்வரவேணும். அவர் தமது காலத்தில் தம்கண்ணால் என்ன நிலைமை கண்டாரோ அதைத்தான் எழுதிவைத்திருக்கிறார். அப்புத்தகம் ஜனித்து இற்றைக்கு 250 வருஷங்களுக்குமேல் ஆகிறது. 22—7—38ல் வெளிவந்த சுதேசமித்திரனில் ராமாநுஜ தயாபாத்ர மஹோத்ஸவமென்ற மகுடத்தின்கீழ் உ.வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகள் வடகலையார்கள் வெகுகாலமாகவே திவ்யப்ரபந்தங்களில் நிராதரவு காட்டி வருகிறார்களென்று தாம் பரிதாபம்காட்டி யெழுதியிருப்பது கொண்டும் உண்மையை யுணரலாம்:

21. விச்வகுணாதர்சத்தில் கூறியிருக்கிறபடியே தமிழ்த் திவ்யப்ரபந்தங்களைப் பற்றிக் கொண்டு வைச்வதேவாதிகளை விட்டவர் யாவர்? என்று கேட்டால் * ஸ்ரீ சைலேஶ தயா பாத்ரத்தைப் பற்றி நிற்கிற நாங்களே என்று கைதூக்கிக்கொண்டு முன்வர நாங்களன்றோ ஸஜ்ஜர்களாயிருக்கின்றோம். அந்த விச்வகுணாதர்சகாரர் தூஷணையாகக் கூறியுள்ளவற்றை ஒருகாலும் மறுக்க முயல்வோமல்லோம் நாம். அவற்றைப்புகழுரையாகவேகொண்டுசாலவும் மகிழ்ந்து வருகிறோம். ‚நாங்கள் வைச்வதேவம் அனுட்டிப்பவர்களே’ என்றாவது, பலகால் நமஸ்கரிப்பவர்களே என்றாவது, மணியடிப்பவர்களே யென்றாவது ஒருநாளும் சொல்லகில்லோம். தமிழ்த் திவ்யப்பிரபந்தங்களைப் பரம்பரையாக ஆதரித்து வருமவர்கள் நாங்களே என்று உத்கோஷிக்கவும் நாங்களே யன்றோ உரிமையுடையோம். இந்த உரிமை பிறர்க்கு இருக்கப்ரஸக்தியில்லை யென்பதை விச்வகுணாதர்சக்ரந்தமும் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரின் வியாஸமும் நிலைபெறுத்தி வைத்துளதே.

22. ஆரியர்காள்! ஒன்றான ஸ்ரீதாதாசார்யருடைய ஸாழிநேய பௌத்திரரான விச்வகுணாதர்சகாரருடைய காலம்வரையில் இந்த ராமாநுஜ தயாபாத்ரவகுப்பினர்கள் அமுதிலுமாற்ற வினிய அருளிச் செயல்களைச் சோற்றுப்பாட்டு என்றும் பண்டாரப்பாட்டு என்றும் பலவாறாகப் பழித்துக் கொண்டிருந்தவர்களே யென்பதில் ஸந்தேஹிப்பவர் யாவர்? இப்பழிப்பு மொழிகள் மேற்கூறிய வகுப்பினரிடத்தில் இன்னமும் தொலைந்தபாடில்லையே. இப்படி திவ்யப்ரபந்தங்களையும் தஷெரீதாக்களையும் வசைபாடிக்கொண்டு அர்ச்சாவதாரத்திலே பெரும்பாலும் விலகிநின்ற வகுப்பினர் இன்னாரென்று விச்வகுணாதர்சத்தினால் தெரிவது போலவே அறுநூறு ஆண்டுகட்கு முன்னம் அவதரித்த ஆசார்ய ஹ்ருதயத்தினாலும் நன்கு தெரியவருகின்றது. அதில் “முற்பாடர்க்கு க்ரியாங்கமானவை யிரண்டும்” என்று தொடங்கி “உத்பத்தி நிரூபிக்கும்” என்பதளவாகவுள்ள சூர்ணிகைகள் காண்க.

23. ஆகவிப்படி திவ்யப்ரபந்தங்களிலே உதாஸீநர்களாயும் பகையாளர்களாயு மிருந்தாருடைய வகுப்பு நாளைக்கும் அவிச்சிந்நஸ்ரோதோரூபேண இடையறாது வந்து கொண்டிருக்கின்ற தென்பதை உலகமறியும். இவ்வகுப்பில் தலைநின்றிருந்த சிலர் சில ஆண்டுகட்கு முன்பு *தத்ரைவ கேபி சபலாச் சலபீபவந்தி * என்ற கணக்கிலே அருளிச்செயல் கோஷ்டியிலே புகுரத் தொடங்கினார்கள். எதனாலே யென்னில், அது கேண்மினோ. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்பிருந்த மைஸூர் மஹாராஜர் ஒருவர் திருநாராயணபுரம் ஜீயர் ஸ்வாமி யொருவரிடத்தில் பகவத்விஷயம் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது, திவ்யப்ரபந்த மறியாதார் வகுப்பில் சேர்ந்தவரான ஒரு யதியும் அங்குச் சென்று அந்த மஹாராஜர்க்

குத் தாமும் சில இதிஹாஸ புராணங்களின் ப்ரவசநம் செய்து வந்தார். இந்த யதிகளுக்கு பகவத் விஷயத்தில் ப்ரவேசமில்லாமை கண்ட மஹாராஜர் "சிறந்த ஜ்ஞாதாவாகிய இந்த யதிகட்கு பகவத் விஷய ஜ்ஞானஸம்பத்தும் ஏற்பட்டால் நலமாகுமே" என்றெண்ணி ஒரு நாள் ஜீயர்ஸ்வாமியின் பகவத் விஷய ப்ரவசனம் கேட்டருள எழுந்தருள வேணுமென்று யதிகளை (ராஜா) அழைத்தார். அன்று இவரும் சென்று செவிக்கினிய செஞ்சொற்களைக் கேட்டவாறே 'இதுவரை நாம் ஸம்பாதித்த ஞான மெல்லாம் சில்பநைபுணமத்தனை; இந்த ஜீயர் ஸ்வாமியின் ஞானமே ஞானம்; இந்த ஸூக்திகளே திவ்ய ஸூக்திகள்' என்று ஹார்த்த மாகக் கொண்டாடிவிட்டு, அப்போதே அந்த ஜீயரை அடிபணிந்து அருளிச்செயல் மூலத்தையும் வியாக்கியானங்களையும் அதிகரிக்க ஆரம்பித்துச் சில வருஷங்களில் பகவத் விஷய ப்ரவசநப்ரவீணராகி அந்த மஹாராஜர்க்கே அதைத் தாமும் ப்ரவசனஞ் செய்து செல்வச் சிறப்புகளும் பெற்றார். அவரே திருவாய்மொழிக்கும் மற்றுஞ்சில திவ்யப்ரபந்தங்களுக்கும் தாமுமொரு சிறு வியாக்கியானம் செய்தார். அவர்க்கு ராஜவால்லப்யமும் விசேஷமாக வுண்டாயிற்று. சிஷ்யர்களும் சிலர் அடிபணியத் தொடங்கினார்கள். அவர்களுக்கும் அருளிச்செயல்களைப் பயிற்றுவித்துப் பத்தெட்டு பேர்களை அத்யாபகராக்கினார். அவர்களையு மழைத்துக்கொண்டு தக்ஷிண திவ்ய தேசயாத்திரை புறப்பட்ட அந்த யதிகள் முதன்முதலாகத் திருநாராயணபுரத்திலே சென்று, அங்கு செல்வப்பிள்ளை ஸந்நிதியில் ஸாது ஸ்ரீ வைஷ்ணவர்கள் நடத்திப்போகும் அருளிச்செயல் கோஷ்டிகளிலே அந்த சிஷ்யர்களை அந்வயிப்பித்தார். அதன் பிறகு நடந்த செய்திகளெல்லாம் நமக்கு விரிவாக விளங்க வில்லை. ஒரு கன்னட பாஷைப் புஸ்தகத்தில் விரிவாக வுள்ளதாம்.

24. அப்போது அந்த திவ்ய தேசத்திலே முதன்மையாகத் தனியன் விவாதம் விளைந்தது. * ராமாநுஜ தயாபாத்ரத்தனியன் திருநாராயணபுரத்தில் ஜனித்தது என்று இவர்கள் எழுதியிருப்பதொன்று உண்மையே. காலத்தை வேறுபடுத்தினாலும் தேசத்தை வேறுபடுத்திற்றிலர். இது நிற்க. அங்கு விவாதம் விளைந்து ஸாது ஸ்ரீ வைஷ்ணவர்கள் மைஸூர் ஸம்ஸ்தான நீதிஸ்தலத்தில் வியவஹாரம் தொடுத்தனராம். "புதியதோ பழையதோ அது நமக்குத் தெரியாது. யாராயினும் எதையாயினும் சொல்லிக்கொள்க; ஆக்ஷேபித்துச் சண்டையிடுமவர்கள் யாராயிருந்தாலும் தண்டனைக்கு ஆளாவார்கள்" என்கிற முடிவுதான் ராஜஸ்தானத்தில் ஏற்பட்டதாம்.

25. பிறகு அந்த யதிகள் தென்னாட்டிலும் யாத்திரைசெய்து அந்தத் தனியனை ஆங்காங்கு புகுரச்செய்யப் பெரும்பாடுகள் பட்டார். காஞ்சீபுரத்தில் அவருடைய போதனையை ஏற்றுக்கொள்ள மறுத்த ஒரு தாதாசார்யருடைய க்ருஹத்வாரத்தில் (அந்தயதிகள்) சாபோதக மிட்டுப் போனாரென்பது ஸுப்ரஸித்தம். சண்டைகள் ஏற்படுவதற்கு அவரே பீஜாவாபஞ் செய்துபோனார். அப்போது அவருடைய முயற்சி ஒரு தலத்திலும் பலிக்கவில்லை ஆனாலும் அவர் தமது கொள்கையைச் சிலர்க்கு உறைப்பாக ஊட்டியிருந்ததனால் அதன்பயனாக நாலைந்து க்ஷேத்திரங்களில் இந்தத் தனியனுக்கு ஒரு காலத்தில் ப்ரவேசமுண்டாயது. அவ்விடங்களில் ஏற்கெனவே யிருந்துவந்த ஸாது ஸ்ரீவைஷ்ணவர்களை பலாத்காரத்தாலே பங்கப் படுத்தியே ஆக்ரமணம் நடந்ததென்பது உலகமறிந்ததே யாதலால் இதில் விரிவுவேண்டா. ராமாநுஜ தயா பாத்ரத்தைப்பற்றி 144 ஆர்டர்கள் எத்தனை; சாச்வத இஞ்ஜிங்ஷன் உத்தரவு அமைந்த ஜட்ஜ்மெண்டுகள் எத்தனை; மீறி அதனை உத்கோஷித்தவர்களுக்கு நேர்ந்த ராஜ தண்டனைகள் எத்தனை- என்கிற இவ்விஷயங்களைப் பற்றினவிரிவுரைகள் தனியே ஒரு நூலில் காணத்தக்கவை.

26. ஸாரதமமான விஷயம் கூறிக் கொண்மின். பழைய செய்திகளை உள்ளபடி நிர்ணயிக்கவேண்டுமானால் புராதன சாஸநங்களைத் தேடுகிறோமென்பது நிர்விவாதம். ப்ரக்ருத விஷயத்தில் விச்வகுணதர்சக்ரந்தமே நமக்குக் கண்ணழிவற்ற சாஸனம். உலக நிலைமைகளை உணர்த்துகைக்காகவே யன்றோ அந்த நூல் அவதரித்தது. இப்போது ராமாநுஜ தயாபாத்ரத்தைப் பற்றியிருக்குமவர்கள் யாரோ, இவர்கள் முன்பு வைச்வதேவாதி கருமங்களை விட்டவர்களாயும் ஸக்ருத்ப்ரணமமே செய்பவர்களாயும் திருவாராதனத்தில் திருமணி ஸேவியாதவர்களாயுமிருந்ததாக ஒப்புக்கொள்ள முடியுமானால் "இவர்கள் தொன்று தொட்டு திவ்ய ப்ரபந்தாநுஸந்தான நிரதர்கள்" என்று சொல்ல அவகாசம் கிடைக்கும். அங்ஙனம் இசையகில்லாத இவர்கள் திவ்ய ப்ரபந்த ஸம்பந்த லவலேசமு மில்லாமலே போந்தவர்கள் என்று நிர்ணயிக்கப்பெற ஒருதடையுமில்லை. தமிழ்ப்பாஷை அடியோடு நடையாடாத வட இந்தியாவிலுள்ளவர்களுங்கூட இப்போது வெகு பரிச்ரமப்பட்டு திவ்யப்ரபந்தம் அதிகரித்து வருதல்போல இவர்களும் 100–200 வருஷங்களுக்கு உட்பட்ட காலத்திலே திவ்யப்ரபந்தம் அதிகரிக்க ஆரம்பித்தவர்கள். ஆங்காங்கு ஸந்நிதிகளில் ஒரு வகுப்பினர் திவ்யப்ரபந்தங்களை ஓதி தத்ப்ரயுக்தமான பெருமைகளைப் பெற்றுவருவதுகண்டு அதிற் பொறாமையினாலே லாலஸை கொண்டு உள்ளே புக ஆரம்பித்த வத்தனையே யல்லது போக்யதா புத்தியினால் புகுந்தமையில்லையென்று நாளைக்கும் நடத்தைகளினால் தெரிய வருகின்றது.

27. இப்படிப்பட்ட இவர்கள் 100–200 வருஷங்களுக்கு முன்னே ராமாநுஜ தயாபாத்ரத்தைக் கொண்டு என்ன காரியம் செய்து வந்தார்களென்பதை ப்ராமாணிகமாக ஒருவர் நிரூபித்து விடுவாரானால் அத்தனியன் ஜனித்து 600 வருஷமாயிற்று என்பதை தாராளமாக இசையலாம். இவ்வொரு விஷயமே மிக முக்கியமாக நோக்கத்தக்கது. "அபிச்ரவண புருஷஸூக்த புண்யாஹவாசநாதிகளுக்குத் தனியனாக ராமாநுஜ தயாபாத்ரத்தை முன்பு உபயோகப்படுத்திவந்தோம்" என்று சொல்லுகிற பக்ஷத்தில் இதன்மேல் வாய்திறக்க எமக்கு வழியில்லைதான்.

28. மற்றொன்றும் கேளீர்; இவர்கள் தென்னாசார்யர்களோடு கலந்து இயல்ஸேவிக்கத் தொடங்கின காலத்தில் பாத்திரத்தனியன் வாழிதிருநாமம் ஆகிய இவற்றில் மாத்ரமே தங்களுக்கு வைமத்ய மிருப்பதாகக் கொண்டு இவ்விரண்டிலும் ஒரு விச்வாமித்ரஸ்ருஷ்டியைப் பண்ணினார்கள். மற்றவற்றை மாற்ற விரும்பினார்களில்லை. அதாவது—*ஸர்வதேச தசாகாலேஷு* ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா *கோதைபிறந்தவூர்* (உடையவர் வாழிதிருநாமமாகிய) சீராரு மெதிராசர் இத்தியாதிகளான மூன்று பாசுரங்கள் ஆகிய இவற்றையெல்லாம் அப்படியே ஸேவிக்க இசைந்து விட்டார்கள். மேற்குறித்த சுலோகங்களும் பாசுரங்களும் மணவாளமாமுனிகளாலும் ததீயர்களாலும் பணிக்கப்பட்டவை என்று தெரிந்துகொண்ட பின்பு என்ன செய்திருக்கிறார்களென்பதை ரஸிகர்கட்குத் தெரிவிக்கின்றோம். உடையவருடைய வாழிதிருநாமங்களான மூன்று பாசுரங்கள் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஆர்த்திப்பிரபந்தத்தில் சேர்ந்தவை என்பதைப் பலவூரார்கள் தெரிந்துகொண்டு அவற்றை யநுஸந்திப்பதை விட்டொழித்தார்கள். கோதைபிறந்தவூர் இத்யாதியான இரண்டு பாசுரங்கள் மாமுனிகளின் திருவடிகளால் இயற்றப்பட்டவை என்பதை யறிந்தபின்பு அவற்றை யநுஸந்திப்பதையும் நிறுத்திக்கொண்டார்கள். சிலவூர்களில் மேற்சொன்ன உடையவர் வாழிதிருநாமம் முதலியவற்றைத் தாம் நிவர்த்திக்க முடியாமல் அவை உடையவர் காலத்திலேயே அவதரித்தவை யென்று காட்ட ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவரை [ஆழ்வான் ஆண்டான் பிள்ளான் எச்சான் என்பவர்களைக்] கர்த்தாக்களாக

எழுதிவைத்து முத்ரணமும் செய்துள்ளார்கள். * ஸர்வதேச தசாகாலேஷு— பெரியஜீயர் அருளிச்செய்தது என்றே முத்ரணம் செய்துள்ளார்கள். இந்தப் பெரியஜீயர் உண்மையில் மணவாள மாமுனிகளே. நஞ்சீயர்க்கும் பெரியஜீயர் என்று வ்யவஹார முண்டென்று கூறிவிடுவர்கள். அது நிற்க. அதற்கு அடுத்ததான * ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதி வாஸரமுஜ்ஜ்வலா, திகந்த வ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ * என்கிற ச்லோகம் மணவாள மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான கந்தாடை யண்ணன் அருளிச் செய்தது. இந்த அண்ணனை இன்னாரென்று தெரிந்து கொள்ளகில்லாதவிவர்கள் தங்கள் புத்தகங்களிலும் கந்தாடை யண்ணனருளிச் செய்ததென்றே பதிப்பித்துள்ளார்கள். தேசிக பிரபந்தப் பதிப்பை யெடுத்துப் பார்த்தால் இவையெல்லாம் நன்கு தெரியவரும்.

29. ராமாநுஜ தயாபாத்ரம் ஜனித்து 600 வருஷமாயிற்று என்கிற இப்புதுமையை ப்ரபலப்ரயத்னங்களினால் ஸ்தாபிக்கவெண்ணி ஒரு ஊரில் மஹோத்ஸவம் கொண்டாட நினைப்பதும், மற்றொரு ஊரில் ஞாபக சின்னம் ஸ்தாபிக்க நினைப்பதும், வேறொரு ஊரில் வேறொன்று செய்ய நினைப்பதுமெல்லாம் வஸ்துத: நல்ல காரியங்களேயாதலால், காரணம் அஸமஞ்ஜஸமானாலும் கார்யம் ஸமஞ்ஜஸமேயென்றுகொண்டு ஒருவாறு உகப்போம். சித்திரைமாதத்துப் பௌர்ணமியில் ஸ்ரீ க்ருஷ்ணஜயந்தியென்று செய்தி வெளியிட்டு அப்போது ஒருவர் ஒரு மஹோத்ஸவம் நடத்தினால், வாய்மணக்க வுண்போமென்று அங்கும் புகுந்து நிற்பார்போலே இங்கும் புகுந்து நிற்பாரைப்பற்றி நமக்கென்ன விசாரம். இந்தத் தனியனுக்காக ஆங்காங்கு ஏற்பட்ட ராஜதண்டனைகளுக்கு சதாப்த பூர்த்தி, அசீதி பூர்த்தி, ஷஷ்டி பூர்த்தி, பஞ்சாசத் பூர்த்தி, பஞ்சவிம்சதி பூர்த்தி என்று இப்பூர்த்திகளையெல்லாம் நீதிஸ்தல ரிகார்டுகளின்படி கண்டு பிடித்து ஸ்ரீ தேசிகஸந்நிதிகளிலேயே மஹோத்ஸவங்கள் நடத்தவேணுமென்றும் பலர் பாரிக்கலாம்.

30. ஸ்வாமி தேசிகனுடைய திருவவதார ஸ்தலமான தூப்புல் ஸந்நிதியிலும் ஸ்ரீசைலேச தயாபாத்ரமும் அதைச்சேர்ந்த வாழித்திருநாமங்களுமே தொன்றுதொட்டு அநுஸந்தானத் திலுள்ளனவேயன்றி அவ்விடத்தில் கூட இந்த நவீநபாத்திரத் தனியன் ஒருநாளும் புகவில்லையே—என்கிற ப்ரஸ்தாவத்தில் சிலர் சொல்லுவதாவது—"மற்ற ஸன்னிதிகளில் எப்படியானாலும், தேசிகன் ஸந்நிதியில் இப்படியாகலாமா? அநாதி வழக்கம் இங்ஙனே யிருந்திருக்குமா? இதில் மனம் ஸமாதானமடையவில்லையே" என்று.

31. இதற்குப் பெரியோர்கள் பணிப்பதாவது—தேசிகனுக்கும் மணவாள மாமுனிகளுக் கும் ஏதேனும் விரோதமுண்டோ? அஃது ஒன்றும் கிடையாது. மாமுனிகள் தேசிகனுக்குப் பிற்பட்டவராதலால் இவரைப்பற்றின துதிமொழிகளை அவரது முன்னிலையில் எங்ஙனம் ஓத லாம்? என்று கருதலாம்; இது அஸமஞ்ஜஸம். ஸகல ஆசார்யர்களும் மாமுனிகட்கு முற்பட்ட வர்களேயாதலால் ஒருவருடைய முன்னிலையிலும் * ஸ்ரீசைலேச இத்யாதியைச் சொல்லலா காது என்ன ப்ராப்தமாகும். இந்த விஷயம் தேசிகனுடைய தனியனுக்கும் துல்யம், ஸ்ரீ வரவரமுநிவ்யதிரிக்த ஸகலாசார்யர்களும் தேசிகனுக்கு முற்பட்டவர்களேயாதலால் எம்பெருமானார் முதலான ஆசார்யர்களின் முன்னிலையிலும் எம்பெருமான் முன்னிலை யிலும் அவரது தனியனைச் சொல்லத் தகாதென்று முடிந்து நிற்கும். ஆகவே, பகவந் நியமனமடியாக ஸகல ஸ்தலங்களிலும் ஸமரூபமாக நடந்துவருகின்ற முறைமை தேசிகன் ஸந்நிதியில் மாத்திரம் வேறுபட வேணுமென்று நினைப்பதற்கு நியாய மில்லை. தேசிகன் ஸந்நிதியில் நெடுநாளைய மாமூல் வழக்கப்படிதான் நாளைக்கும் நடந்து வருகின்றதென்பது கீழே காட்டியுள்ள ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியின்

கோர்ட்டு வாக்குமூலத்தினாலும் விளங்கா நிற்கும். எந்த விஷயத்திலும் மற்ற ஆசாரியர்களோடு ஒரு கோர்வையாகவே தேசிகனும் எழுந்தருளியிருந்தவராதலால் மற்ற ஸந்நிதிகளில் நடைபெறும் முறைமையே இவருடைய ஸந்நிதியிலும் நடைபெற்றுவருகிறது.

32 * பதியே பரவித்தொழும் தொண்டர் * என்றும் * கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று பண்டினர் * என்றும் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸநம் பெற்று, "தொண்டைமண்டல வேதியர் வாழவே தூயதேன்மறை வல்லவர் வாழவே" என்று நம் தேசிகனாலும் வாழ்த்தப்பெற்று அநாதியாய் எங்கும் விளங்கி வருகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களின் கைங்கர்ய ஸாம்ராஜ்யமும் ஒரு நாளும் ஒரு குறையுமின்றி எங்கும் தழைக்கவே.

ராமாநுஜ தயாபாத்ரவுண்மை முதலத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்யாயம்

33. "தேசிகனுடைய தமிழ்க்ரந்தங்களான ஓலை ஸ்ரீகோசங்களெல்லாம் ஸ்ரீமாந் வேங்கட தனியனே உள்ளனவாகவும் பாத்ரத்தனியனுடைய நாற்றமும் அற்றனவாகவும் நாம் ப்ரத்யக்ஷம் காட்டுவோம்; இதை மறுக்கமுடியாதே. இதனால் ஏற்படுகிற உண்மையை யார் அபலபிக்கிறார்?" என்றெழுதியுள்ளோம் முதலத்யாயத்தில், இந்த வாக்யங்களின் கருத்தை வியாக்யானித்துப் பல பல நுட்பங்களைத் தெரிவிக்கும் இனி இரண்டாமத்யாயம்.

34. சிலவருஷங்களுக்கு முன் நெல்லூர் ஜில்லாவில் ஒரு ஊரில் ஒரு அத்வைதிவித்வான் (சாஸ்த்ரி) தாம் புதிதாக ஒரு க்ரந்தம் நிர்மாணம் செய்து பண்டிதஸபையில் அரங்கேற்றினார். பண்டிதர்கள் பலரும் அதைச் செவிசாத்தி மிகவும் ஆனந்தித்து அந்த க்ரந்த கர்த்தாவைப் புகழ்ந்து பாராட்டினார்கள். அந்தக்ரந்தத்தை அச்சிடவேண்டியதென்றும் தீர்மானித்துப் பலர் பொருளுதவியும் புரிந்தார்கள். பிறகு அந்த க்ரந்தம் அச்சுக்கூடம் போய்ச் சேர்ந்து வேலையும் நடந்து வந்தது. இந்த சாஸ்த்ரியிடத்தில் வெகு காலமாகப் பகையும் பொறாமையும் கொண்டிருந்த மற்றொரு வித்வான் இப்போது எப்படியாவது இவரைப் பங்கப்படுத்த வேணுமென்றெண்ணி அந்த அச்சுக்கூடத் தலைவரை வசப்படுத்திக் கொண்டு அந்த க்ரந்தத்திலிருந்து ஒரு ப்ரதி விரைவாக எழுதிக்கொண்டு சென்று மூன்று நாளைக்குள் அதே ஆநுபூர்வியாய் நாலைந்து ஓலைப்புத்தகங்கள் ஸஜ்ஜப்படுத்தி, புதுமை தெரியாதபடி, உபாயங்களினால் பழமைப்படுத்தி, சில ஏடுகளில் செல்லரிப்பு, பூச்சிக்கடி முதலியவற்றையும் உண்டாக்கி, வெவ்வேறு ஊர்களிலிருந்து வெகு ப்ரயாஸப்பட்டு இவ்வோலையேடுகளைத் தாம் தருவித்ததாகவும் நிரூபித்து அதே ஊரில் ஒரு வாரத்திற்குள் மறுபடியும் பண்டித ஸபைகூட்டி அந்த ஸபையில் இந்த ஓலையேடுகளைக் காண்பித்து "இந்த சாஸ்த்ரி, ப்ராசீநக்ரந்தத்தைத் தாம் நிர்மாணம் செய்ததாகக் களவு முறையில் காட்டிக்கொண்டாரத்தனை" என்று ஒவ்வொருவரும் உறுதியாய்ச் சொல்லும்படி செய்து சாஸ்த்ரியைப் பரிபவப் படுத்திவிட்டார். ஆனாலும் சாஸ்த்ரிகள் தம் உள்ளத்தில் உண்மை யுணர்ந்தவராதலால், மிக முயன்று எதிராளிசெய்த சூது வேலையை நாலு நாளைக்குள் கண்டுபிடித்து ருஜுப்படுத்தி விட்டார். பிறகு உண்மை உண்மையாகவே தேறிற்று. இங்ஙனே பல விஷயங்கள் நமக்கு நன்கு தெரியுமாதலால் இதை நாம் ஏற்கெனவே நெஞ்சிற்கொண்டே பிறருடைய சூதுகளுக்கு அவகாசம் ஏற்படாதபடி நம் விவக்ஷிதத்தை ஒழுங்காகவே வெளியிட்டிருக்கிறோம்.

35. ராமாநுஜ தயாபாத்ரமுள்ள ஒரு ஓலைப்புத்தகம் இருப்பதாகவும் அதைச் சிலர் சேகரித்து வருவதாகவும், இத்தனியன் ஜனித்து உண்மையில் 600 வருஷம் ஆகிறதென்பதை எளிதாகவே உலகம் நம்பும்படி செய்துவிடலாமென்று அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாகவும் நமது காதில் விழுந்தது. ஸூர்ய சந்திரர்களின் கதியை நிரோதம் செய்ய முடிந்தாலும் முடியலாம்; அடியேனுடைய நிரூபணத்தை அணுவளவும் அசைக்க முடியாதென்பதை வற்புறுத்தியே விளம்புவேன். — ராமாநுஜாபாத்ரம் ஜனித்து 200 வருஷம் ஆகிறது என்பதுதான் வர்ஷஸதமானாலும் ஸித்தாந்தமாகத் தேறி நிற்கும். இதில் எள்ளளவும் ஸந்தேஹப்பட வேண்டா. இன்னமும் விசதமாகவே நிரூபித்து நிலை நாட்டுவேன். ஓலை ஸ்ரீகோசவிஷயத்தில் அடியேனுடைய ஸத்ய வார்த்தைதான் வெற்றி பெறும் என்பதை ஒவ்வொருவரும் உள்ளபடி உணரலாமிப்போது.

36. ஓலையேடுகள் எழுதுகிற வழக்கம் இக்காலத்தில் அனேகமாய் இல்லை என்றே சொல்லலாம். நாம் நிரூபிக்கிறபடி உண்மையில் ராமாநுஜதயாபாத்ரம் ஜனித்த காலத்தில் ஓலையேடுகள் எழுதிக் கொண்டிருந்தார்களென்பதில் ஸந்தேஹமில்லை. அக்காலத்தில் இந்த ராமாநுஜதயாபாத்ரத்தை ஒருவரும் ஓலையேட்டில் எழுதி வைத்திருக்க வில்லையென்று ஒருவரால் சொல்லமுடியுமா? முடியவே முடியாது. பலபேர்கள் அதை எழுதிவைத்துக் கொண்டிருக்கவும் கூடும்; எழுதிவைத்துக் கொள்ளாமலிருக்கவும் கூடும். அதீந்த்ரியமான இவ்விஷயத்தில் யாரும் சோதிடம் சொல்லமுடியாது. பிறருடைய ஸம்ப்ரதாயத்தில், **ப்ரபந்த நிர்வாஹம்** என்றும் **ப்ரபந்தாநுஸந்தானதீபிகை** என்றும் சில சிறு சுவடிகளைக் கல்பனை செய்திருக்கிறார்கள். [**கல்பனை செய்திருக்கிறார்கள்** என்று நாம் எழுதுவதைப் பார்க்கும்போதே பிறர்க்கு ப்ரளயமான உத்வேகம் உண்டாகக் கூடும். இதற்கு நாம் என் செய்வது!. நாம் தெரிவிக்கிற உண்மைகளை ஒவ்வொன்றையும் பிறர் இசைந்தே தீரவேண்டும்படியான முறையிலன்றோ நாம் தெரிவிப்பது. விஷயங்களிற் கண்செலுத்துக.] அங்ஙனம் கல்பனை செய்யப்பட்ட சில சுவடிகள் ஜனித்த காலத்தில் அச்சுக்கூடங்களுக்கு அதிகப்ரசாரம் இல்லாமலிருந்தபடியால் அவை ஓலையேட்டில் ஏறியிருக்கலாம். அப்படிப்பட்ட சுவடிகளைப் பற்றியா நமக்கு விசாரம்? இதைப்பற்றின உண்மையை நாம் எப்படி நிரூபிக்கிறோமென்பதையே இப்போது விளக்குகிறோம்.

37. "ஸ்ரீமாந் வேங்கட தனியன்தான் முதலில் தேசிகனுக்கு இருந்தது" என்பதை பிறரும் நிர்விவாதமாக இசைந்திருக்கிறார்கள். அப்படியே எழுதியுமிருக்கிறார்கள். அதன் பிறகு பத்து வருஷம் கழித்து ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் பிறந்ததாகப் பல நூல்களில் எழுதியுள்ளார்கள். ஒரு தனியன் இருக்க, அதுதானும் அப்போதே எங்கும் பரவியுமிருக்க, வேறொரு தனியன் பத்து வருடங்களுக்கு அப்பால் எதற்காக ஸ்ருஷ்டிக்கப்பட வேணும் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது மிகவும் அவசியம். மருமம் முழுவதும் இங்கேதான் தங்கிநிற்கிறது.

38. த்ருதீயப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி பணித்ததாக ஒரு குருபரம்பராப்ரபாவம் வெகு நாளைக்குமுன் அச்சிட்டிருக்கிறார்கள். கலியுகம் 4973 ப்ரஜோத்பத்தி வருஷத்தில் அச்சிட்ட பிரதி எங்கும் பரவியுள்ளது. இது வெளிவந்து சுமார் 76 வருஷம் ஆகிறது. இதில் வேதாந்த தேசிகர்வைபவப்ரகரணத்தில் (பக்கம் 105ல்) ராமாநுஜ தயாபாத்ரம் பிறந்தவகைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. தேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த ஒன்றான ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி, பகவத் விஷய க்ரந்தத்தை மாத்திரம் தேசிகனிடத்தில் அதிகரியாமல்

அவருடைய திருக்குமாரரான நயினாராசார்யரிடத்தில் அதிகரிக்க விரும்பினதாகவும், அப்படி அதிகரிக்கத் தொடங்கும்போது ராமாநுஜதயாபாத்ரம் என்கிற இந்தத் தனியனை அவர் கவி பண்ணி அநுஸந்தித்து வந்ததாகவும், இதைச் சிலர் தேசிகரிடத்திலே போய்த் தெரிவித்த தாகவும், அவர் ஏற்கெனவேயுள்ள ஸ்ரீமான் வேங்கட தனியனையும் இந்த நூதநபாத்ரத் தனியனையும் சீர்தூக்கிப் பார்த்து, இந்த பாத்திரத்தனியனே மிகவும் கொண்டாடத்தக்கது என்று அருளிச்செய்ததாகவும், பிறகு சிஷ்யர்கள் தேசிகரை வணங்கி 'நாங்கள் எந்தத் தனியனை அநுஸந்திக்கக்கடவோம்' என்று கேட்கையில் அப்போது தேசிகர் "ஸ்ரீமாந் வேங்கட தனியன் முன்னமே ச்ருதப்ரகாசிகாபட்டர் திருவுள்ளமுகந்து நியமித்திருக்கையாலே அதை விடுவதற்கில்லை; இந்த நூதந பாத்திரத்தனியன் எனக்கு உகப்பாயிருக்கையாலே இதையும் விடுவதற்கில்லை; ஆகவே ஒரு வ்யவஸ்தை பண்ணிவிடுகிறேன்: ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை அதிகரிக்கும்போது ஸ்ரீமாந் வேங்கடதனியனை வைத்துக் கொள்ளுங்கோள்; பகவத் விஷயம் ரஹஸ்யம் முதலான த்ரமிட க்ரந்தங்களை அதிகரிக்கும்போது இந்த நூதநபாத்ரத்தனியனை வைத்துக்கொள்ளுங்கோள்" என்று விபாகம் செய்து கொடுத்ததாகவும், அதைக் கேட்டவுடனே சிஷ்யர்களும் மற்றுள்ள பெரியோர்களும் ஒக்கும் ஒக்கும் என்று உகந்தருளினதாகவும், இவ்வளவும் திருநாராயணபுரத்தில் நடந்ததாகவும்; பிறகு பத்துவருடம் கடந்தபின்பு தேசிகர் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினதாகவும், அங்கு விபக்ஷர்களால் த்ராவிட வேதபாராயணத்திற்கு உபரோதங்கள் பிரபலமாக ஏற்பட்டு அத்யயநோத்ஸவம் தடைபட்டுப்போனதாகவும், அந்த உபரோதங்களையெல்லாம் தேசிகரே வாதங்கள்செய்து போக்கியருளி அத்யயநோத்ஸவத்தைக் குறையற நடப்பித்ததாகவும் அப்போது நம்பெருமாள் திருவுள்ளமுகந்து இந்த நூதந பாத்ரத்தனியனையும் இதைச் சேர்ந்த வாழித்திருநாமம் முதலியவற்றையும் பக்தர்களின் விருப்பத்தின்படி ஸந்நிதிகளிலெங்கும் கோஷிக்குமாறு நியமித்து முந்நூற முன்னம் தாம் [பெரிய பெருமாள்] அரையர் திருவாக்காலே திருச்செவிசாத்தி இவ்வண்ணமாகவே ஸகலதிவ்யதேசங்களிலும் ஸகல திருமாளிகைகளிலும் அநுஸந்திக்குப்படி கட்டளையிட்டதாகவும் அதில் எழுதப்பட்டுளது. ஸ்ரீ ரங்கநாதனுடைய கட்டளை யென்று தெரிவிக்கப்பட்ட இவ்விஷயம் எவ்வளவு உண்மை என்பதை ஸகல திவ்ய தேசங்களின் நிலைமையே நன்கு ரூபித்துவிடுமாதலால் இந்த முழுப் பொய்யைப்பற்றி இங்கு நாம் யாதொன்றும் எழுதத்தேவையில்லை. உலக நிலைமை எவ்வளவு புரண்டாலும் "அடியார்கள்வாழ அரங்க நகர்வாழ" என்கிற மங்களாசாஸநத்தின்மிடுக்கு * காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் செழிப்புற்றேயிருக்குமென்பது திண்ணம். இதுநிற்க.

39. நூதன பாத்ரம் ஜனித்ததானது தமிழ் க்ரந்தங்களுக்குத் தனியனாகவே யென்பது பிறருடைய பல நூல்களிலுள்ளது. தேசிகரே அப்படி வ்யவஸ்தை பண்ணி நியமித்தருளினார் என்றும் எழுதி வைத்திருக்கிறார்கள். தேசிக சரித்திரம் யார் யார் எழுதிவைக்கிறார்களோ அவர்கள் யாவரும் இதுவே பாடமாகத்தான் எழுதிவருகிறார்கள். அணுவளவும் பேதமில்லை. ஆகவே, ராமாநுஜதயா பாத்ரத்தை அங்கீகரிப்பவர்கள் யாரும் தேசிக நியமனமாக மேற்கூறிய தனியன் வ்யவஸ்தையை ஒப்புக்கொண்டே தீரவேணுமென்பது சிலாலிகிதம்.

40. ஆக இவ்வளவால் என்ன தீர்ந்தது என்னில்; தமிழ்ப் பாஷையிலோ மணிப்ரவாள பாஷையிலோ தேசிக க்ரந்தங்கள் காணப்படுமாகில் அவற்றில் ஒரு தனியனும் இல்லாமலிருக்குமானால் விசாரமேயில்லை. முகப்பில் தனியன் எழுதப்பட்டிருந்து அது இவர்கள்

சொல்லுகிற பாத்திரத்தனியனல்லாமல் ஸ்ரீமாந் வேங்கட தனியனுகவே காணும்பக்ஷத்தில் இவர்கள் எழுதியிருக்கின்ற கதை யெல்லாம் கட்டுக்கதையே யென்று நிஷ்கர்ஷிக்க வேண்டு மெனத் தீர்ந்தது. இவ்வொரு விஷயத்தையே ஒவ்வொருவரும் நன்கு ஆலோசித்து உள்ளத்தை ஒரு நிலைப்படுத்திக் கொள்ளவேணும். அந்த க்ரந்தங்களைப் பிறர் கையால் ஓலையில் எழுதும்போது எவ்வண்ணம் எழுதியிருக்கவேண்டும்? சிலர் ஒரு தனியனையும் எழுதாமல் [ஸ்ரீரஸ்து இத்யாதிகளுங்கூட எழுதாமல்] க்ரந்தத்தையே தொடங்கி யெழுதுவதுண்டு. அப்படியும் சில ஓலை ஸ்ரீகோஶங்கள் இருக்கின்றன. அவற்றைப்பற்றி நமக்கு விசாரமில்லை யென்று முன்னமே தெரிவித்தாயிற்று. அங்ஙனன்றிக்கே, தனியன் எழுதப்பட்டு ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: என்றே யிருந்து வேறொன்று அவற்றில் தலைகாட்டாதிருக்கப் பெற்ற ஓலை ஸ்ரீ கோசங்கள் நூற்றுக்கணக்கில் கிடைக்குமானுல் நாம் தீர்மானிக்கவேண்டியது என்ன? என்பதுதான் இங்குக் கேள்வி. இதற்கு உரியபதிலை அவரவர்கள் நெஞ்சிலேயே கொள்வது; அல்லது அருகிலுள்ள தம் தம் நண்பர்களிடம் தெரிவிப்பது. தெரிவித்துவிட்டு மேலேபார்க்க.

41. சென்னை எழும்பூரிலுள்ள கவர்ன்மெண்டு ஓரியண்டல் லைப்ரேரியில் அபாரமான ஓலை ஸ்ரீகோசங்கள் சேமித்துவைத்திருக்கிறார்களென்பது ப்ரஸித்தம். பொய்யாகவோ மெய்யாகவோ யார் யார் எங்கெங்கு எது எது எழுதிவைத்திருந்தார்களோ அதெல்லாம் பெரும் பாலும் அந்தலைப்ரேரியில் சேகரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு யார் சென்று எந்தப்புத்தகத் தைக் கேட்டாலும், பார்க்க உடனே நிராக்ஷேபமாக எடுத்துத்தருகிறார்கள். தேசிகர் அருளிய தமிழ்ப்பிரபந்தங்கள் ரஹஸ்யக்ரந்தங்கள் ஆகிய இவை அநேகம் பிரதிகள் அங்குக் காணக்கிடைக்கின்றன. அநாயாஸமாகச் சென்று காணலாம்.

42. "H. 13—14. நெம்பருள்ள ஓலைப்புத்தகம் தேவை"—என்று தெரிவித்தால் உடனே தேசிகப்பிரபந்த எட்டுப்பிரதி அழகாகக் கிடைக்கும். அதில் ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: என்கிற ச்லோகம் பூர்த்தியாக எழுதப்பட்டு ப்ரபந்தாரம்பமுள்ளது காணலாம். ப்ரதாக சதகம் பரமத பங்கம் ரஹஸ்ய சிகாமணி ரஹஸ்ய நவநீதம் ரஹஸ்ய பதவீ. ரஹஸ்ய மாத்ருகா ரஹஸ்ய ரத்நாவளி ரஹஸ்ய ஸந்தேசம் ஸம்ப்ரதாய பரிசுத்தி ரஹஸ்ய த்ரயஸாரம். ஸாரஸாரம் என்றிப்படிப் பலபல தேசிக க்ரந்தங்கள் தனித்தனிப் புத்தகமாக உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் ஸ்ரீமாந் வேங்கட தனியன் ஒன்றேயுள்ளது. நூதன பாத்ரத்தனியன் இவற்றில் இடம் பெறாததற்குக் காரணம் பிராமாணிகர்கள் அவசியம் நிரூபிக்கவேண்டும். தேசிகனுடைய நியமனத்திற்கு மாறாக அத்தனை ஓலை ஸ்ரீகோசங்கள் எழுதிவைத்தது யார்? முன்னம் அந்த லைப்ரேரிக்குச் சென்று, இதில் நாம் தெரிவித்திருக்கிறபடியே உள்ளதா இல்லையா என்பதைக் கண்டறிந்துகொண்டு பிறகு நிரூபணத்தில் கைவைக்கலாம். தேசிகனுடைய நியமனப்படி நூதனபாத்திரத் தனியனே வறியுள்ள தேசிக-தமிழ் க்ரந்த-ஓலை ஸ்ரீ கோசங்களின் திரளைக் காட்டியன்றோ லைப்ரேரி ஸ்ரீ கோசங்களுக்கு அந்யதாஸித்தியைக் கூறவேண்டும். அப்படிக்கூறவல்ல ஆண்புலிகளை யன்றோ நாம் வரவேற்பது.

43. ஸ்ரீ தேசிகருடைய வைபவப்ரகாசிகையென்று ஒரு க்ரந்தம் அச்சிட்டிருக் கிறார்களல்லவா; இதில் தானே ராமாநுஜதயாபாத்ர விஷயமும் எழுதியிருக்கிறார்கள்; அதை மூலமாகக்கொண்டு தானே பின்புள்ளார்கள் இந்த பாத்திரவிஷயம் எழுதிவருகிறார்கள். அந்த வைபவ ப்ரகாசிகாக்ரந்தமும் மேற்குறித்த கவர்ன்மெண்டு லைப்ரேரியில் இருக்கின்றது. R. No. 104 H. 38—14" என்று நம்பர் சொன்னுல் அந்த ஓலைப்புத்தகத்தை உடனே யெடுத்துத்

தருவார்கள் பார்க்கலாம். தனியன் விஷயமான ப்ரஸ்தாவலேசமும் கிடையாது. இதை ஒவ்வொருவரும் அநாயாஸமாகத் தாமே கட்கூடாகக் காணலாமே.

44. இந்த ஓலைப்புத்தகத்திலும் கல்பனைக்கதைகள் சில உள்ளனவாகிலும் இந்த நூதன பாத்ரக் கல்பனைக்கதை இதில் புகவில்லை என்பதற்காகவே இதனை இங்கு எடுத்துரைத்தோம். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு கல்பனை ஏறி வருகிறதென்பதுதான் நன்கு விளங்குகின்றது. இதையே பரக்க நிரூபிக்கிறோம். இந்த பாத்ரத் தனியன் எந்த க்ரந்தங்களுக்காக நியமிக்கப்பட்டதாய் இவர்கள் வெளியிட்டிருக்கிறார்களோ அந்த க்ரந்தங்களில் ஒன்றிலும் இது இல்லையென்பதை நாம் கீழே நிரூபித்ததற்குமாறாக லைப்ரெரியில் இருப்பதாக ஒருவர் நிரூபிக்க முன்வந்தால் அதுவன்றோ நாம் கவனிக்கத்தக்கது. நூதன பாத்ரத்தனியனோடு கூடியதாகச் சில ஓலையேடுகளை இவர்கள் காட்டாவிடினும் காட்டினதாகவே வைத்துக்கொள்ளுவோம். அந்தத் தனியன் இல்லாமலும் ஸ்ரீமாந் வேங்கடதனியனே உள்ளதாகவும் பொது ஸ்தலங்களில் காணப்படுகிற நூற்றுக்கணக்கான ஸ்ரீகோசங்கள் எப்படி அவதரித்தன என்பதைத் தினவடங்க நிரூபித்து விட்டுப் பிறகல்லவோ வேறு பேச்சுக்கள் பேசவேண்டும். அந்த லைப்ரெரியிலேயே தென்னாசார்ய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலபலவுள்ளன. அவற்றில் ஸ்ரீசைலேசதயா பாத்ரம் என்கிற ஆரம்பம் இல்லாத ஓலையேடுகள் மிகச்சிலவே. தனியன் புத்தகம் என்றும் வாழித்திரு நாமங்கள் என்றும் பல தொகுதிகள் லைப்ரெரிதோறும் இருக்கின்றன; அவற்றையும் கண்ணாரக் கண்டாலன்றோ தத்துவம் நெஞ்சிற்படியும்.

இனி, ஸ்ரீமாந் வேங்கடதனியனைத்தள்ளி நூதன பாத்ரத்தனியன் ஸ்ருஷ்டித்தது ஏன்? என்பதைப்பற்றின மருமத்தை வெளியிடுகிறோம்.

45. அருளிச்செயல் தொடங்கும்போது "விட்டுத்தொடங்குவது" என்பது பழைய ஸம்ப்ரதாயம். "பல்லாண்டு பல்லாண்டு" என்று தொடங்காமல் "பல்லாயிரத்தாண்டு" என்றே தொடங்குவர்கள்; "திங்கள் மதிநிறைந்த" "சிறுத்தாம்பினால்" "நலமுடையவன் யவனவன்" "மாது பொருந்தியமார்பன்" என்றிப்படியே தொடங்குவது நாளைக்கும் வழக்கம். தனியனையும் "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" என்று தொடங்காமல் 'தயாபாத்ரம்' என்றுதான் தொடங்குவதாய், நாளைக்கும் தயாபாத்ரமென்றே தொடங்குகிற வழக்கத்தை வானமாமலை முதலானவிடங்களிற் காணலாம். எல்லாவிடங்களிலும் இப்படியேதான் தொடக்கம் நடந்துவந்தது. வேறொரு புதுத்தனியன் ஏற்பட்டுக் கலஹம் உண்டான பின்பே ஸ்ரீ சைலேச தயாபாத்ரமென்றே தொடங்க வேண்டியதென்று வ்யவஸ்தை யேற்பட்டது.

46. இங்ஙனன்றிக்கே தயாபாத்ரமென்றே தொடங்கிக் கொண்டிருந்த காலத்தில் பிரதிபக்ஷிகள் அந்த கோஷ்டியிலே வந்து புகுர ஆரம்பித்தவர்களாதலால் தாங்கள் வேறு வாக்கியமாகத் தொடங்கினால் "ப்ரதமகபளே மக்ஷிகாபாத:" என்னுமாபோலே ஆரம்பத்திலேயே தடை ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி ஆரம்பவாக்யம் ஒன்றாகவே யிருக்கவேண்டுமதற்காகத் தாங்களும் தயாபாத்ரம் என்றே ஆரம்பிப்பதாய்க் காட்டிக்கொள்ள ராமாநுஜதயா பாத்ரத்தைக்கல்பனை செய்து கொண்டார்கள். வ்யவஹாரங்களில் விசாரணை ஏற்பட்டபோதும் "தயாபாத்ரமென்றுதான் இருவகுப்பினரும் சேர்ந்து தொடங்குவது வழக்கம்; தொடங்கியான பிறகு அவரவர்களுடைய ஆசார்ய விஷயமான தனியனை அவரவர்கள் ஸேவிப்பது வழக்கம்." என்று, வந்தேறிகள் சொல்லிக்கொள்ளவும் ஒரு ஸௌகர்யமேற்பட்டது

ஸ்ரீமாந் வேங்கட என்று தொடங்கினால் அதிகமான வேற்றுமை ஸ்பஷ்டமாக விளங்குவதால் சிரமம் ஏற்படுமென்று தயாபாத்ரமென்றே வைத்துக் கல்பனை செய்தார்கள். ஸ்ரீசப்தத்தை முன்னே வைத்தே ச்லோகம் தொடுக்கவேணுமென்று வெகு சிரமப்பட்டும் அது கூடவில்லை. ஏன்? தயாபாத்ரம் என்கிற ஆநுபூர்வி அப்போது வரமாட்டேனென்கிறதே.

ராமாநுஜா பாத்ரத்தைப்பற்றி யெழுதியுள்ள கதைகள் சிறிதும் பொருந்தாதவை யென்பதை ஸாரமாக நிரூபித்தல்.

47. ஆரியர்காள்! "இரண்டு தனியன்களில் எதை நாங்கள் வைத்துக்கொள்வது?' என்று அக்காலத்திலேயே சிஷ்யர்கள் தேசிகரைக் கேட்டதாகவும் அதற்கு தேசிகர் ஏதோ வ்யவஸ்த்தைபண்ணித் தந்ததாகவும் எழுதினார்களே! அதை ஒழுங்காக எழுதிவைக்க அந்தோ! அறிந்திலர். *"ஸ்ரீமாந் வேங்கடதனியனை உபய வேதாந்த ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபங்களுக்கு வைத்துக் கொள்ளுங்கோள்; *பாத்திரத்தனியனை ஸந்நிதிகளில் விவாதங்களுக்கு வைத்துக்கொள்ளுங்கோள்" என்று தேசிகர் நியமித்தருளினதாக எழுதி வைத்திருந்தால் எவ்வளவோ அழகாயிருந்திருக்குமே. அப்போது நாம் ஓலை ஸ்ரீகோச ஆராய்ச்சியை ப்ரஸ்தாவிக்கவே இடமிராதே. "தேசிகர் அங்ஙனம் நியமித்தார் என்பதை ஓலையேடுகளில் காட்ட முடியுமா?" என்கிற ஒரு கேள்வியோடே நின்றிருக்குமே. அதற்கு ஒன்றிரண்டு ஏடுகளை இரண்டொரு நாளில் ஸஜ்ஜப்படுத்திப் புராதனமாக்கிக் காட்டியும் விடலாமே. இல்லாத வொருதனியனுக்கு, இல்லாத கதைகளைக் கட்டினதானது பொய்யை ஊர்ஜிதப்படுத்தியதே தவிர வேறொருபலனையும் பெறுவிக்கவில்லையே.

48. விவேகிகாள்! ப்ரஸித்த ஸ்வதந்த்ர ஸ்வாமி தாம் பகவத் விஷயம நிகரித்தபோது நூதன பாத்ரத்தனியனைத் தாம் ஸ்ருஷ்டித்துத் தாம் அநுஸந்தித்ததாக இவர்கள் எழுதியிருப்பதே கட்டுக்கதையென்று சிலாசித்தமா யிருக்கிறது. அது எப்படியாவது இருக்கட்டும். 'எந்தத்தனியனை அநுஸந்திப்பது?' என்று தேசிகரிடம் சென்று சிஷ்யர்கள் கேட்க வேண்டியகாரணம் என்னே? இங்ஙனம் கேட்டார்கள் என்கிற வார்த்தையே அசடுதட்டிக் கிடக்கவில்லையா? இரண்டு ச்லோகங்களையும் சேர்த்தே அவர்கள் அநுஸந்தித்துக்கொண்டால் என்ன முழுகிப்போய்விடும்? ஸ்ரீராமாயணஸூக்திகளில் வால்மீகி ப்ரப்ருதிகளைப்பற்றிப் பல பல துதிகள் அநுஸந்தித்து வரவில்லையோ? திருக்கச்சிநம்பிகளின் தேவராஜாஷ்டகத்திற்கு முன்னே இரண்டுஸ்துதிபத்யங்கள் அநுஸந்தித்து வரவில்லையோ? ஸ்தோத்ரரத்நத்திற்கு முன்னே * ஸ்வாதயந்நிஹ * நமோ நமோ யாமுநாய * நமோ யாமுந * என மூன்று அநுஸந்தித்து வரவில்லையோ? * அவிதிதவிஷயாந்தர: * வேறொன்றும் நானறியேன் * இத்யாதிகளும் பலவுண்டே. இப்படியிருக்க, எந்தச்லோகத்தை யநுஸந்திப்பது? என்கிற கேள்வியே அஸங்கதமாக இல்லையா? "எந்தத்தனியனை ப்ரதானமாக வைத்துக்கொள்வது?" என்று கேட்டார்கள்—என்று விடைகூறப் பார்க்கில், அப்போது தேசிகருடைய உத்தரம் அஸங்கதமாகுமே. முழுவதும் அவிசாரிதரமணீயமே. அதற்குமேல், பாத்ரத்தனியனை தேசிகர் மிகவும் கொண்டாடினார் என்பது ஹாஸ்யமாக இல்லையா? அவர்தாமே ஒரு நிபந்தனை பண்ணித்தந்தாரென்கை பரமஹாஸ்யமாக இல்லையா? அந்த நிபந்தனையின்படி ஒருவர்கூட நடத்திவரவில்லையென்பது அவரவர்கள் வெளியிட்டிருக்கின்ற தனியன் புஸ்தகங்களாலும் லைப்ரெரிகளிலுள்ள ஓலைப்புஸ்தகங்களாலும் கல்வெட்டாகத் தேறிநின்றதே! இது சோசநீயமாக இல்லையா? உதாஹ்ருதபூர்வமான வேதாந்த தேசிகவைபவப்ரகாசிகையில் இந்த பாத்ரத்தனியனுடைய பேச்சே இல்லாமலிருப்பது எவ்வளவோ உண்மையைக் காட்டிவிடுகிறதே.

ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி நயனாசார்யரோடு கூடவே தேசிகனிடத்திலேயே பகவத் விஷயமதிகரித்தாரென்கிற வுண்மை அதில் வெளிவந்து விட்டபடியால் இவர்களினுடைய கல்பனை முழுதும் ஆகாசப்பந்தலாக முடிந்துவிட்டதன்றோ. ஒரு பொய்யிலிருந்து எத்தனை அநர்த்தங்கள் விளைகின்றன பாருங்கள்.

49. அன்றியும், தேசிகர் கொண்டாடும்படியான விசேஷம் இந்த நூதனபாத்திரத்தில் என்ன இருக்கிறது என்பதை மேதாவிகள் சிறிது விமர்சிக்கலாகாதா? ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்கிற பரமகம்பீரமான பத்யரத்நத்தைக் கேட்ட காதுகளுக்கு இந்த பாத்ரச்லோகம் எப்படியிருக்கிறது என்பதை அவரவர் தம்முள்ளம் உணரமாட்டாதா? விலக்ஷணமான அந்தத்தனியனில் ப்ரஹ்மதந்திரஸ்வாமி அத்ருப்தியடைந்து வேறு தனியன்பணிக்க நினைத்தார் என்கிற வார்த்தையே அருவருக்கத்தக்கதாக இல்லையா? அவர் அங்ஙனம் பணிக்க நினைத்தது பரமார்த்தமாக இருந்தால் ஸ்ரீமாந் வேங்கடதனியனைப் பலபடியாலும் வென்றதாகவன்றோ புதுத்தனியன் பிறந்திருக்கும். தேசிகன் ஸ்வாசார்யரான அப்புள்ளாருக்கு அருளிச்செய்துள்ள * யஸ்மாதஸ்மாபிரேதத் யதிபதிகதித ப்ராக்தந ப்ரக்ரியோத்யத் * என்கிறச்லோகத்திற்குத் தோள்தீண்டியாகவன்றோ தோன்றியிருக்கவேணும். அப்படியில்லாமற்போனாலும் * ஸ்ரீமத் ராமாநுஜகுரு க்ருபா பாத்ர மாச்சர்ய சீலம் * என்றிப்புடைகளிலே சொல்நிரம்பவும் பொருள் நிரம்பவும் பணித்தாலன்றோ ஸ்ரீமாந் வேங்கடதனியனில் விஞ்சியதாகவாகும். அதுவன்றோ தேசிகரும் உண்மையில் உகக்கும்படியானதாகும்.

50. தேசிகனுக்குண்டான ஆசார்யகடாக்ஷப் பெருமையை ஸ்ரீமாந்வேங்கடதனியன் சிறிதும் காட்டவில்லையென்றும் அந்தப் பெருமையைப் பேசுவதற்கென்றே நூதன தனியன் பிறந்ததென்றும் கூசாமல் எழுதிவைத்திருப்பது பொருந்தவேண்டுமானல், தேசிகர் அதிகரணஸாராவளியில் தம்மைப்பற்றி ஸாதித்துக்கொண்ட * ஸ்ரீமத்ப்யாம் ஸ்யாத் ஸாவித்யநுபயிவரதாசார்ய ராமாநுஜாப்யாம் ஸம்யக் த்ருஷ்டே * என்கிற ச்லோகத்தின் சாயையிலன்றோ அமைந்திருக்கவேண்டும். குறை தீர்க்கவந்த தனியன் அநுஷ்டுப்பாகவா பிறந்திருக்கும்? பலகுறைகளுக்கு ஹேதுவுமாயிற்றே!.

51. அன்றியும், பகவத்விஷய காலக்ஷேபத்திற்காகவே இந்தபாத்ரத்தனியன் இடப்பட்டது என்கிறீர்களே; அப்படியானல், பகவத் விஷயத்தில் தேசிகருக்குள்ள அவகாஹநத்தையும் ஆற்றலையும் சிறிதாவது காட்டியல்லவோ இத்தனியன் பிறந்திருக்கவேணும். * இமவந்தந் தொடங்கி இருங்கடலளவும் பெருமேன்மை பெற்றுப்பொலிந்து வருகின்ற ஸ்ரீசைலேச தனியனுக்குப் போலியாயிருக்க வேணுமென்கிற எண்ணமே கொண்டு அதன் சாயலாகவே தொடுத்திருக்கின்ற படியைப் பார்க்கலாகாதா?

ஸ்ரீசைலேச பாத்திரத்திற்குப் பிரதியாகவே ராமாநுஜாபாத்ரம் கல்பிக்கப் பட்டதென்பதைப் பரக்கநிரூபித்தல்.

52. "இதைப்பார்த்தே அது தொடுத்ததாகக் கொள்ளலாகாதோ?" என்று ஸஹஸா பிறர் பேசவுங்கூடும். அந்தோ! கேண்மின்? தேசிகருக்கு வேறொரு தனியன் இல்லாமலிருந்து இந்த பாத்திரத்தனியனென்றே யிருக்குமாகில், இதுதானும் திவ்யதேசங்களிலும் க்ரந்தகாலக்ஷேபாதி பரம்பரையிலும் வீறு பெற்று மிருக்குமாகில் இதைப்பார்த்தே ஸ்ரீசைலேச தனியன் தொடுத்தது என்று நாமே ஸித்தாந்தம் செய்யத் தடையிராது கீடீர். கீர்த்தி மூர்த்தியான பெங்களூர். (வடகலை) தூப்புல் வெங்கடாசாரியரென்பவர் ஸகல ஸ்தோத்ரங்களையும் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தபோது ஸ்ரீதேசிக ஸ்தோத்ரங்களின் தலையில் ஸ்ரீமாந்

வேங்கடதனியனைப் பதிப்பித்து ; ஸ்ரீவரவரமுநிதச்சிஷ்ய ஸ்தோத்ரங்களின் தலைமேல்* ஸ்ரீமாந் ஸ்ரீரங்கநாதார்ய : வேதாந்தத்வய கேஸரீ, முநி : காந்தோபயந்தாமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி. * என்றொரு ச்லோகத்தைப் பதிப்பித்தார். அதைக்கண்டு பற்றுஞ்சிலரும் அங்ஙனே பதிப்பித்தார்கள். இந்த ச்லோகத்தைச் சிலர் சிந்தனை செய்யவும் தொடங்கினார்கள். இது போலித் தனியன் என்பதை நிரூபித்து நாமே இதன் பிரசாரத்தை நிரோதித்திருக்கிறோம். எந்த விஷயத்திலும் நிஷ்பக்ஷபாதமாகவே நாம் ப்ரபாணிகார்த்த ப்ரதிஷ்டாபநம் செய்வோம்.

53. *[illegible]* என்கிற படியே என்ஞான்று மெங்குமொழிவற நீங்காத செல்வம் நிறைந்து விளங்காநின்ற வெற்றித் தனியனைப் போலித்தனியனுக்கப் பாடு படுவதெல்லாம் அதற்குள்ள பெருமையை ப்ரதிஷ்டாபநம் செய்வதிலேயே பர்யவஸித்து நிற்கும். வேதத்தில் ஓரோவிடங்களில் *[illegible]* *[illegible]* *[illegible]* என வரும்போது பரமைகாந்திகளுக்குக் குரல்தழுத்துத் தலைகுனிய நிற்க நேருமாபோலே சிலதிவ்யதேசங்களில் சிலநாளாக நேர்ந்திருக்கும் நெறிதவறின நிலைமை இன்புறுமிவ்விளையாட்டுடையானுடைய லீலைகளிலே ஒன்று என்றே கருதத்தக்கது. அந்தச் சில ஆலயங்களில் நூதன பாத்ரத் தனியன் வந்தேறின நாளை ஒருநொடிப்பொழுதில் கண்டு பிடிக்கக் குறையில்லையன்றோ? எவ்வுள்கிடந்தான் ஸந்நிதியில் ஸ்ரீமத் அஹோபிலம் ஸ்வாமிகள் ஸ்ரீசைலேசத் தனியனைத் தொடங்கி வந்த முறைமையை மாறுபடுத்த ஆரம்பித்ததும் அதற்காக அவர்க்கு நேர்ந்த கஷ்டங்களுமெல்லாம் நாளைக்கும் ரிகார்ட்டுகளில் அழிந்திலவே. அவற்றில் சில ரிகார்டுகள் இதில் சேர்த்து அச்சிட்டு வெளியிடப்படும். முடிவில் காண்க.

54. எதற்குப் போட்டியாக எது கல்பிதம் என்பதை இன்னமும் எளிதாகவும் அவிசால்யமாகவும் நன்கு நிலை நாட்டிவிடுகிறேன். இந்த பாத்ரத்தனியனோடு கூட [உத்தர சாந்தியென்கிற வாழித் திருநாம ப்ரகரணத்தில்] தேசிகருடைய ஆசார்யரான அப்புள்ளார்க்கும் ஒரு தனியன் ஏற்பட்டிருக்கிறது. [அதாவது நமோ ராமாநுஜார்யாய என்பது.] மணவாள மாமுனிகளின் ஆசார்யரான திருவாய் மொழிப்பிள்ளைக்குத் தனியனாக அநுஸந்திக்கப்பட்டு வருகின்ற நம : ஸ்ரீசைலநாதாய என்கிற ச்லோகத்திற்குப் பிரதியாகத் தோன்றினது இது. அந்த ச்லோகம் கைங்கர்ய சாலிநே என்று முடிவாகிறது. இந்த ச்லோகம் குணசாலிநே என்று முடிவாகிறது. நம : என்றதைப் பார்த்து நம : என்பது ; வந்தே என்பதைப்பார்த்து வந்தே என்பது ; இப்படியாகவே ஒரு ஸ்ருஷ்டி ஏற்பட்டிருக்கிறது. பிராமாணிகர்காள்! இங்கு ஆராய்ச்சி செய்மின். அப்புள்ளாருக்கு இத்தத்தனியன் உண்மைதானா? அவருக்கு தேசிகனருளிச்செய்த தனியன் யஸ்மாதஸ்மாபி : இத்யாதியாய் ஆச்சர்யமான பெரிய ச்லோகமன்றோ உண்மையானது. எந்த க்ரந்த பரம்பரையிலும் அதுதான் அநுஸந்திக்கப்பட்டு வருகின்றதென்பது நிர்விவாதம். அப்படிப்பட்ட அற்புதமான தனியனை விட்டு வேறான இந்த அநுஷ்டுப்பை தேசிகரே ஸாதித்தார் என்கிறார்களே ; எதற்காக அவர் இதை ஸாதிக்க வேணும்? "நம: ஸ்ரீசைலநாதாய என்பதைப்போலவே அநுஷ்டுப்பாகவே நம் ஆசார்யருக்கும் இருக்கவேணும்" என்று கருதியா ஸாதித்தார்? ஸ்ரீமாந் வேங்கட தனியனிலுண்டான குறையைத்தீர்ப்பதற்காகப் பாத்ரத்தனியன் பிறந்தது என்றாற்போலே, யஸ்மாதஸ்மாபி: என்று தாமே முன்பு ஸாதித்த தனியனிலுண்டான குறையைத் தீர்ப்பதற்காகத் தாமே இந்த அநுஷ்டுப்பு ஸாதித்தார் என்று சொல்லித்தீர வேண்டுமே? அது என்னகுறை?

55. "உலகுக்கெல்லாம் ஆசார்யரான நம்முடைய தனியன்களே அநுஷ்டுப்பாயிருக்கும்போது வெறுமனே சாஸ்த்ரார்த்தமாக நமக்கு வாய்த்த குருவுக்கு ப்ரஹ்மாண்டமான தனியன் ச்லோகம் எதுக்கு" என்று தேசிகரே திருவுள்ளம்பற்றி முந்தின பெரிய தனியனை மறுத்து இந்தச் சிறிய தனியனையருளினார்—என்று சொல்லிவருகிறார்களே, அதையே எல்லீரும் ஆமோதிக்கிறீர்களா? அப்படியானால் அந்தப் பெரிய தனியன் தள்ளுண்டிருக்க வேணுமே; அங்ஙனில்லையே. போட்டிச்சண்டையாக கோஷிப்பதற்கு மாத்திரமேயன்றோ அநுஷ்டுப்பை ஆதரித்து வருகிறீர்கள். இது அடியோடு எந்த ஏட்டிலும் ஏறவுமில்லையே. திருவாய் மொழிப்பிள்ளைக்கு நம:ஸ்ரீசைலநாதாய என்பது தவிர வேறுதனியன் எங்கும் இல்லாமலிருப்பதையும் சேர்த்து இவ்விஷயங்களை ஆராய்ந்து பார்க்கலாகாதா.

56. அடுத்தபடியாக மற்றொரு விநோதமும் கேண்மின். வடமொழித் தனியன்களின் செய்தி இதுவாயிற்று. இனித் தென்மொழிவாழித் திருநாமங்களில் புகுந்து பார்ப்போம்.

A. வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்வாழும்
B. வாழியிராமாநுசப்பிள்ளான் மாதகவால்வாழும்
(இவை உபய வெண்பாக்களின் ஆரம்பம்.)
A. தேறும்படியுரைக்கும் சீர், B. தேறும்படியுரைக்கும் சீர்.

(அந்த வெண்பாக்களுக்கு இருவருடையமுடிவும் இதுவே.)
பிறகு கல்பிதம் எது? என்பதைக் கண்டுபிடிக்கும்வழி கேண்மின்.

"தேறும்படி மாறன் மறைப்பொருளை மணவாள மாமுனிவன் உரைக்கும் சீர் வாழி" என்கின்றது முந்தின வெண்பா. "தேறும்படி மாறன் மறையும் இராமாநுசன் பாஷியமும் நிகமாந்த குரு உரைக்கும் சீர்வாழி" என்கிறது பிந்தின வெண்பா. தேறும்படி என்கிற வாசகம் இரண்டிலுமுள்ளது. அதற்கு என்ன பொருள் தெரியுமா? 'கடைத்தேறும்படி' என்று பொருள். யார் கடைத் தேறும்படி? என்று ஆகாங்க்ஷையுண்டாகியே தீரும். எழுவாய் அவசியம் வேண்டும். முந்தின வெண்பாவில் "மாநிலத்தோர் தேறும்படி" என்று நன்றாக இருக்கையாலே ஆகாங்க்ஷை சாந்தமாகிறது. பிந்தின வெண்பாவில் என்ன எழுவாயென்று வினவினால் எழுவதற்கு வாயில்லையே.

57. "எழுவாய் இல்லாவிட்டாலென்ன? அர்த்தாத் ஸித்திக்கமாட்டாதோ? இதுவொரு விஷயமா?" என்று பிறர் இலேசாகச் சொல்லிவிடக்கூடும். மத்யஸ்தரான தமிழ்ப் புலவரிடத்திலே இரண்டு வெண்பாவையும் தந்து, "எந்த வாக்கு ஸ்வரஸமாக அவதரித்தது? எந்தவாக்கு பிரதியாகத் தோன்றினது? சொல்லவேணும்" என்று கேட்டால் அப்போதன்றோ இந்த நமது நிரூபணத்தின் சுவை புலனாகும். சூதுகளை மருமத்தில் கண்டு பிடிக்க வல்ல ஆராய்ச்சியாளர் உலகில் இல்லாமற் போகவில்லை. இரண்டு வெண்பாக்களிலும் இலக்கணப்படி சீர்பிரிந்துப் பாருங்கள்; முந்தினதில் [வாழி—திருவாய்—மொழிப்பிள்ளை—மாதகவால், வாழும்—மணவாள—மாமுனிவன்] என்று அழகாகச் சீர்பிரிகிறது. பிந்தினதில், [வாழி—-யிராமா—-நுசப்பிள்ளான்,....வாழு—-மணிநிக—-மாந்தகுரு] என்று சீர்பிரிகிறது. 'எப்படிப் பிரிந்தாலென்ன? இது வொருகுற்றமோ? என்பீர்கள். நுசப்பிள்ளான் என்றும், மாந்தகுரு என்றும் உடையும்படி வெண்பாவாகவே வைத்துப் பாடவேண்டிய அவசியம்

யாது கொல்? வேறு விருத்தத்தில் செவிக்கினிதாகப் பாடியிருக்கலாகாதோ? முந்தினது [மாமுனிகளின் விஷயமானவது] வெண்பாவாகவே யிருந்தபடியால் அந்தஸ்தானத்தில் வேறு விருத்தம் இயற்ற இயலவில்லை என்றுதானே உண்மையான பதில் வரவேண்டும். நிற்க.

58. முடிவில் அநுஸந்திக்கப்படுகிற அடியார்கள் வாழ அரங்கநகர்வாழ என்கிற வெண்பாவுக்குப் பிரதியாக இவர்கள் சொல்லுகிற நானிலமுந்தான் வாழ என்கிற வெண்பாவிலும் ஆராய்ச்சிக்கு விஷயம் வேண்டியதுள்ளது. இவை ஸ்ரீரங்கத்தில் அவதரித்தனவென்றே இருவகுப்பினரும் எழுதிவைத்துள்ளார்கள். இதற்குப் பொருந்தவும், ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய * என்ற வடமொழி வாழ்த்துக்குப் பொருந்தவும் ஸ்ரீரங்க ஸாம்ராஜ்யத்திற்கு வாழ்த்துப் பாட வேண்டியது ப்ராப்தம். அப்படியே அரங்கநகர்வாழ என்று முந்தின வெண்பாவிலுள்ளது. பிந்தின வெண்பாவில் ஒரு ஊரைப்பற்றியும் பேசாமலே யிருந்து விட்டால் கேள்வியில்லை. அரங்கநகர்வாழ என்றதைப் பார்த்து நாமும் ஒரு நகர்பதம் போட்டுவைப்போமென்றெண்ணியல்லவோ (பிந்தின வெண்பாவில்) மாநகரில் என்று போட்டு வைத்தார்கள். இதற்கு என்ன அர்த்தம். அநர்த்தமே அர்த்தம் போலும். மாநகர் என்று ஓர் ஊர் இல்லை. ஆனால் ஸம்ப்ரதாயத்தில் தென்திருப்பேரைக்கு மாநகர் என்று பிரஸித்தியுண்டு. "தென் திருப்பேரெயில் மாநகரே" என்கிற திருவாய்மொழியும் "மாநகரிலே கோஷிக்கும்" என்கிற ஆசார்யஹ்ருதய திவ்ய ஸூக்தியும் முதலியன இதில் பிரமாணம். அந்தத் திருப்பதியை உட்கொண்டா இந்த வெண்பா பிறந்தது? விவேகிகாள்! நீங்களே பொருள்பணிமின். 'அரங்கநகர்வாழ' என்று ஏற்கெனவே பாசுரம் அவதரித்திருந்தபடியால் அவ்விதமாகவே தாங்களும் பாசுரம் கூட்டக் கூசி எதுகை நோக்கி ஏதோவொன்று பேசிவைத்தார்கள்—என்பதுதான் தத்துவமாகத் தேறும்.

59. மாமுனிகளின் வாழியின் தொடக்கத்தில் "மாறன் திருவாய் மொழிப் பொருளை" என்று [பிரகரணாநுகுணமாக] திருவாய்மொழியை மாத்திரம் எடுத்ததற்குச் சேர, முடிவு வெண்பாவிலும் * சடகோபன் தண்டமிழ்நூல் வாழ * என்று திருவாய்மொழிக்கு மாத்திரமே வாழி கூறியிருப்பது மிக்க பொருத்தம். பிரதியான வாழியின் தொடக்கத்தில் "மாறன் மறையுமிராமானுசன் பாஷியமும்" என்று ஸ்ரீபாஷியத்தையும் சேர்த்து எடுத்ததற்கு இணங்க முடிவு வெண்பாவிலும் "மாநகரில் மாறன் மறையும் பாஷியமும் வாழ" என்றிருக்கவேண்டுமே. இல்லையே. "இப்படி என்ன நிர்ப்பந்தம்?" என்கிற க்ஷேபோக்தியினால் வெற்றி பெறலாமென்கிற எண்ணம் மாத்திரம் வேண்டா. வெண்பா அவ்வளவுக்கு இடம் தரவில்லை என்னுங்கோள். வெண்பாவாகவேயிருக்க வேணுமென்று என்ன அவசியம்? மாமுனிகளுக்காக அவதரித்தது வெண்பாவாக இருக்கிறபடியால் [அந்த கோஷ்டியில் கலந்து வேற்றுமை காட்டாமல் உபாம்சுவாய் ஸேவிப்பதற்குப் பாங்காக] எங்களுக்கும் வெண்பாவே அமைய வேண்டியதாயிற்று—என்று சொல்லித்தீரவேண்டியது தவிர வேறென்ன வுத்தரமுள்ளது.

60. அநுஷ்டுப்புக்களின் ஸ்தானத்திலே அநுஷ்டுப்புக்களும், தயாபாத்ரம்—வந்தே—நம:—சாலிநே என்கிற பதவிந்யாஸங்கள் மாறுதபடி அப்படியப்படியே அவைகளும், வெண்பாக்களுக்கு வெண்பாக்களும், ஆசிரியத்திற்கு ஆசிரியமும், தேறும்படியுரைக்குஞ் சீருக்கு தேறும்படியுரைக்குஞ்சீரும் ஆகவிப்படி மாறும்படி யுரைக்குஞ்சீர் சிறிதுமின்றித் தொடுக்கப்பட்டிருக்கிற போக்கையும், திவ்ய தேசங்களின் திவ்ய சரித்திரங்களையும், ஒலை ஸ்ரீகோசங்களின் ஒழுங்குகளையும், நம்முடைய பல நன்னிரூபணங்களையும், ஒன்று சேர்த்து விவேகிக்க

இவ்வுலகில் அதிகாரிகளில்லையா? 600 வருஷமென்று வாய்திறக்க இன்னமுமா கூசாதிருக்கின்றீர்கள்? நன்று நன்று. 600 வருஷம் ஆனது மெய்யே யென்பதை உலகமுகந்து கொள்ளுமாறு, வசைமொழிகள் சிறிதுமின்றி ப்ராமாணிகமாக ஒவ்வொன்றுக்கும் உத்தரமுரைத்து, நாம்மறுவாய்திறக்க வழியில்லாமே க்ரந்தமுகேந ஸ்தாபனம் செய்யவல்லாரில்லையே.

61. ஸ்ரீசைலேசதயா பாத்ரத்தைப் பார்த்து 'பாத்ரமென்கிற பதத்தோடு கூடியே திவ்யப்ரபந்தாரம்பத்தனியன் இருக்க வேண்டும் போலும்' என்று க்ரஹித்து எத்தனை பாத்ரத்தனியன்களைக் கல்பித்திருக்கிறார்கள் தெரியுமோ? அஹோபிலமடத்து ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமி தனியன் இன்னதென்பது உலகப்ரஸித்தம். அதாவது ப்ரபத்யே நிரவத்யாநாம் என்கிற ச்லோகமே. இந்தத்தனியனையே ஸமாச்ரயண பரம்பரைகளிலும் க்ரந்த பரம்பரைகளிலும் நாளைக்கும் மடத்தார் ஸேவித்து வருகிறார்கள். தனியன் புத்தகங்களிலும் இதைத்தான் வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் ராமாநுஜ தயாபாத்ரத் தனியனை இழுத்துப்போட்டுக் கொள்ள ஆரம்பித்தபோது * கேசவார்யக்ருபா பாத்ரம் * என்று, தங்கள் ஸ்வாமியின் தனியனாக இன்னொரு பாத்ரத்தனியனையும் இயற்றிக்கொண்டார்கள். இவ்விரண்டு பாத்ரங்களில் எந்த பாத்ரத்தை முன்னே சொல்லுகிறது என்று சச்சரவு உண்டாகி, நாளைக்கும் சச்சரவிலேயே இருந்து வருகிறது.

62. மடத்து க்ரமங்களில் முதலில் ஸ்ரீசைலேச தயாபாத்ரமே தொடங்கி வந்ததையும் பிறகு அதை அடியோடு தள்ளினதையும், பிறகு [ஸயூத்த்யர்களோடு ஸந்தி பண்ணிக்கொள்ள வேண்டி] அதை மடத்துஸ்வாமியின் கேசவார்யக்ருபா பாத்திரத்திற்குப் பின்னாலே சேர்த்துக் கொண்டதையும், இன்னமும் ஒரு நியதியின்றிக்கேயிருந்து வருவதையும் ஆராய்க. அச்சுப் புத்தகங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஊன்றி நோக்கினால் வெகு விஷயங்கள் விசதமாகும். ராமாநுஜதயா பாத்ராதிகள் அடியோடு நுழையப்பெறாத புத்தகங்களையும், அவற்றை முன்னேயிட்டுப் பின்னால் மடத்துத்தனியன்கள் இட்ட புத்தகங்களையும், கேசவார்யக்ருபா பாத்ரத்தை முன்னே போட்டு பின்னை ராமாநுஜபாத்ரம் போட்ட புத்தகங்களையும் (இனிவரப்போகிற விலக்ஷணப்ரகார புத்தகங்களையும்) கண்ணாரக் கண்டு இப்படிப்பட்ட வித்யாஸங்கள் ஏற்படக்காரணம் யாது? என்று விமர்சித்தால், திருவெவ்வளூர் தேவஸ்தான ரிகார்டுகளையும் சேர்த்துப் பராமர்சித்தால் நல்ல தெளிவு உண்டாகியே தீரும்.

63. * லக்ஷ்மீநாத ஸமாரம்பமாய் நாதயாமுநமத்யமமாய் ஸ்ரீராமநுஜ பர்யந்தமான குருபரம்பரைக்கு இவர்கள் தொன்று தொட்டு அநுஸந்தித்து வருகிற [ஸ்ரீஸ்தநாபரணம்........ (இத்யாதி) யோநித்யமச்யுத *] தனியன்களையும் மாற்றிக்கொள்ள நிச்சயித்தவர்கள் என்பது ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளி யென்கிற ஸ்ரீஸந்நிதி குரு பரம்பரையின் திருத்தமான பதிப்பினால் தெளிவாகிறது. "அந்தத்தனியன்களை யெல்லாம் நாங்கள் மாற்றிக்கொண்டு வெகுகாலமாயிற்றே" என்று ஸாதிக்கிற மஹான்களும் பலருளர். இந்த விஷய விரிவினுட் புகுந்தால் பெரிய பாரதமாகும்.

64. மடத்துஸ்வாமிக்கு க்ரமமாக ஏற்பட்டிருக்கிற தனியன்வேறு; இவர்கள் புதிதாகச் சொல்லிவருகிற பாத்ரத்தனியன் வேறு—என்பதை மாத்திரம் மத்யஸ்தர்கள் திண்ணிதாக நெஞ்சிற்கொள்ளக் குறையில்லையே. இதில் வாய்திறக்கவும் வழியில்லையே. ஸந்நிதிகளில்

இயல் தொடங்கும்போது ராமாநுஜாபாத்ரமே முந்துறச் சொல்லித் தொடங்கவேணு மென்று பகவதாஜ்ஞையும் ஆசார்ய நியமனமும் ஆனதாக ஒருசாரார் எழுதியிருப்பது உண்மையாகில், இப்போது ராமாநுஜாபாத்ராபிமானிகளாகக் காண்கிற மடத்தாரும் அந்தக் கட்டளையைப் பரிபாலித்து வரவேண்டாவா? ராமாநுஜாபாத்ரம் சொல்லியான பிறகல்லவோ கேசவார்யக்ருபா பாத்ரம் பேசவேணும். அப்படி எங்கேனும் காண்பதுண்டோ? அதை இவர்கள் பின்னால் தள்ளியிருப்பது கொண்டே அது பின்னால் வந்தேறினதென்பது குன்றிலிட்ட விளக்காக விளங்கவில்லையா?

65. இவையெல்லாவற்றிற்கும் சிகரமாக ஒருவிஷயம் கேண்மினோ. இப்போது ராமாநுஜதயாபாத்ரத்தைப்பற்றியிருப்பவர்கள் உடையவர்க்கும் நம்மாழ்வாருக்கும் ஸகலபரம்பரைகளிலும் அநுஸந்திந்து வருகிற தனியன்கள் எவை? என்று பாருங்கள். இவர்களுக்கு யோநித்யமச்யுத என்பதும் கிடையாது; மாதாபிதாயுவதய: என்பதும் கிடையாது. உண்டென்று பொய் சொல்வதற்கும் வரமாட்டார்கள். ப்ரணமம் லக்ஷ்மணமுநி: என்பதையே உடையவர் தனியனாகவும், யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோத: என்பதையே நம்மாழ்வார் தனியனாகவும் நியமேந ஓதியும் ஓதுவித்தும் வருகிறார்கள். அப்படிப்பட்டவிவர்களுக்கு, அந்தத் தனியன்களைத் தள்ளி அவற்றின் ஸ்தானத்லே—தென்கலையார்களே நியமேந அநுஸந்தித்து வருகிற * யோநித்யம், மாதாபிதா * தனியன்கள் விவாதவேளைகளில் மாத்திரம் எப்படி வந்து புகுந்தன? யார் நியமித்து இவற்றைப் பற்றினார்களிவர்கள். வஸ்துதஸ்து, இத்தனியன்களில் தங்களுக்கு விரோதம் தோன்றாமையாலே இவற்றை மாற்றிக்கொள்ள நினைத்திலர் என்றும், விரோதமுள்ள தனியன்களிலே விச்வாமித்ர ஸ்ருஷ்டிகளை யதேஷ்டமாகப் பண்ணிக் கொண்டார்களென்றும் சொல்லித்தீரவேண்டியது தவிர வேறு வழியில்லைகிடீர். வழியுண்டேல் விளம்பலாமே.

66. இங்ஙனே ஒவ்வொரு விஷயத்தையும் விமர்சிக்கப் புகுந்ததனால் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாளர்கள் நம்கையிலே சிக்கெனப்பிடியுண்டார்கள். பெரியாண்டவனுக்கு * நமஸ்தஸ்மை ஸ்ரீநிவாஸ லக்ஷ்மண * * தேசிகேந்த்ரதயாபாத்ரம்;-சின்னாண்டவனுக்கு * நமஸ்தஸ்மை ஸ்ரீநிவாஸமஹா * ஸ்ரீஸ்ரீநிவாஸயோகீந்த்ரதயாபாத்ரம் * குட்டியாண்டவனுக்கு .... * இப்படி நம: பாத்ர வாழி மயமாகவே நிறைத்து வைத்து வெளியிட்டிருக்கிற ஆக்கூராண்டவன் போல்வாருடைய தனியன் புத்தகங்களைக் கண்டால், இவ்வகுப்பினர்க்கு அஹோராத்ரம் பாத்ர ஸ்ருஷ்டி யல்லது பணியில்லையென்பது கைகொள் கனியாகுமே.

67. நம்மாழ்வார் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான ஆசார்யர்களின் தனியன்கள் உலகமெங்கும் எவ்வளவோ சிறப்புற்று வருகின்றனவே; அவை என்றைக்கு அவதரித்தன என்பதுபற்றி ஒருவராவது ஒரு சொல்லாவது எழுதிவைத்திருப்பதுண்டோ? ஸ்வாமி தேசிகனும் அநுஸந்தித்த அந்தத் தனியன்களுக்கு உத்ஸவம் என்கிற வார்த்தை எங்கேனு முண்டோ? தனியனுக்கு உத்ஸவம் என்கிற வார்த்தையே மிக விசித்திரமாக இல்லையா? அதிலும் இந்தச்லோகத்திற்கு உத்ஸவம் என்கிற வார்த்தை என்னே!

68. இந்த பாத்திரத்தனியன் சரித்திரமும் வியாக்கியானமும் கொண்டபுத்தகம் வெளிவரப்போகின்றதென்று பிரசுரம் செய்தார்கள். வியாக்கியானம் வேணுமானால், வையமெல்

லாம் விஸ்மிதமாகவும் கல்லும் கரையவும் விபுலதமமாக நாமே யெழுதித்தருவோம். சரித்திரம் வெளிவருமென்கிறார்களே, அதைப்பார்க்கத்தான் * நாளேலறியேனென்று பாரித்துக் கிடப்புதோம். அதற்கு எப்படித்தான் பிராணப்ரதிஷ்டை பண்ணுகிறார்களோ, அவ்வதிசயத்தைக் கண்ணுடையார் காணவேணும்.

முடிவில் **விண்ணப்பம்.** இவ்விஷயங்களெல்லாம் நாம் எட்டு வருஷங்களுக்கு முன்பு எழுதி வெளியிட்ட புத்தகங்களின் ஸாரஸங்க்ரஹம். இன்னமும் விரிவாகத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அப்புத்தகங்களையே பெற்றுத் தெரிந்து கொள்க. இந்த பாத்திரத்தவியவுடைய சரித்திரம் விரைவில் வெளிவரப் போகிறதென்று அப்போது பிரசுரம் செய்திருந்தவர்கள் நம்முடைய நிரூபணங்களை யெல்லாம் கண்டபின்பு 'இனிநாம் எதுவு மெழுத வழியில்லை' என்று தேறித் தெளிந்து அந்த சரித்ரப்ரகாசந ப்ரயத்நத்தை விட்டொழித்தார்களென்பது ப்ராமாணிகக்ருதயமே.

முற்றிற்று.

1946ஞ 2 நம்பர் ஒ. ஸூட்டில் வாதி அ. மு. ஸ்ரீனிவாசாச்சாரியர் & பிரதிவாதி அஹோபில மடம் ஜீயர் ஷை வ்யாஜியத்தில் தாக்கல் செய்த திருவள்ளூர் தேவஸ்தானத்து ரிகார்டுகளில் நாலைந்து மாத்திரமே இங்கு வெளியிடப்படுகின்றன

8 அணு ஸ்டாம்பு. **1** **25--8--1835.**

1245-வது பசலிக்குச் சரியான 1835-த்திய பெரிய பாளயம் தாலூக்கா தேவஸ்தானம் பாபத்து 10 நெம்பர் தாக்கீத்து பதிவு புக்கிலிருந்து எடுத்தெழுதியது.

நம்பர் 12. தரிவில்லா திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமியாருடைய சன்னிதியிலேயும் அவருடைய புறப்பாட்டின் போதும் மாமூலாய் ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் என்கிற மந்த்ரத்தைச் சொல்லி ப்ரபந்தம் தொடங்கிக் கொண்டு வந்திருக்க அஹோபில மடம் ரங்கநாத சடகோப ஜீயர் என்கிறவர் நாளது மீ 8உல் அந்த மந்திரத்தைச் சொல்லாமல் நிறுத்திப் போட்டு புதிசாய வடகலை மந்திரத்தைச் சொல்லி ப்ரபந்தம் தொடங்கி கலஹத்து ஆஸ்பதம் செய்ததாய் உம்முடைய விசாரணையில் தெரியவந்து மாமூல ப்ரகாரம் நடந்து கொள்ளும்படியாய் நீர் நேராய் ஷை ஜீயருக்குத் தெரியப் படுத்தியும் கேளாமல் மறுபடியும் மாமூலுக்கு விரோதமாய் வடகலை மந்திரத்தைத் தானே சொல்லிக் கொண்டு வருகிறதாய் வாக்கு மூலம் வகையரா தஸ்தாவேஜுகளுடனே கூட நாளது மீ 23உயில் நீர் எழுதிக் கொண்ட 7 நம்பர் அர்ஜி தாக்கலாச்சுது. மாமூலுக்கு விரோதமாய் கலஹத்துக்கு ஆஸ்பதமான கார்யம் செய்யவேண்டாம் என்று நீர் தெரியப் படுத்தியும் கேளாமல் உம்முடைய உத்திரவை நிராகரித்துப் போட்ட படியினாலே மறு கட்டளை யாகிற வரைக்கும் ஷை ஜீயராவது அவருடைய குமஸ்தாவாவது ஷை தேவஸ்தானத்தைச் சேர்ந்த காரியங்களில்

ப்ரவேசிக்க வொட்டாமல் நிறுத்திப் போட்டு சங்கதி தெரியப் படுத்தவும். இந்த உத்திரவுக்கு விரோதமாய் நடவாமல் பார்த்துக் கொள்ளுகிறதற்காக அசூர் டலாயத்து சுப்பராவை அனுப்பி யிருக்கிறது. அறியவும், 1835ஹு ஆகஸ்டுமீ 25உ மேடபேறம் பாக்கம்.

True copy of the entry.
(Sd.) H. RICHERDSON,
Dy. Collector.

1868ஹு பிப்ரவரிமீ 14உ இந்த நகல் கொடுக்கப்பட்டது.

நரஸிம்ஹாசாரி ஒப்பிட்டது } (Sd.) T. RANGAROW,
Copist.

2

15—10—1835.

1245 பசலிக்கு சரியான 1835ஹு B. B. 34, நெம்பர் பெரிய பாளயம் தாலுக்கா தேஸ்தான முதல் நெம்பர் புக்கிலிருந்து எடுத்து எழுதியது.

மேஸ்தர் அலெக் ஜாண்டர் மக்லீன் சாயபு கலெக்டர், ஜில்லா செங்கல்பட்டு, அவர்கள் இந்தாசார் வெங்கடரமணய்யர் தஹஸீல்தார் தாலூக்கே பெரிய பாளயம் டாபியத்து பாஷ்த்து.

1. தரிவில்லா திருவள்ளூர் தேவஸ்தானத்தில் மாமூலாய் தென்கலை மந்த்ரம் சொல்லி ப்ரபந்தம் தொடங்கிக் கொண்டு வந்ததை அஹோபில மடத்தில் இப்போ இருக்கிற ஜீயர் போன ஆகஸ்டுமீ 8உ ஷை மந்திரத்தைச் சொல்லி நிறுத்திப்போட்டு வடகலை மந்திரத்தைச் சொல்லி ப்ரபந்தம் தொடங்கினதினாலே கலஹம் நடந்ததைக் குறித்து தென்கலை ஸ்ரீதர்சனசார் வகைராக்கள் செய்த பிராதை விசாரணை செய்து * * தென்கலை மந்திரத்தை சொல்லி ப்ரபந்தம் தொடங்க வேண்டிய தென்று நாம் தீர்ப்பு செய்து * * மேல் சொல்லியபடி நடந்து கொள்ள ராஜியில்லை என்று அவருடைய மனுஷ்யாள் சொல்லுகிறதாயும் நாளது மாதம் 6உ நீர் எழுதிக் கொண்ட 16-வது நம்பர் அர்ஜீ * * *

3. இந்த ஜீயருக்கு முன்னிருந்த ஜீயர் இந்த ஜில்லாவில் திருவள்ளூரிலேயும் இதரமான இடங்களிலேயும் வந்திருந்தபோது யாதொரு கலஹமுமில்லாமல் க்ரமமாய் நடந்து கொண்டு வந்தார். இந்த ஜீயர் இந்த ஜில்லாவுக்கு வந்தது முதல் கொண்டு அவர் போயிருந்த தேவஸ்தானங்களில் அங்கங்கே கலஹம் உண்டாகும்படி செய்து அதைக் குறித்து அனேக பிராதுகள் வந்திருக்கிறது. * * * திருவள்ளூர் தேவஸ்தானத்தில் தென்கலை மந்த்ரம் சொல்லிக்கொண்டு வந்தது ப்ரஸித்தமா யிருக்கச்சே நிர்நிமித்தமாய் அதை இந்த ஜீயர் நிறுத்திப் போட்டு வடகலை மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார். கண்யமான மனுஷ்யாளை ஜீயர் சேர்க்காமல் போனது தவிர தட்டை ராகவாச்சாரியர் என்கிறவர் துர்மார்க்க

மான காரியங்களைச் செய்து அதற்காக தண்டனை பட்டிருக்கிறது எல்லாருக்கும் தெரிந்திருக்கச்சே அப்படிப் பட்டவரை கலஹத்துக்காக ஜீயர் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

* * * * * *

4. மாமூலாய் சொல்லிக் கொண்டு வந்த தென்கலை மந்திரத்தைச் சொல்லாமலும் நம்முடைய தீர்ப்புப்படிக்கு நடவாமலும் போனதினாலே மறு கட்டளையாகும் வரைக்கும் அவருக்கு தேவஸ்தானத்திலே ஷை மரியாதைகள் நடப்பிக்க வேண்டியதில்லை. அவராவது அவருடைய குமாஸ்தாக்களாவது தேவஸ்தானத்தில் யாதொரு காரியங்களையும் செய்ய வேண்டிய தில்லை. * * * * * *

6. அர்சகாள் ரெட்டிகள் முதலானவர்களை வைத்துக் கொண்டு ஷை மடத்தாருடைய பூட்டுக்களை கருமானுலே தெரப்பிவிச்சு ஆபரணங்கள் 'வஸ்திரங்கள் இதுகளை கோயில் காரியங்களுக்கு அப்யந்ர மில்லாமல் நடப்பிச்சுக் கொண்டு வரவும். அது ஸங்கதி விவரமாய் தெரியப்படுத்தவும். அறியவும்.

True copy of the entry.

1835௵ அக்டோபர்மீ 15௳ மகாம் காஞ்சீபுரம். } (Sd.) H. RICHERDSON,
Dpty. Collector.

3

4—12—1835.

1245-வது பசலிக்குச் சரியான 1835௵த்திய பெரிய பாளயம் தாலுக்கா தேவஸ்தானம் பாபத்து தாக்கீது பதிவு புக்கி லிருந்து எடுத்தெழுதியது.

நம்பர் 54. தரிவில்லா திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ சுவாமியாருடைய உத்ஸவ தினங்களில் அவருடைய புறப்பாட்டின்போது வேத பாராயணம் பண்ணுமல் நின்றிருக்கிறதினுலே முதலில் தொடங்கி வேதம் பாராயணம் பண்ணும்படியாய் தங்களுத்திரவானுல் அந்தப்படி வேத பாராயணம் பண்ணுகிறோமென்று ஷை தேஸ்தானம் 2-ம் தீர்த்தக்காரரான ஈச்சாம்படி ஸுந்தர வரதாசாரியர் வகைராக்கள் கேட்டுக்கொள்ளுகிறதைக் குறித்து போன அக்டோபர் மாதம் 20௳யில் நீர் எழுதிக்கொண்ட 22 நவம்பர் அர்ஜியை அநுஸரித்து உத்திரவு செய்கிறதென்ன வென்றால் * * * * *

மாமூல்படிக்கு ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் என்கிற மந்த்ரத்தைச் சொல்லி ப்ரபந்தம் தொடங்க வேண்டிய தென்று நாம் மாமூலை யநுஸரித்து தீர்ப்பு செய்திருக்க அந்தப்படி அஹோபில மடத்து ஜீயராவது அவருடைய மனுஷ்யாளாவது சொல்லாமல் விட்டு விட்டபடியினுலேயும் * * * * * *

வேதபாராயணம் ஸேவாகாலம் இதுகள் அகத்யமாய் நடக்க வேண்டிய தென்று தெரிய வருகிற படியினுலேயும் கோவில் கார்யங்களுக்கு அப் பந்தரமில்லாமல் மறு கட்டளையாகிற வரையில் ஷை இரண்டாவது தீர்த்த காரர் மாமூல்படிக்கு பாத்திரம் சொல்லி ப்ரபந்தந்தைத் தொடங்கி ஸேவா காலம் நடப்பிச்சுக் கொண்டு வரும்படியாய் திட்டம்

பண்ணி நடப்பிச்சுக் கொண்டு வருகிறது மல்லாமல் ஸம்ஸ்கிருத வேதபாராயணத்தையும் அட்டியில்லாமல் நடப்பித்துக் கொண்டு வரவும். அறியவும்.

1864ஷு பிப்ரவரிமீ 14உ இந்த நகல் குடுக்கப்பட்டது.

(Sd.) T.
Copist.

1835ஷு டிசம்ர்மீ 4உ மேல மாம்பலம்.

True copy of the entry.
(Sd.) H. RICHERDSON,
Dpty. Collector.

4

30—11—1836.

1246 பசலிக்குச் சரியான 1836ஷுத்திய பெரிய பாளயம் தாலூகா தேவஸ்தானம் பாபத்து தாக்கீது பதிவு புக்கிலிருந்து எடுத்தெழுதியது.

நம்பர் 51. மக்குளீன் துரைபேரால் அப்தல் காதல் சாயபுக்கு சரிவில்லா திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமியாருடைய தேவஸ்தானத்தில் மாமூலாய் நடந்து வந்த தென்கலை மந்திரத்தை அஹோபில மடத்தில் இப்போ இருக்கிற ஜீயர் சொல்லாமல் புதுசாய் வடகலை மந்திரத்தில் சொன்னதினாலே உண்டான சச்சரவைக் குறித்து வந்த பிராதை விசாரணை செய்து செய்த உத்திரவு படிக்கு ஷெ ஜீயர் நடந்து கொள்ளாமல் போனதினாலே அவருடைய மர்யாதைகளை நிறுத்தி வைக்கும்படியாய் 1835ஷு அக்டோபர்மீ 15உயில் முன்னிருந்த தாசீல்தார் பேருக்கு அனுப்பின தாக்கீத்தை அநுஸரித்து இப்போ தெரியப்படுத்துகிற தென்னவென்றால் மேல் சொல்லிய ஜீயர் ரெவின்யூ போர்டாரிடத்திலும் கவர்ன்மெண்டாரிடத்திலும் பிராது செய்ததின் பேரில் அவாள் விசாரணை செய்து இப்போ யிருக்கிற ஜீயரும் அவரைச் சார்ந்தவாளும் எந்த தென்கலை மந்திரத்தைச் சொல்லாமல் விட்டு விட்டார்களோ அந்த மந்திரத்தையே இந்த ஜீயருடைய ஸ்தாநத்தில் முன்னாலே யிருந்த ஜீயர் நன்றாய் ஒப்புக்கொண்டு அதை சொல்லுகிறதற்கு தானே பாதியஸ்தன் என்றும் சொல்லி யிருக்கிற படியினாலே அந்த ஜீயர் நடந்து கொண்ட ப்ரகாரமே இப்போ யிருக்கிற ஜீயரும் முக்யமாய் நடந்து கொள்ளும்படியாய் உத்திரவு செய்யச் சொல்லியும் அவர்மேல் சொல்லிய ப்ரகாரம் நடந்து கொள்ளுகிற வரைக்கும் அவருக்கு மாமூலாய் நடந்து கொண்டு இருந்த மரியாதைகளை நிறுத்தி வைக்கும் படியாயும் ஷெ இருதரத்தாருடைய சச்சரவு ஸங்கதியில் * * * * நவம்பர்மீ 4உயில் கவர்ன்மெண்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இந்த ஸங்கதியை உபய கக்ஷிக்காரரைச் சேர்ந்தவாள் திருவள்ளூரில் எவர் இருக்கிறார்களோ அவாளுக்கு தெரியப் படுத்துகிறது மல்லாமல் இந்த உத்திரவு உம்முடைய கை எழுத்துப்பட சரியான நகல் ஷெ தேவஸ்தான தஸ்த்ரத்தில் தாக்கல் செய்விக்கவும். அறியவும்.

1836ஷு நவம்பர்மீ 30உ மகாம் சைதாப்பேட்டை.

மக்ளீன் துரை ஸயன்

True copy of the entry.
(Sd.) H. RICHERDSON,
Dpty Collector.

1868ஷு பிப்ரவரிமீ 14உ
இந்த நகல் கொடுக்கப்பட்டது.

5

20—10—1839.

1249 பசலிக்குச் சரியான 1839௵ பெரிய பாளயம் தாலூகா தேவஸ்தானம் புக்கிலிருந்து எடுத்து எழுதியது.

நம்பர் 19. 1. பிரிசு துரைபேரால் காகாஜி ராவுக்கு தரிவில்லா அஹோபில மடத்து காரியகர்தராகிய கொடவலூர் ஸ்ரீநிவாஸாசாரியர் என்பவர் * * * இப்போ சர்க்கார் உத்திரவு செய்திருக்கிற ப்ரகாரம் தென்கலை மந்திரத்தை தாங்கள் சொல்லுகிறதாயும் ஷை தீர்த்தம் முதலான மரியாதைகளையும் சுதந்திரங்களையும் மாமூல்படி நடப்பிக்க வேணும் என்றும் போன ஆகஸ்டுமீ 4வயில் அர்ஜி எழுதிக் கொண்டார். * *

* * * * * * *

3. அந்த கடிதாசி யுடனே கூட மேல் சொல்லிய ஜீயர் அவர்கள் அநுமதி கொடுத்த ஸங்கதி தெரிய வேண்டியதுக்காக தஞ்சாவூர் ஜில்லா ஆ. பிரன்ஸபல் கலெக்டர் அவர்களுக்கு போன மாதம் 6வயில் லெடர் எழுதி யிருந்ததற்கு அவர் விசாரித்து போன மாதம் 25வ போட்ட லெடருடனே கூட அனுப்பி யிருக்கிற தஸ்தாவேஜுகளினாலே ஷை ஜீயருடைய அநுமதி ப்ரகாரம் மேல் சொல்லி அப்பனய்யங்கார் கொடவலூர் ஸ்ரீநிவாஸாசாரியருக்கு கடிதாசி எழுதியனுப்பி வைத்ததாய் தெரியவருகிறது.

* * * * * *

7. ஆகிலும் சர்க்கார் உத்திரவு செய்திருக்கிற ப்ரகாரம் தென்கலை மந்திரத்தைச் சொல்லிச் சொல்லுகிறதாயும் மாமூல்படிக்கு மரியாதை முதலானதுகளை நடப்பிவிக்க வேணுமென்றும் இப்போ யிருக்கப்பட்ட ஜீயருடைய அநுமதி ப்ரகாரம் அவருடைய மநுஷ்யன் கேட்டுக் கொள்ளுகிறதினாலேயும் மாமூல் ப்ரகாரம் தென்கலை மந்திரத்தைச் சொன்னால் மரியாதை முதலானதுகளை நடப்பி விக்கும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறதினாலேயும் ஷை ஜீயராவது அவருடைய மநுஷ்யாளாவது ஷை தேஸ்தானத்தில் மாமூல் ப்ரகாரம் ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் என்கிற (தென்கலை) மந்த்ரத்தைச் சொல்லி ப்ரபந்தம் தொடங்குகிறதுக்கு யெப்போ ஆரம்பிக்கிறார்களோ அதை நீர் தெரிந்து கெண்டு அதுமுதல் ரெண்டாம் தீர்த்தகாரர் தொடங்குகிறதை நீக்குதலை செய்து விவாதப்பட்ட 1835௵ ஆகஸ்டுமீ 8வக்கு முன் வரையில் நடந்த படிக்கு முதல் தீர்த்தம் மாலை சடகோபம் விநியோகம் முதலான யெல்லா மரியாதைகளையும் சுதந்தரங்களையும் அவாளுக்கு நடப்பிவித்துக் கொண்டு வருகிறது மல்லாமல் அவாளாலே என்னென்ன ஊழியம் செய்யப்பட்டு வந்ததோ அதுகளையும் மாமூல்படிக்கு அவாளாலே செய்வித்துக் கொண்டு வரவேண்டியது.

8. மேல் சொல்லிய படிக்கு ஆரம்பமான ஸங்கதியும் அதைக் குறித்து நடப்பித்த விவரத்தையும் கண்டு உடனே அர்ஜு பண்ணவும்.

அறியவும். 1839௵ அக்டோபர்மீ 20வ

முகாம் பள்ளி கரணை
ஆநதா பிரிஸ் துரை அவர்கள் சயன்.

True copy of the entry.
(Sd.) H. RICHERDSON,
Dpty. Collector.

1868௵ பிப்ரவரிமீ 14வ
இந்த நகல் கொடுக்கப்பட்டது.

परमार्थरक्षाया अनुबन्धः- १.

श्रीरस्तु ।

श्रीमते हयग्रीवाय नमः ।

श्रीमन्निगमान्तमहागुरवे नमः ।

श्रीकाञ्चीप्रतिवादिभयङ्कर अण्णङ्गराचार्यकृतिषु संस्कृतविभागे एकोननवतितमी कृतिः-

सभाभुजङ्गीसर्वस्वम् ।

१. श्रीमान्वेङ्कटनाथार्यश्चकासन्मम चेतसि ।
दिव्यं स्ववैभवं सुष्ठु प्रख्यापयति मन्मुखात् ॥
२. प्रसिद्धः परगोष्ठीषु प्रतिवादिभयङ्करः ।
श्रीवैष्णवानां गोष्ठीषु तद्दास इति विश्रुतः ।
३. अण्णङ्गरार्यदासोऽयं सतामाज्ञां वतंसयन् ।
सभाभुजङ्गीसर्वस्वं तनुते विदुषां मुदे ॥

प्रथमस्सर्गः ।

१. " सम्भावना यस्य हि कालकूटः
सभा भुजङ्गी कुणपं तरुण्यः " ।
इत्यस्ति वेदान्तगुरोः प्रसिद्धा
स्तुतिः, विचारोऽत्र सतां प्रसक्तः ॥
२. सभाभुजङ्गीति निबद्धवाक्ये
सभापदार्थः क इति प्रवृत्तम् ।
विमर्शमुद्दिश्य लिखामि तत्त्वं
जिज्ञासुतृप्त्यै च जिगीषुतृप्त्यै ॥
३. प्रायो हि विद्वन्मणयः प्रसिद्धाः
कुर्वन्ति वै राजसभाप्रवेशम् ।
नैवं हि वेदान्तगुरुश्चकारे-
त्यर्थोऽत्र युक्तो भवतीति केचित् ॥
४. सत्यं तु वेदान्तगुरूत्तमोऽसौ
न जातुचिद्राजसभां विवेश ।
तथाऽप्यसावर्थ इह प्रमेयो
न बोभवीतीति वदन्ति सन्तः ॥
५. अन्येषु शिष्टेष्वपि यः प्रसिद्धः
प्रभाव आसीत्तदुदीरणेन ।
न सेत्स्यति स्वामिषु वैभवस्य
भूमेत्यतस्सोऽर्थ इहास्ति हेयः ॥
६. 'सम्भावना यस्य हि कालकूट
इत्युक्तितश्चर्वितचर्वणात्मा ।
योऽर्थः, तमेनं कथयन् विपश्चित्
वक्तुर्विवक्षां न किलानुरुन्धे ॥
७. आशासितुं मङ्गलमच्युतस्य
भक्तास्तु ये संमिलिता भवन्ति ।
तेषां गणो नात्र सभापदार्थः
प्रसिद्ध्यभावादुपपत्त्यभावात् ॥
८. भक्ताग्रगण्याञ्चितदिव्यगोष्ठीं
सभापदेन व्यपदिश्यमानाम् ।
न कोऽपि जानाति ततस्तदर्थं
प्रतीतिवार्ता न किलात्र युक्ता ॥
९. अस्त्येव तत्रापि सभापदस्य
प्रयोग इत्यभ्युपगम्यतेऽपि ।
तथाऽपि सोऽर्थोऽत्र न चिन्तनार्हः
यतोऽस्य नास्त्येव हि योग्यताऽत्र ॥
१०. नित्यं हरिध्याननिषण्णचित्तैः
भक्ताग्रगण्यैर्बहुभिश्च साकम् ।
स्थातुं प्रयातुं च दृढानुरागः
स्वामी सभां तां विसृजेत्कथं नु ॥

११. अत्यन्तमुद्देश्यतमा हि सेयं
गोष्ठी गुरूणां गुरुभक्तिभाजाम् ।
तस्यां भुजङ्गीत्वमतिः कदाऽपि
श्रीदेशिकस्य प्रभवेन्न चित्ते ॥

१२. वृथाव[illegible]विजल्पकानां
ततिस्सभेत्युच्यत इत्युशन्ति ।
आस्तामसावर्थ इहास्य किं वा
सौवादवं स्यादिति चिन्तनीयम् ॥

१३. यत्सर्वथा स्वामिषु न प्रसक्तं
तस्य प्रतिक्षेपणतः प्रभावः ।
न कोऽपि साध्येत तथाच सोऽर्थः
सर्वात्मनाऽप्यत्र लगेन्न बुद्धौ ॥

१४ एवञ्च नो राजसभा न चापि
भक्तौघगोष्ठी नच शुष्कवाचाम् ।
नृणां ततिश्चात्र सभापदार्थ
इत्युक्तमासीदथ चावधेयम् ॥

१५. जिगीषया वा व्यवहारदाक्ष्य
प्रकाशनेच्छावशतोऽथ वा ये ।
मिलन्ति वादाहवबद्धशूराः
तेषां समैवात्र सभापदार्थः ॥

१६. तस्यां सभायां प्रविवेश नासौ
वेदान्तसूरिस्सुगुणो महात्मा ।
इत्येव वक्त्यत्र सभाभुजङ्गी
त्यनेन वाक्येन नुवन् महात्मा ॥

१७. सिद्धान्तभूतेऽत्र समञ्जसेऽर्थे
येषां मनोऽस्त्याविलमेव कामम् ।
तान् सुप्रसन्नानिह कुर्वतो मे
प्रामाणिकोक्तीः परिशीलयध्वम् ॥

१८. यदा हयग्रीवमुपास्त शैले
वेदान्तसूरिस्तु तदाऽस्य चित्ते ।
विदग्धगोष्ठीसमराङ्गणेषु
वादाहवेच्छा प्रबला विरेजे ॥

१९. न तत्र सन्देहलवोऽपि कस्या
प्युदेति, निस्संशयमेव तत्रः ।
यतो हि सोऽयं हयवक्त्रमुद्दि–
श्याभ्यर्थनं तादृशमेव चक्रे ॥

२०. “ निरोधा [illegible]देषु नाथ
विदग्धगोष्ठी समराङ्गणेषु ।
जिगीषवो मे कवितार्किकेन्द्रान्
जिह्वाग्रसिंहासनमभ्युपेयाः ॥ ”
“ स्वामिन् समाजेषु समेधिषीय
स्वच्छन्दवादाहवबद्धशूरः । ”
इत्यादिगीर्भिः प्रकटीकृतं तत्
को निह्नुते कौतुकमेतदीयम् ॥

२१. लेभे फलं चाशु तथैव सोयं
जिगाय तांस्तान् कवितार्किकेन्द्रान् ।
उपाधिबृन्दानि च विन्दते स्म
तदा तथानाम रुचिर्जजृम्भे ॥

२२. वादाहवे ब्राह्मणभङ्गकर्ता
परेतभूमौ बत कङ्कगृध्रैः ।
असेवितः पादप एव जाये–
तेति प्रमाणं तदनु व्यचिन्ति ॥

२३. यदा किलास्मिन्वचनेऽवधानं
न दत्तमासीत् कवितार्किकार्यैः ।
स्वच्छन्दवादाहवबद्धशूरै–
स्तदा बभूवे, न ततः परस्तात् ॥

२४. सद्दर्शनस्थापनकौतुकेन
स्वच्छन्दवादाहवकेलितृष्णा ।
युक्तैव कामं त्विति केचिदूचुः
कामं तथेत्यभ्युपगम्य वच्मि ॥

२५. किं दर्शनस्थापनकौतुकेन
वेदान्तसूरिः कवितार्किकेन्द्रैः ।
साकं समासाद्य विवादगोष्ठीं
वादाहवं चक्र इति प्रमृश्यम् ॥

२६. सिद्धान्तरक्षा न हि काऽपि सिध्येत्
भङ्गेन तेषां कवितार्किकाणाम् ।
सिध्येत्तु कामं कवितार्किकेभ–
हर्यक्षविख्यातिविशेष एकः ॥

२७. अद्यापि गद्वाल्वनपर्तिमैसूर्
संस्थानविद्वत्परिषत्सु गत्वा ।
वादाहवं ये कलयन्ति तेषाम्
उद्देश्यमध्यक्षितमेव सर्वैः ॥

२८. एतादृशप्रक्रिययैव नूनं
वेदान्तसूरिश्च सभा बभाज ।
वादांश्चचक्रे विविधान् विचित्रान्
सर्वत्र जैत्रत्वमवाप च द्राक्

२९. यदैष आचार्यपदप्रतिष्ठां
नागात्तदानीं भृशमेवमासीत् ।
पश्चादपीदृग्रुचिराविरासी–
दित्युक्तिरार्यस्य विदूषणं हि ॥

३०. सिद्धान्तसंरक्षणबद्धदीक्षैः
वादाहवः कार्य इति ब्रुवद्भिः ।
वेदान्तसूरेः कवितार्किकेन्द्रैः
जातो विवादो न तथेति बोध्यम् ॥

३१. अहं कवीन्द्रोऽस्म्यहमेव तर्के
विशिष्टविद्वानिति हि प्रसिद्धिम् ।
अवाप्तुमिच्छन् विततान वादान्
स वेङ्कटेशः कवितार्किकेषु ॥

३२. इति ध्रुवं तत्पदभक्तिनिघ्नैः
विवेकिभिस्साधुभिरभ्युपेत्यम् ।
नैवान्यथा वक्तुमिह प्रसक्तिः
तत्त्वार्थ एवं हि चकास्त्यकम्प्यः ॥

३३. आदौ स सर्वासु सभासु कामं
विवेश वादाहवकौतुकाढ्यः ।
तन्निह्नवे नैव हि कोऽपि दक्षः
तादृश्यभूत्तत्समयप्रणाली ॥

३४. श्मशानभूमौ तरुभावचिन्ता
तदा न जातेति वदन्ति सन्तः ।
यदा तु जाता तदनु क्षणेन
स्वयं जहौ सर्वसभाप्रवेशम् ॥

३५. अथास्य कीर्तिर्विमला जजृम्भे
सभाभुजङ्गीति नुतिश्च जज्ञे ।
इतीदृशं तत्त्वमिहाविदन्तो
लिखन्तु कामं च वदन्तु हेयम् ॥

३६. श्रीदेशिकानां मनसस्स्थितिः प्रा–
गासीद्विरुद्धाऽथ बभौ विशुद्धा ।
इत्येतदाचार्यपरम्परासं
तत्त्वं ससंवादमहो प्रमाणैः ॥

३७. "रङ्गास्थाने रसिकमहिते रञ्जितशेषचित्ते
विद्वत्सेवाविमलमनसा वेङ्कटेशेन"चेति ।
तैरेवोक्तं हृदि दधति ये तेऽवगन्तुं समर्थाः
पश्चात्तेषामजनि धिषणा सात्त्विकी तात्त्विकीति ॥

३८. पिष्टं पिष्टं पुनरपि मुहुः पिंष्म एव प्रकामं
तत्त्वार्थेयं लगतु कलुषस्वात्मनां चेतसीति ।
एवंचेदप्यहह यदि ते न प्रसीदन्ति तर्हि
प्रायश्शोच्या न खलु विशयस्तादृशां मूर्खतायाम् ॥

३९. आदौ यस्मिन् सदसि भगवान्वेङ्कटेशोविवेश
ज्ञेयं कीदृक्तदिति निपुणैः किंफलं तस्य चेति ।
एषा चिन्ता पथिकवचनै नैंव कार्या परन्तु
त्रय्यन्तार्योदितफणितिभिर्ह्येव कार्या सुधीभिः ॥

४०. "अगणि सदसि सद्भिर्यस्समस्यासहस्री
कविकथकमृगेन्द्रस्सर्वतन्त्रस्वतन्त्रः ।"
इति कथितमुदारं स्तोत्रभाष्यावसाने
हृदिविलसतु पद्यं पण्डितानां समेषाम् ॥

४१. समस्यासहस्रीत्युपाधिस्तु यस्यां
सभायां समासाद्यतेस्मास्मदार्यैः ।
न तस्यां मनागप्यहो दर्शनार्थ-
प्रचारप्रसक्तिर्भवितीति बोध्यम् ॥

४२. एवंच श्रीनिगममकुटाचार्यवर्यैर्युवत्वे
वादद्यूतं बहुतरसदस्स्वाहितं सादरं यत् ।
श्रीमद्रामावरजमुनिसद्दर्शनं रक्षितुं त-
न्नैवेत्येतन्मितमतिभिरप्याशु विज्ञातुमर्हम् ॥

४३. ख्यातिप्रेप्सुः परमकृततद्वादयुद्धं कवीन्द्रै-
रन्यैश्चेति प्रथिततरमेवैतदस्यां जगत्याम् ।
श्रीभट्टार्यप्रभृतिभिरहो नैष पन्था हृदाऽपि
ध्यातः, श्रीवैष्णवगुरुवरास्तादृशा एव सर्वे ॥

४४. वेदान्तार्यप्रकृतिरपरा ख्यातिलिप्सुस्स आसीत्
त्रिंशद्वर्षावधि, तत उपर्यार्यवर्यान् समीक्ष्य ।
तेषां चर्यां स्वयमनुचकारेति संश्रावयन्ति
प्राज्ञाः प्रामाणिकपरिबृढास्तद्वचः श्रद्दधीय ॥

४५. काञ्चीक्षेत्रात्स खलु गतवान् वादयुद्धाय रङ्ग-
क्षेत्रं निश्चप्रचमिदमिति प्रोचुषामुक्तिरिष्टा ।
तस्मिन्काले न किल स गुरोःपीठमातस्थिवानि-
त्येतत्तत्त्वं खलु सुविशदं नैतदन्यैःप्रकम्प्यम् ॥

४६. सङ्कल्पसूर्योदयनाटकस्थ-
श्रीसूक्तिभूतैर्गुरुशिष्यवाक्यैः ।
निर्धार्यमाणं रुचिरार्थतत्त्वं
निष्पक्षपातैर्हृदि धारणीयम् ॥

४७. आचार्यपीठस्थितिभाज आर्याः
जिगीषवो नैव सभां विशेयुः ।
इत्येष शास्त्रार्थ इहाविचाल्यः
तमेव तन्नाटकसूक्तिराह ॥

४८. एतद्विरुद्धं निगमान्तसूरिः
न कर्तुमीष्टे गुरुपीठभागी ।
प्रतिष्ठितस्सन्निति घोषयामः
शृङ्गाटकेषूद्धृतबाहवो भोः ॥

४९. बाल्ये स्थितिर्या निगमान्तसूरेः
आसीदहो सैव निजायुरन्तम् ।
नित्यानपायाऽभवदित्युशन्तः
कामं तथैव प्रवदन्तु हन्त ॥

५०. नैतेन तद्वैभववर्णनं स्यात्
निकर्ष एवाविशयं प्रसिध्येत् ।
हा! हन्त तद्भक्तिजुषां सतां वाक्
एतादृगर्थं न वदेत्कदाऽपि ॥

५१. सिद्धान्तरक्षाविधये स वादान्
चक्रे न तद्दोष इति ब्रुवन्तः ।
प्रतिष्ठितानां गुरुतल्लजानां
निष्ठाविशेषान् न विचिन्तयन्ति ॥

५२. श्रीयामुनार्यादि गुरूत्तमानां
चर्यासु निष्कल्मषबोधहीनाः ।
जनाः प्रसीदन्त्विति बोधयामो
द्वितीयसर्गेण तदर्थतत्त्वम् ॥

इति सभाभुजङ्गीसर्वस्वे प्रथमस्सर्गः ।

अथ द्वितीयस्सर्गः ।

५३. सिद्धान्तरक्षणार्थं
दुर्वादिबुधौघजुष्टपरिषत्सु ।
अपिच सतां गतिरुचिते-
त्येवं शास्त्रेण केनचित्सुगमम् ॥

५४. विप्र वादेन जयन्
परेतभूमौ प्रजायतेवृक्षः ।
इत्यपि च शास्त्रमन्य-
द्विभाति वादस्य वर्ज्यताबोधि ॥

५५. तदिदं शास्त्रद्वितयं
श्रीमद्वेदान्तदेशिका एव ।
सम्यग्विचारयन्तो
निर्णयमत्रावतारयामासुः ॥

५६. आर्याः प्रतिष्ठिता ये
रजसस्तमसश्च दूरगास्सन्तः ।
निष्कृष्टसत्त्वनिधय
स्ते वादसभासु न व्रजेयुरिति ॥

५७. परमतभङ्गरहम्ये
सङ्कल्पार्कोदयाख्यकृतिरत्ने ।
अन्यत्र चापि निर्णय
एष विभात्यप्रधृष्य एव परम् ॥

५८. ये खलु विशिष्टशिष्टा-
स्तेषां वादाहवस्तु न न्याय्यः ।
सत्यावश्यकभावे
छात्रद्वारा तु वादिनः क्षेप्याः ॥

५९. इत्येवमुक्तकण्ठं
तस्मिन् ग्रन्थद्वये च गुरुचरणाः ।
निष्कृष्य ह्यनुजगृहु-
स्तथा च तत्रत्यसूक्तयः प्रेक्ष्याः ॥

३०. (एतद्व्याख्यावसरे
ताः खलु सूक्तय उद्धृता दृश्याः ।
आन्ध्रद्राविडहिन्दी-
भाषात्रितयेऽपि चात्रिख व्याख्याः ॥)

६१. श्रीयामुनार्यवर्याः
श्रीमद्रामानुजार्यवर्याश्च ।
श्रीभट्टार्याश्च सभा-
मविशन् खल्विति वदन्ति कतिचिदिह ॥

६२. तदिदमविमृष्टभाषित-
मित्युपपद्य ब्रवीमि तत्त्वमिह ।
आपातदृष्टिमात्रा
त्सहसा कथितं कियत्क्षणस्थायि ? ॥

६३. श्रीयामुनार्यवर्यो
बाल्ये विद्यार्थितादशायां हि ।
न वयं कवयस्त्वित्या-
द्युक्त्वा प्रविवेश परिषदं द्विषताम् ॥

६४. नैतदुदाहरणार्हं
यतो हि नैतत्प्रतिष्ठिताचरितम् ।
तैरेव यामुनार्यैः
प्रतिष्ठितैर्नैव वाद आरचितः ॥

६५. यो यादवप्रकाशः
काञ्च्यामसदर्थकथननिरतोऽभूत् ।
तस्य सकाशमुपेतै–
रपि खलु नैतैरकारि वादकथा ॥

६६. रे जाल्म यादवाख्य
प्रलपसि किमिहेति वादमुत्थाप्य ।
जेतुं यामुनमुनयः
किं न हि शक्ताः ? तथापि तन्नाभूत् ॥

६७. किं वा निदानमत्रे-
त्यालोच्येत प्रमाणशरणैश्चेत् ।
सर्वात्मनाऽपि वादो–
विगेय इत्येव धारणा सुगमा ॥

६८. रामानुजार्यलिप्सु–
र्यामुनयोगी तु यादवेन सह ।
वादकथां यदि कृतवान्
स्यात , तर्ह्यविलम्ब्य कार्यसिद्धिस्स्यात् ॥

६९. वादाहवप्रसक्ति-
र्नाभूदित्यादिकथनमिह विफलम् ।
वादेन विप्रविजयः
पातकमित्येव यामुनो मेने ॥

७०. श्रीभट्टपादचर्या–
मप्यथ संचिन्तयन्तु साधु बुधाः ।
अतिबाल्य एव सोऽयं
महान् प्रतस्थे विनेतुमिति हि कथा ॥

७१. तदपि न वादसभायां
प्रवेशरूपं , तथा न जघटे हि ।
यतिपतिनिदेशमेवा–
वतंसयन्तस्समागतास्तइमे ॥

७२. तत्र न च वादयुद्धं
प्रवर्तते स्मेति वेदितव्यमहो ।
अतिमधुरसूक्तिनिशमन-
मात्रेणैव हि ननाम वेदान्ती ॥

७३. अथ वा सिध्यतु तुमुलो–
वादाहव एव तत्र वृत्त इति ।
तत्तु प्रतिष्ठितत्व
प्राप्तैः प्रागेव वृत्तमिति वेद्यम् ॥

७४. यद्यज्ञमूर्तिमजय
द्भाष्यकृदाचार्य इत्युदीरयथ ।
तत्राप्यवधेयमिदं
सभाप्रवेशस्तु नैव जघट इतिं ॥

७५. श्रीभाष्यकारमठमे-
त्यैत्य प्रश्नांश्चाकर स हि विद्वान् ।
प्रश्नानां प्रतिवचना-
न्यनुजग्राह क्रमेण यतिराजः ॥

७६. विजिगीषया प्रवृत्तिं–
र्वाग्युद्धार्थप्रवृत्तिरपि नेह ।
आसीद्यतीश्वरणा-
मतश्च नावद्यगन्धकणिकाऽपि ॥

७७. स्वावसथमेत्य किमपि
प्रष्टुर्विदुषो मतान्तरस्थस्य ।
प्रतिवचनदानमुचितं
तस्यापि निषेधशासनं नैव ॥

७८. तत्तादृशा प्रणाल्या
समजायत यज्ञमूर्तियतिवरयोः ।
संवाद इत्यभिज्ञै–
र्विज्ञेयमतो विसृज्यतां तदिदम् ॥

७९. "शेत्तार् तिरलळियें" ति
श्रीगोदासूक्तिगूढतात्पर्यम् ।
आदाय यत्तु केचिद्
ब्रुवते तत्रापि साधु निगदामः ॥

८० तत्र "शेरुच्चेय्यु" मिति
प्रोच्य ततः "कुत्तमोन्निलाद" विति ।
कथनान्निरवद्यत्वं
तस्मिन्कार्ये तु निपुणनिर्वाह्यम् ॥

८१. सङ्कल्पसूर्यकथित–
प्रक्रियया रामशास्तृमुनिनीत्या ।
शिष्यद्वारा कलनं
यत्तु तदेवात्र सुवचमनवद्यम् ॥

८२. अथ वाऽद्वारककृत्यं
काममिहोक्तं भवत्वनेन च किम्? ।
तादृगधिकारिवर्गो
नैवास्ति भुवीति न खलु कोऽप्यूचे ॥

८३. साधारणाधिकारि–
क्रियाऽपि कथ्येत तत्र तत्र किल ।
अस्मिन् गाथाखण्डे
सैवाभिहितेति वदितुं योग्यम् ॥

८४. अनुकल्पमुख्यकल्पौ
शास्त्रैः कथितौ चकासतः कामम् ।
शिष्टाग्रेसरमणयो–
जहतो ह्यनुकल्पमाद्रियन्तोऽन्यम् ॥

८५. सिद्धान्तरक्षणार्थे
वादाहवकरणमतिनु न हि मुख्यः ।
कल्पः, तदिदं परमत-
भङ्गरहस्योक्तिविशदमेव ननु ॥

८६. निजधर्मदारभोगो–
न शास्त्ररुद्धो नचापि नरकाय ।
शास्त्रविहितोऽपि सोऽयं
परमैकान्तिभिरुपेक्ष्यते गर्ह्यः ॥

८७. गर्ह्यमपि तमिममार्याः परिगृह्णन्तीति तिष्ठतादेतत् ।
तत्त्यागिशिष्टवर्यैष्वभ्यर्हितता हि निह्नवानर्हा ॥

८८. सर्वविधाभ्यर्हिततां
दधतो निगमान्तदेशिकान् प्रति या ।
उदिता "सभाभुजङ्गी"–
त्युक्तिस्सैषा विशेषतो ध्येया ॥

८९. विश्वामित्रकुलीनेनेति यदास्ते तदेतदवधेयम् ।
तं मुनिमनुकुल्याहं साक्षान्न विशामि सद इति ह्याह ॥

९०. परमतभङ्गस्योक्तौ निगमनवाक्यं च नियतमवधेयम् ।
किं नैष वीतरागो वैदिकवर्यस्त्रयीशिरोगुरुराट् ॥

९१. जंबालैरिति गीतासंग्रहरक्षावसानपददृष्ट्या ।
साक्षाद्वादोन्नयनं नैव न्याय्यं तथा न तस्यार्थः ॥

९२. शस्त्राशस्त्रीत्यपि खलु सतत्यामभ्यधायि, किं तेन ।
शस्त्रप्रहारयुद्धं समजनि? कविवाक्यफक्किकाखलु सा ॥

९३. अथवा गुरुपीठस्य
प्राप्तैः प्राक्कलिकी तु या चर्या ।
सैव कथितेति भाव्यं
प्रमाणलक्षणैः प्रतीततत्त्वार्थैः ॥

९४. श्रीरङ्गे ये महान्तो गुरुवरचरणा वादगोष्ठीं न भेजु-
स्तेषां सामर्थ्यभूम्नि क्वचिदिह न कथं चिद्विशङ्कया परंतु ।
अप्रासत्वावसायद्रढिमवशत एवार्थवर्ग गरिष्ठाः
वादे वैरस्यमापुस्तदिदमविदुषां दूषकाणां गिरो धिक् ॥

९५. कांचीतो वेदचूडागुरुवरचरणा रङ्गधाम प्रयाताः
वादे व्यातेनिरेचेदिह किमु गदितुं योग्यमित्यामृशन्तु ।

तद्यैतैस्तार्किकेन्द्रैर्गुरुवरपदवी नाश्रिता, रङ्गभाज-
स्त्वाचार्याः स्वीयशिष्यं तमिममुपहरन्तिस्महीत्येव सिध्येत्॥

९६. अथ श्रीपरकालसंयमिवरा वानाद्रियोगीश्वराः
श्रीलक्ष्मी नरसिंहसंयमिवराश्चोत्तुङ्गविद्वत्तमाः ।
वादे चापि विचक्षणाः परमतध्वंसेऽप्रतिद्वन्द्विनः
किं त्वेते न हि वादिसंसदि हृदाऽप्यातन्वते स. [ङ्गतिम्॥

९७. श्रीरङ्गे कतिपयवर्षतः पुरस्तात्
वादार्थं कतिचिदुपागताः परे ते ।
श्रीलक्ष्मीनृहरियतीन् समाह्वयंस्ते
नागच्छन् विवदितुमित्यतिप्रसिद्धम् ॥

९८. किं वा ते न पटुवियो भयाकुलाः किम्
नो वादस्समुचित इत्यतो हि नायन् ।
तादृक्षु प्रचुरयशस्सु सात्त्विकेषु
प्रागल्भ्यक्षतिकथनं महापराधः ॥

९९. तुरीयाश्रमस्थास्त एते हि तस्मात्
सभां नोपयाताः तदेतद्धि युक्तम् ।
गृहस्थो हि वेदान्तसूरिर्यतिर्नो
कथं ह्येष वादाहवादुद्विजेत ॥

१००. इति प्रोच्यमानं वचश्चापहास्यं
यतिभ्योऽपि चाभ्यर्हिते देशिकेन्द्रे ।
जघन्यत्वविज्ञापनं युष्मदीयं
न कश्चिद्विवेकी तदेतत्सहेत ॥

१०१. श्रुतप्रकाशिकाकृतोऽपि वादयुद्धसंसदि
स्वयं न सङ्गता इति प्रकाशितं परैरिदम् ।
भृशं हि सत्यमेव तत् , न ते भिया तथा स्थिताः
श्मशानपादपत्वदा क्रिया ह्यसाविति स्थिताः ॥

१०२. तदात्वे श्रीरङ्गे गुरुचरणपीठस्थितिजुषो
महाचार्याः श्रीमन्निगममकुटार्यं बुधमिमम् ।
परान् वादे जेतुं यदि नियमयन्ति स्म कृपया
तदा तच्छिष्यत्वं कविकलभसिंहेऽत्र सुदृढम् ॥

१०३. शिष्यद्वारा गुरवः
कामं कुर्युर्विवादरणशन्तिम् ।
इति सङ्कल्पार्कोदय-
फणितिस्त्वेव प्रमाणमिह परमम् ॥

१०४. गभीरदिव्यसूक्तिकत्रयीशिरोगुरोर्वरैः
अनर्गलं विनिर्गलद्भिरद्भुतैर्वचोऽमृतैः ।
अनर्घसौरभं दधन्मदीयदिव्यमानसं
कदाऽपि नैवं चिन्तयेत्प्रमाणतर्कदूरगम् ॥

इत्थमण्णङ्गराचार्यो विद्वद्राज्ञां वतंसयन् ।
सभाभुजङ्गीसर्वस्वं सतां भोग्यं व्यजिज्ञपत् ॥
नभस्यमासि श्रोणायां व्ययाब्दे देशिकोत्तमान् ।
ध्यायता दासदासेन कृतेयं कृतिरेधताम् ॥

इति श्रीकाञ्चीप्रतिवादिभयङ्कर
अण्णङ्गराचार्यकृतिषु
सभाभुजङ्गीसर्वस्व
समाप्तम् ॥

Srinivasa Press, Gorinta. V 49. (350)

ஸ்ரீ:

உத்யாநசிக்ஷா — 2.

இரண்டாவது மலர்

ஸம்பாதகர் :—(பண்டித. கோமடம். ஸம்பத் குமார ஸ்ரீநிவாஸாசாரியர்.)

25—11—1946

1. உத்யாந பத்ரிகையின் பலவகை விபரீதங்களை முன் மலரில் விவரித்தோம். மாதந்தோறும் இம்மலர்கள் வெளிவருமென்று குதூகலங்கொண்ட பல பண்டிதர்கள் நமக்கு முன்னதாகவே சந்தாப் பணமனுப்பித் தங்கள் அபிநிவேச மிகுதியை மிக மிகக் காட்டிவிட்டார்கள். முன் மலரிலேயே நாம் "இது சமயங்களில் வெளிவந்துலவும்" என்று பிரசுரித்திருக்கிறோமாதலால் மாதந்தோறும் இது வெளி வராவிடினும் அவசியமான சமயங்களில் தவறாது வெளிவரும். நேற்று வெளிவந்த உத்யாந பத்ரிகையில் [19—11, 12ல்] காணும் அவத்யங்களெல்லாம் இங்குக் களைந்தொழிக்கப்படுகின்றன.

2. இதில் விகர்த்தா என்பது முதல்வியாஸம். "கரணம் காரணம் கர்த்தா விகர்த்தா கஹநோ குஹ:" என்று ப்ரஸித்தமான ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ச்லோகத்தில் விகர்த்தா என்ற திருநாமத்திற்கு இதர மதஸ்தர்கள் எழுதியிருந்த பொருளைத் தள்ளி பட்டர் உண்மைப் பொருளைத் தமது பாஷ்யமான பகவத் குண தர்ப்பணத்தில் விவரித்தருளியிருப்பதாவது :—

"........ஹர்ஷ சோகாதிபி: விகுர்வாண: விகர்த்தா; ஸ்வார்த்த ஹர்ஷ சோகாத்ய பாவேபி பரார்த்த தத்ப்ரஸக்தி: அதோஷ:; அத்யதா பரது:க்க து:க்கித்வாதயோ குண: கதம் அஸ்ய ஸ்யு:" என்பதாக.

3. இந்த ஸ்ரீ ஸூக்திகளால் எம்பெருமானுக்குப் பரதுக்க துக்கித்வமென்பது சிறந்த குணமேயன்றி ஹேயமான தோஷமன்று என்பது பிறரால் அசைக்கவொண்ணாதபடி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதென்பதை அபக்ஷபாதிகளான விவேகிகள் நன்கறிவார்கள். இப்படியொரு ஸ்ரீ ஸூக்தி அவதரித்துள்ளதென்பதையறியாத சிலர் பல நூற்றாண்டுகட்கு முன்னே, எம்பெருமானுக்கு (ப்பர துக்க) துக்கித்வம் சொல்லவே தகாதென்றும் அகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநனை பெருமானிடத்தில் இஃது இருக்கவே முடியாதென்றும் எழுதி வைத்தார்கள். அவர்களை ஆதரிப்பதாகக் கூறும் ஒரு வகுப்பினர் இந்த பரது:க்கது:க்கித்வ வாதத்தை நிந்தித்தும் பரிஹஸித்தும் வந்தார்கள். பகவத் பாஷ்யகாரருடைய ஸ்தானத்தில் அபிஷிக்தரான பட்டருடைய திவ்யஸூக்திகள் இவ்விஷயத்தில் இப்படி யன்றோ அவதரித்துள்ளன! என்று ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி போல்வார் [மேற்குறித்த ஸஹஸ்ரநாம பாஷ்ய ஸ்ரீ ஸூக்திகளை] எடுத்துக் காட்டிய பின்பு அவர்கள் திகைத்து நின்றார்கள். அரசாணிபாலை வேங்கடாத்வரி யியற்றிய லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் "ஸ்ரீமத் ராமாவரஜஸரணிம்" இத்யாதி ச்லோகத்தின் வியாக்யானத்தில் ஸுஸ்பஷ்டமாக பட்டரையே ப்ரதிபக்ஷியாக்கி யெழுதியிருப்பதால் அப்படிப்பட்ட பட்டருடைய வாக்கைப்பற்றி நமக்கு அவசியமொன்றுமில்லை யென்று உதறித்தள்ள நினைத்தவர்கள் மேற்குறித்த ஸ்ரீ ஸூக்திகளையும் தூஷித்தே யொழிந்தார்கள். சிலர் அப்படி ப்ரத்யக்ஷமாக தூஷிக்க அஞ்சி அதைப்பற்றி ஒன்றும் வாய் திறவாமலே உதாஸீநர்களாயிருப்பர். இந்த உத்யாந பத்ராதிபரான டி. டி. தாதாசார்யர் வாத்ஸல்ய விஷயத்தில் ச்ருதப்ரகாசிகையை முக்த கண்டமாகவே தூஷித்ததுபோல இவ் விஷயத்திலும் பட்டர் ஸ்ரீ ஸூக்தியை தூஷிக்க ருசியுடையவராயிருந்தும் ஒவ்வொன்றிலும் தூஷகனென்றே பெயர் வாங்குவதா! என்று வெருவி இதை ஒருவாறு நிர்வஹித்து விடுவோ

மென்று கிளர்ந்து ஏதோ எழுதியுள்ளார். இவர் அவசியம் பதில் எழுதி உய்ய வேண்டிய விஷயங்கள் பல கிடக்க அவற்றையெல்லாம் விட்டு அப்ரஸக்தமாக இவ்விஷயத்தைக் கிளப்பிக் கொண்டு தடுமாறுகின்றார். "ஸ்ம்ருதஸ்ய த்ருஷ்டஸ்ய வா உபேக்ஷாநர்ஹத்வ மேவ ப்ரஸக்தி:" என்பர். அஸ்து. எம்பெருமானுக்குப் பரதுக்க துக்கித்வமுண்டு என்பதை இல்லை செய்ய இவராலாகாதன்றோ. இங்கு இவருடைய வளவளப்பு முழுவதும் பொருளற்ற பேச்சே. இவரது பத்திரிகையை ஒரு வித்வான் கையில் தந்து இதிலுள்ள விஷயங்களை ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாக எடுத்துரைக்க வேணுமென்று வேண்டினால் இத்தனையும் சுஷ்க வாக் ஜாலமென்பது அப்போதன்றோ மிக விளங்கும். இங்கு இவருடைய வாதம் இவ்வளவே;—துக்கம் எவ்விதத்திலும் ஹேயமேயாகும். அபுருஷார்த்தமேயானவிது அகில ஹேயப்ரத்யநீகன் பக்கலிலே ஸம்பவிக்கவே மாட்டாது. பரதுக்கப்ரயுக்தமான துக்கம் ஹேயமன்று என்றால் அப்போது துக்கமென்கிற சொல்லையிட்டு வ்யபதேசிக்கவே கூடாது; துக்கம் என்றால் அது ஹேயமாக வல்லது வேறுவிதமாக இருக்க முடியாதன்றோ. துக்கமாயும் அஹேயமாயு மிருக்கின்றதென்றால் 'நெருப்பாயும் குளிர்ந்ததாயுமிருக்கிறது' என்பது போலே வ்யாஹத பாஷணமேயாகும் ஆனால் *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித: என்கிற ஸ்ரீ ராமாயண வசனத்தாலும் மேலெடுத்துக் காட்டிய பட்டர் ஸ்ரீ ஸூக்தியாலும் பகவானுக்குப் பரதுக்க துக்கித்வம் ஸ்பஷ்டமாகக் காண்கிறதே, அது குணமென்றும் காண்கிறதே, இதற்கு என்ன ஸமாதானமென்னில், பரதுக்க துக்கித்வ மென்பதற்கு 'பரதுக்கத்தைக் கண்டு உண்டாகிற துக்கமுடைமை' என்று அர்த்தமன்று; பரதுக்கத்தையே ஸ்வதுக்கமாகவுடைமை யென்று இவ்வளவே அர்த்தம்.— என்பதாக.

4. இது முழுவதும் தவறு. வாத்ஸல்ய விஷயத்திற் போலவே இவ் விஷயத்திலும் எம்பெருமானுக்கு குணோத்கர்ஷத்தைப் பொறுது அபகர்ஷத்தையே ஸ்தாபிப்பதுதான் தேறி நிற்கும். துக்கம் எந்த விதத்திலும் தோஷமே யென்கிற இவர் 'ஆனந்தம் எந்தவிதத்திலும் குணமே' என்று ஆக்ரஹிப்பவருமாகிறார். ஒருவன் பகவதபசாரப்பட்டும் பாகவதாபசாரப் பட்டும் ஆனந்தித்தானாகில் அவ்வானந்தமும் குணமேயோ வென்று இவரையே கேட்போம். அஸுர ராக்ஷஸர்கள் பரஹிம்ஸை புரிந்து அபரிமிதமான ஆனந்தமடைகிறார்கள். அவ்வானந்தம் ஹேயமன்று குணமேதான் என்று இவருடைய ஸித்தாந்தம் போலும். ஸதாசார்ய ஸன்னிதியில் அர்த்த சிக்ஷை பெறுத பாவமென் கொல்? * தாங்யேவ பாவோபஹதாநி கல்க: இத்யாதி கமநிகைகளை யுணரப் பெறவேணுமிவர். உண்மையில் குணத்வ தோஷத்வங்கள் இவர் நினைக்கிறபடியில்லை. உபாதி பேதத்தாலே தோஷமே குணமாகவும் குணமே தோஷமாகவும் கொள்ளப்படுகிற முறை எங்குமுள்ளது. ஈர நெஞ்சினர் இள நெஞ்சினர் என்னும்படியான புகழ் வாய்ந்த தயாளுக்களுக்குப் பிறர்நோவுகாரணமாகத் தோன்றும் இரக்கம் பரம குணமேயல்லது தோஷமன்று. ப்ரத்யுத அந்த இரக்கமுண்டாகாமையே மிகப் பெரிய தோஷமாகும். இது மநுஷ்யர்களுக்கும் பகவானுக்கு மொக்கும். மநுஷ்யர்களுக்கு இது குணமானாலும் பகவானுக்கு மஹா தோஷமேயாகுமென்று இவர் எழுதியிருப்பதானது பட்டருடைய ஸ்ரீஸூக்தி நடையாடாத நாட்டிலே விலைச் செல்லுமே யல்லது மற்றெங்கும் செல்ல கில்லாது. பட்டர் ஸ்ரீஸூக்தியையே மூலமாக இட்டுக்கொண்டு அதற்கு வியாக்கியானம் செய்வதாகப் புகுந்து இங்ஙனே அஸம்பத்தமானவற்றை யெழுதுவது அல்பஜ்ஞர்களைக்கூட விப்ரலம்பம் செய்யமாட்டாது. திருவாய் மொழியில் (4-10-2) *அவன் மேவியுறை கோயில் என்ற விடத்து ஈட்டில் பட்டருடைய திவ்யஸூக்தி விவரணம் பாங்காகவுள்ளது. அதை எடுபார்த்து அபார்த்தம் செய்யப் புகாமல் ஒரு ஸதாசார்ய ஸந்நிதியிலே கேட்டுத் தெளிவது. உலகில் இள நெஞ்சுடைய ஒரு உத்தம புருஷனுக்கு ஒரு குணத்தை இவர் ஒப்புக்கொண்டு அந்த குணம் * ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரனிடத்தில் கிடையாதென்று கைகூசாது எழுதுகின்றார். குணப்ரகரணத்திலே கூறப்பட்ட

* வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: என்கிற ச்லோகத்தினால் இராமபிரானுக்குத் தெரிவிக்கப்பட்ட து:க்கிதத்வம்—துயருற்றவர்களின் துயரத்தைக் காண்பதனாலுண்

டானதேயன்றி வேறன்று. அன்றியும் இராமபிரான் அங்கு ஸாதாரணமாக வொரு உத்தம மநுஷ்யனாக வைத்துப் பேசப்பட்டிருக்கிறானேயல்லது பரப்ரஹ்மமாக வைத்துப் பேசப்படவுமில்லை. அந்த ஸ்ரீராமபிரானிடத்தில் கண்ட குணத்தையே ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பக்கலிலே நிரூபித்திருப்பதனால் உலகில் உத்தம புருஷர்கள் திறத்துக் காணும் குணங்களே பரம புருஷனிடத்தில் நிரூபிக்கத் தகுந்தவை என்கிற கொள்கையே பட்டர் முதலான ஸகல ஆசார்யர்களுக்கு மிருந்ததாக நன்கு அறிய வேணும். ஆகவே, உலகில் மனிதர்களிடத்துள்ள குணம் வேறாகவும் எம்பெருமானுடைய குணம் வேறாகவுங் கொண்டு இவர் எழுதியுள்ளதெல்லாம் அஸம்பத்தமே. "குணமென்று பேர் பெற்றவற்றில் அங்கில்லாததொன்றுண்டோ?" என்று பட்டரருளிச் செய்ததாக (4-10-2) ஈட்டிலுள்ள ஸ்ரீஸூக்தியன்றோ சாஸ்த்ரார்த்த ஸாரம். *ஸம்ஜாத பாஷ்ப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ* என்பது முதலான பல பல பிரமாணங்களையும் விபுலமாக வெடுத்து நிரூபித்துக் காட்டி ஸ்ரீ அண்ணங்கராசாரியர்ஸ்வாமி எழுதியுள்ளவற்றுக்கு ஒரு பதிலுமெழுதாமல், தம் மதத்திற்கு இன்னது ஸாதகம் இன்னது பாதகம் என்றுகூடத் தெரிந்து கொள்ளாமல் அந்தோ இவரெழுதுவது என்னே! இவரெடுத்த ஸஹஸ்ரநாமத் திருநாமங்கள் மூன்றில் கர்த்தா என்பது முதல் திருநாமம்; அதற்கு பட்டர் அருளியுள்ள பாஷ்யத்தையும் இவர் விவரித்துள்ளார். பலனையநுபவிப்பவன் ஸர்வேச்வரனென்று முடிக்கிறார். இவரைப்போன்ற நவீநர்கள் கொண்டிருக்கும் கொள்கைக்கு இது மிகவும் விருத்தமென்பதை இவரறியவில்லையே. விகர்த்தாவுக்கு அடுத்த திருநாமமான கஹந: என்பதன் பாஷ்யத்தில் "விகர்த்தா என்கிற முன் திருநாமத்தில் தேறின மஹா குணம் வாசாமகோசரமாகையாலே அந்த குணத்தில் இப் பெருமான் இப்படிப்பட்டவனென்று ஒருவராலும் அறிய முடியாதவன்" என்று அருளிச் செய்திருப்பதை இவரேயெடுத்துக் காட்டுகிறார். இப்படி வியந்து பேசும்படியான வொரு மஹா குணம் விகர்த்தா என்கிற திருநாமத்தில் தேறியிருக்கிறதென்பது அபலபிக்க முடியாதது. இவரும் இவரைச் சேர்ந்தவர்களுமே அதை அபலபிக்கப் பிறந்தவர்களென்று ஸ்பஷ்டமாயிற்று. இப்படி ஸ்பஷ்டமாக்குவதற்காகவே இவர் இந்த ப்ரஸங்கத்தைச் செய்திருக்கிறாரிப்போது என்பதும் அறியற்பாலது.

5. விகர்த்தா என்கிற திருநாமத்தின் அர்த்தவுண்மை எப்படியாவது இருக்கட்டும்; அத்திருநாமத்தில் மஹான்களுக்கும் நிலையிட முடியாத வொரு மஹா குணம் கூறப்பட்டுளதென்று இவ்வளவையாவது இவர் அவசியம் க்ரஹித்திருக்க வேண்டுமே. அது போதும் இவருய்ய. —"அசிதவிசிஷ்டாந் ப்ரளயே ஜந்தூந் அவலோக்ய ஜாத நிர்வேதா" என்கிற வேதாந்த வாசிரியருடைய ஸ்ரீஸூக்தியையும் திரஸ்கரித்து ஓர் அர்த்த சிக்ஷை பண்ணப் புகுந்தது என்ன சிரோலிபியோ? துக்கமென்றால் அது ஹேயமாகத்தானிருக்குமென்று எழுதியிருக்குமிவர் இப்பிறப்பில் தெளிவுபெற விரகில்லையே. துக்கம் ஹேயமாவதுபோல் துக்க மூலமான பிறப்பும் ஹேயமாதலால் பகவானுடைய பிறப்பும் ஹேயமென்றிட்டு அதற்கும் வசை கூற வேண்டியவரேயிவர். இதன் விரிவு மற்றொரு காலாகும்.

6. (2) ரகுவம்சத்தில் 'ஸூஹ்மை:' என்பதுபற்றி. ஈடு முப்பத்தாறாயிரப்படி ஜீயரரும்பதவுரையில் (1-1-1ல்) "ஆத்மா ஸம்ரக்ஷிதஸ் ஸிம்ஹை: வ்ருத்திமாச்ரித்ய வைதஸீம்" என்கிற ரகுவம்ச (4—35) ச்லோகம் உதாஹரிக்கப்பட்டுள்ளது. இதில் ஸிம்ஹை: என்றிருப்பது பிசகு என்றும், ஸூஹ்மை: என்றிருக்க வேணுமென்றும், ஸூஹ்ம தேசத்து அரசர்களாலேயென்று பொருளென்றும் சென்ற வருஷத்தில் இந்த தாதாசார் திருத்தம் வெளியிட்டார். அதற்கு அப்போதே உத்யாந ஸம்வாதம் வெளிவந்து இவ் விஷயத்திலும் இவர் மறுபடியும் வாயைக் கையைத் திறக்கவொட்டாதபடி செய்திருக்கிறது. அது ஒரு வருஷமாய் விட்டபடியால் பண்டிதர்களுக்கு மறந்து போயிருக்குமென்றெண்ணி இவர் மறுபடியும் இப்போது இந்த வுபயோகமற்ற சிறு விஷயத்தை யிட்டு நீட்டி எட்டை நிரப்பியுள்ளார். இங்கிவர் எழுதுகிறார்—"ஸூஹ்மபதார்த்தம் அஜாநத்பி: ஸிம்ஹஇதி படிதம்" என்று. அதாவது, ஸூஹ்மபதத்தின் பொருளைத் தெரிந்துகொள்ளாமல் மருண்டு ஸிம்ஹமென்கிற பாடத்தைக் கொண்டார்கள் என்றபடி. இதைக் காட்டிலும் அசட்டு வார்த்தை வேறொன்றுண்டோ? ஸிம்ஹை:

என்று பாடங்கொண்டவர்கள் அச் சொல்லுக்கு சிங்கங்களென்று பொருள் கொண்டார்கள்? இது ஸர்வாத்மநா அஸம்பாவிதம். ஸிம்ஹதேசத்தரசர்களாலே என்றுதான் பொருள் கொண்டார்கள். இங்கு அர்த்தத்தில் அஜ்ஞானமாவது அந்யதாஜ்ஞானமாவது யாருக்கும் சொல்ல முடியாது. இது வரையில் ரகுவம்சம் எத்தனையோ பதிப்பு ஏறியிருக்கிறது. இருபது பதிப்புகளை நாம் ஆராய்ந்து பார்த்ததில் சில பதிப்புகளில் ஸிம்ஹை: என்கிற பாடமும் சில வற்றில் ஸும்ஹை: என்கிற பாடமும் சிலவற்றில் ஸுஹ்மை: என்கிற பாடமும் சிலவற்றில் ஸிஹ்மை: என்கிற பாடமும் ஆகவிப்படி நான்கு வகையான பாடங்கள் காண்கின்றன. அர்த்தத்தில் ஒரு விபர்யயமும் கிடையாது. "....தேசீயை: ராஜபி:" என்றுதான் எந்தப் பதிப்பிலுமுள்ளது. இவ் வர்த்தத்தில் யாரும் விஸம்வாதப்பட இடமில்லை. ஊர்களின் பெயரைப் பலர் பலவிதமாக வழங்குவது எங்குமுள்ளது. இதை உத்யாந ஸம்வாத நூல் மிகவிரிவாக விளக்கியுள்ளது. விண்ணி-வெண்ணி, ஆரம்முளை-ஆறன்விளை, திருவித்துவக்கோடு - திருமிற்றக்கோடு, திருவல்லவாழ்-திருவல்லாய், திருக்கோவலூர்-திருக்கோயிலூர், திருவெவ்வுளூர்-திருவள்ளூர், திருநின்றவூர்-தின்னனூர், சோளஸிம்ஹபுரம்—சோளங்கிபுரம் என்றிப்படிப்பட்ட பல வ்யவஹார பேதங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதும் தவிர, "ஸுஹ்மை: என்பதுதான் ஸரியான பாடமென்று நம்பிக்கையுள்ளவர்கள் ஈட்டு அரும்பதவுரையிலும் அப்படியே பாடங் கொள்ளலாம்...." இத்யாதியாக 18 வருஷங்களுக்கு முன்பே ஒரு விமர்சக மஹான் எழுதியிருப்பதும் அதில் (பக். 11, 12ல்) விவரிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிறகு இவர் வாய் திறக்கச் சிறிதேனும் இடமுண்டோ? அப்படியெழுதி யிருப்பதாகச் சொல்லப்பட்டவதில் இவர்க்கு விப்ரதிபத்தியிருந்தால் அதைப்பற்றி இவர் தாராளமாக சர்ச்சை செய்திருக்கலாம். அதைப்பற்றியோ இவர் சிறிதும் ப்ரஸங்கிக்கவில்லை. ஒவ்வொன்றிலும் வழியை விட்டு விலகிச் செல்பவர் இவர் என்பதுதானே முடிந்து நிற்கிறது. யாரோ வொருவர் ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் எழுதியிருப்பதாக 20 வரிகளை யெடுத்துக் காட்டியுள்ளார். அந்த நிரூபணத்தை ப்ராமாணிகமென்று கொள்ளவேண்டிய அவசியமிருப்பதாகவே வைத்துக்கொள்வோம்; அதுவும் இவர்க்கு விருத்தமே. இவரோ ஸுஹ்ம தேசமென்கிறார்; அவரோ ஸும்ஹ தேசமென்கிறார். Sumha desa என்று ஒரு தடவையல்ல, நான்கு தடவை யெழுதியிருப்பதை இவர் தம் கையாலெழுதி யச்சிட்டுக் காட்டிவிட்டு தம்முடைய பாடத்திற்கு அந்த ஆங்கில டிப்பணியை ஆதாரமாகக் கூறி அட்டஹாஸம் செய்கிறாரென்றால் அந்தோ இவருடைய மேதையை என்னென்பது. Suhma desa என்றிருப்பதாக இவரெடுத்துக் காட்டவில்லையே. உயிரான விஷயத்தில் உணர்ச்சி செல்லவில்லையே.

7. ஸம்ஸ்கிருத பத்ரிகையில் ஆங்கில பங்க்திகளை யெடுத்துக் காட்டினால் அவற்றின் மொழி பெயர்ப்பையும் கூடவே வெளியிட வேண்டிய அவசியமுள்ளதன்றோ. அப்படியிவர் வெளியிட்டிருந்தால் சாயம் மிக மிகக் கக்கியிருக்குமே. "ஸி என்பது பிசகு; ஸு என்பதுதான் சரி" என்று அவர் ஏதேனும் எழுதியிருக்கிறாரோ? அச் சொல்லுக்கு ஏதேனும் அர்த்தமாவது எழுதியிருக்கிறாரோ? ஏதுவுமில்லை. இந்த தாதாசார்யருடைய வாதத்திற்கு விருத்தமாக எழுதியிருக்கிறாரென்ப தொன்றேயுள்ளது. [இவர் பலகாலுமெழுதுகிறபடி ஸுஹ்மமன்று; ஸும்ஹமே யென்பதாக.] ஸிம்ஹமென்று ஸம்ஸ்க்ருத நாமம் பெற்றிருந்த தேசமே தேச பாஷையில் [திசைச் சொல் முறையில்] ஸும்ஹமென்று திரிந்து வழங்கி வந்திருக்கலாம். இருவகையான அல்லது நால்வகையான வ்யவஹாரமும் பொருந்துவதேயாம். இதில் இவர் ஒருதலையாகத் தலையிட்டது அபஹாஸ்யமே. இப்படி அல்ப விஷயங்களிலும் கைகொட்டிச் சிரிக்க நிற்குமிவர் "ஸாது அஸாது ஸர்வத்ர கிமபி ப்ரதிவக்தவ்யமிதி அபிநிவிஷ்டா: பரே" "ஆத்மநோ துருக்தஸ்ய........உத்ப்லவந்தே ப்ரமயந்தி ச" இத்யாதிகளை யெழுதியிருப்பது விரலுக்குத் தகாத வீக்கமல்லவா?

8. இங்கு மற்றொன்று மெழுதியுள்ளார்; ரகுவம்சமென்பது பரதகண்டம் முழுவதும் பிரசாரம் பெற்றது; ஈட்டு அரும்பதம் தமிழ்நாட்டில் மாத்திரம் அதிலும் ஸம்பிரதாயம் வல்லவர்களிடத்தில் மாத்திரம் பிரசாரமுடையது. ஆகவே ரகுவம்ச பாடத்திற்குத் தகுதியாக

வன்றோ அரும்பத பாடத்தைத் திருத்தவேணும்—என்று. இது மிகவும் யுக்தமான வார்த்தை. இதைக் காணும்போது நமக்கு நினைவுக்கு வந்த வொரு விஷயம் அவசியம் எழுதவேண்டியதாகிறது. சிலவாண்டுகட்கு முன் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தமது பத்ரிகையொன்றில் எழுதியிருந்ததைக் கொண்டே இஃது எழுதுகிறேன். ப்ராமாணிகர்கள் கவனிக்கவேணும். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரபாவவ்யவஸ்தையில் "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச என்றிதைக் கேட்டு துர்யோதநன் *பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந !, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம்* என்று கேட்க, *த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத், பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:* என்று உத்தரமருளிச் செய்கையாலே...." என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இந்த ஸ்ரீஸூக்தி ஸந்நிவேசத்திற்கும் மஹாபாரதத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லாமலிருக்கிறது. *விதுராந்நாநி புபுஜே* இத்யாதி ச்லோகம் முந்தினதாகவும் *த்விஷதந்நம் ந போக்தவ்யம்* இத்யாதி ச்லோகம் பிந்தினதாகவுமன்றோ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றது. மூலமான மஹா பாரதத்தில் இப்படியில்லை. உத்யோக பருவத்தில் தொண்ணூற்றோராவது அத்யாயத்தில் இருபத்தேழாவது ச்லோகமாக *த்விஷ தந்நம் ந போக்தவ்யம்* என்கிற சுலோகமும், நாற்பத்தைந்தாவது ச்லோகமாக *விதுராந்நாநி புபுஜே* என்கிற ச்லோகமும் அச்சுப் புத்தகங்களிற் காண்கிறது. *பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய* என்கிற ச்லோகம் இந்த ப்ரகரணத்தில் அடியோடு காணப்படவில்லை. விதுருடைய அடிசிலைக் கண்ணபிரான் அமுது செய்த பிறகு அப்பிரானை துர்யோதநன் அதிக்ஷேபித்துக் கேட்பதாக அருளிச் செய்கிறபடிக்கிணங்க மஹாபாரதத்தில் ச்லோகங்களின் ஆநுபூர்வியும் கதையும் அமைந்திருக்கவில்லை. ஸ்ரீ அண்ணாஸ்வாமி பலவிடங்களிற் சென்று ஓலை ஸ்ரீ கோசங்களையும் ஸம்பாதித்துப் பார்க்க, ஒன்றிலும் ரஹஸ்யத்ரயஸாரப்படி காணவில்லை யென்றும் வெளியிட்டிருக்கக் கண்டதுண்டு. மஹாபாரதமென்பது ரகுவம்ச காவ்யத்தைவிட எத்தனையோ மடங்கு மேம்பட்டு த்வீபாந்தரங்களிலும் பிரசாரம் பொலிந்தது. ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கும் ஈட்டு அரும்பதத்திற்கும் உள்ள பிரசாரம் ஸமரூபமே. "கஸ்ய கிமநுரோதேந நிர்ணய: கார்ய:" என்று எழுதியுள்ள இவர் இங்குச் செய்கிற நிர்ணயம் உலகுக்குத் தெரியவேணும். முக்கியமாக எவ்வெவ்விஷயம் ப்ரஸ்தாவிக்கப்படுகிறதோ அதில் ஒன்றுக்குக்கூட இவர் பதில் சொல்லுகிற வழக்கமில்லை ; சொல்லவும் முடியாது. மலையேறி எலி பிடிக்கிற கதையாய் புதிதாகவொன்றைக் கிளப்பி அதிலும் பங்கப்பட்டு நிற்பர். மேலெடுத்துக் காட்டிய விஷயத்தில் ஒழுங்கான ஒரு நிர்ணயம் வெளிவரவேண்டுவது உலகுக்கு எவ்வளவோ அவசியமல்லவா ? மேலே விவரித்த நிரூபணத்தைக் கண்டவுடனே தேசிக திவ்யஸூக்திகளில் அவத்யம் கூறுகின்றோமாகக் கொண்டு இவர் உபாலம்பம் செய்யவே புறப்படுவர். இந்த விஷயத்தை வெளியிட்ட அண்ணாஸ்வாமி தாமே *ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே:* என்கிற (மஹாபாரத) ச்லோகத்தைப் பற்றியும் விபுலமான ஆராய்ச்சியை வெளியிட்டிருக்கிறார். நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் தெரிவித்துள்ள அர்த்தத்திற்கும், மூலமான மஹாபாரதத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லையே ! என்றும் தமது ஆசங்கையை வெளியிட்டிருக்கிறார். இதெல்லாம் தத்வ சோதநார்த்தமான ஆராய்ச்சிகளேயொழிய ஒருதலையில் தூஷணம் காட்டச் செய்யுமாராய்ச்சியல்ல. ஸிம்ஹை: என்றல்ல, ஸௌஹ்றமை: என்றிருக்கவேணும் என்று இவர் திருத்திக் காட்டுவதனால் யாருக்கும் யாதொரு பலனும் கிடையாது. காவ்ய படநமே கதியென்றிருப்பாருங்கூட இதற்கு உகக்கமாட்டார்கள். தேசத்தின் பெயர் எப்படியிருந்தாலென்ன ? என்றே சரக்கற நினைத்திருப்பார்கள். திருவல்லிக்கேணியில் அழகிய சிங்கர் திருவீதிக்கு 'துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு' என்று பலகை போட்டு, சிறியாரோடு பெரியாரோடு வாசியறப் பல நூற்றாண்டுகளாக இப்படியே வழங்கியும் எழுதியும் வருகிறார்கள். துளசிங்கப் பெருமாளென்றால் என்ன ? என்று ஒருவர் கேட்பது ; துளசி மாலைகளை நிறையச் சாத்திக்கொள்பவர என்று ஒருவர் ஐதிஹ்யங்களோடு பதில் சொல்லுவது ; இப்படியாக அஸம்பத்தங்கள் பல நேர்ந்து கிடக்கின்றன. தெள்ளிய சிங்கமென்று ஆழ்வார் மங்களாசாஸனமாகையாலே தெளி சிங்கப் பெருமாள் காணும் என்று ஒரு மஹான் தெரிவிக்க உலகமெல்லாம் உகந்தது.

9. தேசிகனுடைய திருவவதாரஸ்தலத்தைத் தூப்புல் என்பாரும் தூப்பில் என்பாருமாக வுளர். தூ + புல், என்று கொள்வதை விட, தூப்பு + இல் என்று கொள்வது மிகச் சிறக்கும்; தூப்பாவது பரிசுத்தி; அது பெற்ற இல்—தலம்; என்றால் இது எவ்வளவு பொருத்தமாக வுள்ளது! இங்ஙனே வட தென் மொழிகளில் உலகம் மகிழவும் ரஸிகருள்ளமுருகவும் காட்ட வேண்டிய ஆராய்ச்சிகள் எண்ணிறந்துள்ளனவே. "காகஸ்ய கதிவா தந்தா: பேஷஸ்யாண்டம் கியத்பலம்" என்றாற் போன்ற விசாரங்களிலே போதுபோக்கித் திரிகின்ற விவரைப்பற்றி சோகியாதாரில்லை. "விஷாக்களையா? விளாக்கிளையா? வயாளக் கௌளையா?" என்றொரு மஹா விசாரம் கேட்டிருந்ததுண்டு. அதனோடு இதனோடு வாசியென்?

10. இவர் ப்ராமாணிகராகப் பாடத் திருத்தம் வெளியிடுபவரா யிருந்தால் ரகுவம்சப் பதிப்புகளிலேயே பலவற்றில் ஸிம்ஹை: என்கிற பாடம் காண்கையாலே அதைப்பற்றிப் பாடசுத்தி வெளியிட்டிருக்க வேண்டுமேயொழிய ஈட்டு அரும்பதத்தைப் பற்றின ப்ரஸ்தாவமே யெடுத்திருக்கத் தகாது. ரகுவம்சப் பதிப்புகளிலெல்லாம் ஸுஹ்மை: என்கிற பாடமேயிருந்து அரும்பதத்தில் மாத்திரம் ஸிம்ஹை: என்றிருந்தால் இவருடைய ப்ரவ்ருத்தி பொருந்தும். அப்படி யில்லாமையாலே இவருடைய ப்ரவ்ருத்தி ஸர்வாத்மநா அபஹாஸ்ய மாய் முடிந்தது. ஆர்ஜவமற்ற விஷயமிது.

11. இனி இந்த உத்யாந பத்ரிகையில் அடுத்த விஷயம் "மதிரேக்ஷணா—5." என்பது. இந்த தாதாசார்யர் இப்போது மதிரேக்ஷணாவைப்பற்றி ஐந்தாவது தடவையாக வியாஸ மெழுதுகிறாராம். ஐம்பதாவது தடவையாக எழுதினாலும் ஐந்நூறாவது தடவையாக எழுதினாலும் இதிலும் இவருடைய பங்கமே உலகறிய நிற்குமேயல்லாது வேறொன்றும் தேறாது. விரிவுக்கு அஞ்சாமல் இப்போது இதைப்பற்றி விசதமாக வெழுதுவோம்.

12. இந்த மதிரேக்ஷணா விசாரம் நாலைந்து வருஷமாக நடந்து வருகிறது. இதைப்பற்றி அண்ணாஸ்வாமி யெழுதிய ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு வியாஸத்திலும் தினவடங்கவே விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த விசாரத்தில் இந்த தாதாசாரியர் கல்லையங்காருடைய கண்ணைத் துடைக்க இடையில் வந்து தலையிட்டவர். அண்ணாஸ்வாமி யெழுதுவதெல்லாம் அஸம்பத்தம் என்று இவரெழுதுவதும், இவரெழுதுவதெல்லாம் அஸம்பத்தம் என்று அவரெழுதுவதும் உலகில் வாதிப் ப்ரதிவாதி லேகன முறைமையில் ஸஹஜமே. இந்த மாதிரி இருவரும் ஓயாமல் எழுதிக்கொண்டிருக்கலாம். மத்தியஸ்தர்களான பண்டிதர்கள்தாம் நிர்ணயாதிகாரிகள். மத்தியஸ்தர்களான வித்வான்கள் பலர் ஏககண்டமாக ஒரு பக்ஷத்தை அபிநந்தனம் செய்து விட்டார்களானால் உண்மையில் அது அஸமஞ்ஜஸமாக இருந்தாலுங்கூட, பல வித்வான்கள் ஒருமிடறாக இசைந்ததென்கிற காரணத்தினால் மற்றொரு தலை கைகூப்பி நிற்கவேண்டியது தவிர வேறில்லை. இந்த விசாரத்தில் அண்ணாஸ்வாமி வெளியிட்ட அர்த்தந்தான் ப்ராமாணிகமென்று இதுவரையில் பத்தொன்பது பண்டிதர்கள் பத்யரூப வ்யாஸங்களாலும் கத்யரூப வ்யாஸங்களாலும் வெளியிட்டிருப்பது அஸூயுக்களாலும் அபலபிக்க முடியாதபடி ப்ரஸித்தம். காஞ்சியில் ஒரு வித்வான் சென்னையில் இரண்டு வித்வான்கள் விஜயநகரம் சிட்டி கூடூர் ஸம்ஸ்க்ருத காலேஜ்கள், ராமதீர்த்த ஸம்ஸ்க்ருத வித்யாலயம், ஸிம்ஹாசல ஸம்ஸ்க்ருத வித்யாலயம் முதலான விடங்களில் ப்ரதிஷ்டிதர்களாக விளங்கும் வித்வான்கள் 16. ஆக 19 பண்டிதர்கள் நிஷ்பக்ஷபாதர்களாய் அண்ணாஸ்வாமியின் அர்த்தமே சிறந்ததென்று தேவநாகர லிபியிலும் தெலுங்கு லிபியிலும் தமிழிலும் வெளியிட்டிருக்குமவை விச்வப்ரஸித்தங்கள். கீழே சர்ச்சித்த ஸுஹ்மை: என்னும் விஷயத்தில் ஊர் பேரில்லாத வொருவர் ஆங்கிலத்தில் ஏதோ எழுதியிருக்கிறாரென்று அதைப் பரமநிதியாக எடுத்துக் காட்டிக் கொக்கரிக்குமிவர் ப்ராமாணிகராயிருந்தால் ஜகத்ப்ரஸித்த வித்வான்களான 19 மஹநீயர்கள் தெரிவித்திருக்கின்ற விஷயத்தில் எவ்விதமான ப்ரதிபத்தியை வஹிக்க வேணுமென்பதைத் தெரிந்து கொள்ளாதவரோ? இப்படி பல மஹநீயர்கள் அண்ணாஸ்வாமியின் அர்த்தத்தையே ஆமோதித்திருக்கிறார்களென்பது தமக்குத் தெரியாதென்று சொல்லவும் முடியாதபடி அந்த அபி

நந்தன பத்திரிகைகள் வெளிவந்திருக்கிற புத்தகங்களைத் தாம் கண்டதாகவும் காட்டிக் கொண்டே சில விஷயங்கள் எழுதியிருக்கின்றார். அதனால், "மத்யஸ்தர்களும் அபக்ஷபாதர்களுமான பல வித்வான்கள் அபிநந்தித்த அர்த்தமே அண்ணாஸ்வாமியினுடையது" என்கிற வுணர்ச்சி இவருள்ளத்தில் பதிந்திருக்கிறதென்பது அசைக்க முடியாததாயிற்று. அந்த வித்வான்கள் ஸாமான்யமான பேர்வழிகளல்லர் என்பதையும், அண்ணாஸ்வாமிக்கு வசப்பட்டு ஏதோ தாக்ஷிண்யத்தினால் எழுதுகிறவர்களுமல்லர் என்பதையும் உலகமறிந்துள்ளது. சென்னையில் பிரெஸிடென்ஸி காலேஜில் ப்ரொபஸரான வ்யாஸராஜ சாஸ்த்ரிகள் *வித்யாஸாகர—வித்யாலங்கார—மஹோபாத்யாய—சிரோமணி முதலான பிருதாவளிகளைப் பெற்றவர். இந்த மஹா பண்டிதர் எழுதி வெளியிட்டிருப்பதிலிருந்து சில வார்த்தைகளைக் குறிப்பிடுகிறேன்.

"மதிரேக்ஷண விஷயத்தில் என் மனதில் தோன்றியதை அக்ருத்ரிமமாக வெளியிட விரும்புகிறேன். இந்த விவாதம் மூன்று வருஷ காலமாகத் தொடர்ந்து வருகிறதென்பதை இப்போதுதான் கேள்விப்பட்டேன். என் ஜாகைக்கு அருகிலுள்ளவர்களும் நெடுநாளைய நண்பர்களுமான சில ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்கள் என்னிடம் வந்து இந்த மதிரேக்ஷண விஷயத்தை ப்ரஸ்தாவித்து இவ் விஷயத்தில் அண்ணங்கராசார்யருடைய மதத்தை நீங்கள் அவசியம் கண்டிக்க வேணுமென்று என்னை வற்புறுத்தினார்கள்; அவர்களுடைய பேச்சில் கௌரவத்தினால் இவ் விஷயத்தை நான் மிகவும் ஊக்கத்தோடு ஆராய்ந்தேன். இவ் விஷயத்தில் ஸ்ரீ அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் விரிவாகவும் சுருக்கமாகவும் ஆறு வியாஸங்களெழுதியிருப்பதாக அறிந்து அவற்றையெல்லாம் ஸம்பாதித்து ஓரெழுத்தும் விடாமல் பூர்த்தியாக வாசித்தேன். மிகவும் சுவை பொருந்திய இவ் விஷயத்தை எடுத்தூட்டிய ஸ்வாமிகளிடத்தில் பிராமாணிகர்களாயுள்ளவர்கள் நன்றி பாராட்ட வேண்டுவது கடமை; அஃதில்லாததோடு எதிர்வாதம் செய்யவும் புறப்பட்டிருக்கிறார்களே! இது எப்படி நேர்ந்ததென்று என்னுள்ளம் மிக வியப்படைந்தது. மதிரபதத்திற்குப் பக்ஷி விசேஷம் அர்த்தமென்பதைத் தெரிந்து கொள்ளாமையினாலே சிலர் வேறு விதமாக வியாக்கியானம் செய்தார்களென்று நிபுண நிரூபகர்களான அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகளெழுதியிருப்பதை நான் மிகவும் ஆமோதிக்கிறேன்."

என்று அந்த சாஸ்த்ரிகள் வடமொழியில் நெஞ்சு கனிந்து எழுதியுள்ளார்கள். (2) மதராஸில் *வைத்யரத்ந பண்டித ஆயுர்வேத பூஷண ஆயுர்வேதாசார்ய-இத்யாதி பிருத பூஷிதராய் விளங்கும் M. துரைஸ்வாமி ஐயங்கார் A. K. A. C என்கிற மஹநீயர் எழுதி வெளியிட்டிருப்பதில் இன்னும் அதிகமான விசேஷங்கள் அமைந்துள்ளன. விஷயத்தினுட் புகுந்து அவர் நன்கு விவரணம் செய்துள்ளார். மதிர பதத்திற்கு 'ஸுரா' என்கிற அர்த்தம் சொல்லுவதைவிட பக்ஷி விசேஷார்த்தம் சொல்லுவதுதான் மிகவும் சுவையுடைத்தென்று நிரூபித்திருப்பது தவிர, "இது என்னுடைய யுக்திவாதமேயன்று; ப்ராமாணிகமேயென்று நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன்;.....வைந்யக சப்தஸிந்து என்கிற பெரிய கோசத்தில், (மதிர-மதிரா) என்கிற இரண்டுக்கும் மத்யார்த்தமும் பக்ஷி விசேஷார்த்தமும் ஸப்ரமாணமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றும் எழுதியுள்ளார். இன்னமும், "மஹாப்ராஜ்ஞராய் கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீ காஞ்சீ பட்டப்பா தாதாசார்யர் முதலான மஹான்கள் பக்ஷிவிசேஷப் பொருளையே கொண்டார்களென்பது ப்ரஸித்தம், அவ்வர்த்தத்தைப் பண்டித வுலகமெல்லாம் கௌரவத்தோடு ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டது" என்றும் எழுதியுள்ளார். (3) ஷை பட்டப்பா தாதாசார்யரிடத்தில் ஸாஹித்யம் முதலானவை வாசித்தவரும் ஸ்ரீ காஞ்சியில் ப்ராமாணிக பண்டிதோத்தமராய் விளங்குபவருமான ஸ்ரீமத் இளங்காடு ரங்காசார்யர் ஸ்வாமியும் அண்ணாஸ்வாமியின் நிரூபணமே ப்ராமாணிகமென்று வெளியிட்டிருக்கிறார். ரஸிக ரஸாயநத்தில் அதை ஸகல பண்டிதர்களும் நன்கு கண்டு உண்மையுணர்ந்திருக்கின்றார்கள். உண்மையில் ரஸிகரஸாயந திவ்ய க்ரந்தம் வெகு ஆச்சரியமானது. மிக்க சுவையுடைத்து. இந்த தாதாசாரியருடைய ஞானச் சாயங்களை அலசியலசிக் காட்டுவது அதுதான். அதில் விஷய நிரூபணத்தின் அழகு

இருக்கட்டும் ; ரஸிக ரஸாயநமென்று க்ரந்தநாமம் அமைத்தவழகு அற்புதம்! அற்புதம்!! என்று ஷ்டி இளங்காடுஸ்வாமி உருகுகிருர். அவர் மாத்திரமேயன்று ; பண்டித வுலகம் முழுதுமே உள் குழைந்து கிடக்கிறது. அந்த புஸ்தகத்தின் முடிவில் "ரஸிக ரஸாயநமேதத் நித்யம் ப்ராதர் நிபீய ரஸிகாக்ர்யா:" என்று எழுதியிருக்கிறபடி ரஸிக பண்டிதர்கள் யாவரும் [இந்த D. T. யுமுட்பட] அதை அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாகக் கொண்டு பருகிக் களிக்கிறபடியை என்னென்போம்! 48 பக்கங்கள் கொண்ட அந்த திவ்ய க்ரந்தத்தில் இந்த தாதாசார்யருடைய சூதுவாது பேதுகள் யாவும் வெட்ட வெளிச்சமாக விவரிக்கப்பட்டிருக்கின்றனவன்றே. அதில் ஒரெழுத்துத் தவறுமல் அத்தனையும் ப்ராமாணிகமே யென்று ப்ராமாணிகாக்ரேஸரரான இளங்காடு ஸ்வாமி பரவச் செய்த பின்பு இந்த அப்ராமாணிக சிரோமணியின் ரோதனங்களுக்குச் செவி கொடுப்பாரார்? அந்த ரஸாயநத்தில் 22-வது பக்கத்தில் முதல் இரண்டொரு வரிகளுக்கு ஏதோ அசட்டு பதில் எழுதின விவர் அதன் மேலுள்ள-இளங்காடு ஸ்வாமியைப்பற்றின பங்க்திகளுக்கு இவர் என்ன பதில் எழுதினர். என்ன எழுத முடியும்! மதிரார்த்த விஷயத்தில் நிகண்டு விருப்பதை நிரூபித்துக் காட்டி யிருக்கின்ற மத்யஸ்த பண்டிதோத்தமரான M. துரைஸ்வாமி ஐயங்காரைப் பற்றி இவர் ஏதோ இகழ்வாக எழுதியிருக்கிருர். இதுவா பண்டித க்ருத்யம்? 'சில கோசங்களில் ஸ்த்ரீலிங்கமான மதிராசப்தம் பக்ஷி விசேஷார்த்தகமாகக் காண்கிறதே யொழிய பும்லிங்கமான மதிரசப்தம் பக்ஷி விசேஷார்த்தகமாகக் கோசங்களில் காணவில்லையே' யென்று இந்த தாதாசார் எழுதியிருந்தார். இதுதான் இவருடைய பெரிய வாதம். அப்படிக்கு நன்ருகக் கோசமிருக்கின்றதென்று ஒரு மத்யஸ்த பண்டிதர் நிரூபித்தால் அதன் உண்மையைப்பற்றி இவர் சர்ச்சை செய்ய வேண்டுமே தவிர அதைவிட்டு இகழப் புகுந்தது ஆர்ஜவமாகுமோ? "வயமபி கதஞ்சித் பக்ஷிவிசேஷார்த்த அப்யுபகமே லஜ்ஜா ஏவ" என்று இப்போது தலைவிதியாக எழுதுகிருர் பாவம்! "பறவைப் பொருள் இருந்தால் இருக்கட்டுமே; ஸுரா என்னுமர்த்தமும் ஏன் இருக்கலாகாது? அவ் வர்த்தத்தை தூஷிக்க வழியில்லையே" என்றும் எழுதுகிருர். இது மிகுந்த விப்ரலம்பம். மதிராக்ஷி என்கிற வில்விடத்தில் வேறு எந்த அர்த்தம் பொருந்திலும் பொருந்தும்; கள் என்னுமர்த்தம் அடியோடு பொருந்தாதென்பது பன்னிப் பன்னி நிரூபிக்கப்பட்டிருந்தும் இவர் யார் கண்ணில் மண்ணைத் தூவ நினைத்து "பரை: ஸுரார்த்தே ந கச்சந தோஷோ வக்து மசக்யத" என்றெழுதுகிருர்? கள் என்னுமர்த்தம் அஸம்பத்தமென்பதை இங்கும் சுருக்கமாக நிரூபிக்கிருேம் காண்மின்; (1) மல்லிநாதர் எடுத்துக் கழித்த அர்த்தமது. (2) ஸ்ரீ ராமாயண வியாக்கியான மொன்றிலும் கொள்ளப்படாதது. (3) சாகுந்தலத்திலேயே *மதிராயத நயநா மென்று காளிதாஸரே பிரயோகித்திருப்பதனுல் இங்கே கள் என்னுமர்த்தம் சொல்ல முடியாதென்பதை இவருமிசைந்து தீரவேண்டியிருப்பதாகிறவிது முக்கியமான காரணம். கள் போலே நீண்ட கண்களையுடையவள் என்று சொல்லப் போகாதே. ஆயத என்பதை விட்டுத் தாண்டி அந்வயிக்கிறதென்பதும் அஸப்யமேயன்றே. யாரோ வொரு வ்யாக்யாதா மாத்திரம் கள் என்னுமர்த்தத்தைக் கூறியிருப்பதுண்டு; அவருக்கே அது ருசித்திருக்கவில்லை யென்பதும் அங்கேயே தெரிகிறது. கல்லய்யங்காரென்கிற பிருதைக் கள்ளய்யங்காராக ஆக்கிக்கொள்ள வேண்டாமென்று பலகால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கள் என்பது தவிர வேறு எந்த அர்த்தம் சொன்னலும் ஸம்மதமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே என்றைக்கோ தள்ளுண்டு போன கள்ளர்த்தம் இன்னமும் ஜீவித்திருப்பதாக இவர்கனக் கண்டு எழுதுவது என்னே!

13. க்ருஷ்ண ஜில்லா, கோதாவரி ஜில்லா, விசாகபட்டணம் ஜில்லா, நைஜாம் இலாகா இவ்விடங்களில் ராஜஸ்தான பூஜிதர்களும் ராஜகீய வித்யாலய ப்ரதிஷ்டிதர்களுமான பல மஹா பண்டிதர்கள் அண்ணஸ்வாமியின் நிரூபணமேதான் அழகியதென்று நிரூபித்து வெளியிட்டிருக்குமவை இந்த தாதாசாருடைய நித்யாராதனப் பெட்டியிலுமேறி யிருக்கின்றன. இப்படி உலகமெல்லாம் போற்றும் பொருளே அண்ணஸ்வாமியினுடைய தென்று தேறியிருக்க, இதற்கு விபரீதமாக இவர் எத்தனை நாள் எவ்வளவு எழுதிக்கொண்டிருந்தாலும் அவ்வளவும் மேன்மேலும் இவருடைய சாயங்களெல்லாம் அலசியலசி வெளியிடப் பெறுவதற்கே ஹேதுவாகு மென்பதில் ஒருவர்க்கும் ஸந்தேஹம் வேண்டா. தப்பும் தவறுமாக இந்த தாதாசார் எழுதிவரும் விஷயங்களை யநுமோதிக்க ஒரு விவேகியாவது கிடைப்பரோ?

14. அண்ணாஸ்வாமியின் ஸ்ரீஸூக்திப்ரதீபத்திலே சலப வ்ருத்தியை யடைந்தும் உயிர்த்திருக்கிறசிலர் இவருடைய வாக்குக்களை அநுமோதிக்கக் கூடும். மதுராந்தகம் வீரராகவாசாரியரென்பவர் [திருவையாறு காலெஜ் பண்டிதர்] மதிப்புரை தந்ததாக வெளியிட்டதொன்று பட்டபாட்டைத் துவரைப்பிரான் திருவருளிலே காணலாமே. "விவாத விஷயம் இன்னது, அதற்கு இன்னபடி யெழுதவேணும்" என்பதைக்கூட அறியகில்லாதவருடைய மதிப்புரையன்றோ இவர்க்குக் கிடைப்பது. அது கிடக்கட்டும்.

15. மதிரபதத்திற்கு நாட்ய சாஸ்த்ரத்தில் ஒரு அர்த்தம் கூறியிருப்பதை ஒரேயொரு வ்யாக்யாதா காட்டினார்; அதுதான் ரஸவத்தரம் என்று கொள்ளுகிறவர்கள்—இவ்வர்த்தத்தைக் காட்டாமல் கள் என்னும் மர்த்தத்தையும் மற்றோரர்த்தத்தையும் காட்டின வ்யாக்யாதாக்களிடத்திலே அஜ்ஞானத்தை இசைந்து தீரவேண்டியது எப்படி தலைவிதியாயிற்றோ அப்படியே பக்ஷிவிசேஷார்த்தத்தைக் காட்டாமல் வேறு அர்த்தங்களைக் காட்டின வ்யாக்யாதாக்களின் மீதும் அஜ்ஞானத்தை இசைந்து தீரவேண்டிய கடமை இவர்க்கும் கல்லையங்காருக்கும் அவர்ஜநீயமாயிற்றென்று பண்டிதர்கள் நிரூபித்திருப்பது ஸாரமான விஷயம். இந்த உத்யாநர் இவ்விஷயத்தில் தம் வாழ்நாள் உள்ளவரை ஓயாது எழுதட்டும்; மறுநாளே நாமும் எழுதுவோம். இவர் ஆறுமாதம் ஒருவருஷம் ஆலோசித்து எழுதுமதெல்லாம் அரைநாளில் தீருகிறபடியைக் காணுதாரில்லை. கரடிக்குப் பிடித்த விடமெல்லாம் மயிர் என்கிறபடியாக இவருடைய பதிப்பில் பார்த்த விடமெல்லாம் அபத்தமும் அஸம்பத்தமும் தவிர வேறு கிடையாதென்பதை இதுவரை எவ்வளவு வெளிப்படுத்தியாயிற்று! இப்போதும் பலகாட்டுகிறேன். ப்ரஸ்தாவ உத்யாந பத்ரிகையிலும் ஸுபாஷித நீவீ வியாக்கியானம் இரண்டே பக்கம் வெளிவந்துளது. இதில் முதற் பக்கத்தில் (Page 149-ல்) கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீ ஸூக்தி யொன்று பட்டப்பா தாதாசார்யரால் எடுத்தாளப்பட்டிருக்கிறது. அதை இந்த உத்யானர் பாழ்படுத்தி யிருக்கிற பரிபவத்தைப் பாருங்கள். இங்கு "க்ருத்யாக்ருத்ய விவேகாந்ததயா" என்பது தேசிகர் திருவாக்கில் வெளிவந்த பாடம். இதுதான் பொருத்தமானது. இதை யிவர் தமது விபரீத ஜ்ஞான வைபவத்தால் வேறுபடுத்தி யச்சிட்டிருக்கிறார். "க்ருத்யாக்ருத்ய அவிவேகாந்ததயா" என்றிருப்பதைக் காணுங்கோள். 'இதென்ன இப்படி?' என்று ஒருவர் நேரிலும் கேட்க, அதற்கு பதில் கூறினாராம்—'ஒருவனுக்கு க்ருத்யாக்ருத்ய விவேக மிருந்தால் அவனை எப்படி அந்தனைச் சொல்ல முடியும்? க்ருத்யாக்ருத்யங்களில் அவிவேகமுள்ளவனை யன்றோ அந்தனென்னத் தகும்; க்ருத்யாக்ருத்ய அவிவேகேந ஹேதுநா அந்ததயா என்று ஸ்வரஸமாக விவக்ஷித்து ஸ்வாமி ஸாதித்திருந்ததைச் சிலர் தவறாக அச்சிட்டிருந்ததை நானும் அப்படியே யச்சிட்டு விட்டால் எனக்கென்ன பெருமை?' என்றாராம். திருக்கச்சி நம்பிகள் தேவராஜாஷ்டகத்தில் "க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம்" என்று ஸாதித்திருக்கிறாரே யென்று சொல்ல; "அது பாலிச பாடம்; அங்கும் இப்படித்தான் யெரியோர்கள் திருத்துகிற வழக்கம்" என்று சொல்லிவிட்டு "க்ருத்யாக்ருத்ய விவேக மிருந்தால் எப்படி அந்தனைச் சொல்ல முடியுமென்று இதை ஆலோசிக்கக்கூடாதா?" என்று இதையே எட்டு தடவை திருப்பித் திருப்பிச் சொன்னாராம். ஆளவந்தாரும் *அவிவேககநாந்த திங்முகே என்று ஸ்பஷ்டமாகவே கூறியிருக்கிறார்' என்று ப்ரபல ப்ரமாணமும் காட்டிவிட்டாராம். இப்படி சிறு விஷயங்களிலும் வ்யதிகரண ஜ்ஞானமே வடிவெடுத்த விவர் தம்முடைய சரக்குகளெல்லாம் ஒவ்வொன்றாக வெளியாவதற்குப் பாடுபடுவதும் நல்லதுதான். ஸமாநாதிகரண ஜ்ஞானமென்றால் இப்படி யிருக்கும், வ்யதிகரண ஜ்ஞான மென்றால் இப்படி யிருக்கும் என்பதில் முதலிலேயே வ்யுத்பத்தியுமற்ற விவர் ஒருவரை நோக்கி 'ஸமாநாதிகரணைல்பவைதுஷ்ய விப்ராஜிதேஷு" என்றெழுதி யிருப்பது எவ்வளவு வியக்கத்தக்கது!

16. "பதே பதே அந்ருதவாதிநோவஞ்சநசீலஸ்ய" என்று தம்மைப்பற்றித் தாமே யெழுதிக்கொள்ளுகிறார். ஸ்வஸ்ய என்றும் பக்கத்திலேயே போட்டு விட்டார். இப்போது ஸ்வ பதார்த்தம் நானல்லேன் என்பார். இவர் எப்படியாவது சொல்லிக் கொள்ளட்டுமே; உண்மையில் பள்ளமுள்ள விடத்தில் தானே தண்ணீர் தேங்கி நிற்கும். "தாநந்தரேண

நிபதேத் க்வ நு மத்ப்ராணம:" என்றாப் போலே அந்த விசேஷணங்கள் இவரைத் தவிர்த்து வேறெந்த வ்யக்தியில் அந்வயிக்க முடியும்? கித்யமாநயோ: என்றிருந்ததை வித்யமாநயோ: என்று மருண்டு அச்சிட்டதோடு நில்லாமல் 'ஒரு தேசிகாக்ரேஸரர் என்னுள்ளத்துள்ளே ...' இத்யாதியாகப் பச்சைப் பசும் பொய் யெழுதி உலகை வஞ்சித்துப் பெற்ற பரிசுகள் போதுமே.

17. "அத்ர அஜ்ஞாநம் அத்ர தந்தநம் அத்ர வஞ்சநா அத்ர தத்த்வகதநம் இதி தர்ப்பணஇவ ப்ரஸ்புடம் பச்யந்த:" என்கிற வாக்யத்தைப் பாருங்கள். த்வேஷ புத்தியுள்ளவர்கள் பிறரை நோக்கி யெழுதுமதில் அஜ்ஞானம் வஞ்சநா இத்யாதிகளை எழுதுவது ஆச்சரியமேயன்று. ஆனால், *யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே என்ற கணக்கில் தத்வகதநமும் பிறர் பக்கலிலே யுள்ளதென்று இசைய வேண்டிற்றாயிற்று இவர்க்கு. எடுத்து நிரூபிக்கப் புகுமளவில் ஒவ்வொன்றும் தத்வகனமாகவே முடிந்து நிற்கு மென்பதில் ஐயமுண்டோ?... "ஸ்வயபக்ஷஸ்ய விஜய இதி லோகவ்யாமோஹநோபயோகி இந்த்ரஜாலம்" என்று சிறிதும் லஜ்ஜை யின்றி இவரெழுதுகிறார். "ஒவ்வொரு விஷயத்திலும் D. T. பங்கமடைந்து நிற்கிறதே! அந்தோ இதென்ன தலைவிதி!" என்று உலகம் முழுவதும் உள்ளபடி யுணர்ந்து சொல்லா நின்றதே. ஒரு விஷயத்திலாவது இவர் ஸ்வபக்ஷ விஜயத்தைக் கனவிலாவது காண முடியுமோ? இந்த மதிரேக்ஷண விஷயத்தில் முதல் முதலாக அண்ணாஸ்வாமி யெழுதி வெளியிட்ட வியாஸம் எங்கும் பரவியுள்ளது. அதில் ஒருவிதமாகவும் பிறகு வேறொரு விதமாகவும் எழுதப்பட்டிருந்தால் இப்போது இந்த உத்யாநர் எழுதுகிற சுஷ்க வாக்ஜாலங்களுக்குச் சிறிதாவது அவகாச மிருக்கும். ஆரம்பமே பிடித்து அண்ணாஸ்வாமி என்ன எழுதி வருகிறாரென்றால், சாகுந்தல வியாக்கியானத்தில் காணும் அர்த்தங்களை யெடுத்தெழுதி விட்டு உடனே "வஸ்துதஸ்து அத்ர மஹாகவி விவக்ஷிதம் அர்த்தம் ஏவம் கதயந் பஹுச்ருதா மஹாமதய:" என்று தொடங்கி பக்ஷிவிசேஷார்த்தத்தை நிரூபித்திருக்கிறார். தாமாக ச்ரமப்பட்டுக் கோசங்களில் கண்டறிந்து எழுதுவதாக ஒருநாளும் தெரிவித்திருக்கவில்லை. கள் என்னு மர்த்தத்தை ப்ரவசனம் செய்து கொண்டிருக்குமவர்களிடங்களிலே வந்து நீங்கள் சொல்லுகிற பொருள் தப்பு என்றும் கண்டிக்கவில்லை. பஹுச்ருதர்களான மஹாமதிகளிடத்தில் தாம் கேட்ட அர்த்தத்தில் தமக்கு ஆதராதிசயமிருந்தபடியாலே அதைத் தாம் ப்ரவசனம் செய்தார். அதன்மேல் ஆக்ஷேபம் செய்தவர்கள்—"பஹுச்ருதா: மஹாமதய: ஏவம் கதயந்தி" என்றெழுதி யிருப்பது பொய் யென்றும் ஸ்வகபோல கல்பிதமான அர்த்தமிது என்றும் எழுதி யிருந்தபடியாலே அந்த பஹுச்ருத மஹாமதிகள் இன்னாரென்பதை அண்ணாஸ்வாமி ஸஸாக்ஷிகமாக நிரூபித்திருக்கிறார். அது மெய்தானா என்பதைப்பற்றி இந்த D. T. விசாரிக்கப் பரிச்ரமமும் கொண்டார். ஸ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாசாரியரைக் காஞ்சிக்கு அனுப்பி ஸாக்ஷிகளான மூவரையும் விசாரிக்கச் செய்தார். தாமும் நேராக விசாரித்தார். இது அசைக்க முடியாத தத்துவம் என்று தெரிந்து கொண்டார். சில விஷமங்களும் செய்யப் பார்த்தார், செய்தும் பார்த்தார்; ஸ்ரீ இளங்காடு ஸ்வாமி பட்டப்பா தாதாசார்ய குமாரர், வாரதிஸ்வாமி குமாரர் ஆகிய இவர்கள் புஸ்தக ஸாக்ஷ்யத்துடன் உண்மையைத் தெரிவித்தவர்களாதலால் ஏதேனு மொரு வழியாலே இவர்களை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு வேறு விதமான ஸாக்ஷ்யம் வாங்கி வெளியிட்டு க்ருதக்ருத்யராக ஆய்விடலாமென்றெண்ணி அந்த விஷம வழியில் வெகு முயற்சிகள் செய்தார். அவர்கள் இவர்க்குத் தெரிவித்ததாவது—'ஓய் வேலையற்றவரே! இது ஸம்ப்ரதாயார்த்தச் சண்டையன்று; அப்படிப்பட்ட விஷயமாயிருந்தால் வயம் பஞ்சோத்தரம் சதம் என்று ஒன்றுசேர்ந்துகொள்வோம்; இவ்விஷயத்தில் [மதிரார்த்தத்தில்] பல பேர்களுடைய அஜ்ஞானத்திற்கும் ப்ரமத்திற்கும் திருப்புட்குழி ஸ்வாமி முதலான மஹான்கள் சோகித்திருந்தது எங்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால் உண்மைக்கு மாறாக வுணர்த்த எங்களாலாகாது' என்று திடமாகத் தெரிவித்தார்கள். இதை யெல்லாம் அண்ணாஸ்வாமி ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதி வெளியிட்டிருக்க, உலகுக்கு ஒன்றுமே தெரியாதுபோல் பாவித்து இவரெழுதுவதைப் பாருங்கள்—"அஸ்மதீயம் ப்ரதிலிகிதம் ஸஹக்ருத்வா அநுவாசயத்பி:

ஸ்வயம் ஜ்ஞாஸ்யதே" என்றெழுதுகிறார். இவர் எதற்காக என்ன எழுதுகிறா ரென்பதே ஒருவர்க்கும் தெரியாத வகையில் [ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் ந ஜாநாதி என்கிற வகையிலும்] கிடக்க, "ஸஹக்ருத்வா அநுவாசயத்பி:" இத்யாதிகளால் இவர் பாரிப்பது நபும்ஸகனுடைய ஸீமந்தோத்ஸவ மநோரத ஸமசீலமே யன்றோ. 'இன்னதைக் குறித்து நான் இன்னது எழுதி யிருக்கிறேன்' என்று இவர் தாமாகவே சொல்லிக் கொண்டு வெளிவரட்டும். கல்லேயங்கார் போன்ற இருவர் மூவர் இவருடைய உக்திகளுக்கு உகக்கக்கூடும். அவ்வுகப் பின் வாழ்வும் இரண்டொரு நாளே. சென்ற ஆடி மாதத்தில் மன்னார்குடி அக்ரஹார ஸதஸ்ஸுக்கு இவர் வந்திருந்தும் அநாரோக்ய அபிநயத்தாலே தலைமறைந்திருந்து ஒரு ஸமயம் தலைகாட்டினபோது நூறு வித்வான்கள் இவரைச் சூழ்ந்து கொண்டு "இதுவரையில் அண்ணா ஸ்வாமியால் உம்முடைய அஸம்பத்தங்களெல்லாம் அலசியலசிக் காட்டப்பட்டிருக்கின் றனவே; ஒன்றுக்காவது நீர் ருஜுவான பதில் தெரிவித்தீரோ? தெரிவிக்கத்தான் உம்மாலாகுமோ? ஆகுமானால் எங்களுக்குத் த்ருப்திகரமாக நாலுவார்த்தையாவது இன்று சொல்லுமே" என்றார்கள். "இப்போதெனக்கு உடம்பு ஸௌக்கியமில்லை; எல்லாம் க்ரமேண தெரிவிக்கிறேன்; தெரியவரும்" என்று சொல்லிப் போய்விட்டார். இவ் விஷயத்தை நான் கர்ணாகர்ணிகயா கேட்டு எழுதுகிறேனில்லை; ஸாக்ஷாத்தாக அந்த கோஷ்டி யில் இருந்து அநுபவித்தவன் நான்.

18. இவ்வுத்யாநர் இன்ன மொன்று எழுதுகிறார் பாருங்கள்—"தத்க்ருஹம் கத்வா கோசமாதாய இதமிஹாயமர்த்த உக்த இதி தத்ஸ்தலப்ரதர்சநம் வா கர்த்தவ்யம்" என்கிறார். காஞ்சீபட்டப்பா தாதாசார்யர் திருமாளிகையிலிருந்து அவர் கையாலெழுதின புஸ்தகத்தை யெடுத்து இளங்காடுஸ்வாமி அனைவர்க்கும் காட்டியாயிற்றே. அதற்கு இவர் என்ன செய்தார். "நான் அப்ராமாணிக மாகவே நடந்து கொண்டேன்; க்ஷமிக்க வேணும்; இப்போது ஸமாஹித மநஸ்கனானேன்" என்று தெரிவித்திருந்தாரானால் இவ்வொன்றைக் கொண்டே இவரை ப்ராமாணிக ரென்று உலகம் நம்பும். போற்றும். இவரோ அஜ்ஞானம் தந்தநம் வஞ்சநா என்பவற்றை யெல்லாம் இன்னமும் தமக்கே உரியதாக ப்ரசுரப்படுத்தி வருகிறார். "புஸ்தகத்தில் அப்படியிருக்கலாம்; இருந்தாலென்ன? மஹான்களும் மோசம் போவதுண்டாகையால் இங்கு பட்டப்பா தாதாசாரும் மோசம் போனாரென்றுதான் கொள்ளவேணும்" என்று வெள்காமல் எழுதியிருக்கிறார். தாமொருவரே ஒன்றிலும் மோசம் போகாத மஹா மேதாவி யென்றல்லவோ இவருடைய அபிமானம். வங்காக்ஷர முத்ரித கோசம், பரவஸ்து கோசம்,....இத்யாதிகளைப் பற்றின தத்துவங்களெல்லாம் உலகுக்குத் தெரிந்தே தீரும். ந்யாய பாஸ்கரத்திற்குக் கண்டன மெழுதின வொரு வித்வான் அதில் மங்கள ச்லோகத்தில் அத்யாஹாரம் தோஷ மென்று பிரபலமாக எழுதினார். அதற்கு மறுப்பெழுதின வொரு மஹாவித்வான் "அத்யாஹாரமோ லக்ஷணையோ தத்த்வேந தோஷமல்ல" என்று விரிவாக நிரூபித்து சாஸ்த்ரஜ்ஞர்களை மகிழ்வித்திருக்கிறார். அந்த திவ்யக்ரந்தம் அச்சாகி வெளிவருவதற்கு மஹான்கள் முயன்றிருக்கிறார்கள். விரைவில் வெளிவரும். அதனாலும் இவருடைய கொக்கரிப்புகள் தலைமடியும்.

19. இன்னமொன்று எழுதுகிறார்—"ஏதை: நிரநுக்ரோசம் விநாச்யமாநாநாம் ஸ்ரீஸூக்தீநாம் சாஸ்த்ரார்த்தாநாஞ்ச ப்ரதிஸமாதாநே ப்ரவ்ருத்தா அபி வித்வதக்ரேஸரா: உத்விக்நா ஏவ மத்யே விரமந்தி; ந து சாஸ்த்ரார்த்த நிரூபணசக்த்யா" என்று. ஸ்ரீஸூக்தி களையும் சாஸ்த்ரார்த்தங்களையும் மனம்போன போக்கில் நாசமாக்குபவர் இவரே யென்பது உலகமெல்லாம் பரவியுள்ளது. திருத்த வேண்டாத ஆசார்ய ஸ்ரீஸூக்திகளையும் கவி வசனங்களையும் கோணாமாண திருத்துவதும் அதை ஸமர்த்திக்க மனம்போனபடி சாஸ்த்ரார்த்தங்களைக் கல்பிப்பதும் இவருடைய பணியாக உலகமறிந்துள்ளது. "க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி" என்றவிடத்து கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை வீணாகத் திருத்தினரிவரென்பதை முன்மலரில் காட்டினோம். அதுகண்டு உண்மை தெளிந்து அநுதாபங்கொண்ட இவர் தாம் திருத்தியது தப்புதானென்று தெளிந்து அதைத்

தாமாக வெளியிட்டுக்கொள்ள வெள்கி வேறொருவர் பெயரால் அடுத்த உத்யாநத்தில் "அந்தத் திருத்தம் வேண்டாம்" என்று வெளியிட்டுக் கொண்டார். திருத்தம் வேண்டாமைக்குத் தெரிவித்த ஹேது எப்படியாவது இருக்கட்டும். ஒரு ஊருக்குப் பலவழிகள் இருப்பது போல உபபத்திக்கும் பல வழிகளிருக்கலாம். அந்த வழி ருஜுவான வழியன்றென்பதே எமது அபிப்ராயம். அது கிடக்கட்டும். திருத்தினது பிசகுதானென்பது வெளிவந்துவிட்டது. அதைத் தம் பெயரினாலேயே வெளியிட்டுக் கொண்டால் ப்ராமாணிகத்வம் சிறிது விளங்கி யிருக்கும். ஸ்ரீமதுராந்தகம் வீரராகவாசார் பெயரால் அதை வெளியிடுவித்தார். இதமுபலக்ஷணம். இப்படியாக ஸூக்திகளை யெல்லாம் துருக்திகளாக ஆக்குவது இவருடைய பணி யென்பதாகவன்றோ உலகறிய நிற்கிறது. சாஸ்த்ரார்த்த விபர்யாஸங்களுமிப்படியே. சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷத்தில் ஸ்ரீபராசர பட்டரையும் நம் பிள்ளையையும் ச்ருத ப்ரகாசிகாசார்யரையும் விட வேறொருவர் தேறப்போகிறாரா? அப்படிப் பட்ட மஹாசார்யர்கள் நிஷ்கர்ஷித்தருளின அர்த்தங்களை யெல்லாம் அந்யதாவாக்கப் புறப்பட்டு உடனுக்குடனே ராமபாணங்கள் மேல்விழப் பெற்றுத் திணறித் தடுமாறி நிற்பவர் இவரேயன்றோ? இந்த அழகில் ஸ்ரீமத் கம்பீரமாக எழுதுகிற வார்த்தைகளைப் பாருங்கள்—தகுந்த ஸமாதானங்களை யெழுதுவதற்குப் பல வித்வான்கள் ஸ்வபக்ஷத்தில் இருக்கிறார்களாம்; சாஸ்த்ரார்த்தங்களை நிரூபிப்பதில் அவர்களுக்கு அசக்திலேசமும் கிடையாதாம்; ஆனாலும் அவர்கள் தங்களுக்குப் பராஜய கோஷம் விளைந்து விடுமோ என்கிற பயத்தினாலேயே தளர்ந்து நிற்கிறார்களாம். ஐயோ பாவம்! இப்படி யெழுதுபவர் இவரேயல்ல; இதேபாவம் பலபேர்கள் படிப்பதுண்டு. பராஜய கோஷமோ விஜயகோஷமோ அதை ப்பற்றி இவர்களுக்குளென்னவிசாரம்? அர்த்ததத்வங்களை உலகுக்கு உணர்த்த வேண்டுவது வித்வான்களின் கடமை. அன்னவர்கள் தூஷண பூஷணங்களில் சிற்றேனும் நெஞ்சு செலுத்தலாமோ? சொந்தமாகக் காசு செலவழித்து ஒரு காரியம் செய்யவேண்டாம். ந்ருஸிம்ஹப்ரியா போன்ற பத்ரிகைகள் கையிலுள்ளனவே, அவற்றில், இவரைப்போன்ற சிறந்த வித்வச்சிரோமணிகள் சாஸ்த்ரார்த்தங்களை அழகாக விளக்கி வியாஸங்களெழுதி யனுப்பினால் மிகுந்த ஆதரவோடு வரவேற்பர்களே. மாதம் ஒருமுறை வெளிவருகின்றவது வாரம் ஒருமுறை வெளிவரவும் பெறுமே. யாரை மயக்க இப்படி யெல்லாமெழுதுகிறாரிவர், ஆடமாட்டாத தாஸி கூடம் கோணலென்றாளென்கிற கதை தான் நினைவுக்கு வருகிறது.

20. அண்ணாஸ்வாமி பல சாஸ்த்ரார்த்தங்களை ச்லோக ரூபமாகவே யிட்டிருப்பது ப்ரஸித்தம். அவை உலகமெல்லாம் பரவியிருக்கின்றன. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார வியாக்கியானமான ஸாராஸ்வாதிநியில் *ஸமஸ்யமாநேத்யாதி வாக்யம் மிகவும் அஸம்பத்தமாகவும் சாஸ்த்ரஜ்ஞ பரிஹாஸ்யமாகவும் காணப்பட்டது. அதைப்பற்றி ப்ரபல சர்ச்சை நடந்தது. ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியும் திச்சிஷ்யர்களும் அதை ஸமர்த்திக்க எழுந்து எவ்வளவோ எழுதினார்கள். கடைசியாக ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சம் என்கிற 200 ச்லோக ரத்நங்கள் கொண்ட நூல் தமிழுரையோடுங்கூட அண்ணாஸ்வாமியால் வெளியிடப்பட்டு ஐந்து வருஷமாகிறது. அப்போதே ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா என்கிற க்ரந்தமும் ச்லோகமயமாகவே அவதரித்து வெளிவந்து விளங்கி நிற்கிறது. உத்தமாச்ரமியாய் மஹா ஜ்ஞாநாதிகரா யெழுந்தருளி யிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ இளங்காடு ஸ்வாமி யென்று ப்ரஸித்தராயிருந்தவர் அந்த க்ரந்தங்களைக் கடாக்ஷித்து "அதிகரண ஸாராவளி போலவும் தத்வமுக்தாகலாபம் போலவுமுள்ளன இவை" என்று ஹார்தமாக அபிநந்தித்தருளிய பத்ரிகை அன்றே வெளிவந்திருக்கிறது. இப்போதும் ச்ருதப்ரகாசிகாரக்ஷா ஸபாபுஜங்கீ ஸர்வஸ்வம் முக்கிய க்ரந்தங்கள் சிறந்த சாஸ்த்ரார்த்தங்களைத் தெரிவிப்பவை ச்லோக ரூபமாகவே [வியாக்கியானங்களுடன்] வெளிவந்திருக்கின்றன. இப்படிப்பட்ட திவ்ய க்ரந்தங்களை "அவசா: ப்ரதிபேதிரே" என்கிற ரீதியில் இவ்வுத்யாநரைச் சேர்ந்தவர்களே யன்றோ ப்ரசம்ஸிப்பது. திருவையாறு காலேஜில் ப்ரொபஸராய் விளங்கும் S. T. ஸ்ரீநிவாஸய்யங்கார் M.A.L.T. என்பவர் சிறந்த விவேகி; தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்.

இந்த D. T. எழுதுவதெல்லாம் பிசகென்றும் அண்ணாஸ்வாமி யெழுதுவது ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமென்றும் அவரன்றோ ப்ரசம்ஸித் தெழுதுகிறார். அதைக் கண்டு சிலர் அவஸா வெருட்டி அவருக்கும் புத்திபேதத்தை விளைக்க முயல்கின்றார்களென்பதும் இருக்கலாம். நிர்ப்பந்தங்களுக்காட்பட்டு நிஜாபிப்ராயத்தை மாற்றிக் கொள்கிற க்ஷுல்லகர்களல்லர். அப்படி சிலர் மாற்றிக் கொண்டாலும் குறை யொன்றுமில்லை. அவர்கள் தாமாக ஸ்வரஸமாய் வெளியிட்ட அபிப்ராயமன்றோ ப்ராமாணிகர்களுக்கு நிதியாயிருக்கும். கீர்த்திமூர்த்திகளான கபிஸ்தலம்ஸ்வாமி, லக்ஷ்மீபுரம்ஸ்வாமி முதலானவர்கள் எவ்வளவு சிறந்த மஹா வித்வான்கள், அவர்களெல்லாரும் அண்ணாஸ்வாமியின் சாஸ்த்ரார்த்தங்களை எவ்வளவு உகந்து எப்படி கொண்டாடியிருக்கிறார்களென்பதை இன்று நானா எடுத்துச் சொல்லவேணும்? அவர்கள் வரையில் போகவேணுமோ? இந்த வுத்யாநரும் இப்படிப்பட்ட வம்புச் சண்டைகளில் தலையிடாமல் லோகாபிராமரா யிருந்த காலத்தில் இதே உத்யான பத்ரிகையில் அண்ணாஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளைப் புகழ்ந்து எழுதினவர் தானே. தலைவிதி மாறத் தொடங்கினவாறே எல்லாம் தலைகீழாக ஆய்விடுகிறது. ஸமர்த்தர்களான பல வித்வான்கள் ஸ்வபக்ஷத்திலிருப்பதாக இப்போது இவர் எழுதுவது மெய்யே. வித்வான்களில்லை யென்று யார் சொன்னார்கள்? நூற்றுக்கணக்கான வித்வான்கள் நன்றாக இருக்கின்றார்கள். ஜ்யோதிஷத்தில் சிங்கமும் புலியுமாக இருப்பவர்களுண்டானாலும் அமாவாஸ்யையைப் பௌர்ணமியாக்கவும், ஏகாதசியில் க்ரஹணம் பிடிக்கச் செய்யவும் வல்லவர்கள் எங்ஙனே தேறமுடியும்? அப்படி தேற முடியுமானால் அண்ணாஸ்வாமியின் ஸூக்திகளை மறுக்கவல்ல வித்வான்களும் அவசியம் தேற முடியும். "வேண்டிய வித்வான்கள் இருக்கிறார்கள்" என்று இவரால் கூறப்படுகிற வித்வான்கள் ஸமஸ்யமாநோக்திஸௌஷ்டவஸ்தாபநம், ப்ரஹ்மஸ்யாப்திநிர்ணயம், ஶ்ருதப்ரகாசிகா சோதநம், ஸபாபுஜங்கீதத்வம் என்றிப்படி சில பத்ய ப்ரபந்தங்களை வெளியிட்டு இவர்களுகந்த சாஸ்த்ரார்த்தங்களை நிலைநாட்டட்டுமே. நிந்தாஸூகம், ஸ்துதிதுக்கம் என்று சில வம்பு ச்லோகங்களை யெழுதி வீண்போது போக்குமிவர் ஒன்றுக்குக் கண்டனமென்று ஈஷத்தும் காட்டிக்கொள்ளாமல், இவரின்னது சொல்லுகிறாரென்பதை யாவரு மெளிதாக வறிந்து உகக்குமாறு சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடட்டுமே. அதுவன்றோ உண்மைப் பண்டிதருக்கு உற்ற செயல். ஒன்றிரண்டு வருஷமாய் இவர் பத்ரிகை தோறும் வேறு லோகாபிராம விஷயங்களை அறவே யொழித்து வம்பு விஷயங்களையேயிட்டு நிறைத்து வருகிறாரன்றோ. உப்புப் புளிப்பு ஏதேனு முண்டோ? "டீடதாதவசோ தும்பஸ் தடித்விலஸிதாந்யபி, க்ஷணத்வயம் ந திஷ்டந்தி கநாரப்தாந்யபி ஸ்வயம்" என்ற திவ்யஸூக்திதானே வெற்றி பெற்று வருகிறது.

21. இந்த நிலைமையில் "சுஷ்க சப்தார்த்த: க:?" என்று கேட்கிறார். டீடதாதவாங்மயத்வமேவ சுஷ்கத்வமென்று இளங்காடு ஸ்வாமியும் நாவல்பாக்கம் ஸ்வாமியும் நிலையிட்டுள்ளார்களென்று ப்ரஸித்தமே. "எல்லாம் பெரும்புளுகு" என்கிற வாக்யத்தை இவர் எடுத்துக் காட்டியுள்ளார். உண்மையில் அந்த விஷயம் மெய்யா புளுகா என்பதை விமர்சிப்பதன்றோ ப்ராமாணிக க்ருத்யம். புளுகாகவே ஒன்று எழுதியிருந்தால் அதைப் புளுகென்னாமல் வேறென்ன சொல்லுவது? புளுகல்லாததைப் புளுகென்று எழுதியிருப்பதாக இவர் நிரூபிக்கட்டுமே. ஸம்ப்ரதாய பேத நிபந்தநமாக வரும் அநாதரணீயதையை இங்கெடுத்துக் காட்டுவதில் பயனில்லை. அப்பய தீக்ஷிதரும் ஸ்ரீ பட்டப்பா தாதாசார்யரும் அண்ணாஸ்வாமிக்குத் துல்யர்களேயானாலும் இவர்க்கு அப்படியல்லவே. ஸர்வாத்மநாபி இவர்க்கு ஆசார்ய ப்ராயரவர். அவருடைய கொள்கையை இவர் மறுக்க நியாயமில்லையென்று தெரிவித்தால் இந்த வீண்வம்புவார்த்தைகள் எதுக்கு? அவருடைய கொள்கை அதுவன்று என்று ஸ்தாபிக்க சக்தியிருந்தால் அந்தவழியில் இறங்கலாம். அதில் இறங்கிப்பார்த்து ஓய்ந்து போனபடியால் சிறுவழிகளில் நுழைகிறார்; இது ஆர்ஜவமன்று. "உத்யாந பத்ரிகாதிபதிச்ச குத்ரேதி நஜ்ஞாயதே" என்றெழுதியிருந்ததை யெடுத்துக்காட்டி மிகமிகத் தவிக்கிறார். அத்ரேதிஜ்ஞாபயாமி என்கிறார். திருப்பதியில்தானே யிருக்கிறேனென்றும் சொல்லிக் கொள்ளுகிறாராம். நமது முன் மலரில் 10வது பக்கத்தில் 1 முதல் 6 வரிகளில் கண்ட மஹான்களும் ஸௌக்கியமாக இருந்துகொண்டுதானிருக்கிறார்கள். அவர்களைப்போலவே யிவருமென்பதில் யாருக்கு என்ன ஸந்தேகம்?

22. "பூமிகாந்தர பரிக்ரஹேண" என்றென்று எழுதுகிறார். இவர் நினைக்கிறபடியே யிருக்கட்டும். ஆழ்வாரொருவரே தாயாகவும் பேசுகிறார், தலைமகளாகவும் பேசுகிறார், தோழியாகவும் பேசுகிறார். மற்றும் பல வடிவங்களாற் பேசுகிறார். அதனாலென்ன? ரஸபரிபோஷமேயொழிய ரஸபங்கமேதுமில்லை. *உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெப்பெருமானென்றே யிருக்கிறேன்; கங்குலும் பகலும் கண்துயிலறியாது கண்ணநீர் கைகளாலிறைக்கிறேன்...என்றிப்படி தன்மையிலேயிட்டுச் சொல்லிக் கொள்ளாமல் படர்க்கையிலிட்டுச் சொன்னதெல்லாம் பூமிகாந்தர பரிக்ரஹந்தான். அதற்குமிதற்கும் வாசியுண்டென்னில் நெடுவாசிதானிருக்கட்டுமே. விவேகிகள் விஷயத்திலன்றோ கண் செலுத்துவார்கள். ஆந்த்ர வித்யார்த்தி யொருவனுடைய "நிஷித்தாயா: நிஹீநாயா: ஸுராயா:" இத்யாதி வாக்யத்தை யெடுத்து இவர் அஸ்தாநே ப்ரசம்ஸித்தாலும் அந்த வித்யார்த்தியும் இவரைக் கீழே தள்ளி பிரசுரம் செய்திருப்பதைக் கண்டிலரே. "உத்யாந பத்ரிகா ஸுதூரதோ நிரஸ்தா" என்று உச்சிஷ்ட பத்ரமஞ்ஜூஷிகையையன்றோ காட்டியிருக்கிறான். 'ஸுரை நிஹீநம் நிஷித்தம்' என்கிற பேச்சே யில்லாமலிருக்க, அப்ரஸக்த ப்ரஸஞ்ஜநத்தை யொருவன்பண்ணுவதும் அதற்கிவர் தாளம்போடுவதும், போட்டும் பங்கமடைவதும் அந்தோ! என்ன தலைவிதி!

23. * யச்ச யாவச்ச லேகநீயம் அகிலம் வ்யலேகி* என்று அண்ணாஸ்வாமி யெழுதி யிருந்தார். இந்த வாக்யத்தில் அகிலம் என்பதற்கு முன்னே 'தத்' என்பது இருக்க வேணுமென்றும் அது இல்லாதது குறையென்றும் காட்டி இந்த தாதாசார்யர் ஒரு புட்நோட் எழுதியுள்ளார். யச்சப்த ப்ரதிநிர்தேசமான தச்சப்தம் தன்னடையே வந்து புகுமென்பதைக்கூட அறியகில்லாதவரா இவர்! என்று பலர் வியக்கின்றனர். "உத்யாநபத்ரிகா தாவதா விரந்துமர்ஹதி; அதாபி சுஷ்கவசஸாம் ரர்சிபிரேவ ஸ்வாவகாச: பூரணீய இதி தஸ்யா வ்ரதாலம்பநம் ஸுப்ரஸித்தமேவ" என்கிற விதுவும் அண்ணாஸ்வாமியின் பங்க்தி. இங்கு அதாபி என்பதற்கு என்ன பொருள்? எங்கே அந்வயமென்று விசாரிக்க வேணும் என்றெழுதுகிறாரிவர். அதாபி என்றது ஏவம் ஸத்யபி என்றபடி. ஒய்ந்தொழிய வேண்டியிருந்தும் என்கை. இதற்கு வ்ரதாலம்பநத்தில் அந்வயம். வித்யார்த்திகளைக் கேட்டே மிகவெளிதாக இதையுணரலாமேயிவர்.

24. "கல்லய்யங்கார் அதிக்ஷேபம்" ஒரு பாகவதர் விஷயத்தில் கல்லய்யங்காரென்று கவியியற்றி அதிக்ஷேபம் செய்திருப்பதாக இவரெழுதியிருப்பது ஸர்வாத்மநா அநந்விதமான வார்த்தை. கல்லய்யங்காரென்பது புதிதாக இட்ட திருநாமமுமன்று; இதனால் அதிக்ஷேபமென்பதும் தவறு. ஒருவர்க்கு ஒருவர் புதிதாக வொரு பெயரை யிட்டாராகில் சக்திக்ரஹம் எப்படியுண்டாகும்? திருவையாற்றுக் காலேஜில் தமக்கு விருதாகக் கிடைத்த திருநாமமிது என்றன்றோ அவர்தாமே உள்ளபடி சொல்லிக் கொள்வது. கல்வியில் சிறந்த ஐயங்காரென்பதுபற்றித் தொகுத்தல் விகாரமாகக் கல்லையங்காரென்று ஒரு பெரிய சாஸ்த்ரிகள் தமக்கு விருதளித்ததாக அவரே பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்க, பொறாமையினாலன்றோ இதை அவர் அதிக்ஷேபமென்பது. முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன் கிடைத்து அதிகப்ரஸித்தி பெறாமலிருந்த இவ்வுபாதியை ப்ரஸித்தமாக்கினதற்காக அவர் பெருநன்றி பாராட்டா நிற்க, இவர் விபரீதமாக எழுதுவது என்னோ? அன்றியும். அந்த ஸ்வாமி, வியாக்கியானத்தைத் தழுவி மதிரா என்பதற்கு ஸுரா என்கிற அர்த்தம் சொன்னவர், மிகவும் ஆர்ஜவம் பொருந்தியவர், ஸமாநாதிகரணமான அதிக பாண்டித்யமுள்ளவர், வருஷந்தோறும் பல மாணாக்கர்களை சிரோமணி வகுப்பில் சேர்ப்பிக்குமவர், பரம பாகவதர் என்றெழுதியிருப்பதெல்லாம் மிகவும் நன்றே. உள்ள குணங்களுக்காக குணபக்ஷபாதிகள் ஆதரவு காட்டியே தீருவார்கள். "தானே தொழுவில் துவக்குண்டான்" என்னுங் கதையாக அவராகவே வலிய வந்து வலையில் சிக்கி வருந்துகின்றாரேயன்றி வேறில்லையே. அது எப்படியாவது போகட்டும். கல்லையங்காரென்பதை அதிக்ஷேபோக்தியாக இவர் காட்டுவது மிகத் தவறு. சிரோமணிசேகரத்தின் முடிவில் "கல்லையங்காரென்ற சிறப்புப்பெயர் தன்னை நல்லார் நல்கப்பெற்று" என்றொரு செய்யுள் ஒரு சென்னை வித்வானுடையதாக வெளியிடப்பட்டிருக்கிறதே; அதனாலும் கல்லையங்காரென்பது நல்லார் நல்கிய சிறப்புப்பெயரென்பது விளங்குமே.

உப ஸம்ஹாரம்.

25. ஆக இவ்வளவாலும் இந்த உத்யாந பத்திரிகையிலுள்ளதெல்லாம் ஒரெழுத்துத் தவறாமல் யாவும் பாமரப்ரதாரணமென்று அலசியலசி நிரூபிக்கப்பட்டது. இதுவரையில் இந்த தாதாசார்யர்மீது எத்தனை ராமபாணங்கள் விழுந்திருக்கின்றன வென்பதை ரஸிக பண்டித

மணிகள் ஒவ்வொருவரும் திண்ணமாக ஞாபகத்திற் கொண்டிருப்பார்கள். *சித்ரபுங்க ப்ரகாசாநாம் வித்யுத்ஸத்ருச வர்ச்சஸாம், ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வர: * என்ற ஆச்சரியமான ச்லோகத்தினால் சொல்லப்பட்ட நிலைமை இவரிடத்தில்தான் காணப்படுகிறதென்று இவரோடுடன் பழகும் ரஸிகர்கள் வெளியிடுவதும் ப்ரஸித்தம். விலைகொடுத்து வினைவாங்குகிற கதையாய் வீணாகவே இந்த வ்யதையை இவர் அநுபவித்து வருகிறார். உண்மையில் இவர் ப்ராமாணிக பண்டிதராக இருந்தால், தமது ஞானச்சாயங்களை நன்கு கக்கவைத்து வெளிவந்திருக்கிற ஒவ்வொரு நூலுக்கும் ஆர்ஜவத்துடன் பதில் சொல்லியாக வேண்டும். உத்யாநஸம்வாதம், ரஸிகரஸாயநம், வித்வத்வைதிக பூஷணம், துவரைப்பிரான் திருவருள், வைதிக வித்வதாபரணம், தத்வஹிதோபதேசம், ச்ருதப்ரகாசிகா ரக்ஷா...இப்படி இவருக்காகவே அவதரித்திருக்கின்ற திவ்யக்ரந்தங்கள் ஒவ்வொன்றும் ரஸிகரஸாயநமாகவேயுள்ளது. இவற்றுக்கு இவர் தனித்தனியாக பதில்சொல்லியுய்யவேண்டும். "பூர்வேப்யோதிகஸ் ஸந்தாப:" என்ற விஷயமும் மதிரேக்ஷண விஷயமும் இவ்வளவு விரிவுக்கு உரியவையல்ல. மத்யஸ்தர்களான மஹா வித்வான்கள் பலர் தெரிவித்த அபிப்ராயத்திலும் தெளியகில்லாதவிவர் திருப்பித்திருப்பித் தம்முடைய அஸப்ய க்ஷுத்ர வாதங்களையே யெழுதிக்கொண்டிருக்கப்போகிறார். விராமமடைந்தால் அதுவொரு பெரிய அவஜ்ஞையாகுமேயென்கிற பீதி இவருள்ளத்தில் பெரிதாகக் குடிகொண்டிருப்பதனால், எப்படியும் வெளியிட்டாகவேண்டிய உத்யாநபத்திரிகையில் இந்த க்ஷுத்ரவாதங்களையே பிஷ்டபேஷணமாகவும் சர்விதசர்வணமாகவும் எழுதிக்கொண்டிருப்போமென்றும், ஏதோவொரு ப்ரதிசப்தம் பண்ணிக்கொண்டே யிருந்தோமானால் இன்னமும் உயிர்த்திருக்கிறோமென்று உலகம் நினைக்குமன்றோவென்றும், தமிழிலும் தெலுங்கிலும் வெளிவந்திருக்கிற நம் பரிபவங்கள் அதிகப்ரசாரமடையப்போகிறதோ, ஸகல ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கும் தெரியப்போகிறதோவென்றும் இப்படியெல்லாம் மனப்பால்குடித்து வம்புதும்பாக எழுதிக்கொண்டிருக்குமிருப்பை இவர் விட்டுத் தொலைத்து, மிகவும் அவசியமான விஷயங்களிலே கை வைக்க வேணும். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய ச்ருதப்ரகாசிகாதி விஷயங்களில் சர்ச்சை விளைந்து அண்ணா ஸ்வாமியால் வெகு உபபாதனங்கள் வெளியிடப்பட்டு விளங்குகின்றன. அவற்றில் இவரும் தலையிட்டு ஏதோ எழுதினவர் ஏழெட்டுமாதமாக அவ்விஷயங்களைத் தொடாமலே காடுபாய்கிறார். விகர்த்தா என்கிற திருநாமத்தின் பாஷ்யத்தில் இப்போது இவர் விசாரமெடுத்துக்கொண்டது அப்ரஸக்தமானாலும் விஷயம் மிகச் சிறந்தது. மிக அவசியமானது. பகவத்குணத்தைப்பற்றின விசாரம்; ஆசார்ய ஸ்ரீஸூக்திமூலமான விசாரம். ஆகவே இவ்விசாரம் எத்தனையுகம் நடந்தாலும் நன்றே. ஏதேனுமொருபடியாலே பகவத்குணவகாஹநத்தில் அந்வயம் நேரும். தப்பாக எழுதினாலும் விஷயகௌரவத்தாலே ஆத்மா புனிதமாகும். *பிணங்கியமரர் பிதற்றும் குணமென்று ஆழ்வார் கொண்டாடின விஷயமிதுவே. பகவத்குணங்களில் பரதுக்க துக்கித்வமென்பதுதான் தலையான குணம். இக்குணமொன்றை உபப்ரும்ஹணம் செய்வதற்காகவேதான் ஸ்ரீராமாயண ப்ரவ்ருத்தி. பரதுக்காபிந்ந துக்கமுண்டு என்று இவ்வளவாவது இசைந்துதீர வேண்டியதாயிற்றிவர்க்கு. அதற்கு மிகவுகப்போம். ச்ருதப்ரகாசிகாரக்ஷா வித்வத் வைதிக பூஷண வைதிக வித்வதாபரண விஷயங்களில் இவர் ஓயாமலெழுதலாம். ஸபாபுஜங்கீ விஷயங்கள் ஆசார்ய வைபவ ரஸிகர்களுக்கு அருமருந்தானவை. அவற்றிலும் தமது விசாரகௌசலம் காட்டலாம். நிந்தனைகளினாலேயே வெற்றிபெற்றுவிடலாமென்று இவர் நினைப்பது தவறு.

26. தத்வ ஹிதோபதேசமென்கிற அண்ணாஸ்வாமியின் நூல் யதார்த்தமான பெயர் பூண்டது. அதை இவர் பரமபேஷஜமாகக்கொண்டு திருவாராதனம் செய்துவருவது பற்றிப் பரம ஸந்தோஷமே. ஆனால் இந்த வாக்கியத்தைப் பார்த்தவுடனே இவர் "பேஷஜமா, திருவாராதனமா" என்று சீறுவர்; எவ்வளவும் சீறலாமேயொழிய தத்வ ஹிதோபதேசக்ரந்தத்தைத் திருவாராதனப் பெட்டியிலிருந்து எடுக்கமுடியாதன்றோவிவர்க்கு. சாகுந்தல நாடகத்தில் காளிதாஸர் சகுந்தலையின் வாக்கியமாக ஒரு வார்த்தை யெழுதியுள்ளார். வெகு ரஸம். அதாவது, அவள் வெகு சமத்காரமாகப் பேசின தனது தோழிகளை நோக்கி "உங்களுடைய

அஸம்பத்தப்ரலாபங்களை அத்தையினிடம் சொல்லி விடுகிறேன்" என்றதாக துஷ்யந்த விவாஹத்திற்கு முன்னே அமைத்திருக்கிறார். உண்மையில் தனக்குப் பரமாநந்த ஸந்தோஹ கந்தமான வார்த்தைகளையே அங்கு சகுந்தலை அஸம்பத்த ப்ரலாபமாகக் குறிப்பிடுகிறாள் ஒரு காரணார்த்தமாக. அப்படியே இவர் தம்முடைய சாயங்களை அலசிக்காட்டுவார் திறத்திலே 'அஸம்பத்த ப்ரலாப' பதப்ரயோகம் பண்ணினால் அதே அர்த்தந்தான். ஸம்பத்தமோ அஸம்பத்தமோ விஷயஸ்வபாவத்தாலன்றோ உலகுக்குத் தெரிய வேண்டும். தத்வஹிதோபதேசத்தில் ஒவ்வொரு விஷயமும் இவர் பதில் சொல்லித் தீரவேண்டியவை. மற்ற விஷயங்களை உபேக்ஷித்தாலும் அதில் 16-வது பக்கத்தில் ஆரம்பமாகியுள்ள வொருவிஷயத்திற்கு இவர் பதில் சொல்லித் தீரவேண்டியது தலைப்பொறையாயிருந்தும் அத்ருஷ்டிமபிநீய போதுபோக்குகிறாரே. அந்த விஷயத்தை இங்கும் எடுத்துக்காட்டுகிறேன். இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் அண்ணாஸ்வாமியை தேசிகத்வேஷியென்றும் தேசிகஸூக்தி தூஷகரென்றும் சொல்லியு மெழுதியும் இந்தவார்த்தையினாலேயே தாங்கள் பெருமைபெற்று விட்டதாக நினைப்பது வழக்கம். இந்த வார்த்தையை இவர் உத்யாந பத்திரிகையிலு மெழுதினர்; அதன்மேல் அண்ணாஸ்வாமியின் ராமாஸ்த்ரம் இது காணீர்;—"வஸ்துத: ஸ்வயமேவ தேசிக ஸூக்தி தூஷகர்களான விவர்கள் அக்குற்றத்தை அஸ்தானே பிறர்மீது ஏற்றுகிறார்கள்; இவரும் இவருடைய வகுப்பினரும் ஸம்ப்ரதாயார்த்தமென்று எவ்வர்த்தங்களை ஆதரித்து வருகிறார்களோ அவ்வர்த்தங்களுக்கும் ஸ்ரீதேசிக திவ்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் பெரும்பாலும் ஸம்பந்தமேகிடையாது; ஏதோ ஆபாத ப்ரதீதியில் தேசிகனுடைய சில ஸ்ரீஸூக்திகள் தங்கள் கொள்கைக்குச்சார்பாயிருக்கின்றனவென்றுகொண்டு அவரை இவர்கள் ஆதரிக்கிறார்களெனினும் பெரும்பாலும் அப்போசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை இவர்கள் நெஞ்சார தூஷிப்பவர்களே" என்று அவதாரிகையிட்டு உடனே வரிசையாக லக்கங்களிட்டு 10 விஷயங்களை அல்பஜ்ஞர்களும் புரிந்துகொள்ளும்படியெடுத்துக்காட்டி, 'இவ்விஷயங்களில் இவர்கள் தேசிகஸூக்தி தூஷகர்களாகவும் தேசிகத்வேஷிகளாகவும் தேசிகத்ரோஹிகளாகவும் முடிந்து நிற்கிறார்களென்பது வைவஸ்வதமந்வந்தரே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோர் தக்ஷிணே பார்ச்வே இவர்களது தந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பாகளாலும் புத்ர பௌத்ர நப்த்ரு ப்ரப்ருதிகளாலும் போக்கவும் போகாதது; தேசிக திவ்ய ஸூக்தி தூஷகர்களை தூஷகர்களாகப் பறைசாற்றி தோஷாரோபணம் செய்வதே பரிஹாரமென்று இவர்கள் கொண்டார்கள்" இந்பாதிகள் கல்லும் கரையுமாறு எழுதப்பட்டிருக்கின்றன. இது வெளிவந்து மூன்று மாதமாயின விவேகியாயிருந்தால் இவற்றுக்கு ப்ராமாணிக போக்யமாயும் ஸர்வஜநவேத்யமாயும் நிந்தாலவலேச ரஹிதமாயுமிருக்கிற பதிலை வெளியிட்டுவிட்டன்றோ ஊணுமுறக்கமும் கொள்ளவேணும். இப்போது ஸர்வாத்மநா வம்பு விஷயங்களென்று வெறுக்கத்தக்க காகதந்த பரீக்ஷாஸத்ருக்ஷ விஷயங்களைக்கொண்டு பதினைந்து பக்கங்கள்நிரப்பியிருக்குமிவர்க்கு ஆவச்யகா நாவச்யக விஷய விவேகமுமில்லையாயிற்றே; அந்த விவேகமில்லையென்னப் போகாது; உலகம் ஆவலோடு எதிர்பார்க்கும் அவ்விஷயங்களில் வாயைக்கையைத் திறக்கமுடியாதபடி பந்தனம் பெற்றிருக்கிறாரென்பதே உண்மை.

27. இவ்வளவு தூரம் கனக்க நாமெடுத்துக்காட்டி விட்டபடியால் இதேது விடுகிறதாக இல்லையேயென்று வருந்தியெழுந்து பத்தெட்டு வெள்ளைக்காகிதங்களைக் கறுப்பாக்கவே போகிறார். ஆக்கட்டும். அத்தகைய விஷயங்களில் கைவீசவேணுமென்றுதானே நாம் கோருவது. பூர்வபக்ஷம் தோன்றியிருப்பதாகவும் அதன்மேல் பதிலெழுதுவதாகவும் காட்டிக்கொள்ளாமலே, ப்ரஸ்துதமான ஒவ்வொரு விஷயத்தினுடையவும் தத்துவத்தை யாவருமெளிதிலுணர்ந்து உகக்கும்படியெழுதட்டும். அஃதொன்றே இவர்க்கு ருஜுவான கர்த்தவ்யம்.

இரண்டாம் மலர் முற்றிற்று.

Printed at Haddon & Co, 49, Badrian Street, G. T. Madras Paper by Party Supply C. 250

(ராப்பர் 2-வது பக்கத்தின் தொடர்ச்சி)

தென்றே. இவர்களுக்குத் தெரியாததலால் அண்ணுஸ்வாமியே இதை ஸ்வதந்த்ரமாக எழுதிவிட்டதாய் ப்ரமித்து தூஷித்தார்கள். 'உங்கள் ஆசாரியர்களும் எழுதினதேயிது' என்று எடுத்துக்காட்டியானபிறகு, அபசாரத்திற்கு அநுதபித்துக் கைகூப்பி நிற்கவேண்டுமிவர்கள் அது செய்யாதே ஸ்வாசார்யர்களையும் பச்சையாக தூஷித்து நிற்கிறார்கள். "அண்ணுஸ்வாமியின் உக்திகளுக்கு அஸ்மதாசார்யர்களும் கைகொடுத்துவிட்டார்களே!" என்கிற திருவயிற்றெரிச்சலினால் இவர்கள் ஸ்வாசார்யர்களையும் கூசாது தூஷிக்கத் தலைப்பட்டது இவர்களுக்கே பொருந்தும்.

இனி இந்த பரமார்த்தரக்ஷையைப் பூர்த்தியாகப் பார்த்தபின்பு இவர்கள் ஒன்றான தேசிகனையும் இப்படியே தூஷித்துத் தீரவேண்டியது தவிர வேறில்லையென்பதில் ஸந்தேஹலேசமேனுமுண்டோ? உண்மையான தேசிக த்வேஷிகள் இவர்களே யென்று ஒவ்வொரு விஷயத்தையும் வ்யக்தமாக எடுத்துக்காட்டி இதில் நிரூபணம் செய்திருக்கிறது. இதை இவர்கள் ஊன்றிப் பார்க்கப்போகிறதில்லை. சில பல வசவுகளையே நிரப்பித் துண்டுப் பிரசுரங்களையே வெளியிடப்போகிறார்களென்பது திண்ணம். அதனால், இவர்களிடமுள்ள யோக்யதை இவ்வளவுதானென்பதை உலகம் அறியாமற் போகுமோ? நன்கறியும். சிறுபயல்கள் செய்யும் சில்லரைச் செயல்களேயன்றோ இவர்கள் செய்து வருவது. ஸ்ரீமான் உ. வே. K. S. ராமாநுஜாசார்யர் என்கிற வித்வான் வியாகரண சாஸ்த்ரத்தைப் பூர்த்தியாக அதிகரித்து ராஜாங்கத்தில் சிரோமணி பட்டம் பெற்றவர். பச்சையப்பன் கலாசாலையில் ஆசிரியர் பதவியில் அமர்ந்திருப்பவர். அவர் பிராமாணிகமாக விஷயங்களை வெளியிட்டிருக்க, அவரை அப்ரஸித்தரென்றும் உண்மையான சிரோமணியல்லரென்றும் இவர்கள் எழுதிவிட்டதனால் அவருடைய பெருமைக்கு ஒரு ஹாநியுண்டோ? அவர் நிரூபித்த பல விஷயங்களுக்கு ஒரு ஸமாதானமாவது உண்டோ? சிரோமணியல்லாத வொருவர் தம்மை சிரோமணி யென்று வெளியிட்டுக்கொள்ளும்படி நமது நாடு அராஜகமாகவா கிடக்கிறது? ஒரு பாஷையிலும் ஒன்றுமறியாத வொருவர் தம்மை உபயபாஷா பண்டிதரென்று வெளியிட்டுக்கொண்ட வெட்கக்கேடுதான் விளம்பரம் பெறும்.

சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் அண்ணுஸ்வாமிக்கு ஸ்ரீமுக வருஷத்தில் எழுதிக்கொண்ட மன்னிப்பு ஸ்ரீமுகம் அப்போதே அச்சாகி வெளிவந்ததை ஷை சிரோமணி ஸ்வாமியும் ப்ரஸக்திவசாத் வெளியிட்டார். அது பொய்யென்று இலேசாக எழுதிவிடுகிறார் அவருடைய தம்பியார். இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் பிராமாணிகர்கள் விசாரம் செய்வது நன்று. மன்னிப்புக் கடிதம் அந்த நரஸிம்ஹாசாரியருடைய ஜீவிதகாலத்திலேயே அச்சாகி மூன்று நான்கு வருஷம் உலகமெங்கும் உலவியிருக்கின்றது. இது பொய்யாக வெளியிடப்பட்டதென்று வாய்திறக்க அவருக்கே வழியில்லாமல் போயிற்று. அவர் பரமபதித்துவிட்டாலும் அவருடைய கடிதம் பரமபதித்துவிடவில்லையே. இதைப் பொய்யென்று இவர் இன்று லேசாக எழுதிவிட்டால் கேள்விமுறை யில்லாமற் போய்விடுமோ? இது பொய்யென்று தேறிவிடுமானல் அண்ணுஸ்வாமியின் க்ரந்தங்களெல்லாம் பொய்யே யென்று நாமே பறைசாற்றத் தடையிராது. இவ்வொரு விஷயத்தில் மாத்திரமாவது பிராமாணிகர்கள் சோதனைசெய்து முடிக்கவேண்டியது அவசியம்.

திருவயிந்திரபுரத்தில் அத்யாபக கக்ஷியாரும் வேதபாராயண கக்ஷியாரும் ஸ்பர்த்தை தவிர்ந்து கலந்து பரிமாறினல் நமக்குப் பரமானந்தமே. * பீடாகரம்

அமித்ராணும் யத் ஸ்யாத் கர்த்தவ்யமேவ தத் * என்ற இந்திரஜித்தின் வசனப் படிக்கு இவர்கள் நடத்திவருவதை ஸ்ரீரங்கம் ஸ்வாமி எடுத்துக்காட்டியுள்ளார். இராப்பத்துத் திருநாளில் திருவாய்மொழி ஸேவிக்கும்போது வேதத்தையிட்டுக் கூப்பாடு போடுகிறவர்களை துராக்ரஹ பிண்டங்களென்று வசைகூறி வந்தவர்கள் இப்போது அந்தக் கூச்சலைத் தவிர்த்துக் கொண்டார்களா? அல்லது அதையே பரமபோக்யமாகக் கொண்டார்களா? என்பது நமக்கு ஜிஜ்ஞாஸிதம். பீடை செய்பவர்களை துஷ்டர்களென்று கழிப்பதைவிட, அந்த பீடைகளையே போக்யமாகக்கொள்ளும் நிலைமை உண்டாவது க்ஷேமமே.

இந்த பரமார்த்தரக்ஷைக்கு ஸமஞ்ஜஸமாக பதில் சொல்லவேண்டியவர்கள் சாஸ்த்ரங்களிலும் ஸம்ப்ரதாயங்களிலும் ஆழ்ந்த அறிஞர்களேயல்லது சிசுபாலஜ்ஞாதிகளுக்கு இங்குப் பணியில்லை. "திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே" என்பதுபோன்ற சிறு விஷயங்களிலுங்கூட ஜிஜ்ஞாஸுக்கள் தெளியுமாறு ஆர்ஜவத்துடன் விடையளிக்க சக்தியற்றவர்கள் பெரிய விஷயங்களில் வாய்வைக்க ப்ரஸக்தியேது? ப்ரஸங்காத் ஞாபகத்திற்கு வந்த வொரு சிறு விஷயத்தை விஜ்ஞாபித்து நிற்கிறேன். தேசிகர் அமலனாதிபிரானுக்கு வியாக்கியானமாக முநிவாஹநபோகமருளிச் செய்திருக்கிறாரே; அதில் முதற் பாசுரத்தின் கடையடி "திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே" என்பது. இங்கு 'ஒக்கின்றதே' என்றதன் ஸ்வாரஸ்யத்தை நம்பிள்ளை திருவடிகள் ஆச்சரியமாக விளக்கியிருப்பதை வியாக்கியானங்களிற் காணலாம். இங்கு தேசிகன் ஸாதித்திருக்கிற ஸ்ரீஸூக்தியாவது—"இத்திருவடிகளில் வைத்த கண் வாங்கவொண்ணாதபடியான போக்யதாதிசயத்தை ஒரு உத்ப்ரேக்ஷையாலே அருளிச் செய்கிறார்" என்று. இங்கு உத்ப்ரேக்ஷை யென்கைக்கு அவகாசமேது? வஸ்தூத்ப்ரேக்ஷையா? ஹேதூத்ப்ரேக்ஷையா? பலோத்ப்ரேக்ஷையா? இதைச் சிறிது உபபாதித்தருளவேணுமென்று ஒரு ஸமயம் மன்னார்குடி வித்வத்ஸதஸ்ஸில் ஒரு வித்வான் ப்ரஸ்தாவித்தார்; தில்லையம்பூர் ப்ராதாக்களிருவர் திருக்கோட்டியூர் ப்ராதாக்களிருவர் திருக்குடந்தை வித்வான்கள் பலர் அங்குக் குழுமி யிருந்தவர்கள் த்வங்கார ஹுங்காரங்களாலே வாக்யார்த்த பூர்த்தி செய்தார்களே யல்லது ஒருவராவது ப்ராமாணிக நெறியில்நின்று கேட்டவர்க்குத் தினவடங்க விடையளித்திலர். விடையளிக்க முடியாத விஷயமன்று இது.

உண்மை தேசிகத்வேஷி நிரஸநமென்ற பத்ரிகையின் முகப்பில் "தத்வஹிதோபதேசத்தில் மிக விரிவாக விளங்கும் விஷயங்களுக்கு கோபதாபங்களை வெகுதூரத்தில் விலக்கி யாவருமுகக்க பதில் வெளியிட்டுவிட்டு பிறகு தலை காட்ட வேண்டிய கடமை இவ்வையங்காருக்கு முள்ளது" என்று எழுதப்பட்டிருக்கின்றதே. அதைப் பார்த்துங்கூட அவ்விஷயங்களில் ஒன்றுக்கும் வாய் திறவாமல் பழையபடி தன்னுடைய பாஷைகளையே வாரியிறைக்கிறவொருவர்க்குப் பதார்த்த கோடியில் பரிகணனையுண்டோ? D. T. தாதாசார்யர்ஸ்வாமி தத்வஹிதோபதேசத்தை ஸேவித்தபிறகு எப்படிப்பட்ட அத்யவஸாயத்துடனிருக்கிறாரென்பதையாவது விமர்சிக்கலாகாதா? அவரன்றோ ப்ராமாணிக பண்டிதர். எழுதினால் அந்த விஷயங்களுக்கெல்லாம் பதிலெழுதுவர். இல்லையேல் வாளாவிருப்பர். அப்படிப்பட்ட விவேகிகளோடு போராடத் தகும். விஷயலேசமுமின்றி வசவு பாரதமே சரணமான கடலூர் ஜில்லாப் பேர்வழிகளுக்கு ஸுபாஷிதநீவியின் முதல் ச்லோகத்திலிரண்டாம் பாதத்தில் காட்டின கணக்கிலே நமோ நம:
